# பாடகச்சேரி
# ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள்

டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார்

BRAIN BANK
Editing & Publishing
16/2, ஜெகதாம்பாள் தெரு
தி.நகர், சென்னை – 600 017
Mobile 9841036446

**CREDITS**

- **Paadakacheri Sri Ramalinga Swamigal**
- Category: Hagiography
- Nalli Kuppuswami Chettiar


- © : Author


- Typeset & Published by: Brain Bank,
  16/2, Jagadambal Street, T. Nagar,
  Chennai-17 Mobile 9841036446
  E-mail: hindunatarajan@hotmail.com
- Seventh Edition: 2018
- Printer: Sekar Offset, Chennai-14

**₹ 125.00**

- **பாடகச்சேரி ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள்**
- வகை: மகான் வரலாறு
- ஆசிரியர்: நல்லி குப்புசாமி செட்டியார்


- ©: ஆசிரியருக்கு


- ஏழாவது பதிப்பு : 2018
- அச்சுக்கோப்பு, பதிப்பு: ப்ரெய்ன் பேங்க்
  16/2 ஜெகதாம்பாள் தெரு, தி.நகர்,
  சென்னை 17. செல் : 9841036446
- அச்சு: சேகர் ஆஃப்செட், சென்னை–14


## பதிப்புரை

கலை, இலக்கியம், நாகரிகம், பண்பாடு, தத்துவ, ஆன்மிக ஞானம் ஆகியவை நம் நாட்டின் தொன்மைச் சிறப்புகள். இவற்றை நமக்கு அளித்தவர்கள் வாழையடி வாழையாக வந்துள்ள கலைஞர்கள், அறிஞர்கள், ஞானிகள் மற்றும் மகான்கள். இவர்களில் பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள் என்ற மகான் வள்ளலாரின் மறுபிறப்பு என்பது சிலரது ஐதீகம்.

இவர் கர்மயோகி. கும்பகோணம் நாகேசுவரன் கோயில் திருப்பணியை உண்டியல் நன்கொடை மூலமே நடத்தினார். அன்பர்கள் இல்லங்களில் தங்கினார். தேடிவந்த அன்பர்களின் நோய்களை குணப்படுத்தினார். ரத்னச் சுருக்கமாக அந்தந்தக் குடும்பங்களில் என்ன நேரும் என்பதைச் சொல்லியிருக் கிறார். எனினும் சீடர்களை உருவாக்கிக் கொண்டதில்லை. அவருடன் பழகும் பாக்கியம் கிடைத்த குடும்பத்தினர் இன்றும் அவரைத் தொழுகிறார்கள்.

இந்த மாதிரி மகான்கள் பற்றித் தெரிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டுள்ள பத்மஸ்ரீ நல்லி குப்புசாமி செட்டியார் சிரமம் பாராமல் கும்பகோணம், பாடகச்சேரி, திருச்சிராப் பள்ளி, திருவொற்றியூர், செள்ளக்குருக்கி, பெல்லாரி, ஹோஸ் பெட் என்று ஊர் ஊராகச் சென்று சுவாமிகளுடன் பழகிய முதியவர்களை பேட்டி கண்டு, குறிப்புகள் எடுத்துக்கொண்டு இந்த அரிய நூலை எழுதியிருக்கிறார். எழுத்து அஞ்சலியுடன் நின்றுவிடக் கூடாது என்ற தீர்மானத்துடன் கும்பகோணம் கூழ்சாலையில் பாடகச்சேரி மகான் எழுந்தருளியிருந்த புனிதத் தலத்தில் பெரிய அளவில் திருப்பணியும் செய்திருக்கிறார்.

பேசுவதில் பயனில்லை, செயல்படுவதே மேல் என்று கருதி நோய்களை குணப்படுத்தி அன்னதானம் செய்து ஆலயத் திருப்பணி செய்துவந்த மகானின் கர்ம யோகிச் சீடர் என்று போற்றத்தக்க வள்ளல் நல்லி குப்புசாமி செட்டியார் எழுதியுள்ள பாடகச்சேரி ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் என்ற இந்த நூலை அன்பர்களுக்குப் பணிவன்புடன் சமர்ப்பிக்கிறோம்.

**சென்னை** Brain Bank

# முன்னுரை

மேடையேறிப் பேசாமல் பிறரைக் கவர அற்புதங்கள் செய்யாமல் எளிமையாக வாழ்ந்து ‘சகோதரர்களே நீங்கள் ஒருவருக்கொருவர் உதவுங்கள்’ என்பதை வார்த்தைகளால் மட்டுமல்லாமல் செயல்பாடுகளாலும் உணர்த்திய சித்தர் பெருமக்கள் மதிப்பிற்கு உரியவர்கள். இவர்கள் பற்றித் தெரிந்துகொள்வதில் எனக்கு ஆர்வம் உண்டு.

சித்தர்கள், மகான்கள் பற்றிய புத்தகங்களைத் தேடிப் படித்த சில மாதங்களுக்குப் பிறகு அந்த மகான்களுடன் பழகியவர்களுடன் எப்படியாவது தொடர்பு ஏற்படுகிறது. இறையருள் இதுதான். இதே போன்ற அனுபவம் வேறு சிலருக்கும் கிடைத்திருக்கலாம்.

வியாபார விஷயமாகக் காஞ்சிபுரம் கும்பகோணம், போகும்போது கிண்டி ரயில் நிலையம் அருகில் உள்ள சிறு கோயிலின் முகப்பில் இருக்கும் சிலா ரூபத்தைக் காரில் இருந்தபடி கைகூப்புவேன், அவர் யார் என்று தெரியாமல். என் உறவினர் நம்மாழ்வார் அது பாடகச் சேரி ராமலிங்க சுவாமிகள் என்று சொன்னார். அதற்கு முன்பே கோபுர மூர்த்தியாக சுவாமிகள் என்னை ஈர்த்தது பூர்வ ஜன்ம பந்தம் என்றே சொல்ல வேண்டும்.

சுவாமிகளுக்கு ஆப்தமாக இருந்தவர்களில் பலர் ஜவுளி வியாபாரிகள். அந்த பந்தம்தான் என்னையும் அவர்பால் ஈர்த்ததோ என்னவோ. ஆர். பழனியாண்டி & சன்ஸ் என்ற பெரிய பட்டு ஜவுளி ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஸ்ரீ ராமசாமி பிள்ளை என்ற பெரியவர் ஒரு நாள் பணிமுடிந்து கடையிலிருந்து திருவொற்றியூரில் உள்ள தன் வீட்டிற்கு நடந்து சென்று கொண்டிருந்த போது வழியில் ஒரு வெள்ளை ஆடைப் பெரியவரைப் பார்த்தார். எடுத்த எடுப்பில் அவர் ஒரு மகான் என்பது புரிந்தது. அங்கேயே அவரை நமஸ்கரித்தார். அந்தப் பெரியவர் தானும் உடன் வருவதாகச் சொல்லி, அவருடன் சென்று, தங்கி, பின்னர் திருவொற்றியூரில் ஒரு மனை வாங்கி ஆஸ்ரமம் கட்டிக்கொண்டு வாழ்ந்தார். பிறகு ஹைகோர்ட் சுவாமிகள் என்று அழைக்கப்பட்ட அப்புடு சுவாமிகளை அழைத்து வைத்துக் கொண்டார். மறு வருடம் இந்த மகான் சித்தி அடைந்தார். அவருக்கு அதே வளாகத்தில் ஒரு அதிஷ்டானம் அமைத்தார். இவர்தான் பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள். இந்தப் புனிதத் தலத்தை இப்போது மேற்பார்வை செய்துவரும் ஸ்ரீமதி மீரா அம்மையாரும் ‘பழனியாண்டி சன்ஸ்’ ஜவுளி ஸ்தாபனத்தைச் சேர்ந்தவரே.

இந்த ஆஸ்ரமத்தையும் அதிஷ்டானத்தையும் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தபோது பாடகச்சேரி சுவாமிகளின் குருநாதராகிய எரிதாதா சுவாமிகளின் திருவுருவப் படத்தைப் பார்த்தேன். அதைப் பிரதி எடுக்கச் செய்த அடுத்த சில நாட்களில் ஸ்ரீ எரிதாதா சுவாமிகள் பற்றி ஒரு சிறு புத்தகம் கிடைத்தது. இதை என்னவென்று சொல்ல!

சில மாதங்களுக்கு முன்பு பாடகச்சேரி ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் பற்றிய சிறிய குறிப்புப் புத்தகம் கிடைத்தது. அதற்கு முன்பே அந்த சுவாமிகள் பற்றி ஸ்ரீ பரணீதரன் அவர்கள் எழுதிய புத்தகத்தைப் படித்திருக்கிறேன். இந்தப் புத்தகத்தை அனுப்பிய அன்பர்கள் கேட்டுக் கொண்டபடி ‘பைரவ சித்தர்’ என்ற நூலின் மறு வெளியீட்டில் பங்கு பெறும் பாக்கியம் கிடைத்தது. பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள் பற்றி ஏற்கெனவே அறிவேன். அதுபோல கர்நாடகத்தைச் சேர்ந்த எரிதாதா சுவாமிகள் பற்றியும், இந்த மகான்களின் அத்யந்தபக்தரான பெங்களூர் ஏ. ஜி. ஷாமண்ணா பற்றியும் தெரிந்து கொண்டேன். ஷாமண்ணா குடும்பத்தாருடன் எனக்குத் தொழில்ரீதி யாகவும் முன்பே பரிச்சயம் ஏற்பட்டிருந்தது.

பத்து வயதுச் சிறுவனாக என் தந்தையுடன் பெங்களூர் சென்றிருக்கிறேன். ஸ்ரீ ஏ. ஜி. ஷாமண்ணாவின் தந்தை ஸ்ரீ ஏ. கோரப்பா அவர்கள் பெங்களூரில் பெரிய பட்டு ஜவுளி வியாபாரி. அந்த வயதில் எனக்கு அது மட்டுமே தெரியும். பிறகு என் சித்தப்பாவுடன் வியாபார விஷயமாக பெங்களூரில் உள்ள அவர்கள் கடைக்குப் போயிருந்தேன். ஆன்மிக ஈடுபாடுகளைப் புரிந்து கொள்ளும் வயதல்ல அது. ஆனால் முழு அசல் ஜரிகை யுடன் நெய்யப்பட்ட பட்டுச் சேலைகளுக்கு கோரப்பா நிறுவனம் பிரசித்தம் என்று தெரியும். அப்போது சேலையை அழகான அட்டைப் பெட்டியில் வைத்துத் தருவார்கள். அன்றைய விலை ரூ. 300 மட்டுமே. இன்று ஒரு லட்ச ரூபாய். அவை ‘ஏ. கோரப்பா & சன்’ கடையில் மட்டுமே கிடைக்கும். ஸ்ரீ கோரப்பாவின் புதல்வர்தான் ஸ்ரீ ஷாமண்ணா.

நல்லிக்கு பம்பாயில் 1950களில் கிளை இருந்தது. அருகே ஒரு ஃப்ளாட் வாங்கியிருந்தோம். என் தந்தை நல்லி நாராயணசாமி செட்டியார் 1953ல் மறைந்தார். அதையடுத்து என் சித்தப்பா ரெங்சாமி செட்டியார் பொறுப்பேற்றார். அப்போது போக்குவரத்து, தகவல் தொடர்பு வசதி அதிகமாக இல்லை. அதனால் பம்பாய்க் கிளையை நடத்துவது சிரமம் என்று தோன்றியது. இது பற்றி யோசித்த நாங்கள் ஸ்ரீ ஷாமண்ணா அவர்களே சரக்குகளை வாங்கிக் கொள்வாரா என்று கேட்டோம். அவர் அப்போது மொத்த ஜவுளி வியாபாரம் செய்துவந்தார். இருந்தாலும் சரக்குகளை வாங்கிக்கொண்டார். கடை அருகே இருந்த எங்கள் ஃப்ளாட்டையும் நல்ல விலைக்கு வாங்கிக் கொண்டார். வியாபாரத்துக்கு அப்பாற்பட்ட அன்பு அது.

வியாபாரத் தொடர்பையும் தாண்டி ஸ்ரீ ஷாமண்ணா குடும்பத்தார் எங்கள்மீது கொண்டிருந்த பிரியத்தின் காரணமாக எங்களுக்கு அவர்கள் மீது அபரிமிதமான மதிப்பு இருந்தது. தத்துவ, ஆன்மிக விஷயங்கள் பிடிபடாத வயது என்பதனால் அந்தக் குடும்பத்துடன் ஆன்மிக உறவைத் தொடர முடியவில்லை. ஆனாலும் இறைவனின் திருவருள் கை கூடியதால் ஸ்ரீ ஷாமண்ணா மதித்த சித்தர்களைப் பற்றித் தெரிந்துகொள்ளும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. எரிதாதா சுவாமிகள், பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள் தொடர்பானவர்களைச் சந்திக்கவும் முடிகிறது.



முக்திக்குள மண்டபத்திற்கு முதல் முதலாகச் சென்ற போது அந்த வளாகம் இருந்த நிலை கண்டு மிகவும் வருந்தினேன். முகப்புக் கட்டடம் தவிர மீதிச் சிறு கட்டடங்கள் சிதிலமடைந்திருந்தன. வெற்றிடம் பூராவும் புதராக மண்டிக் கிடந்த செடி கொடிகள். கால் வைத்து நடப்பதே கஷ்டமாக இருந்தது. எரிதாதா சுவாமிகளின் சந்நிதியும் குடிசைக் கொட்டகையே. நிச்சயம் இதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று உள் மனது துடித்தது. வளாகத்தைத் துப்புரவு செய்து முகப்பில் நந்தவனம் அமைத்து நின்றுபோன சத்யஞான சபைக் கூடத்தைப் பூர்த்தி செய்து, எரிதாதா சந்நிதியை கூரையிலிருந்து கட்டடமாக மாற்றி அமைத்து, சத்திய ஞான சபையை ஒட்டி ஸ்ரீ நடராஜர் சந்நிதி ஸ்தாபிக்கவும் சாத்தியப் பட்டது. நான் செய்தேன் என்று சொல்வது அபச்சாரம். சுவாமிகள் என்னை சிஷ்யனாக வரித்துக் கொண்டு இவற்றைச் செய்ய ஆக்ஞை பிறப்பித்து அருள்பாலித்தார்.

எல்லாவித சிரமதானத்திற்கும் மேற்பார்வைக்கும் எனக்குப் பெருந்துணையாக இருந்தவர்கள், பெங்களூர் சங்கர், (பெங்களூர் கௌசல்யா அம்மையாரின் மாப்பிள்ளை) கும்பகோணம் தொழிலதிபர் நண்பர் ராயா. கோவிந்தராஜன், எங்கள் கடையின் மேலாளர் D. பாபு மற்றும் சில ஊழியர்கள். இவர்கள் உதவியுடன் ஸ்ரீ நடராஜர் சந்நிதி அன்பர் எதிர்பார்த்தபடி அமைந்தது சுவாமிமலை சூரியநாராயண ஸ்தபதி ஐந்து அடி உயரம் 263 கிலோ எடை கொண்ட ஐம்பொன் சிலை செய்து தந்தார். செலவை விட முக்கியமானது அன்பர்

களின் ஒத்துழைப்பும் சிரமதானமும். ஸ்ரீ நடராஜர் சன்னதியின் கும்பாபிஷேகம் 17. 1. 2014 அன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

ஏதாவது ஒரு விதத்தில் என் தொழில் முனைவுகள் ஆன்மிகப் பாதைக்கு இட்டுச் செல்வதும், என் ஆன்மிக ஈடுபாடுகளில் ஜவுளித் துறையினரைச் சந்திப்பதும் என் பாக்கியம். தேடிச் சென்றால் இவை நடைபெறா. எல்லாமே இறைவனின் சித்தம். அதை வெளிப்படுத்தி நம்மை அரவணைப்பவர்கள் எரிதாதா சுவாமிகள், பாடகச்சேரி சுவாமிகள் போன்ற சித்தர்கள்.

'ஸ்ரீ நிரஞ்சனரும், பரமஹம்சரும், மஹிமாசாலியுமான, ஜீவசமாதியிலிருக்கிற செள்ளக்குரிக்கி ஸ்ரீ எரிதாதா சுவாமிகளின் வரலாறு' என்ற தலைப்பில் ஒரு புத்தகம் 1964—ம் வருடம் முதல்முதலாக வெளியிடப்பட்டது. ஏறத்தாழ இருபது வருடங்களுக்குப் பிறகு 1983—ல் மறு பதிப்பு வெளிவந்தது. இதை வெளியிட்டவர்கள் செள்ளக் குரிக்கி ஸ்ரீ எரிதாதா மடத்தின் தர்மகர்த்தாக்கள். நிதி உதவி செய்தவர்கள் சேலம் ஸ்ரீ கோபால செட்டியாரின் புத்திரர் ஸ்ரீ கோவர்தன் அவர்களின் குடும்பத்தார்.

கன்னட மொழி மூலப் புத்தகத்தைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதியவர் அப்போதைய கும்பகோணம் பெரிய மட ஏஜெண்ட் பண்டிட் வீ. குமாரவீரய்யா அவர்கள். இதை இந்த நூலின் இணைப்பாகச் சேர்க்க விரும்பினேன். சில இடங்களில் நூலாசிரியர் பயன்படுத்திய சில பழைய தமிழ் வார்த்தைகளையும் வாக்கியங்களையும் இப்போது புழக்கத்தில் உள்ளபடி எளிமைப்படுத்தினேன்.

எழுத்தாளர் பரணீதரனுக்கு வாசகர்கள் எழுதிய கடிதங்கள், புகைப்படக் கலைஞர் தனபால் முதலியாரின் டைரிக் குறிப்பு, என்னிடம் அன்பர்கள் சொன்னவை, பெங்களூர் கௌசல்யா அம்மையாரின் பேட்டி மற்றும் பிறர் தந்த தகவல்கள் என் முக்கிய ஆதாரங்கள்.



ஒவ்வொரு முறை எழுதிய பிறகும் எழுதுவதற்கு மேலும் விஷயங்கள் இருக்கின்றன என்பது தெரியவரும். அதனால் மூன்று முறையும் புத்தகத்தை நிறைவு செய்த திருப்தி ஏற்படவில்லை. மூன்றாம் புத்தகத்தைப் படித்த வர்கள் புதிய அன்பர்களை அறிமுகப்படுத்தினார்கள். புதிய தகவல்களுடன் ஆவணங்களையும் தந்தார்கள். அவற்றைக் கொண்டு இந்த நான்காவது புத்தகத்தை எழுதியிருக்கிறேன்.

திருச்சியைச் சேர்ந்த சூளியத்தையா என்ற அன்பரின் அனுபவங்களை பரணீதரன் எழுதியிருந்த விதத்தைப் படித்த பிறகு திருச்சி சென்று அந்தக் குடும்பத்தாரை பேட்டி கண்டேன். சுவாமிகள் கொடுத்துவிட்டுச் சென்ற பூஜைப் பொருட்கள், நாணயங்கள் போன்றவற்றை அவர்கள் அப்போது காண்பித்தார்கள். அவற்றின் புகைப் படங்களும் இந்த நூலில் வெளியாகியுள்ளன.

சென்னை புகைப்படக் கலைஞர் தனபால் முதலியார் குடும்பத்தினர். பழனியாண்டி பிள்ளை குடும்பத்தினர், பாடகச்சேரி பொன்னுசாமி வாண்டையார், குத்தாலம் இளங்கோ, கும்பகோணம் கணேஷ் ஆகிய பலரைச் சந்தித்துத் தகவல்கள் திரட்டினேன். அவர்கள் சொன்ன சம்பவங்கள் மூலம் சுவாமிகளுக்கு சித்திகள் இருந்தன என்பது தெரிகிறது. இவை ஐதீகங்கள். இதை இன்னாருக்கு செய்தேன், செய்வேன் என்று எதுவும் சொல்லாமல் மெய்யன்பர்களுக்கு நோய் தீர்த்து, மனக்கவலை போக்கி, ஆறுதல் சொல்லி ஒவ்வொருவரும் பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்று தூண்டியவர் பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள். பல ஊர்களில் அவரது பக்தர்களைச் சந்தித்து நான் தெரிந்துகொண்ட முக்கிய விஷயம் இது.

மகானின் இந்தப் பண்பே இவரைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும், பிறருக்கும் தெரிவிக்கவேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டியது. எனவே கிடைத்த தகவல் களைக் கொண்டு **பைரவ சித்தர்** என்ற சிறு நூலை

எழுதினேன். அது வெளிவந்ததும் அன்பர்கள் தொடர்பு கொண்டு பாடகச்சேரி மகான் தன் குருவாக வரித்துக் கொண்ட எரிதாதா சுவாமிகள் பற்றிய குறிப்பேட்டைக் கொடுத்தார்கள். அந்தத் தகவல்களையும் சேர்த்து **குரு சிஷ்ய சித்தர்கள்** என்ற நூலை எழுதினேன்.

பிறகு பாடகச்சேரி மகான் சம்பந்தப்பட்ட சிலரைச் சந்திக்கும் வாய்ப்பும் பாடகச்சேரி செல்லும் பாக்கியமும் கிடைத்தன. புதிய அன்பர்கள் கொடுத்த தகவல்களைக் கொண்டு **பாடகச்சேரி மகான்** என்ற மூன்றாம் நூலை எழுதினேன். சிலரை பேட்டி கண்டு சேகரித்த தகவல்கள் அதில் இடம் பெற்றன.

எவ்வளவு தகவல்கள் திரட்டினாலும் புத்தகத்தைப் பூரணமாக எழுதமுடியும் என்று தோன்றவில்லை. பூரணத்வம் என்ற மகத்துவம் பெற்றவர்கள் மகான்கள். பூரணத்திற்கு வெளியே பூரணத்தைத் தேடும் சிறு புள்ளிகள் நாம். ஒரு மகானுக்கு இந்தச் சிறு புள்ளியின் எழுத்து அஞ்சலி இது. இதையும் நிறைவு என்று சொல்லிவிட முடியாது. மேலும் தகவல்கள் பெற இடங்களும் நபர்களும் உண்டு என்றால் கண்டிப்பாகத் தேடிச் செல்வேன்.

சமகால மகான்கள் பற்றி உரிய தகவல்களை அவ்வப் போது திரட்டி வைத்திருந்தால் அவர்களின் மகத்துவம் பற்றி ஆதாரங்களுடன் எழுதுவது எளிது. அப்படிப்பட்ட ஆவணங்கள் கிடைக்காதவரை அன்பர்கள் சொல்வதைக் கேட்டுக் கொள்ளவேண்டியதுதான். பாடகச்சேரி சுவாமி களுடன் பழகிய அன்பர்களின் வாரிசுகளை இப்போது சந்தித்துப் பேச முடிவதை பாக்கியமாகக் கருதுகிறேன். கவனத்துக்கு வராத சிலர் இருக்கலாம். இப்போதைக்குப் பதிவு செய்ய முடியாதனவற்றை இனி எழுத வாய்ப்பு இல்லாமல்போகும். எனவே அன்பர்கள் தம் நினைவி லிருந்து மீட்டுச் சொன்னதைக் கேட்டது கேட்டபடி எழுதியிருக்கிறேன்.



மாமனிதர்களும் மிகக் குறுகிய காலமே நினைவு கொள்ளப்படுகிறார்கள். மறைந்த சில ஆண்டுகளில் முற்றிலும் மறக்கப்படுகிறார்கள். ஆனால் தவசீலர்களான ஞானிகள் மறக்கப்படுவதில்லை. 1949—ல் ஜீவசமாதி அடைந்த ஒரு மாபெரும் ஞானச்சித்தரின் வரலாற்றை எழுதும் பாக்கியம் எனக்கு கிடைத்திருக்கிறது. இப்போது அனைத்து மக்களும் அறிந்து, உணர்ந்து, இந்த மகான் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து வாழ்வில் மேன்மை அடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த மகானின் வாழ்க்கை வரலாறும், மகத்துவங்களும் இங்கே சுருக்கமாகத் தொகுத்து வழங்கப்படுகிறது. அநேகமாக சுவாமிகள் பற்றித் தெரியவந்த தகவல்கள் எல்லாம் இந்த நூலில் உள்ளன என்றே நினைக்கிறேன்.

‘ஐயப்பனோடு ஐம்பது நாட்கள்’ என்ற தொடரைப் பல வருஷங்களுக்கு முன்பு ஆனந்த விகடனில் எழுதிய அதன் நிர்வாக ஆசிரியரான கோபு என்று அழைக்கப் பட்ட கோபாலகிருஷ்ணன் தொடரை நிறைவு செய்த போது முடிவில்லாத புகழுடைய இறைவனைப் பற்றி எழுதும்போது முற்றும் என்ற சொல்லைப் போடாமல் நிறைவு செய்கிறேன் என்று எழுதினார். கோபுவின் நண்பன் என்றாலும் நான் பெரிய எழுத்தாளன் இல்லை. ஆனால் இந்தப் புத்தகத்தை எழுதும்பொழுது எனக்கும் அதே போன்ற பணிவான மனோநிலைதான் இருந்தது.

பயணங்கள், பேட்டிகளின்போது உடன் இருந்த நண்பர்கள் ஆர். நடராஜன், சுப்ர.பாலன், புகைப்படக் கலைஞர் யோகா ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். விரிவாக்கப்பட்ட ஐந்தாம் பதிப்பு இது. ஒவ்வொரு பதிப்பிலும் கவனம் செலுத்தித் தகவல்களை, பேட்டிகளை, நன்றாக ‘எடிட்’ செய்து வெளியிட்டுள்ள ப்ரெய்ன் பேங்க் நிறுவனத்திற்கும் என் நன்றி.

**சென்னை** **நல்லி குப்புசாமி செட்டி**

## நூல் எழுதப் பயன்பட்ட ஆதாரங்கள்


1. ஸ்ரீ நிரன்ஜனரும், பரமஹம்சரும் மஹிமாசாலியுமான ஜீவசமாதியிலிருக்கிற செள்ளக்குருக்கி ஸ்ரீ ஸ்ரீ எரி சுவாமிகளின் வரலாறு (1964 வெளியீடு)
2. பைரவ சித்தர் — வாழ்க்கைக் குறிப்பு — பாடகச்சேரி சித்தர் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் நிரந்தர அன்னதானக் கமிட்டி, கும்பகோணம் (2011)
3. ஸ்ரீ பாடகச்சேரி சுவாமிகள், பரணீதரன்.
4. அருள்மிகு சுட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி பிள்ளை — பி. சுவாமிநாதன்.
5. புகைப்படக்காரர் தனபால் முதலியார் டைரிக் குறிப்புகள். (அச்சில் வராதது)
6. சென்னை பெங்களூர், கும்பகோணம் பாடகச்சேரி, திருச்சி, செள்ளக்குருக்கி ஆகிய ஊர்களில் உள்ள சில அன்பர்களும் அவர்கள் குடும்பத்தினரும் அளித்த பேட்டிகள்.
7. சுவாமிகளின் குறிப்பேடுகள் சில.


# பாடகச்சேரி ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள்

"அனைத்து உயிரினங்களையும் சமமாகக் கருதி நேசிக்க வேண்டும். மக்கள் நேர்மையாகவும் நாணயமாகவும் இருத்தல் அவசியம். எவ்விதமான பிரதிபலன்களையும், பாகுபாடுகளையும் பாராமல் அடித்தள மக்களுக்கு உதவ வேண்டும். நம்பிக்கையுடன் சன்மார்க்கப் பாதையில் பயணம் செய்தால் இறைவனை அறியும் உயர்நிலையை மனிதர்கள் அடைய முடியும்," என்று உபதேசித்த பாடகச் சேரி ராமலிங்க சுவாமிகள் இந்தியாவின் எதிர்காலத்தை ஊகித்துணர்ந்து நாம் சுதந்திரம் பெற்ற இரண்டாம் வருடம் இப்படிச் சொல்லியிருக்கிறார்:

"நாட்டின் எதிர்காலம் நன்றாக இல்லை. ஏமாற்றுதல், பித்தலாட்டம், பொய், மோசடி, கொலைகள் முதலிய வேண்டாத காரியங்களாக நடக்கப் போகிறது. அதை நான் இருந்து பார்க்க வேண்டாம். ஆதலால் மறையப் போகிறேன். ஆனால், என்னை நம்பி இருப்பவர்களிடம் என்றும் நான் இருப்பேன். என்னை அவர்கள் நம்பும் அளவுக்கு அவர்களுக்கு வேண்டியதைச் செய்வேன்!"

இவர் குரல் கொடுத்தால் பல நாய்கள் எங்கிருந்தோ வந்து சேரும். இவர் தரும் விருந்தினைச் சாப்பிட்டுவிட்டு இவர் சொன்னதும் மாயமாய் மறையும். இது இவர் நடத்திய பைரவ பூஜையில் பல முறை மக்கள் கண்ட காட்சி. பக்தர்கள் இவரைச் சந்திக்க விரும்பினால் சுந்தரம் என்ற நாயிடம் சொன்னால் போதும். அது இவரது இருப்பிடம் தேடிச் செல்லும். இவர் நாயுடன் பக்தரைத் தேடி வருவார். அதனால்தான் இவரை பைரவ சித்தர் என்றும் சொல்கிறார்கள்.

நாகேஸ்வரன் கோயில் திருப்பணியின்போது தினக் கூலி கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டபோது, ஒரு பிடி மண்ணை எடுத்துக் கொடுக்க அது பெறுபவர் கைகளில் கூலித்தொகையாக மாறியது. இது போல் சுவாமிகள் நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளம். இவரைப் பாடகச்சேரி சுவாமிகள் என்றும் சொல்கிறார்கள்.

பாடகச்சேரி கும்பகோணம் அருகே உள்ள கிராமம். மன்னார்குடி செல்லும் சாலையில் வலங்கைமான் தாண்டி நான்காவது கிலோமீட்டரில் பாடகச்சேரி விலக்கு என்ற இடத்திலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது இந்தச் சிறு கிராமம்.

அந்த ஊருக்கு ஏன் பாடகச்சேரி என்ற பெயர் வந்தது என்று சிந்தித்துப் பார்த்தேன். அதிக ஜனத்தொகையோ பல துறைகளைச் சேர்ந்தவர்களோ இல்லாத கிராமத்தில் என் கேள்விக்கு பதில் கிடைக்குமா என்பது சந்தேகமாக இருந்தது. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது என்பது போல் பாடகச்சேரியை நெருங்கும்போதே காரணம் தெரியவந்தது. அதற்காக எனக்குக் கிடைத்த குறிப்பு போகும் வழியில் இருந்த சிறிய கோயிலின் முகப்பில் எழுதப்பட்டிருந்த பெருமாளின் திவ்ய நாமம்: **கண்டுளம் மகிழ்ந்த பெருமாள்.** எதைக் கண்டு உளம் மகிழ்ந்தார் பெருமாள் என்று ஆராய்ந்தபோது பாடகச் சேரி பெயரின் அர்த்தம் கிடைத்துவிட்டது.

காணாமல்போன சீதையைத் தேடிப்போன வனவாச ராமன் சீதையின் சிலம்பு, பாடகம், ஒரு கிராமத்தில் விழுந்திருந்ததைப் பார்த்தார். புஷ்பக விமானத்தில் ராவணன் சீதையைக் கடத்திக் கொண்டுபோனபோது பாடகம் நழுவி விழுந்திருக்கலாம். சீதை வேண்டுமென்றே அதை ஒரு தடயமாக நழுவ விட்டிருக்கலாம். அதைக் கண்ட ராமன் உளம் மகிழ்ந்தார். பாடகம் கீழே விழுந்த ஊர் பாடகச்சேரி. அதைக் கண்டு ராமன் மகிழ்ந்ததால் அந்த ஊர்ப் பெருமாளுக்குக் கண்டுளம் மகிழ்ந்த பெருமாள் என்று பெயர். பல ஊர்களுக்கு இப்படிப் பொருத்தமான பெயர்கள் உண்டு. பாடகச்சேரிக்குச் செல்லும்வரை எனக்கு இந்தப் பெயரின் மகத்துவம் தெரியவந்ததில்லை. தெரிந்ததும் மிகவும் மகிழ்ந்தேன்.



## இல்லாத இடத்தில் ஜவ்வாது வாசனை

நான் சமீபத்தில்தான் பாடகச்சேரிக்குப் போனேன். ஆனால் பல வருஷங்களுக்கு முன்பு பரணீதரன் ஆனந்த விகடனில் பாடகச்சேரி சுவாமிகள் பற்றி எழுதிவந்த கட்டுரையைப் படித்த சென்னை வக்கீல் பு.அ.கோபால கிருஷ்ணன் வலங்கைமான் வழியே பாடகச்சேரிக்குப் போனார். இப்போது ஒரு வழிகாட்டிப் பலகை நெடுஞ் சாலையிலேயே இருக்கிறது. ஊருக்குள் நுழைந்ததும் சுவாமிகள் மண்டபமும் அன்னதானக்கூடமும் கண்ணில் படுகின்றன. முப்பது வருடங்களுக்கு முன்பு அப்படியல்ல. வக்கீல் சிரமப்பட்டு வயல் பரப்புகளைத்தாண்டி வழி கேட்டுக்கொண்டு பாடகச்சேரிக்குப் போனார். ஆனந்த விகடனுக்கு 1983—ல் எழுதிய கடிதத்தில் மகான்கள் மறைவ தில்லை, தோன்றாத் துணையாக ஆசிர்வதிக்கிறார்கள் என்று இவர் தன் அனுபவத்தைத் தெரிவித்திருக்கிறார்.

உள்ளூர்வாசிகளிடம் மண்டபத்திற்கு வழி கேட்டுக் கொண்டு ஒரு பாழடைந்த கட்டடத்திற்கு வந்தார். மர உத்திரங்கள் உளுத்துத் தொங்கிக் கொண்டிருந்தன. இவர் சென்ற நேரம் பின் மாலைப்பொழுது. இருட்டாக இருந்தது. தீக்குச்சியைப் பற்றவைத்து அந்த மங்கிய வெளிச்சத்தில் கட்டடத்தை நோட்டம் விட்டார். என்ன ஆச்சரியம்! வெளிச்சம் வந்ததும் ஜவ்வாது மணமும் ஊதுபத்தி வாசனையும் சேர்ந்தே வந்தது. அங்கே ஊது பத்தி இல்லை, ஜவ்வாது இல்லை. தான் ஆன்மரூபமாக இருப்பதை அப்படி உணர்த்தியிருக்கிறார் சுவாமிகள்.

வக்கீல் கோபாலகிருஷ்ணன் சொல்லும் இன்னொரு தகவலும் முக்கியமானது. அவர் மண்டபத்திற்கு அருகில்

இருந்த முருகன் கோயிலுக்குச் சென்று தரிசித்தபோது ஐம்பது வருடங்களுக்கு முன்பு திருச்சி சிறையில் உயிர் நீத்த அந்த ஊர் தேசபக்தர் நடராஜ வைராயரின் நினைவுச் சின்னத்தைப் பார்த்து அதுபற்றி விசாரித்தி ருக்கிறார். வைராயரின் மனைவி 87 வயது மூதாட்டி அதே ஊரில் வசிக்கிறார் என்பது தெரிந்தது. அவரை நமஸ்கரித்திருக்கிறார். உடல் நலிந்த அம்மையார் அதிகம் பேசவில்லை. மௌனமாக ஆசிர்வதித்தார்.

சுவாமிகள் அமெரிக்கா சென்றபோது அணிந்த காவி அங்கி அங்கே பத்திரப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதாக இந்த வக்கீல் தெரிவிக்கிறார். இந்த முழு உடல் அங்கி அமெரிக்காவில் இந்திய சன்னியாசிகள் அணிவது என்று குறிப்பிடுகிறார். இதே மாதிரி உடையில் சுவாமிகளின் சுதைச் சிற்பம் கும்பகோணம் முக்திக்குள மண்டபத்தில் உள்ள எரிதாதா சன்னிதியில் இருக்கிறது. இதை வைர வியாபாரித் திருக்கோலம் என்றும் சொல்கிறார்கள்.

பாடகச்சேரி அருகே உள்ள அனியமங்கலம் என்ற கிராமத்தில் தங்கியிருந்த வக்கீல் கோபாலகிருஷ்ணன் ஒரு அன்பரின் வீட்டில் சுவாமிகளின் படத்தையும், கதர்த் துண்டையும் பார்த்திருக்கிறார். துணிகள் அவர் உடுத்தியபோது இருந்தபடி கொஞ்சம்கூட மங்காமல் இருந்ததாகவும் குறிப்பிடுகிறார். ஆச்சர்யம்தான்.

வேலாயுதம் என்கிற அன்பர் தன் குடும்பத்தாருக்கு சுவாமிகளுடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது பற்றிக் குறிப்பிட்டுவிட்டு “பாடகச்சேரியில் தங்கியிருந்த சுவாமி களை கிராம மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று நினைக்கும்போது அழுகைதான் மிச்சம்” என்று எழுதியிருக்கிறார். நாகப்பட்டிணம் அருகே எண்கண் என்ற ஊரின் விவசாயக் கூட்டுறவு சங்கச் செயலாளராக இருந்தவர் இவர். இதைப் படித்த நானும் வருந்தினேன். அதற்காக அந்த கிராம மக்களை நாம் குறை சொல்லக்கூடாது. எளிதில் புரிந்து கொள்ளப் படாதவர்களாகவே மகான்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அது அவர்கள் இயல்பு. பல ஞானிகள் எப்படியோ வாழ்ந்திருப்பது பற்றி அன்பர்கள் கவலைப்படுகிறார்கள். ஆனால் மகான்கள் கவலைப்பட்டதில்லை.



## சுவாமிகளின் பால பருவம்

ஆந்திர மாநிலம் அனந்தப்பூர் மாவட்டத்தில் உள்ள சிறிய ஊர் உறவுகொண்டா (உருவிகொண்டா). அங்கு வீரசைவ லிங்காயத்து இனத்தவர்கள் அதிகம் உள்ளனர். உறவுகொண்டாவிலும் ஒரு வீரசைவ மடம் உள்ளது. சுவாமிகளின் முன்னோர்கள் அங்கு வாழ்ந்ததாகவும் பிறகு கோவை மாவட்டம் விஜயமங்கலத்தை அடுத்த மஞ்சம் பாளையத்திற்குக் குடிபெயர்ந்ததாகவும் சொல்கிறார்கள். அவர்கள் சுபகாரியச் சடங்குகள் செய்து வைத்ததுடன் திண்ணைப் பள்ளிக்கூடமும் நடத்திவந்திருக்கிறார்கள்.

சுவாமிகள் பிறந்தது 1876—ம் வருடம் மே மாதம் 9—ம் தேதி என்று ஒரு தகவல் கிடைத்துள்ளது. ஒரு வயதாகும்போது தந்தை கந்தசாமியை இழந்த இவர், அடுத்து தாய் அர்த்தநாரி அம்மையையும் இழக்க நேர்ந்தது பெரிய சோகம். ஒரு வயதிலிருந்து நான்கு வயதுவரை இவரை கவனித்துக் கொண்டது யார் என்ற விபரங்கள் கிடைக்கவில்லை. நான்கு வயது பாலகனாக இருந்த போது இவரை கும்பகோணத்தில் பெரிய மடம் என்கிற வீரசைவ மடத்தில் விட்டுவைத்தார்கள் என்கிறார்கள் சிலர். அப்போது மடத்தைச் சேர்ந்தவர்கள் தம்மால் முடிந்த அளவுக்கு உதவியிருக்கிறார்கள். கர்நாடக மாநிலம் செள்ளக்குருக்கியிலிருந்து எரிதாதா சுவாமிகள் என்ற மகான் வந்தபோது சிறுவன் அவரிடம் வளரட்டுமே என்று ஒரு அன்பர் கேட்டுக்கொண்டார். எரிதாதா சுவாமிகள் ராமலிங்கத்தை செள்ளக்குருக்கிக்கு அழைத்துக் கொண்டு போனார்.

நான்கு முதல் 11 வயதுவரை இவர் செள்ளக் குருக்கியில் எரிதாதா சுவாமிகளின் தீக்ஷையில் வளர்ந்து வந்தார். ஒருநாள் எரிதாதா சுவாமிகள் இவரை அழைத்து ‘சோழ நாட்டில் காவிரிக் கரை ஸ்தலத்தில் தவம் செய்யப் போ’ அருட்கட்டளையிட இவர் வந்து சேர்ந்த இடமே பாடகச்சேரி.

## நவகண்டயோகம்

பாடகச்சேரிக்கு வந்த புதிதில் சுவாமிகள் உன்மத்தர் போலத் திரிந்திருக்கிறார். சில சமயம் மோன நிலையில் இருந்திருக்கிறார். இவரை எப்படி எடுத்துக் கொள்வது என்று தெரியாமல் திகைத்துப் போயிருக்கிறார்கள் மக்கள். ஞானிகளுக்கு எதுவுமே ஒரு பொருட்டல்ல, உணவு, உடை, உறவு எதுவாக இருந்தால் என்ன?

ஒரு இரவு நாச்சியார்கோயில் கிராம அதிகாரியின் அலுவலகத்தில் படுத்துக் கொண்டுவிட்டார். காலையில் கிராம அதிகாரி பார்த்தபோது இவரது உடல் தலையும், கை, கால்கள் உள்பட ஒன்பது பாகங்களாகக் கிடந்தன. கிராம அதிகாரிகளும் மக்களும் பதறிப்போனார்கள். இவர் அவதூதராகத் திரிந்தது பிடிக்காத யாரோ கொலை செய்துவிட்டார்கள் என்று தீர்மானித்து கிராம அதிகாரி கொலை வழக்கைப் பதிவு செய்ய முயன்றபோது யாதொரு சேதமுமின்றி சுவாமிகள் வெளியே வர, எல்லோரும் திகைத்துப் போனார்கள்.

பாடகச்சேரி அருகே பட்டம் கிராமத்தில் உள்ள மிராசுதார் கிளாக்குடையார் இவருக்கு மாடு மேய்க்கும் வேலையைக் கொடுத்திருக்கிறார். சித்தருக்கு மாடும் மனிதரும் ஒன்றுதான். அதனால் அந்த வேலையையும் தட்டிக்கழிக்கவில்லை. ஒரு நாள் மேய்ச்சலுக்குப்போன மாடுகளைத் தேடிச் சென்ற பண்ணை வேலையாள் இவர் இருந்த கோலத்தைப் பார்த்து அலறியடித்துக்கொண்டு திரும்பிவிட்டார்.

அப்படி என்ன பயங்கரம்? முன்பு நாச்சியார்கோயில் கிராம அதிகாரியின் அறையில் ஒன்பது துண்டுகளாகக் கிடந்தாரே, அதே மாதிரி காட்சியளித்தார் சுவாமிகள். யாரோ வெட்டிப் போட்டிருக்க வேண்டும் என்று பதறிப் போய் கிராம மக்கள் மேய்ச்சல் காட்டுக்கு வந்தபோது சர்வசாதாரணமாக மாடுகளை மேய்த்தபடியே திரும்பிக் கொண்டிருந்தார் இவர்.



ஒன்பது துண்டுகளாகக் கிடப்பது நவகண்டயோகம். சித்தர்களுக்கு இது வாய்க்கும். அதனால் இவர் ஒரு சித்தர் என்பதைப் புரிந்து கொண்ட கிராம மக்கள் பாடகச் சேரிக்கு அழைத்துச் சென்று அவர் வசிக்க கொட்டகை போட்டுக் கொடுத்தார்கள். தொடக்கத்தில் அங்கே வசித்த சுவாமிகள் ஏனோ அங்கே நீண்ட காலம் தங்கவில்லை. பாடகச்சேரியில் பக்தர்கள் வாசஸ்தலம் ஏற்பாடு செய்த பின் சுவாமிகள் தவக்கோலம் பூண்டார் என்று தெரிகிறது. சுவாமிகள் எப்போதும் தலையைச் சுற்றி சால்வை அணிந்து கொண்டிருந்ததால் அவரது சிரசை யாரும் பார்த்ததில்லை. ஆஜானுபாகுவாக இருந்திருக்கிறார். ஆறடி உயரம், தூய வெள்ளை ஆடை, தீட்சண்யமான கண்கள், நெற்றியில் விபூதி, சந்தனம், குங்குமம்.

பாடகச்சேரி கிராமத்தின் மேற்கே வெட்டாறு என்ற காவிரியின் கிளை நதி இன்று மணல் படுகை. ஆனால் மகான் காலத்தில் ஆறாக ஓடியிருக்கிறது. வெட்டாற்றின் இரு கரைகளிலும் ஞானிகள், சித்தர்களின் சமாதிகள் உள்ளன. அந்தக் காரணத்தினால் சுவாமிகள் பாடகச் சேரிக்கு வந்திருக்கலாம்.

பாடகச்சேரி மடத்துக்கு எதிரில் வெட்டாற்றின் மேற் கரையில் ஒரு சூலாயுதம் நடப்பட்டிருக்கிறது. அருகில் தீபக் கூண்டின் பக்கத்தில் தரையிலிருந்து அரை அடி உயரம் வெளியே தெரியும்படி ஒரு கல் புதைந்திருக்கிறது. இதை சிவலிங்கம் என்கிறார்கள். சுவாமிகள் இங்கே வாரக் கணக்கில் மாதக் கணக்கில் யோகத்தில் ஆழ்ந்து விடுவது வழக்கம். சமயங்களில் இங்கே நவகண்டயோக சாதனையையும் நிகழ்த்தியிருக்கிறார். பயம் காரணமாக

அதிகம் பேர் இங்கே வந்ததில்லை. தன் தனிமை கெடக் கூடாது என்பதற்காகவும் சுவாமிகள் அப்படி நடந்து கொண்டிருக்கலாம்.

வேப்பமர நிழலில் உள்ள இந்த வேலாயுதத்தை பால முனீசுவரர் என்கிறார்கள். சுடு மண்ணால் ஆன விளக்குக் கூண்டு சேதமடைந்திருக்கிறது. பௌர்ணமிகளிலும் குரு பூஜையின்போதும் அன்பர்கள் வருகிறார்கள். இங்கே வழிபாடு நடந்த பிறகுதான் கிழக்குப் பக்கம் உள்ள மடத்தில் பூஜையும் அன்னதானமும் நடக்கிறது.

பாலதண்டாயுதபாணி சந்நிதி எதிரில் பலி பீடத்துக்கு முன்பு மயிலுக்கு பதிலாக யானைச் சிற்பம் உள்ளது. ஆலயத்துக்கு எதிரில் இடும்பன் சந்நிதியும் இருக்கிறது. பழனி, செள்ளக்குரிக்கி, பாடகச்சேரி ஆகிய மூன்று இடங்களிலும் பாலதண்டாயுதபாணி சிலாரூபங்கள் ஒரே மாதிரியானவை என்கிறார் பாடகச்சேரி அன்னதானக் கமிட்டி மேனேஜிங் ட்ரஸ்டி குத்தாலம் இளங்கோ.

## சுவாமிகளின் பூஜை முறை

பாடகச்சேரியில் வைராயர், வாண்டையார் என்ற பெயர்கள் அதிகமாகப் புழக்கத்தில் உள்ளன. பாடகச்சேரி மேலத்தெருவில் வசிக்கும் பொன்னுசாமி வாண்டை யாரின் தாயார் தாமரைவல்லி. தகப்பனார் பல்லவ வாண்டையார். இவர் ஐந்தாவது வயதில் சுவாமிகளிடம் வந்து சேர்ந்தார். படிப்பு இல்லை. முக்திக்குள மண்ட பத்தில் உள்ள மடத்துக்கு வந்த இவருக்குப் பூ கட்டுகிற வேலை கிடைத்தது. தினமும் பூவைக் குடலையில் வைத்து நாகேசுவரன் கோயிலில் காலை எட்டு மணிக்குள் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் பூக்கூடையை முதுகில் கட்டி எடுத்துக்கொண்டு சாயங் காலம் நான்கு மணிக்குப் புறப்பட்டு சுவாமிமலை முருகன் கோவிலில் பூஜைக்குக் கொடுக்கவேண்டும். ஏழெட்டு வயதில் வாண்டையார் உற்சாகமாகச் செய்த பணி இது.



மண்டபத்தின் தெற்கே இருந்த பாழ்பட்ட நந்தவனம் இப்போது பழமரங்களுடன் தழைத்துக் கொண்டிருக் கிறது. முன்பு பூச்செடிகளும் தென்னை மரங்களும் நிறைய இருந்திருக்கின்றன. சுவாமிகள் காலையில் குளியல் முடித்து உடை மாற்றிக் கொண்டு முகம் பார்க்கும் கண்ணாடியை இலந்தை மரத்தில் சார்த்தி முகம் தெரியும் தொலைவில் வைத்துக்கொண்டு பொன்னுசாமி தரும் மலர்களைக் கையில் எடுத்துக்கொண்டு மந்திரங்கள் சொல்லி கண்ணாடியில் தெரியும் தன் பிம்பத்துக்கு அர்ச்சனை செய்வார். இந்த பூஜை அரைமணி நேரம், முக்கால்மணி நேரம் நடைபெறும். பாடகச்சேரி சுவாமிகள் கற்பூரம் காட்டுவதில்லை, மணி அடிப்பதில்லை.

இது பற்றி பாடகச்சேரி சுவாமிகள் டிரஸ்ட் உறுப்பினர் பெங்களூரு கௌசல்யா அம்மையார் சொல்கிறார்: "நான் பார்த்தபோது சுவாமிகள் தனிமையான இடத்தில் அமர்ந்திருந்தார். எதிரில் முகம் பார்க்கும் கண்ணாடி இருந்தது, சற்று நேரம் அதன் முன்னால் கண்களை மூடி அமர்ந்திருந்தார். பிறகு விபூதி, குங்குமம் தரித்துக் கொண்டு அன்பர்களுக்கும் வழங்கினார். அவ்வளவுதான் சுவாமி செய்த வழிபாடு."

வள்ளலாருக்குத் திருத்தணி முருகன் கண்ணாடியில் காட்சி தந்ததுபோல் தனக்குக் கண்ணாடியில் காட்சி தந்தது யார் என்பதை சுவாமிகள் சொல்லவில்லை.

முக்திக்குள மண்டபத் தோட்டத்தில் கனகாம்பரம், நந்தியாவட்டை, மல்லிகை, சாமந்தி எல்லாம் நிறையப் பூக்கும். மடத்துக் கிணற்றிலிருந்து ஏற்றச்சால் போட்டுச் செடி கொடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சுவார்கள். பூக்களை ஓர் வேலையாள் கொய்து தருவார். பூ கட்டுவதுதான் பொன்னுசாமியின் வேலை. மற்றபடி சுவாமிகள் வந்து தங்கியிருக்கும்போது அவருக்கு எடுபிடி வேலைகளைச் செய்ய வேண்டும்.

தினசரி மாலை ஆறு மணிக்கு மடத்தைச் சேர்ந்த ஒரு பெரியவர் மாலை பூஜையைச் சிறப்பாக நடத்தி வருகிறார். ஒவ்வொரு குரு வாரத்திலும் விசேஷ பூஜை நடைபெறுகிறது. முக்திக்குள மண்டபத்தின் பின்னால் ஒரு சிறிய கட்டடம் இருக்கிறது. இதில் நடுநாயகமாக அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறவர் பாடகச்சேரி சுவாமிகளின் குருவான எரிதாதா சுவாமிகள். இடப்புறம் பாடகச்சேரி சுவாமியின் சிலை (நின்ற கோலம்). வலப் புறம் சுவாமிகளின் வைர வியாபாரித் திருக்கோலம். (நின்ற கோலம்) சிலையும் உள்ளன. எதிரில் பைரவர் கருடன் சுதைச் சிற்பங்கள் உள்ளன.

நான் முதன்முறை முக்திக்குள மண்டபத்திற்குச் சென்றபோது எரிதாதா சந்நிதியைப் புகைப்படம் எடுக்க பெங்களூரில் உள்ள ட்ரஸ்டிகள் அனுமதி தர வேண்டும் என்றார் அங்கிருந்த பொறுப்பாளர். அப்போது நான் பெங்களூர் டிரஸ்டிகளை சந்தித்ததில்லை. எனவே சந்நிதிக்கு வெளியே இருந்த கருடன், பைரவர் சுதைச் சிற்பங்களை மட்டுமே புகைப்படம் எடுக்கச் செய்தேன். சந்நிதியின் நுழைவாயிலில் துவார பாலகர்கள் போல் இரண்டு சிறிய கருங்கல் சிற்பங்கள் இருந்தன. அவை பெங்களூர் ஜவுளி வியாபாரி கோரப்பாவும் அவர் மகன் ஷாமண்ணாவும் என்று அடையாளம் சொன்னேன். ஏனென்றால் நான் ஷாமண்ணாவைப் பார்த்திருக்கிறேன்.

வடலூரைப் போன்று கும்பகோணத்திலும் சத்ய ஞான சபைக் கட்டடப் பணிகள் தொடங்கின; ஆனால் நிறைவடையவில்லை. தம் அன்பர்கள் பிற்காலத்தில் அதை நிறைவு செய்யட்டும் என்பது சுவாமிகளின் சித்தம் போலும். கருங்கல் மேடையின் கீழிருந்து சில்லென்ற காற்று வீச வாகாகத் துளைகள் போடப்பட்டிருப்பது அழகியல் பொறியியல் சேர்ந்த வியப்புக்குரிய அம்சம்.

‘பௌர்ணமி தினத்தில் பூட்டிக் கிடக்கும் கம்பிக் கதவைத் திறந்துகொண்டு கீழிறங்கி விசாலமான



மண்டபத்தின் நடுவில் விளக்கேற்றி வழிபடுகிறோம்’ என்று சொன்னார் கும்பகோணம், தமிழ்நாடு வர்த்தகர் நலச்சங்கத்தின் தலைவரும் பாடகச்சேரி அன்னதான ஆராதனைக் கமிட்டியின் செயலாளருமான என். கணேஷ்.

“சாமி எந்த இடத்துலயும் பத்துப் பதினைஞ்சு நாளுக்கு மேலே தங்காது. எங்கியாச்சும் போயிடும். எங்கே போகும், எப்பத் திரும்பும்னு தெரியாது. ரெண்டு வருஷம் கூட ஆகியிருக்கு. அமெரிக்கா, சிங்கப்பூர் போனேன்னு சொல்லும். அந்த டிரஸ் எல்லாம்கூட எங்கிட்ட இருக்கு” என்று பழைய நினைவுகளில் ஆழ்கிறார் வாண்டையார். சோமு வைராயர் வீட்டிலும் இந்த டிரஸ் தவிர ஒரு கைத்தடியும் இருக்கிறது.

‘சுந்தரம்’னு கூப்பிட்டால் உடனே ஓடிவருகிற பைரவர் மடத்திலேயே இருந்தது. அதன் உருவச்சிலை முத்துப் பிள்ளை மண்டபம் எரிசுவாமி சந்நிதி எதிரில் இருக்கிறது என்றார். “அங்கே ஒரு கருடன் சிலையும் இருக்கிறதே, என்ன விசேஷம்?” என்று கேட்டேன்.

“அப்போ எனக்கு ஏழு வயசிருக்கும். அன்னைக்கு சாமி ஊரில் இல்லை, காலையில் ஒரு நாள் ஒரு கருடன் இலந்தை மரத்தை ரெண்டு தடவை வட்டம் போட்டது. அப்படியே ‘சொத்’துனு தரையிலே விழுந்து செத்துப் போச்சு. எனக்கு என்ன செய்யுறதுன்னு தெரியல்லே. ஒரு கூடையைப் போட்டு மூடிவச்சேன். மறுநாள் சாமி வந்தாக. அந்த கருடனுக்குச் செய்ய வேண்டியதைச் செஞ்சு அடக்கம் பண்ணினாக. அந்த எடத்துலதான் கருடன் சிலை இருக்கு,” என்று சொல்கிறார் வாண்டையார்.

சின்னசாமி என்பவர் மடத்தில் இருந்தார். அவர் சாமியின் ஊர்க்காரர் என்று சொல்லிக் கொள்வார். தோட்டத்தையும் பசுமாடுகளையும் வண்டிக்காளை களையும் அவரே பராமரித்து வந்திருக்கிறார். பத்து வருடங்களுக்குப் பிறகு கும்பகோணம் முக்திக்குள மண்டபத்திலிருந்து சுவாமிகள் திருவொற்றியூர் போய்

விட்டார். பொன்னுசாமி வாண்டையாரையும் அப்போது அழைத்துப் போனார். கோவில் எதிரிலிருந்த பள்ளிக் கூடத்தில் மூன்றாம் வகுப்பில் சேர்த்தார். நான்கைந்து வருடங்கள் அங்கேயே இருந்திருக்கிறார் பொன்னுசாமி. போலீஸ் அதிகாரி ராஜரத்னமும், ஜவுளி வியாபாரி பழனியாண்டி பிள்ளையும் அப்போதுதான் அவருக்குப் பழக்கமாகியிருக்கிறார்கள்.

திருவொற்றியூரில் இருந்தபோதே பொன்னுசாமியின் தகப்பனார் காலமாகி விட்டார். வந்து பார்க்க வேண்டும் என்றுகூடத் தனக்குத் தோன்றவில்லை. அப்படி 'அறியாத வயசு' என்கிறார் வாண்டையார். இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது திருவொற்றியூர் மட வளாகத்தை ராணுவம் எடுத்துக்கொண்டு விட்டது. அப்போது சுவாமிகள் இவரை கும்பகோணத்திற்கே அழைத்து வந்து விட்டார். பாடகச்சேரியில் இவரது தாயார் இருந்ததால் அங்கேயே போகச் சொல்லிவிட்டார்.

அதன்பிறகு பொன்னுசாமி வாண்டையார் முக்திக் குள மண்டபத்துக்குப் போகவில்லை. பதினான்கு அல்லது பதினைந்து வயதிலேயே பாடகச்சேரி வாசம் நிரந்தரமாகிவிட்டது. 1955–ம் வருடம் தன் 29–ம் வயதில் திருமணம் செய்து கொண்டார். விவசாயமே முக்கிய வேலை அப்போது நெல் மூன்று போகம் விளையும். முழங்கால் உயரத்துக்குத் தண்ணீர் ஓடும். அதே ஆறு இப்போது வறண்டு மணல் பரப்பாக இருக்கிறது. ஆற்றங் கரை மேட்டில் ஒரு ஆலமரம் இருந்தது. சுவாமிகள் எப்போதும் அங்கேதான் இருப்பார். அங்கேதான் சுவாமி களுக்கு அருள் வந்தது என்று ஊரார் பேசக் கேட்டி ருக்கிறார். சுவாமிகள் பற்றி பாலகுமாரன் கற்பனையாக எழுதிய நாவலின் தலைப்பு 'ஆலமரம்.'

இப்போதுள்ள பாடகச்சேரி மடத்தை சுவாமிகள் சொல்லி காரைக்குடி செட்டியார் ஒருவர் கட்டிக் கொடுத்தார். முன்பு இருந்தது ஒரு கூரைக் கொட்டகை.



எதிரேயுள்ள குளம் தனியார் சொத்து. அதைப் 'பழங் கொண்டார் குளம்' என்று சொல்வார்கள். இப்போது அது பஞ்சாயத்தின் சொத்தாகி விட்டது. கிராம தேவதைகள் உட்பட ஒன்பது கோயில்கள் பாடகச் சேரியில் உள்ளன. பிரகதீசுவரர் சௌந்தர்யநாயகி சிவன் கோயிலுக்கும், பெருமாள் கோயிலுக்கும் செண்பக விநாயகர் கோயிலுக்கும் தானே உருவாக்கிய முருகன் கோயிலுக்கும் திருவெறும்பூரிலிருந்து ஒரு அர்ச்சகரை அழைத்துவந்து பூஜைக்கு ஏற்பாடு செய்தவர் சுவாமிகள். இவை தவிர ஆளவந்தியம்மன், மாப்பிள்ளை அழகர், வீரமாசானி, காத்தாயி அம்மன் கோயில்களுக்குப் பூசாரிகள் உண்டு. ஆளவந்தியம்மன் தேர்த்திருவிழா விமரிசையாக நடக்கும். காத்தாயி அம்மன் பல குடும்பங் களுக்கும் குலதெய்வமாக விளங்குகிறார்.

பாடகச்சேரியில் ஒரு பள்ளிக்கூடம் கட்டத் திட்ட மிட்டு ஆயிரக்கணக்கில் செங்கல்களை அறுத்து வைத்தார் சுவாமிகள். அங்கே ஆசிரியராக இருந்த ஒரு வெளியூர்க் காரர் சுவாமிகள் மீது நம்பிக்கை ஏற்படாமல் அவதூறு பேசியிருக்கிறார். சுவாமிகள் கற்களை முக்திக்குள மண்டப தியானக்கூட அஸ்திவாரத்திற்குப் பயன் படுத்தினார். இப்போது கம்பீரமான விமானத்துடன் தியான மண்டபம் முழுமையாகியிருக்கிறது.

## சுவாமிகளின் உணவுப் பழக்கம்

சுவாமிகள் உணவு தேடிச் சென்றதில்லை. வீதியில் வருகிற சமயம் யாராவது கொடுத்தால் அதில் மூன்று கவளம் சாதம் வாங்கிச் சாப்பிடுவார். பல நாட்கள் அந்த உணவும் கிடையாது. அவர் விரும்பிச் சாப்பிடுவது தயிர் சாதம். "நாம்தான் உருட்டித் தரணும், நாலைந்து கவளம் கையில் வாங்கிச் சாப்பிடுவார். எப்போதாவது தேங்காய்த் துருவலில் வெல்லம் கலந்து சாப்பிடுவது பிடிக்கும்" என்று சொல்லியிருக்கிறார் அவருக்குப் பணிவிடை செய்துள்ள பொன்னுசாமி வாண்டையார்.

சுவாமிகளுக்கு உணவு தருவதை பாக்கியமாகக் கருதி னார்கள் பக்தர்கள். கும்பகோணம் வீதிகளில் சுவாமிகள் வருகிறபோது பக்தர்கள் உணவுடன் காத்திருப்பார்கள். ஆனால் அவர் ஒரு நாளைக்கு மூன்று கவளம் மட்டும் கலவை சாதத்தைக் கையில் வாங்கிச் சாப்பிடுவது வழக்கம்.

“மதியம், சங்கர மடம் இருக்கும் மடத்துத் தெரு பகவத் படித்துறையில் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு திரும்பும்போது, என் தாயார் வாசலில் தயாராக தயிர் சாதமோ சாம்பார் சாதமோ பிசைந்து வைத்துக்கொண்டு நிற்பார்கள். சுவாமிகள் வந்து கை நீட்டி மூன்று கவளம் வாங்கிக் கொள்வார். அதே கையால் தண்ணீர் வாங்கிக் குடிப்பார். கறி, கூட்டைத் தனியே தொட்டுக்கொண்டு சாப்பிட மாட்டார். அதையும் சாதத்துடன் கலந்துவிடச் சொல்வார். நின்றுகொண்டே வாங்கிச் சாப்பிடுவார். கொடுப்பவர் வாசலில் தயாராக இருந்தால் அவருக்கு அந்த பாக்கியம் கிடைக்கும். இல்லாவிட்டால் சுவாமிகள் நேராகப் போய் விடுவார். கேட்டு வாங்கிச் சாப்பிடும் பழக்கம் கிடையாது. மடத்துத் தெருவில் அட்வகேட் சங்கரய்யர் வீட்டிலும் உணவு வாங்கிச் சாப்பிடுவார். பல நாட்களில் இது கிடைப்பது, கிடைக்காதது பற்றி சுவாமிகள் கொஞ்சமும் கவலைப்பட்டதில்லை. தன் உணவைப் பொருட்படுத்தாத இவர் அன்னதானத்தில் அதிக கவனம் செலுத்தினார். மாலையில் நாகேஸ்வர சுவாமி கோயிலில் இருப்பார். பக்தர்களுக்கு விபூதி தந்து ஆசிர்வதிப்பார், யார் நல்ல ஆடை கொடுத்தாலும் அதை ஏழைகளுக்குக் கொடுத்து விடுவார்” என்று சென்னை அன்பர் வேதராமன் சொல்லியிருக்கிறார்.

பாடகச்சேரி சுவாமிகளுக்கு பாலமுனீசுவரர் குல தெய்வமாக விளங்கினார். கிண்டி ரயில் நிலையத்தை ஒட்டியுள்ள முனீசுவரர் கோவில் கும்பாபிஷேகத்தையும் பாடகச்சேரி சுவாமிகள் நடத்தினார். அது சிறிய கோயில் தான். அதன் கோபுரத்தில் பாடகச்சேரி சுவாமிகளின்



சிலாரூபத்தைக் காணலாம். 1927—28—ல் ரெயில்வே துறை இரண்டாவது ரயில் பாதை அமைத்தபோது அங்கே ஆள் இயக்கும் ‘கேட்’ இருந்தது. அதன் அருகே பிரதிஷ்டை யாயிருந்த முனீசுவரரை இடம்மாற்ற வேண்டிய அவசியம் வந்தது. எனவே கோயிலை இடித்துவிட்டு, தற்போதுள்ள இடத்தில் வேறு கோயிலை எழுப்பிக் கொள்ளச் சொல்லி ரெயில்வே நிர்வாகம் முன்னூறு ரூபாய் பணம் தந்தது. ரெயில்வே கேட்டின் பொறுப்பாளரே புதிய இடத்தில் முனீசுவரருக்கு பூஜை செய்ய முன்வந்திருக்கிறார். புதிய கோயில் கட்டும் முயற்சிகள் வேகம் பெறவில்லை. பாடகச்சேரி சுவாமிகளே திருப்பணியை நிறைவுசெய்து அந்தக் கும்பாபிஷேகத்தையும் நடத்தினார். அதனால் தான் சுவாமிகளின் சுதை உருவத்தைக் கோயில் முகப்பு கோபுரத்தில் வைத்திருக்கிறார்கள்.

கிண்டியில் பாடகச்சேரி சுவாமிகள் கும்பாபிஷேகம் நடத்திய சிவாலயத்தைக் காஞ்சிப் பெரியவர் போற்றி யிருக்கிறார் என்றும் தெரிகிறது. முக்காலம் உணர்ந்த அந்த மகான் ‘எதிர்காலத்தில் கட்டுமானத்தில் ஏதாவது மாற்றம் தேவைப்பட்டால் கூட கர்ப்பக்கிரகத்தில் எந்த மாற்றமும் செய்ய வேண்டாம்’ என்று அருளியிருக்கிறார். இன்றைக்கு மெட்ரோ ரயில் மேம்பால வேலைகூட கோயிலுக்கு பாதிப்பு இல்லாமலேயே நடைபெறுகிறது. இது தொடர்பாக நானும் மெட்ரோ நிர்வாக அதிகாரி களைச் சந்தித்துப் பேசினேன்.

## பாடகச்சேரி மடம்

சுவாமிகள் சித்தியாகி ஐம்பது ஆண்டுகளுக்குள் பாடகச்சேரி மடம் புதர் மண்டிக் காடாகி விட்டது. காரணம் அங்கே நடந்த ஒரு அசம்பாவிதம். கேரள சுவாமி ஒருவரை மடத்தில் தங்கி இருக்கச் சொல்லியிருந்தார் சுவாமிகள். 1949—ல் சுவாமிகள் சித்தியடைந்ததும் கேரளத்துக்காரர் எங்கோ போய்விட கவனிக்க ஆளின்றிக் கிடந்தது மடம். சில ஆண்டுகளுக்குப் பிறகு அங்கே

நிகழ்ந்த துர்மரணத்திற்குப் பின் மடம் யாரும் சரியாக நிர்வகிக்காமல் புதர் மண்டிப் போனது.

இந்த நிலையில் அதாவது 1997—ம் ஆண்டு வாக்கில் சைதாப்பேட்டையிலிருந்து சக்தி ரமேஷ் என்ற அன்பர் பாடகச்சேரியில் ஒரு மகான் இருந்தார் என்று கேள்விப் பட்டு விசாரித்துக்கொண்டு இங்கே வந்தார். புதர்களை வெட்டி சுத்தம் செய்து, தன் செலவிலேயே கொட்டகை போட்டு தீபம் ஏற்ற ஏற்பாடு செய்தார். ஓர் ஆடிப்பூரத்தின் போது 500, 600 நபர்களுக்கு அன்னதானம் செய்யும் பொறுப்பை அவர் வாண்டையாரிடம் ஒப்படைத்தார்.

அதன் பிறகு பெங்களூர் ராமலிங்க முதலியார் குடும்பத்தினர் மற்றும் சில பெங்களூர் அன்பர்கள் அங்கே வந்தார்கள். குருப் பெயர்ச்சிக்காக ஆலங்குடி போகும் வழியில் பெங்களூர் கௌசல்யா அம்மையாரின் மருமகன் சங்கர் 'பாடகச்சேரி போகும் வழி' என்றிருந்த பெயர்ப் பலகையை நெடுஞ்சாலையில் பார்த்து ஊருக்குள் சென்று பொன்னுசாமி வாண்டையாரைச் சந்தித்தார்.

"ராத்திரியிலே வெளிச்சம் இல்லை. எலக்ட்ரிக் லைட் போட்டா உதவியா இருக்கும்" என்று வாண்டையார் சொன்னதும் வந்தவர் 3600 ரூபாய் தந்தார். மறுநாளே பஞ்சாயத்தில் மனு கொடுத்து இரண்டு மூன்று நாளில் மின்சார வசதி செய்து தந்தார். கூரைக் கொட்டகையாக இருந்ததை கட்டடமாக்கினார்.

## அன்னதானம்

பாடகச்சேரி தியாகராஜ வைராயரின் பேரன் சிவ குமாருடைய தாத்தா மடத்து நிலம் எட்டு ஏக்கரில் சாகுபடி செய்தார். இப்போது இந்தக் குடும்பம் மடத்தின் அன்னதானத்துக்கு நெல் தருகிறது.

"ஆடிப் பூரம் குருபூஜையை நீதான் செய்யணும்" என்று வைராயர் சொல்ல, அதன்படி மத்தியானம் வடை பாயசத்தோடு சாதம் கொண்டுபோய் மடத்தில் பூஜை பண்ணிவிட்டு வந்து, பத்துப் பதினைந்து சாமியார்களை அழைத்து அன்னதானம் செய்தார்கள். பிறகு வைராயர் குடும்பத்தார் முருகன் கோவில் பக்கத்திலேயே கஞ்சி காய்ச்சி ஊற்றத் தொடங்கினார்கள். பசிப்பிணி அகற்று வதில் பாடகச்சேரி மகானுக்கும் அவரது பக்தர்களுக்கும் அவ்வளவு ஈடுபாடு இருக்கிறது.



கும்பகோணத்தில் 1921, 1932 ஆண்டுகளில் மகாமகம் நடந்தபோது (அந்த முறை மகாமகம் பதினோரு ஆண்டுகள் இடைவெளியில் வந்தது) கூழ்சாலை மடத்தில் சமையல் செய்து வண்டி வண்டியாக அன்னதானம் செய்திருக்கிறார் சுவாமிகள். ஆண்டு தோறும் தைப் பூச, ஆடிப்பூர நாட்களில் அன்னதானம் நடைபெறுகிறது.

அக்கம்பக்கத்தில் யார் அன்னதானம் செய்தாலும் அதில் பாடகச்சேரி மடம் சார்பாக யாராவது கலந்து கொண்டு உதவி செய்ய வேண்டும் என்பது சுவாமிகளின் கட்டளை. திருக்களம்பூர் கும்பாபிஷேகத்தின்போது ஒரு லட்சம் பேருக்கு அன்னதானம் செய்தார்கள். மடத்தின் சார்பாக பாடகச்சேரியிலிருந்து யாரும் போகவில்லை. தொட்டி உடைந்து பிரச்சினை ஆனது. உடனே ஆட்களை வரவழைத்து நிலைமையைச் சரிசெய்தார். மாசி மகம், ஐப்பசி சூரசம்ஹாரம் நாட்களில் சுவாமிகள் ஊரில் இருந்தால் ஐயாயிரம் பத்தாயிரம் பேருக்கு அன்னதானம் செய்வார் என்கிறார் வாண்டையார்.

பாடகச்சேரி பௌர்ணமி பூஜையின்போது சாம்பார் சாதம், தயிர் சாதம், சர்க்கரைப் பொங்கல், உருளைக் கிழங்குக் கூட்டு, சுண்டல் என்று அன்னதானம் செய்கி றார்கள். மடத்தின் எதிரே இலை போட்டு பைரவர்களுக்கு உணவளித்த பிறகுதான் மற்றவர்களுக்கு அன்னதானம் நடக்கிறது. தேங்காய்த் துருவலோடு வெல்லச் சர்க்கரை கலந்து நிவேதனம் செய்கிறார்கள். இது எப்போதாவது

சுவாமிகள் ஏற்கும் உணவு. இலையில் படைக்கப்பட்ட அன்னத்தை பூஜை முடிகிறவரை பைரவர்கள் தொடாமல் கட்டுப்பாடாக இருப்பது அதிசயம்.

சில வருஷங்களுக்கு முன்பு அன்னதானம் திறந்த வெளியில்தான் நடைபெற்றது. இப்போது ஆயிரம் பேர் அமர்ந்து சாப்பிடக்கூடிய அளவில் ஒரு அன்னதானக் கூடத்தை வடபுறத்தில் கட்டியிருக்கிறார்கள். அதைத் திறந்துவைக்க ஒப்புக்கொண்ட அப்போதைய திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தன் பரபரப்பான பணிகளுக் கிடையில் ஐந்து நிமிடங்கள் மட்டுமே அங்கே இருக்க முடியும் என்று சொல்லியிருந்தார். ஆனால் ஐந்து மணி நேரம் இருந்தார் என்கிறார் பாடகச்சேரி அன்னதானக் கமிட்டியின் நிர்வாகத் தலைவர் ஏ. இளங்கோ.

## சித்திரக் காட்சி!

பாடகச்சேரியில் புதிதாக உருவாகியுள்ள அன்ன தானக் கூடத்தின் உட்புறச் சுவர்களின் மேற்பக்கத்தில் அழகான சித்திரங்களை வரைந்திருக்கிறார் ஓவியர் இளையராஜா. பாடகச்சேரி ராமலிங்க சுவாமியின் வாழ்க்கை அனுபவங்கள், நிகழ்த்திய அற்புதங்கள் எல்லா வற்றையும் முப்பத்து நான்கு வண்ண ஓவியங்களாகத் தீட்டியிருக்கிறார். இவை தவிர அன்னதானக் கூடத்தின் வெளிப்புறச் சுவரிலும் எட்டுச் சித்திரங்கள் உள்ளன. பெரம்பலூர் ஓவியர் கன்னையாவின் தம்பியான இவர், ஒரு பஞ்சாயத்து அலுவலகத்தில் குமாஸ்தாவாக வேலை பார்த்தவர். அண்ணனிடமே ஓவியக்கலை பயின்றார். தாராசுரத்தில் இளையராஜா வரைந்த சித்திரங்களைப் பார்த்து விட்டு, அவரையே அழைத்து வந்து பாடகச் சேரியில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

“கும்பகோணம் காரைக்கால் ரோட்டில் உள்ள முக்திக்குள மண்டபத்தில் ஒரு மகாமகத்தின்போது ஒரு காலி மனையை வாங்கி அதில் ஒரே நேரத்தில் ஆயிரம் பேர் உட்கார்ந்து சாப்பிடும் அளவுக்கு பந்தல் போட்டு காலை 10 மணிக்கு ஆரம்பித்து இரவு 10 மணி வரை விடாது தொடர்ந்து சாப்பாடு நடந்து கொண்டிருந்தது. அதுபோல் மூன்று தினங்கள் நடந்தது. பறிமாறு வதற்கும் காய்கறி நறுக்குவதற்கும் இடத்தைச் சுத்தப் படுத்துவதற்கும் பாடகச்சேரி அன்பர்களில் பெரும் பகுதி யினர் முன்வந்து சேவை புரிந்தார்கள்,” என்று எழுத்தாளர் பரணீதரனுக்கு ஆர். வேதராமன் என்ற சென்னைவாசி கடிதம் எழுதினார்.



“சமையல்காரர்கள் நூற்றுக் கணக்கில் பணியாற் றினார்கள். சாப்பிட வந்தவர்களில் பலரும் உதவி செய்ய, காய்கறிகள் மலைபோல் குவிந்திருந்தன. யாருக்கு எந்தக் காய் பிடிக்குமோ, அதை அரிந்து போடுவார்கள் யாரையும் கேட்க வேண்டியதில்லை. சமையல்காரர்கள் சாப்பிட ஆள் இருக்கிறதா இல்லையா என்று பார்க்காமல் சாதம் வடித்துக் கொண்டே இருப்பார்கள். சமைத்த சாதம் ஒருபுறம் மலைபோல் குவிந்துகிடக்கும். அந்த சாதத்தைக் கூடைகளில் அள்ளிப் போடுவார்கள். சுவாமிகளிடம் வெண்ணெய் கொண்டு வந்து கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். சாப்பாடு மூன்று அல்லது நான்கு காய் களோடு, நெய், பருப்பு, சாம்பார், ரசம், மோருடனிருக்கும். இவ்வளவு பேருக்குத் தேவையான மோருக்காக, சில நாட்களுக்கு முன்பே கிராமங்களுக்குப் போய் தயிரை வாங்கி மரப் பீப்பாயில் விட்டு, அதில் பச்சை மிளகாய் போட்டு தண்ணீர் புகாமல் பீப்பாயின் வாயை மூடி பக்கத்தில் உள்ள குளத்தில் மிதக்க விடுவார்கள். சுமார் 10 பீப்பாய்கள் இருந்தன. ஒவ்வொரு பீப்பாயாகத் திறந்து மோராக்குவார்கள். இதைப் பார்ப்பதற்கு பெரும் புண்ணியம் செய்திருக்க வேண்டும். சுவாமிகளின் பெருங்கருணையால் எங்களுக்கு அந்த பாக்கியம் கிடைத்திருந்தது. சமையல் செய்தது போக மீதியிருந்த காய்கறிகளை கடைக்காரர்களுக்கு விற்றுக் கிடைத்த பணம் சமையல்காரர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்குச் சரியாக இருந்தது.”

## பட்டாளத்தில் சேர்ந்த பள்ளிச் சிறுவன்!

சென்னை புகைப்படக் கலைஞர் தனபால் முதலியார் எழுதிவைத்துள்ள டயரிக் குறிப்பு பாடகச்சேரி சுவாமி களைப் பற்றிய தகவல்களைக் கொண்ட ஒரு முக்கிய ஆவணம். திருவொற்றியூரில் தனபால் முதலியாரின் மகன் ராமச்சந்திரனைச் சந்தித்தபோது அவர் சில சுவையான தகவல்களைச் சொன்னார். தனபால் முதலியாருக்கு சண்முகம், ராமலிங்கம், ராமச்சந்திரன் என்று மூன்று பிள்ளைகள். 'ஐஜி' என்று சுவாமிகள் கூப்பிடும் போலீஸ் சூப்பரிண்டெண்டு ராஜரத்னத்தோடு சுவாமிகளைப் பார்க்கப்போவது ராமச்சந்திரனின் வழக்கம். சுவாமிகளின் வாக்குப்படி ராஜரத்னம் பிறகு காவல்துறை ஐஜி. ஆனார்.

இரண்டாவது யுத்தம் வந்த காலத்தில் பாதுகாப்பு கருதி முதலியார் குடும்பம் உத்தரமேரூருக்குச் சென்றது. அங்கிருந்த ராமகிருஷ்ணா ஹோமில் சேர்ந்து மூன்று வருடங்கள் படித்தார் ராமலிங்கம். இப்போது அங்கே ராமகிருஷ்ணா பள்ளி நடைபெறுகிறது. பிறகு முதலியார் சென்னையில் தன் சினேகிதர் வீட்டில் குடியிருந்தார். வீட்டின் நடுப்பகுதியில் தனபால் முதலியார் குடும்பம் இருந்தது. பின்பக்கப் போர்ஷனில், ராமச்சந்திரனின் வகுப்பறைத் தோழன் சிட்டிபாபுவின் குடும்பம் வசித்தது. ராமலிங்கத்துக்கு மூன்று வயது இளையவரான ராமச் சந்திரன் தியாகராயா கல்லூரிப் பள்ளியில் படித்தார். சரியாகப் படிப்பு வரவில்லை என்பதால் எட்டாம் வகுப்பு படித்தபோது தந்தையிடம் அடி வாங்கியிருக் கிறார். தந்தை அடித்தது பிடிக்காத ராமச்சந்திரனுக்கு எங்காவது ஓடிப்போகலாம் என்று தோன்றியிருக்கிறது. அப்போது புதுப்பேட்டையில் பட்டாளத்துக்கு ஆள் சேர்க்கிறார்கள் என்று கேள்விப்பட்டு ராமச்சந்திரனை அங்கே அழைத்துப்போனது அவனுடைய பள்ளித் தோழன் சிட்டிபாபு. தூரத்தில் இருந்தபடியே இடத்தைக் காட்டிவிட்டு ஓடிப்போய் விட்டான் சிட்டிபாபு.



யுத்த காலத்தில் 'பாய்ஸ் ஆர்மி' என்ற சிறுவர் அணி இருந்தது. பெற்றோரின் அனுமதியோடுதான் சிறுவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றாலும் சிறுவன் ராமச்சந்திரன் எப்படியோ அதில் சேர்ந்து பெங்களூருக்குப் போய்விட்டான். பத்து நாட்கள் குடும்பத்தார் சிறுவனைத் தேடி அலைந்திருக்கிறார்கள். சுவாமிகளிடம் தகவல் சொல்லியிருக்கிறார் ராமசாமி பிள்ளை. பையனைக் காணோமென்றால் பேசாமல் இருக்கலாமா என்று கேட்டார் சுவாமிகள்.

இதற்கிடையில் பெங்களூரிலிருந்து ராமச்சந்திரன் சிட்டிபாபுவுக்குக் கடிதம் எழுத, அவன் பாய்ஸ் ஆர்மியில் சேர்ந்தது தெரியவந்திருக்கிறது. வக்கீலைப் பார்த்து நடவடிக்கை எடுக்கச் சொன்னார் சுவாமிகள். பிரபல வக்கீல் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் பெற்றோருக்குத் தெரியாமல் சின்னப் பையனை ராணுவத்தில் சேர்க்க லாமா என்று ராணுவ அதிகாரிகளுக்கு நோட்டீஸ் அனுப்பினார்.

இதுபற்றி ராமச்சந்திரன் இப்படி நினைவுகூர்கிறார்: "நோட்டீசைப் பெற்ற பெங்களூர் ஜாலஹல்லி முகாமி லிருந்த ராணுவ அதிகாரி மற்ற அதிகாரிகள் உடனிருக்க என்னைக் கூப்பிட்டனுப்பினார். அவர்கள் முன் நின்றேன். எந்தக் கேள்வியும் கேட்காமல் பளார் என்று கன்னத்தில் அறைந்தார் அந்த அதிகாரி. 'உன்னால் எங்களுக்கு ஆபத்து வந்துவிடும் போலிருக்கிறது' என்று திட்டிவிட்டு உடனே வாரண்ட் எழுதி, ஒரு சோல்ஜரைத் துணைக்கு அனுப்பி சென்னைக்கு ரெ—யிலேற்றிவிடச் சொன்னார். டிஸ்சார்ஜ் சாட்டிபிகேட், பதினெட்டு ரூபாய் சம்பளம் இவற்றோடு சென்னைக்கு டிக்கெட்டும் வாங்கித் தந்தார்கள். ஏதோ ஒரு வேகத்தில் அந்த டிஸ்சார்ஜ் சர்ட்டிபிகேட்டை கிழித்துப் போட்டுவிட்டேன்."

வீட்டுக்குத் திரும்பி வந்தபோது எதிரில் சினேகிதன் பாஸ்கரன் வந்தான். "எங்கேடா போனே? உங்க வீட்டிலே

பத்து பதினைஞ்சு நாளா எல்லாருக்கும் ரொம்பவும் வருத்தம். அழுதுட்டிருக்காங்க," என்றான். அதைக் கேட்ட ராமச்சந்திரன் ரொம்பவும் நெகிழ்ந்துவிட்டார்.

வீட்டிலிருந்தவர்கள் ஓடி வந்து கட்டிக் கொண்டு, பாசத்துடன் வரவேற்றதும் வெட்கப்பட்டிருக்கிறார். உடனே குளிக்கவைத்து, விபூதி இட்டு சுவாமிகளிடம் அழைத்துப் போனார்கள். சிறு வயது முதலே சுவாமி களுக்குக் கைகால் பிடித்துவிட்டு உபசாரம் செய்துவந்த ராமச்சந்திரனைப் பார்த்ததும், சுவாமிகள் கடிந்து கொள்ளவில்லை. "வந்துட்டே இல்லே அது போதும். இனிமே நல்ல பையனா இரு" என்று வாழ்த்தினார்.

இரண்டாம் யுத்த சமயத்தில் தனபால் முதலியார் குடும்பத்தினர் பழனியாண்டி பிள்ளை பங்களாவிலேயே தங்கியிருந்தார்கள். சண்முகம் பிள்ளையும், ராமலிங்கம் பிள்ளையும் அலுவலகம் முடிந்தவுடன் குளித்துவிட்டு திருவொற்றியூர் மடத்துக்குத்தான் போவார்கள். அதன் பிறகே தங்கள் குடும்பம் தண்டையார்பேட்டையில் குடியேறியது என்கிறார் ராமச்சந்திரன்.

"ராணுவத்திலிருந்து வெளியேற நேர்ந்தாலும் காக்கிச் சட்டை மீதான ஆசை போகவில்லை. அதனால் ரயில்வே பாதுகாப்புப் படையில் சேர்ந்தேன் அங்கு துப்பறியும் நாய்களுக்குப் பயிற்சி தரும் பிரிவின் இன்ஸ்பெக்டர் இன்சார்ஜ் ஆக உயர்ந்து ஓய்வு பெற்றேன். அத்துடன் தந்தையிடமிருந்து புகைப்படக் கலையைக் கற்றுக் கொண்டதால் ஆர்.பி.எஃப். பிரிவில் ஒரு புகைப்படக் கலைஞராகவும் பணியாற்றினேன்," என்று தன் ரயில்வே பணி பற்றிச் சொன்னார் ராமச்சந்திரன்.

ரயில்வேயில் காவல் துறையைப் போல துப்பறியும் நாய்கள் அணி உண்டு. தமிழக ரயில்வே நாய்கள் அணிக்கு நாட்டின் மிகச்சிறந்த மோப்ப நாய்கள் அணி என்ற பெருமையைப் பெற்றுத் தந்த ராமச்சந்திரன் 1980ஆம் ஆண்டில் மிகப்பெரிய கௌரவமான ஜனாதிபதியின்



பதக்கத்தைப் பெற்றார். இவர் பராமரித்த நான்கு அணிகள் பின்னர் ஒன்பதாக உயர்ந்தன. ராணி என்ற 'டெர்ரர்' நாயும், 'ஹிட்லர்' என்ற திறமையான மோப்ப நாயும் தம்மிடம் பயிற்சி பெற்றதை நினைவுகூர்கிறார்.

காலமெல்லாம் 'பைரவர்'களை அணிசேர்த்து உற்சாக மாக உணவளித்து மகிழ்ந்த பாடகச்சேரி சுவாமிகளின் சீடரான ராமச்சந்திரனுக்கு அப்படி பைரவர்களைப் பராமரிக்கும் உத்தியோகமே வாய்த்தது கடவுள் சித்தம். ரயில்வேயில் பைரவர்களின் பயிற்சியாளராக இருக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டவருக்கு ராணுவத்தில் துப்பாக்கி தூக்கும் தொழில் தொடர்ந்திருக்குமா?

ராமச்சந்திரனின் தகப்பனார் தனபால் முதலியாரிடம் சுவாமிகள் தன் கடைசிக்காலத்தில் திருவொற்றியூர் மடத்தின் தென்புறம் கையைக் காட்டிச் சொன்னார். "பார்த்துக்கிட்டே இரு. இந்தப்பக்கம் ஜேஜேன்னு நிறைய விளக்கு எரியும்." அப்போது அதன் பொருள் பலருக்குப் புரியவில்லை. சில ஆண்டுகளிலேயே மளமளவென்று அந்தப் பகுதியில் நிறையத் தொழிற்சாலைகள் உருவாகி விளக்குகள் ஜகஜ்ஜோதியாக எரிந்தன.

ராமச்சந்திரனுக்குத் திருமணமானது 1966ல். அதன் பிறகு ஐந்து மாதம்தான் உயிருடனிருந்தார் தனபால் முதலியார். காலமாகும்போது அவருக்கு வயது 76.

### புகைப்படம் எடுத்தது

ராமச்சந்திரனின் தகப்பனார் தனபால் முதலியார் எழுதியுள்ள டயரிக் குறிப்பில் சுவாமிகள் தொடர்பான சம்பவங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. சுவாமிகளை முதன்முதலில் புகைப்படம் எடுத்த நிகழ்ச்சியையும் அதில் சுவாரஸ்யமாக விவரித்திருக்கிறார். வெள்ளிக் கிழமை தவறாமல் மாலை வேளையில் திருவொற்றியூர் கோவிலுக்குச் செல்வது அவரது பழக்கம். அப்படி ஒரு வெள்ளிக்கிழமை மாலை ஆறு மணிக்கு ஆலய தரிசனம்

செய்துவிட்டு வீடு திரும்பியபோது வெங்காயக்கடை குப்புசாமி முதலியார் அவரைச் சந்தித்து “உங்களைத் தான் தேடிக் கொண்டிருந்தேன். சுவாமிகள் நாளை மறுதினம் கொத்தவால்சாவடிக்கு வருகிறார். அப்போது சுவாமிகளைப் பெரிய அளவில் படம் எடுக்கவேண்டும்” என்று கேட்டுக்கொண்டார். முதலியாரிடம் அந்த அளவு படம் எடுக்க வசதியில்லை, வேறு யாரையாவது பாருங்கள் என்று சொல்லிவிட்டார். ஆனால் குப்புசாமி முதலியார் விடவில்லை. ஐந்து ரூபாய் அட்வான்ஸ் கொடுத்துவிட்டு, ‘எவ்வளவு செலவானாலும் நீங்களே படம் எடுங்கள்’ என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

பெரிய படம் எடுப்பதற்கான கேமரா இருக்கிறதா என்று முதலியார் கடைகளில் கேட்டுப் பார்த்தார். கிடைத்தபாடில்லை. முதலில் 8X6 சைசுக்கு எடுத்து பெரிசு பண்ணிக் கொடுத்துவிடலாமே என்ற நண்பரின் யோசனைப்படி அதற்கான கேமராவை எடுத்துக் கொண்டு குறிப்பிட்ட தினத்தில் கொத்தவால்சாவடியில் சுவாமிகள் இருந்த இடத்திற்குப் போனார். சுவாமிகள் விரைவில் வருவார் என்றார்கள். ஒரு பந்தோபஸ்தான இடத்தில் கேமராவை வைத்துவிட்டு அங்கிருந்தவர்களுடன் பேச்சு கொடுத்தார். பாடகச்சேரி சுவாமிகள் வடலூர் ராமலிங்க சுவாமிகளின் மறு அவதாரம் என்றும் சிறந்த வைத்தியர் என்றும் பேசிக் கொண்டார்கள். “எப்படியாவது சமயம் பார்த்து போட்டோ எடுத்து விடுங்கள். வாய்ப்பைத் தவறவிட்டால் சுவாமிகள் எழுந்துபோய் விடுவார்கள்” என்றும் எச்சரித்தார்கள்.

“என்ன இப்படிப் பிரமாதப்படுத்துகிறீர்களே. வடலூர் ராமலிங்க சுவாமிகளைச் சந்தித்தவர்களுடன் பழகியிருக்கிறேன். அவர் மறைந்து எத்தனை வருஷமாச்சு, அதே பெயரை வைத்துக்கொண்டு யார் வந்தாலும் அவர் வள்ளலார்தான் என்று நம்பி மோசம் போகிறீர்களே,” என்று பக்கத்தில் இருப்பவர்களிடம் சொன்னார்.



இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் பாடகச்சேரி சுவாமிகள் பச்சை சால்வை போர்த்திக் கொண்டபடி பத்து அன்பர்களுடன் அங்கே வந்து விட்டார். கன்னிகா பரமேஸ்வரி கோயிலின் தென்புறமுள்ள அரசமரத்தடியில் ஜமுக்காளம் போடப்பட்டது. சுவாமிகள் அதில் அமர்ந்தார். கழுத்தில் கட்டியிருந்த உண்டியலைக் கழற்றி எதிரே வைத்தார். அப்போது அன்பர்கள் தனபால் முதலியாரைத் தயாராக இருக்கும்படிச் சொன்னார்கள். இப்படிப் புதுச்சாமியார்களிடம் ஜனங்கள் ஏமாந்து போகிறார்களே என்று நினைத்தபடி தனபால் முதலியார் காமிராவை ஸ்டாண்டில் பொருத்தி விட்டுப் படம் எடுப்பதற்காகப் பின்புறம் க்ரவ்ண் கிளாஸ் என்ற கண்ணாடி வழியே பார்த்தார். ஆனால் கண்ணாடி சுக்கல் சுக்கலாக இருந்தது. அது போல முதலியாரும் நொறுங்கிப் போனார். இது மற்றவர்கள் முன்னிலையில் பெருத்த அவமானம் என்று சங்கடப்பட்டார்.

இதற்குச் சில நிமிடங்களுக்கு முன்புதான் பக்கத்தில் இருந்த சிவகங்கை ராமசாமி ஐயரிடமும் பிறரிடமும் ‘காமிராக்காரன் கண்ணாடியை உடைச்சுக்கப்போறான் பார்’ என்று சொல்லியிருக்கிறார் சுவாமிகள். கண்ணாடி உடைந்துவிட்டது என்று தனபால் முதலியார் தன் துக்கத்தையும் இயலாமையையும் சொல்ல முக்யஸ்தர்கள் அதை சுவாமிகளிடம் தெரிவிக்க, ‘ஏன் உடைந்துபோனது என்று அவரையே கேளுங்கள்’ என்று சுவாமிகள் சொன்னதும் சில அன்பர்கள் முதலியாரிடம் சன்னமான குரலில் சுவாமிகளை பற்றி ஏதும் அவதூறு சொன்னீர்களா என்று கேட்க, முதலியார் ‘ஆமாம் ஏதோ சொன்னேன்’ என்று சொல்ல, அன்பர்கள் சுவாமிகளை நமஸ்கரித்து மன்னிப்பு கேட்கச் சொன்னார்கள். ‘நீ கண்ணாடி கொண்டுவா, அதுவரை உனக்காக இங்கே இருக்கிறேன்’ என்று அருள்பாலித்தார் சுவாமிகள்.

ஃபோட்டோ சாதனக் கடைகளில் மட்டுமே அந்தக் கண்ணாடி கிடைக்கும். ஞாயிற்றுக்கிழமை. விடுமுறை

தினம் என்று முதலியார் தயங்கி தயங்கிச் சொன்ன போது ‘தேடு, கிடைக்கும்’ என்று சுவாமிகள் சொல்ல, முதலியார் பிராட்வேக்குப் போனார். அங்கே குமாரசாமி முதலியாரின் ஃபோட்டோ எம்போரியம் கடை திறந் திருந்தது. கணக்கு வழக்கு பார்ப்பதற்காக முதலியார் கடையில் இருந்தார். கண்ணாடி இல்லையென்று குமாரசாமி முதலியார் சொல்லிவிட்டார். ‘வேறு ஷாப் கிடையாது; கண்ணாடி அவசரமாகத் தேவைப்படுகிறது. நன்றாகத் தேடிப் பாருங்கள் என்று சொல்ல, எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்த அவர் ‘உங்கள் அதிர்ஷ்டம் ஒரே ஒரு கண்ணாடி இருக்கிறது’ என்று சொல்லி அதைக் கொடுத்தார். புதிய கண்ணாடியைப் பொருத்தி சுவாமிகளை போட்டோ எடுத்துவிட்டுத் தப்பித்தேன் பிழைத்தேன் என்ற மனோநிலையில் திரும்புவதற்கு ஆயத்தமானார் தனபால் முதலியார்.

அப்போது சுவாமிகள் “இந்தப் படத்திற்கு உனக்கு ராஜாக்களிடமிருந்து ஆர்டர் வரும், குழந்தை குட்டிக் காரன், பிழைத்துப்போ. இதை ரிஜிஸ்டர் செய்து வைத்துக் கொள். நான் மனப்பூர்வமாக உனக்கு இந்த ரூபத்தைக் கொடுத்தேன், வேறு யாருக்கும் கொடுத்ததில்லை’ என்றார். மறுபடியும் சுவாமிகளை நமஸ்கரித்து விட்டுத் திரும்பி னார் தனபால் முதலியார். மறுநாள் மவுண்ட் ரோடில் வேதாசல முதலியாரின் கிங் ஸ்டுடியோவில் நெகடிவைக் கழுவிப் பார்த்தார். படங்கள் நேர்த்தியாக வந்திருந்தன. இந்தப் படம் எடுத்த மூன்றாம் நாள் காலை சுவாமிகள் சுமார் ஒன்பது மணிக்கு ஃபிடில் சௌந்தரராஜ ஐயங்கார், சிவகங்கை ராமசாமி ஐயங்கார் ஆகியோருடன் ராயபுரம் வெங்கடேச நாயக்கன் வீதியில் தனபால் முதலியார் குடியிருந்த வீட்டிற்கு வந்து முதலியாரை ஆசிர்வதித்துப் படங்களை சீக்கிரம் தயார் செய்துகொடு. வடலூருக்கு வந்து தரிசனம் செய்” என்று உத்தரவிட்டார்கள்.

அந்தக் காலத்தில் வடலூருக்கு ரயில் கிடையாது. வண்டியும் நடையுமாகத்தான் போக வேண்டும்.



செலவுக்குப் போதிய பணம் கிடைத்தும் தனபால் முதலியார் போகவில்லை. அஜாக்கிரதையாக இருந்து விட்டார். மூன்றாம் நாள் சுவாமிகள் தனபால் முதலியார் வீட்டிற்கு வந்தார். வடலூர் செல்லத் தவறியது பற்றி எச்சரித்து விட்டு உனக்கு இன்னும் கர்மம் விலகவில்லை என்றார். முதலியார் திகைத்துப் போனார்.

அப்போது “பிரபுக்கள், தனவந்தர்கள் கார் வைத்து அழைத்தும் அவ்விடங்களுக்குப் போக சம்மதிக்காத சுவாமிகள், ஏதோ உமது பூர்வ புண்ணியத்தினால் தேடி வருகிறார். அப்படி உம்மை நாடி வருபவரைக் கொஞ்சம் கூடக் கவனியாமல் இருப்பதன் காரணம் யாதோ, நானறியேன்” என்று ஃபிடில் சௌந்தரராஜ ஐயங்கார் சொன்னார். இந்த வார்த்தைகள் முதலியாருக்கு கன்னத்தில் அறைவது போல் இருந்தன. அது முதல் அவர் சுவாமி களை வணங்கி அவரது பக்தர்களில் ஒருவரானார். நெருக்கமாக இருந்து பல நிகழ்வுகளைத் தன் டயரியில் பதிவு செய்திருக்கிறார். அவற்றில் முக்கியமானவை நாகேஸ்வரன் கோயில் கும்பாபிஷேகமும் பிற நிகழ்வுகளும்.

## நாகேஸ்வரன் கோயில் கும்பாபிஷேகம்

பாடகச்சேரி சுவாமிகளின் திருப்பணிகளிலேயே முதன்மையானது கும்பகோணம் வீரசைவ மடத்தைச் சேர்ந்த நாகேசுவர சுவாமி ஆலயக் கும்பாபிஷேகம். இந்தக் கோயில் பெரியமடம் என்கிற வீரசைவ மடத்தின் பராமரிப்பில் இருந்தது. மடத்து நிதி நிலை நலிந்தது, கோயில் ஆதரவற்றுப்போனது.

பழமையான இந்த சிவாலயம் சிதிலமடைந்து இடி பாடுகள், கள்ளி, கற்றாழை என்று புதர் மண்டிக்கிடந்து ராஜகோபுரம் பெருமளவில் சேதப்பட்டிருந்தது. நித்ய பூஜை செய்துவந்த சிவாச்சாரியார்களும் ஒதுங்கிக் கொண்ட நிலையில் விசுவகர்மா வகுப்பினர் முடிந்த அளவு ஆலய வழிபாட்டு முறைகளை செய்து வந்திருக்

கிறார்கள். இந்தப் பரிதாப நிலை கண்டு பாடகச்சேரி சுவாமிகள் வருந்தினார். எப்படியாவது திருப்பணி செய்ய வேண்டும் என்று உறுதிபூண்டு அதைச் சில அன்பர்களிடம் சொன்னார். செல்வந்தர்களும் பெரிய வணிகர்களும் இந்தப் பொறுப்பை ஏற்க தயங்கினார்கள். அந்தக் காலத்தில், அதாவது 1920—ம் ஆண்டுவாக்கில் அது சவாலான பணி. பணம் ஏதுமில்லாத ஒரு துறவி இந்தத் திருப்பணியைச் செய்தது அதிசயமே. அந்த நாகேசுவர சுவாமியே இவரைத் தன் ஆலயச் சீரமைப்புக்குத் தேர்ந்தெடுத்தார் போலிருக்கிறது.

நல்ல நாள் பார்த்து சிற்பிகளை வரவழைத்துத் திருப்பணி ஏற்பாடுகளைத் தொடங்கினார். கையில் சிறிதும் பணமில்லை. துறவியாவது கும்பாபிஷேகம் செய்வதாவது என்ற விமரிசனத்தைப் புறக்கணித்தார். பகலெல்லாம் நூற்றுக்கணக்கில் ஆட்கள் வேலை செய்தார்கள். மாலையில் கூலி தரவேண்டும். பணம் பற்றி சுவாமிக்குக் கவலை இருந்ததில்லை. தேவையானபோது தேவையான அளவு பணம் கிடைத்தது. அதுவும் சுவாமிகளின் திருவருளே. 'ஊரெல்லாம் இறைந்து கிடக்கிறது பணம். அதைப் பொறுக்கிப் பொறுக்கிச் சேர்க்க வேண்டும்; அவ்வளவுதான்' என்றும் சுவாமிகள் சொல்லியிருக்கிறார்.

பொதுப் பணிகளுக்குப் பணம் சேர்ப்பது என்பது எந்தக் காலத்திலும் சிரமமான வேலையே. அதனால் தான் 'ஒவ்வொன்றாகப் பொறுக்கிச் சேர்க்க வேண்டும்' என்று சுவாமிகளே சொன்னார். திருப்பணிக்கு சுவாமிகள் புதுமையான முறையில் பணம் திரட்டினார். கழுத்தில் ஒரு கயிற்றில் கட்டி மாலையாகத் தொங்கவிடப்பட்ட சொம்புதான் அவரது உண்டியல்! மாலை நேரத்தில் அடியார்கள் சிலரை அழைத்துக்கொண்டு நிதி திரட்டப் புறப்பட்டு விடுவார். சுவாமியின் கழுத்து உண்டியலில் பணம் போட்டால் நல்லது. நல்ல காரியத்துக்காக அவரே தேடி வருகிறபோது தர வேண்டும் என்று



எல்லோரும் நினைத்தார்கள். மாலையில் உண்டியல் நிரம்பி மறு நாள் கூலிக்குத் தரவேண்டிய பணம் சேர்ந்துவிடும். அதை வைத்துத் திருப்பணி வேலையில் ஈடுபடுகிறவர்களுக்கு தினமும் கூலிகொடுத்தார்.

வேத பாடசாலைப் பக்கம் உள்ள சக்கரப் படித்துறையிலிருந்து காஞ்சி சங்கரமடம் பகவத் படித்துறை வரை நடந்து வருவார். நகைக்கடை மளிகைக்கடை, ஜவுளிக் கடை என்று வர்த்தக நிறுவனங்கள் மிகுதியாக உள்ள பகுதி இது. 'இவ்வளவு தா' என்று ஒருபோதும் கேட்டதில்லை. 'போடய்யா போடு' என்று மட்டும் சொல்வார்.

வியாபாரப் பெருமக்கள் தங்களால் முடிந்த அளவு உண்டியலில் பணம் செலுத்துவார்கள். மற்றவர்களும் தங்கள் கையில் கிடைத்ததைப் போடுவார்கள். அரை அணா, காலணா எதுவானாலும் சுவாமிகளுக்கு சம்மதம். உதாரணத்திற்கு ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுவார்கள்.

ஒரு சமயம் ஒரு புல்கட்டுக்காரியின் சரக்கு விலை போகவில்லை. அவள் சோர்வாக உட்கார்ந்திருந்தாள். அவளிடம் சுவாமிகள் சொன்னார்: "அந்தக் கோயில் தெருப் பக்கம் ஒருவன் குதிரையைக் கட்டி வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான். அவனிடம் கொடு," அதன்படியே சென்றாள். புல் கட்டை குதிரைக்காரன் வாங்கிக் கொண்டு பணமும் தந்திருக்கிறான். மகிழ்ச்சியடைந்த அவள் உண்டியலில் ஓர் அணாவோ என்னவோ காணிக்கை போட வந்திருக்கிறாள். அவளிடம் "அவ்வளவு வேண்டாம் தாயி, அதில் பாதி கொடு போதும்" என்று சொல்லி அரையணா மட்டும் போடச்சொன்னார். இதுதான் சுவாமிகளின் பரிவான உள்ளம்.

கூலி தரப் பணம் குறைவாக இருந்தால் ஒரு பிடி மணலை அள்ளி ஆட்களிடம் தருவாராம். தேவையான கூலியளவுக்கு அது பொன்னாக மாறிவிடும் என்றும் சொல்வார்கள். சித்தர்கள் அப்படிச் செய்திருக்கிறார்கள்.

ஆனால் இப்படி மண்ணைப் பொன்னாக்கிய வழியில் அவர்கள் தமக்காக எதுவும் சேர்த்துக் கொண்டதில்லை.

“நான் கேள்விப்பட்ட வரையில், சுவாமிகள் ‘வாதம் சுடும்’ சித்தி பெற்றவர் (அதாவது தங்கம் செய்தல்). கும்பகோணம் நாகேஸ்வர சுவாமி கோயில் திருப்பணி யின்போது, நன்கொடை மூலம் சேகரித்த பணம் போதாத சமயங்களில் இவ்வாறு அவர் செய்ததைப் பார்த்திருக் கிறோம்” என்று சொல்லியிருக்கிறார் ஒரு அன்பர்.

சுவாமிகள் சிற்பக்கலை அழகு திகழும் நடராஜர் மண்டபம், மேலைக் கோபுரம், கீழை ராஜ கோபுரம் மதில் சுவர்கள் இவற்றைச் செப்பனிட்டார். கும்பாபி ஷேகம் 1929—ம் ஆண்டில் நடந்தது. மராமத்தைவிடவும் சிரமமாக அமைந்தது கும்பாபிஷேகத்தை நடத்தியது. இது பற்றி அன்பர்கள் சில விஷயங்களைச் சொன்னாலும் ஆவணம் என்று எடுத்து கொள்ளப்படவேண்டியது இது பற்றிய விவரங்கள் அறிந்த தனபால் முதலியார் எழுதிய டயரி. அதில் அவர் இவ்வாறு எழுதியிருக்கிறார்.

கும்பாபிஷேகம் எதிர்பாராதபடிப் பெரும் சோதனை களைச் சந்தித்தது. திருப்பணி வேலைகள் முடிந்ததும் நாகேசுவர சுவாமிக்கு முதல் அபிஷேகம் யார் செய்வது என்பதில் பிரச்சினை எழுந்தது. கோவில் சிதிலம் அடைவதற்கு முன்பு பூஜைகள் செய்த சிவாச்சாரியார்கள் தங்களுக்கே பூஜைசெய்ய உரிமை உண்டு என்று வாதாட, இடைக்காலத்தில் வழி பாடுகள் நின்றிருந்தபோது பூஜைகளில் ஈடுபட்ட விசுவ கர்மா வகுப்பினர் தாங்களே தொடர்ந்து பூஜை செய்வோம் என்று வாதிட வழக்கு நீதிமன்றத்திற்குப் போய்விட்டது.

இதனால் ஒரு கலவரச் சூழ்நிலை உருவாகியது. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளருக்கு விவரம் தெரிந்து அவர் 144 தடையுத்தரவு போட்டுக் கும்பா பிஷேகம் நடைபெற்றதாகச் சொல்கிறார்கள். அப்போது



விஷ்ணுபுரத்தில் முகாமிட்டிருந்த காஞ்சி பரமாச்சாரியார் தலையிட்டு சமாதானம் செய்து வைத்தார் என்றும் சொல் லப்படுகிறது. கலெக்டரின் மகனுக்கு உடல்நலம் கெட்டு, சுவாமிகளின் மூலிகை, விபூதி மகிமையால் மறு ஜன்மம் கிடைத்ததாகவும் அதனால் கோவில் நிலவரம் அறிந்த கலெக்டர் தலையிட்டு உதவினார் என்றும் சிலர் சொல் கிறார்கள். சரியான நிகழ்வு எது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளப் போதிய ஆவணங்கள் இல்லை. எல்லாம் செவிவழிச் செய்தியே. கலெக்டர் மகன் நோய்வாய்ப் பட்டது யதேச்சையானது என்றாலும் இந்த நேரத்தில் இந்த நிகழ்வு விசித்திர நிவர்த்தியாகப் பட்டது.

கும்பாபிஷேகத்தின்போது பத்து நாட்கள் ஆயிரக் கணக்கானவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. சுவாமி களின் அருளால் நாலாபக்கங்களிலும் இருந்தும் உணவுப் பொருட்கள் வந்து குவிந்தன.

இது பற்றி தனபால் முதலியார் டயரியிலிருந்து நாம் பெறும் குறிப்புகள்: கும்பகோணம் நாகேஸ்வரர் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு சுவாமிகள் புண்ணிய கைங்கர்யத்தை விரும்புபவர்களிடமிருந்து பணம் வசூல் செய்வதில் முனைந்திருந்தார் வேலாயுத முதலியார். தம்பு முதலியார் சுவாமிகளை கூட்டிக் கொண்டு கொத்தவால் சாவடியிலுள்ள வியாபாரிகள் சௌரி துரைசாமி பிள்ளை, உருளைக்கிழங்குக் கடை தேவராஜலு நாயுடு, வெங்காயக் கடை வரதராஜ நாயுடு, இஞ்சிக் கடை பார்த்தசாரதி முதலியார், பழக்கடை இராமாஞ்சலு நாயுடு, பருப்புக்கடை கோஸ்டி செட்டியார் இன்னும் அநேக அன்பர்களின் உதவியைக் கொண்டு ஏலம் ஒன்றுக்கு 1000, 1500 ஆக நான்கு ஏலங்கள் விடச் செய்து பணம் வசூலானது.

மேற்கொண்டு வசூலிக்க முயன்ற வேலாயுத முதலியார் ஜவுளிக்கடை பழனியாண்டி பிள்ளையின் குமாரர்கள் இதில் ஈடுபடக்கூடுமென சுவாமிகளிடம் சொன்னார். அப்படியே புறப்படுவோமென சுவாமிகள் ஜட்கா வண்டியில் வேலாயுத முதலியாரையும் சுந்தரராஜ

ஐயங்காரையும் ஏற்றிக்கொண்டு தண்டையார்பேட்டை பங்களாவில் உள்ள மூத்தகுமாரர் ராமசாமி பிள்ளையைப் பார்க்கச் சென்றார். காலை ஒன்பது மணிக்கு மேல் ராமசாமி பிள்ளையும் கடையை நோக்கித் தன் காரில் வந்து கொண்டிருந்தார். வண்ணாரப்பேட்டையில் இவர்கள் சந்திக்க நேர்ந்தது. பிள்ளை காரில் இருந்து இறங்கி சுவாமிகளை நமஸ்கரித்து சுவாமிகளையும் கூட வந்தவர்களையும் காரில் ஏற்றிக்கொண்டு கடைக்குப் போய் சுவாமிகளின் கருத்தையறிந்தார். நடக்கப்போகும் கும்பாபிஷேகத்திற்கு மகேஸ்வர பூஜைக்கு 100 மூட்டை துவரம்பருப்பு தேவை என்று சுவாமிகள் தெரிவித்தார். பிள்ளை சற்று ஆலோசித்துவிட்டுக் கொடுப்பதாக வாக்களித்தார். பிறகு சுவாமிகள் அவரை ஆசிர்வதித்து வேலாயுத முதலியார் ஜாகைக்கு வந்து விட்டார். அதன் பிறகு ராமசாமி பிள்ளையும் அவரது சகோதரர் வடிவேல் பிள்ளையும் 100 மூட்டை பருப்பின் விலை பற்றி விசாரித்தார்கள். அது 2000 ரூபாய்க்கு மேலாகிறது என்று தெரிந்தது. ஒரு கட்டத்தில் சகோதரர்கள் பருப்புக்கு பதிலாகப் பணம் கொடுத்து விடலாமா என்று மூத்தவரிடம் கேட்டார்கள்." அவரோ "கொடுப்பதாக வாக்களித்து விட்டேன். அது எத்தனை ஆயிரமானாலும் வாக்கை மாற்ற மனம் இடங்கொடுக்கவில்லை" என்றார். அப்படியே செய்யுங்கள் என்று சகோதரர்கள் ஒப்புக் கொள்ள ராமசாமி பிள்ளை சேலத்திற்கு ஆள் அனுப்பி கல்மண் இல்லாத சுத்தமான உயர்வகைப் பருப்பு 100 மூட்டை தன் சொந்தச் செலவிலேயே கும்பகோணத்தில் சேர்ப்பிக்க ஏற்பாடு செய்தார். பிறகு ஒருநாள் சுவாமிகள் பிள்ளையின் பங்களாவிற்கு சென்று அவர்கள் பூஜை அறையையும் கண்டு அவர் குடும்பத்தினரை ஆசீர்வதித்து வடலூர் ஆண்டவர் படத்தை வைத்து தியானிக்கும்படிக் கட்டளை—யிட்டார்.



இது பற்றி தனபால் முதலியார் எழுதியிருப்பதாவது: "பாடகச்சேரி சுவாமிகள் படம் ஒன்றும் வடலூர் ஆண்டவர் படம் ஒன்றும் தேவைப்படுவதாகவும் தன் பங்களா பூஜை அறையில் உள்ள படங்களுக்கு ஒத்தாற் போல் செய்து கொடுக்கும்படி எனக்குக் கட்டளையிட்டார். அதன்படி பூஜை அறைக்குச் சென்றேன். ஸ்ரீ பாலசுப்ரமண்யர் படம் திவ்யமான சொரூபத்தை கண்டேன் ஆனந்தமடைந்து மேற்கூறிய இரண்டு படங்களையும் ஒரு வாரத்திற்குள் தயாரித்துக் கொடுத்து விட்டேன். சுவாமிகள் சென்னைக்கு வந்தால் பிள்ளை வீட்டிற்கு வந்து தரிசனம் கொடுப்பது வழக்கம்."

நாகேஸ்வரன் கோயிலில் கோபுர வேலை பூர்த்தியாகி கும்பாபிஷேகத்திற்கு வேண்டிய சாமான்கள் அனைத்தும் சேகரிப்பு ஆகிக்கொண்டிருந்தது. முகூர்த்த நாள் குறிக்கப் பட்டது. பந்தல்கள் போடப்பட்டன. வெளியூர்களில் இருந்து வரும் அரிசி, பருப்பு, புளி போன்ற சகலவிதமான மளிகை சாமான்களையும் ஒரு சத்திரத்தில் சேர்த்து வைத்தார் சுவாமிகள் வாளி, அரிக்கன் லைட் குரோஸ் கணக்காக கூட்ஸ் ரயிலில் வந்துகொண்டிருந்தன. ஆறு மாதத்திற்கு முன்னதாகத் தயாரித்த தயிர்ப் பீப்பாய்களைக் குளத்தில் மூழ்க வைத்திருந்தார்.

கோபுரத்துக்கு ஆறு கலசங்கள் செய்து தர ஒப்புக் கொண்ட 'சூரா' பிரதர்ஸ் பண உதவியும் செய்தார்கள். இதைக் கேள்வியுற்ற நீதிபதி முத்துஸ்வாமி ஐயரின் மகள் வழிப் பேரனான ஏ.கே. ரெங்கநாதய்யரும் கும்பாபிஷேகக் கைங்கர்யத்தில் சேர்ந்து கொண்டார். சுவாமிகள் மூலம் பல மருந்துகளைப் பெற்று ஏழைகளுக்கு உதவினார்.

வேதியர்களுக்கு சத்திரம் ஏற்பாடு செய்யப்பட்டது. மூன்று நாள் மகேஸ்வர பூஜை சிறப்பாக நடந்தேறியது. கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தேறியது. தனபால் முதலியாரும் சுவாமிகளுடன் 15 நாள் கும்பகோணத்தில் தங்கியிருந்து சென்னை திரும்பினார். தானம் செய்தது

போக மிச்சப்பட்ட பண்டங்களை சுவாமிகள் ஏலம் விட்டுக் கிடைத்த பணத்தை ஒரு அன்பரிடம் கொடுத்து வைத்தி ருந்தார். வாங்கிக்கொண்டவர் அதை அபகரிக்க ஏதேதோ செய்தார். அதற்கான தண்டனையையும் அனுபவித்தார். இதையடுத்து சுவாமிகளும் அவரிடமிருந்து விலகிக் கொண்டார். சென்னையில் சுவாமிகள் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளர் வியாபாரத்தில் பெரிய குற்றங் களைச் செய்தார். அது தெரியவந்ததும் சுவாமிகள் அவர் வீட்டுக்குப் போவதை நிறுத்திக் கொண்டார்.

## நாத்திகர் ஆத்திகரானது

நம்பாதவர்களையும் நம்பவைக்கக் கூடியவர் சுவாமிகள் என்பதை உணர்த்தும் நிகழ்ச்சி இது. சென்னை உயர் நீதிமன்றத்துக்கு எதிரே இருந்த 'ஷார்ட் அண்ட் பீவர்' என்ற ஆங்கிலேயர் கம்பெனியில் பாகஸ்தரான பத்மநாபனுக்கு சாமியார்கள் மீது நம்பிக்கை, மரியாதை கிடையாது. தீவிர கிருஷ்ணபக்தர். பிற தெய்வங்களைக் கிண்டல் செய்வார். 'சிவா' என்று யாரும் சொன்னாலே ஆகாது. அப்படிப்பட்டவரை பெங்களூர் ராமலிங்க முதலியார் ஒரு நாள் சுவாமிகளிடம் அழைத்து வந்து விட்டார். அன்று பௌர்ணமி. சுவாமிகள் பேசமாட்டார். சாப்பிட மாட்டார். தியானத்தில் இருந்தார். தியானம் கலைந்து எழும்வரை அன்பர்கள் கைகட்டியபடி சுற்றிலும் நின்று கொண்டிருந்தார்கள். இரவு ஒன்பதரை ஆகி விட்டது. சுவாமிகள் ஐந்து நிமிடங்கள் யாருடனாவது பேசினாலே பெரிய விஷயம். பத்மநாபனைப் பார்த்து "எதுக்கு இங்கே வந்தே?" என்று கேட்டார்.

இருவரும் விடிய விடிய என்ன பேசினார்கள் என்பது எவருக்கும் தெரியாது. ஆனால் பத்மநாபனிடம் அதற்குப் பிறகு ஒரு மனமாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவந்தது. அப்படி மாற்றுக் கருத்து கொண்டவர்களுடனும் சுமுகமாக, நிறைவாக உரையாடக்கூடியவர் சுவாமிகள்.



பாடகச்சேரி சுவாமிகளின் அருளுக்குப் பாத்திரமான அன்பர்கள் குடும்பங்களில் ஒன்று திருச்சி பெரியகடை வீதி கோனார் மளிகைக் குடும்பம். கோனார் மளிகை அப்போது திருச்சியில் மிகவும் பிரபலமாக இருந்த கடை. அதை நீண்ட காலமாக நிர்வகித்து வந்தவர்கள் கிருஷ்ண சாமி பிள்ளையும் அவரது சகோதரர் சூளியத்தையாவும். ஜஸ்டிஸ் கட்சியினரான இவர்கள் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள். யாதவர்கள் வைணவர்கள் என்றாலும் இவர்கள் திருமண்ணுக்கு பதில் திருநீறு அணிகிறார்கள்.

சுவாமிகளுடன் தொடர்பு கொண்ட சம்பவத்தை சூளியத்தையா இப்படிச் சொல்லியிருக்கிறார்: "எங்கள் குடும்பம் பெரியார் ஈ.வெ.ரா.வின் பேச்சுக்களை ரசித்த போதிலும் தெய்வபக்தியும் கொண்டிருந்தது. நானும் என் தமையனாரும், ஈ.வெ.ரா எங்கு பேசினாலும் போய்க் கேட்போம்; அதே போல் எந்தக் கோயில் விசேஷத்திற்கும் போவோம்."

மதுரையில் சுட்டிக்குளம் மாயாண்டி சுவாமிகள் இருக்கிறார். பெரிய ஞானி, சித்புருஷர், மகான். அவரை தரிசிக்கலாம் வாருங்கள் என்று எங்கள் உறவினர் ஒருவர் எங்களை அழைத்தார். 'அப்பேர்ப்பட்டவர்கள், காடுகளில் தான் இருப்பார்கள். இதை நம்புவதற்கு இல்லை!' என்று நாங்கள் மறுத்துவிட்டோம். பிறகு அவர் ஒரு நாள், 'மேற்படி மகான் அடங்கிவிட்டார். அவருடைய மண்டலா பிஷேகத்திற்காவது வாருங்கள்!' என்று வற்புறுத்தியதால் என் தமையனார் ஒரு நெருங்கிய நண்பருடன் மண்டலா பிஷேகத்தில் கலந்துகொள்ளப் போனார்."

"அது ஐப்பசி அடைமழைக் காலம். மண்டலாபி ஷேகத்துக்காகக் கீற்றுப் பந்தலில் சமையல் நடக்கிறது. மேலே மழைபெய்து, அந்தத் தண்ணீர் அடுப்பில் விழுந்து, நெருப்புக்கு அடியில் தண்ணீர் ஓடுகிறது. தண்ணீருக்கு மேல் நெருப்பு எரிய. சமையலும் நடக்கிறது. இதைப் பார்த்ததும் 'பெரிய அதிசயம்தான். பெரிய சக்திதான்;

சுட்டிகுளம் மாயாண்டி சுவாமிகளின் சக்திதான் இது' என்பதில் நம்பிக்கை கொண்டு, அங்கிருந்த 'கஞ்சிரா வித்வான் தக்ஷிணாமூர்த்தி பிள்ளை'யிடம் கேட்டபோது 'கும்பகோணத்தில் பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள் என்ற மகான் இருக்கிறார். அவரையும் தரிசியுங்கள்!" என்றார் அவர்.

"என் தமையனாரும் நண்பரும் கும்பகோணத்தில் பாடகச்சேரி சுவாமிகள் தங்கும் வீட்டில் விசாரித்தனர். அப்போது ஒருவர், 'நீங்கள் திருச்சியா?' என்று கேட்க, இவர்கள் 'ஆம்' என்று சொல்ல, 'சற்று முன் சுவாமிகள் பாடகச்சேரி போகும்போது, திருச்சியிலிருந்து இருவர் தேடி வருவார்கள். அவர்களைப் பாடகச்சேரிக்கு வரச் சொல்!' என்றதாகச் சொன்னார்கள். இவர்கள் பாடகச் சேரியில் விசாரித்தபோது, அருகிலுள்ள ஓர் ஊர் பெயரைச் சொல்லி, சுவாமிகள் அங்குவரச் சொல்லியிருக்கிறார் என்றனர். அங்கே ஒருவர் வேறு ஊர்ப் பெயரைச் சொல்லி, சுவாமிகள் அவர்களை அங்கே வரச் சொன்னதாகக் கூறினார். இப்படி ஒவ்வோர் இடமாக ஒரு வார காலம் அலைந்து, திரிந்து கடைசியாக, கார்த்திகை மாதம் சோமவாரத்தன்று ஒரு கிராமத்தில் ஆற்றில் நீராடிவிட்டு, 'இனி சுவாமிகளைப் பார்க்காமல் சாப்பிடுவது இல்லை' என்று தீர்மானித்தனர்.

'சுவாமிகள் வந்தார்களா?' என்று நீடாமங்கலம் காபி கிளப்பில் விசாரித்தபோது, 'உங்களுக்காக வெளியே கட்டிலில் காத்திருக்கிறார்!' என்றனர். வெளியே பார்த்தால் வெள்ளை வேஷ்டி உடுத்திய சாதாரண நபர் இருந்தார். காபி கிளப்பில் 'சுவாமிகள் இல்லையே. வேறு யாரோ ஒருவர் அல்லவா உட்கார்ந்திருக்கிறார்' என்று இவர்கள் சொல்ல அவர்களோ 'அவர்தானய்யா சுவாமிகள்' என்று கூறினர். சகோதரர் சுவாமிகளிடம் வந்து 'நீங்கள்தான் பாடகச்சேரி சுவாமிகளா?' என்று கேட்டார்கள்.

'ராமசாமி நாயக்கரைத் தேடிப் போகாமல் இந்த நாயை எதற்கு ஒரு வாரமாகத் தேடி அலைந்தீர்கள்?' என்று



சுவாமிகள் கேட்டார். பொதுவான விஷயங்களைப் பேசிய சகோதரர்கள் 'தெய்வசக்தி உண்டா, அதை எப்படி நம்புவது?' என்று கேட்டார்கள். அப்போது சுவாமிகள், 'பார்த்தால் நம்புவீர்களா?' என்று கேட்டார். 'ஆம்' என்று இவர்கள் சொன்னதும் 'சற்று நேரம் பொறுங்கள்' என்றார். இருவரும் காத்திருந்தனர்.

சுவாமிகள் கைகாட்டிய திசையில் ஒரு மேட்டில் பெரிய காளைகள் பூட்டப்பட்ட உள்ளூர் மிராசுதாரின் இரட்டைமாட்டு வில்வண்டி நின்றிருந்தது. அப்போது கோயில் விழாவுக்காக அதிர்வேட்டு வெடித்தது. சத்தம் கேட்ட மாடுகள் இரண்டும் மிரண்டு வண்டியுடன் தாழ்வான பகுதியில் ஓடின. அப்போது ரோட்டின் குறுக்கே ஒரு குழந்தை ஓடி வந்தது. ஆனால், என்ன ஆச்சரியம்! வண்டிமாடுகள் அந்த குழந்தையை மிதித்து விடாமல் வண்டிச் சக்கரங்கள் குழந்தை மீது படாதபடி ஒரு திருப்பத்தில் நின்றுவிட்டன. குழந்தை சிரித்தபடி வந்து விட்டது. இதைக் காட்டி, 'வண்டி வந்த வேகத்தில் குழந்தை பிழைத்திருக்குமா? இது தெய்வ சித்தமல்லவா?' என்று கேட்டார் சுவாமிகள். எதிர்காலத்தில் நடக்கப் போவதை முன்கூட்டித் தெரிந்துகொண்டு அசம்பாவிதம் தவிர்க்கும் சக்தி வாய்ந்தவர் சுவாமிகள் என்பதை இதன் மூலம் சூளியத்தையா சகோதரர்கள் புரிந்துகொண்டனர். பிறகு செருப்பைக் கழட்டிவிட்டு, துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு சுவாமிகளின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தனர்.

இவர்கள் வீடு திருச்சி பிள்ளையார் கோவில் சந்தில் 465—ம் இலக்கத்தில் இருக்கிறது. நூறு ஆண்டுகளுக்கு மேலான வீட்டைப் பழைமை மாறாமல் பாதுகாத்து வருகிறார்கள். தலைமுறை தலைமுறையாகக் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வருகிறார்கள். மரபு, பழமை நாட்டம் தவிர பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள் தங்கியிருந்து அருள்பாலித்தது என்பதால் அந்த வீட்டிற்குக் கூடுதல் புனிதம் கிடைத்துள்ளது. இதே மனையில் குடிசை வீடு

இருந்தபோது சகோதரர்களின் தாயார் நாச்சியாரம்மாள் கறவை மாடுகளைப் பராமரித்துப் பால் வியாபாரம் செய்து வந்தார். வீட்டு வாசலில் ஒரு பாத்திரத்தில் பாலை நிரப்பி ஓர் ஆழாக்கையும் வைத்து விடுவார். பெஞ்ச்சில் சிறு பெட்டி இருக்கும். தேவைப்படுபவர்கள் தாமே அளந்து பாலை எடுத்துக்கொண்டு காசைப் பெட்டியில் போட்டுவிட்டுப் போவார்கள். அவ்வளவு பரஸ்பர நம்பிக்கை இருந்த காலம் அது.

"ஆன்மிக ஈடுபாடுகளுடன் லௌகீகப் போக்குகளையும் கவனித்து வந்த சுவாமிகள் இரண்டாம் உலகப் போர் சமயத்தில் சர்க்கரை விலை உயர பருப்பு விலை குறையும் என்று சொல்லியிருக்கிறார். அவரது ஊகம் பொய்க்கவில்லை. அன்று முதல் வியாபாரம், குடும்ப விஷயம் எதுவானாலும் சுவாமிகளிடம் உத்தரவு வாங்காமல் எதுவும் செய்ய மாட்டார் என் சின்ன மாமனார்" என்று உணர்ச்சி படபடக்கப் பேசுகிறார் சூளியத்தையாவின் அண்ணன் மருமகள் காஞ்சனமாலை.

கிருஷ்ணசாமி பிள்ளையும் அவர் மனைவியும் காலமானதும் அவர்கள் மகன் மாயாண்டியைத் திருமணம் செய்துகொண்டார் காஞ்சனமாலை. அப்போது பாடகச்சேரி சுவாமிகள் சித்தியடைந்து விட்டார். குடும்பத்தின் பெரியவராக வீட்டையும் கடையையும் கவனித்துக் கொண்டிருந்திருக்கிறார் சூளியத்தையா. கிருஷ்ணசாமி தம்பதியின் மகன்களுக்கு மாயாண்டி, ராமலிங்கம் என்றும் மகள்களுக்கு விஜயலக்ஷ்மி, காசி விசாலாட்சி, கோகுல திலகம், கமலலோசனி, சரஸ்வதி என்று சுவாமிகள் பெயரிட்டார். சூளியத்தையா தம்பதியின் ஐந்து பெண்களுக்கும் சுவாமிகளே முத்துலெட்சுமி, சக்தி, கௌரி, உமாராணி, செல்வி என்று பெயர் சூட்டினார்.

மாயாண்டி தம்பதியின் மகன்கள் ராமகிருஷ்ணன், கார்த்திகேயன், ராமலிங்கம் தம்பதியின் மகன் தக்ஷிணாமூர்த்தி மூவரும் வியாபாரத்தையும் குடும்பத்தையும் கூட்டாகக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். மாயாண்டிக்கு விஜயலக்ஷ்மி, கீதாரஞ்சனி என்று இரண்டு பெண்கள். ராமலிங்கத்தின் ஒரே பெண் காயத்ரிதேவி.



பெரியவர் மாயாண்டி காலத்துக்குப்பின் இந்தக் குடும்பத்தினர் 'வள்ளி ஜுவல்லரி' என்ற பெயரில் நகை வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். கிருஷ்ணசாமி சகோதரர்களின் பூர்வீகம் கல்லிடைக்குறிச்சி. ரங்கூனில் வைரவேலை செய்திருக்கிறார்கள். இந்தியா திரும்பியதும் கொஞ்சகாலம் இந்த வீட்டின் எதிர்ப்புறத்தில் பட்டறை போட்டு நகை வேலைகள் செய்தார்கள். அதன் தொடர்ச்சியாக வள்ளி ஜுவல்லரி இப்போது நாலாவது தலைமுறையால் நிர்வகிக்கப்படுகிறது. அப்பாய் மளிகை என்ற கடையில் வேலை பார்த்த பிறகு இவர்கள் 'கோனார் மளிகை' என்று தம் சொந்தக் கடையைத் திறந்தார்கள். காஞ்சனமாலையின் கணவர் மாயாண்டி தமிழ்நாடு வர்த்தக சங்கத் தலைவராக இருந்தவர்.

இந்தக் குடும்பத்தினர் பிள்ளையார் கோயில் குளக்கரை விநாயகருக்குப் பக்கத்தில் சித்தி, புத்தி என்று இரண்டு பெண் குழந்தைகளை வைத்துக் கன்னிப் பெண் வழிபாடு செய்தார்கள். அதில் கிருஷ்ணசாமி பிள்ளையின் மூத்த மகள் விஜயம் என்கிற விஜயலக்ஷ்மி திருமண நிச்சயதார்த்தன்று திடீரென்று காய்ச்சல் கண்டு இறந்து போனார். இறக்கும்போது பெண்ணின் வலக்கண் ஓரத்தில் கண்ணீர் வந்தது. சாதாரணமாக எதிர்ப்புறத்தில்தான் கண்ணீர் கசியும் என்பார்கள். இதை வைத்து, "தெய்வாம்சம் உள்ள இந்தக் குழந்தை உங்கள் தெய்வமாக விளங்குவாள்" என்று சொல்லிவிட்டார் சுவாமிகள். அப்போதிலிருந்து இந்தப் பெண் குழந்தையை தெய்வமாக வழிபடுவது குடும்ப வழக்கமாகிவிட்டது. இவளுக்கு வழிபாடு நடத்தாமல் எந்த நல்ல காரியமும் தொடங்குவதில்லை.

"தன் கனவில் இந்தப் பெண் வருவதாக என் மாமியார் சொன்னார்" என்கிறார் காஞ்சனமாலை. சுவாமிகளே

சூளியத்தையாவின் பெண் குழந்தைகளுக்கும் சித்தி, புத்தி என்று பெயரிட்டார். காஞ்சனமாலையின் சொந்த ஊர் கும்பகோணம். ஏழ்மையான குடும்பம் "சின்ன மாமனார் சூளியத்தையா கனவில் வந்து, கும்பகோணத்தில் இந்த இடத்தில் பெண் இருக்கு. வேறெங்கும் தேடாதே. ஏழைன்னு பார்க்காதே என்று சொன்னார் சுவாமிகள். அதை வைத்துத்தான் தேடிவந்து திருமணம் பண்ணிக் கொண்டார்கள்" என்று சொல்கிறார் காஞ்சனமாலை. "பால்காரங்க வீட்டுப் பெண்ணையா சம்பந்தம் பண்ணப் போறீங்க?" என்று கேலி பேசுவார்கள். எப்படியானால் என்ன சுவாமிகள் சொன்னால் கேட்கவேண்டியதுதானே? இவர்தான் குடும்பத்தின் மூத்த மருமகள். குடும்பத்தின் நகைகள், வீடு, மனை, பிற சொத்துக்கள் இவற்றின் நிர்வாகம் பற்றியும் இந்தக் குடும்பத்தினர் ஆலோசனை கேட்டு அதன்படி நடந்து கொள்கிறார்கள்.

திருச்சி அன்பர் சூளியத்தையாவின் அனுபவத்தை எழுத்தாளர் பரணீதரன் இப்படிப் பதிவு செய்திருக்கிறார்: "சுவாமிகள் ஒருமுறை பெல்லாரிக்கு அருகில் உள்ள செள்ளக்குரிக்கி என்ற ஊரில் சமாதி ஆன எரிதாதா சுவாமிகளின் சமாதியில் பிரார்த்தனை செலுத்தப் போனார். நாங்களும் உடன் சென்றோம். அப்போது கர்ப்பச் சிதைவு ஏற்பட்டிருந்து எங்களுடன் வந்துவிட்ட என் மனைவிக்கு மலேரியா ஜுரம் வந்துவிட்டது. பத்து மாதம் கஷ்டப்பட்டாள். அத்துடன் வயிற்றில் கட்டி வேறு. அது வந்தால் பிழைப்பது கடினமாம்."

"சுவாமிகள் ஒரு நாள் வீட்டுக்கு வந்திருந்தபோது என் மனைவிக்குப் பொறுக்க முடியாத குளிர் ஜுரம் வந்து தவித்தாள். சுவாமிகளின் பாதத்தைப் பிடித்துக் கொண்டு உயிர்ப் பிச்சை கேட்டார். சுவாமிகள் ஒன்றும் சொல்லாமல் எழுந்து தன் நண்பர் வீட்டுக்குப் போய் விட்டார். அங்கு ஒரு பெஞ்சில் படுத்தபடி நண்பரிடம் அரைப் படி விளக்கெண்ணெய் கொண்டு வரச் சொல்லி



நான்கு முரட்டு ஆட்களை அதைத் தன் வயிற்றில் பலம் கொண்ட மட்டும் தேய்க்கச் சொன்னார். பிறகு சுவாமிகள் ரசம் சாதம் கொண்டு வரச் சொல்லி சாப்பிட்டு விட்டுப் படுத்துவிட்டார். இங்கு என் மனைவிக்கு சகலமும் அடங்கிக் கொண்டிருந்தது. கடைசி நிமிடத்தை எதிர் பார்த்து அமர்ந்திருந்தோம். சற்று நேரத்தில், அதிசயமாக, பூரண குணமானவளாக எழுந்து விட்டாள். வயிற்றைத் தொட்டுப் பார்த்தால் கட்டி கரைந்துவிட்டது. அத்துடன் மலேரியா காய்ச்சலும் போய்விட்டது."

"சுவாமிகள் மறைந்த பிறகும் இதைப்போல் பல உதவிகள் செய்து வருகிறார். சென்ற ஆடி மாதம் எங்கள் பையனுக்கு ஹார்ட் அட்டாக் வந்தது. அன்று விடியற் காலையில் எனக்கு ஒரு கனவு. அதாவது நான், எங்கள் பையன், சுவாமிகள் மூவரும் உட்கார்ந்திருக்கிறோம். அப்போது இரண்டு முரடர்கள் வந்து சுவாமியை வாயில் வந்தபடி திட்டினார்கள். உடனே சுவாமிகள் எழுந்து, எங்கள் பையனைத் தன் இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு (எங்கள் பையனுக்கு அப்போது வயது 47) அங்கு கிடந்த செருப்பை எடுத்து அந்த இருவரையும் அடித்து விரட்டி விட்டார்கள்." இந்தக் கனவைக் கண்ட பிறகு, 'பையனுக்கு ஏதோ வரப்போகிறது என்று பயந்தோம். ஆனால், சுவாமிகள் காப்பாற்றி விடுவார்' என்ற நம்பிக்கை இருந்தது. காலை ஒன்பது மணிக்கு ஹார்ட் அட்டாக் வந்தது. உடனே அவனை ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு, பயமின்றிக் கனவை நினைவுபடுத்திக் கொண்டிருந்தோம். பூரண குணமாகி அவன் வீடு திரும்பினான்."

இந்தக் குடும்பத்தினர் சுவாமிகளின் நினைவாக ஒரு சேமிப்புப் பெட்டியில் 1883 ஆண்டு முத்திரை கொண்ட அரிதான பழைய வெள்ளி, செப்பு நாணயங்களைப் பாதுகாத்து வருகிறார்கள். அவற்றையும் மற்ற பொருட் களையும் சிவராத்திரியன்று எடுத்து வைத்து பூஜை

செய்கிறார்கள். சாதாரண மக்கள் விவரம் தெரிந்து கொள்ள முடியாத மருந்து வகைகள் சிந்தூரம் போன்ற மருந்துக் குப்பிகள் என்று சுவாமிகள் பயன்படுத்திய பல பொருட்கள் இங்கே புனிதமாகப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

பாடகச்சேரி சுவாமிகள் பல சந்தர்ப்பங்களில் இந்த வீட்டில் தங்கியிருக்கிறார். வீட்டின் மாடியில் வீதியைப் பார்த்த காற்றோட்டமான அறையில் இருந்துகொண்டு அன்பர்களுக்கு விபூதி, தீர்த்தப் பிரசாதம் தருவார். அவர் பயன்படுத்திய வித விதமான கைத்தடிகள், யோக தண்டம், கமண்டலம், சுணக்குடுக்கை மான் தோல் பை, ஆடைகள் என்று பல பவித்ரமான பொருட்களை இவர்கள் பாதுகாத்து வருகிறார்கள். யோக தண்டத்துக்கு அபிஷேகம் ஆராதனை செய்து வழிபடுகிறார்கள். சூளியத்தையா பீமரதசாந்தி செய்து கொண்டபோது, சுவாமிகளின் யோக தண்டத்தை ஆவாஹனம் பண்ணி நிறுத்தி வைத்திருந்தது சுவாமிகளே வந்து ஆசிர்வதித்தது போலிருந்தது என்று சொல்கிறார்கள்.

## நாகூர் ஆண்டவருக்கு நாற்காலி போடு!

சுவாமிகள் பயன்படுத்திய சில பொருட்கள் திரு வொற்றியூர் நெடுஞ்சாலையில் 218—ம் இலக்க வீடு ‘பழனி விலாஸ்’ என்ற பழனியாண்டி பிள்ளையின் வீட்டில் இருக்கின்றன. வீட்டு எண் இப்போது 617ஆக மாறியிருக் கிறது. பழனியாண்டி பிள்ளை சுவாமியை முதலில் பார்த்தது 1928—ல், அதுவும் நாகூரில். அவருக்கு முன்பே அவர் மகன் ராமசாமி பிள்ளை சுவாமிகளைச் சந்தித்து விட்டார். பெங்களூர் ஷாமண்ணா, பட்டு ஜவுளி மொத்த விற்பனை விஷயமாக சென்னை வந்தபோது ராமசாமி பிள்ளை அவரை அழைத்து வந்தார். அப்போது சுவாமிகள் இந்த வீட்டில் இருந்திருக்கிறார்.

ஷாமண்ணா கேட்டுக்கொண்டபடி பெங்களூர் சஜ்ஜன்ராவ், கும்பகோணம் நாகேசுவரன் கோயில் திருப்பணிக்குப் பணம் தந்தார். ராமசாமி பிள்ளையின் மகன் வழிப் பேரன் கார்த்திகேயன் கட்டடக் கான்ட்ராக் டராக இருக்கிறார். இவருக்கு சுவாமிகள் வைத்த பெயர் ‘காத்த முத்து.’ அப்புறம் ஏதோ தோன்றியிருக்கிறது. ‘கார்த்திகேயன்’ என்று பெயரை மாற்றினாராம். ‘இப்படி யெல்லாம் பேர் வச்சா பிற்காலத்தில் உன் பிள்ளை என்னைத் திட்டுவான்’ என்று வேடிக்கையாகச் சொல்லியிருக்கிறார்.



திருவொற்றியூர் சாலையில் உள்ள அந்த வீட்டின் பிரதான ஹாலில் சுவாமிகள் தங்கியிருந்து அருள்பாலித் திருக்கிறார். இன்றும் அந்த விசாலமான கூடத்தின் வடிவம் மாறாமல் காத்து வருகிறார்கள்.

ஒரு சமயம் “நாகூர் ஆண்டவர் வந்திருக்கிறார். அவருக்கு நாற்காலி போடு” என்று சுவாமிகள் சொல்ல, அதன்படி சுவாமிகள் பக்கத்தில் ஒரு நாற்காலி போட்டிருக் கிறார்கள். அந்த நாற்காலி இன்னும் அங்கே அப்படியே இருக்கிறது. பழனியாண்டி பிள்ளை நாகூர் ஆண்டவரின் தீவிரமான பக்தர், இன்றைக்கும் இந்தக் குடும்பத்தினர் நாகூர் தர்காவிலிருந்து வஸ்த்ர மரியாதை பெறுகிறார்கள்.

கார்த்திகேயனின் சகோதரர் கோடியப்பன் சிறுவனாக இருந்தபோது உணவுப் பண்டங்களை மீதம் வைத்து விடுவார். யாரும் குழந்தையைக் கோபித்துக்கொள்ளக் கூடாது என்பதற்காக மீந்துபோன உணவை சுவாமிகள் எடுத்துச் சாப்பிட்டுவிடுவார். இந்த விவரத்தைத் தன் தாயார் சாரதாம்மாள் சொன்னதாக நினைவுகூர்கிறார் கார்த்திகேயன். அந்த அளவுக்கு அந்தக் குடும்பத்தோடும் குழந்தைகளோடும் பழகியிருக்கிறார் சுவாமிகள். என்ன பாக்கியம் அந்தக் குடும்பத்தினருக்கு!

சுவாமிகளின் சில அன்பர்கள் குடும்பங்களில் அவர் பயன்படுத்திய பொருட்கள் இருக்கின்றன. ‘பழனி விலாஸ்’ இல்லத்திலும், தாம் பயன்படுத்திய விதம் விதமான கைத் தடிகளை விட்டுச் சென்றிருக்கிறார். அவற்றை இந்தக்

குடும்பத்தினர் புனிதம் கெடாமல் பாதுகாத்து வைத்தி ருப்பது, சுவாமிகள் இன்னும் நம்மோடு இருக்கிறார் என்கிற உணர்வை ஏற்படுத்துகிறது.

## விளம்பரமில்லாத மருத்துவப் பணி

பெங்களூருவைச் சேர்ந்த ஸதி தன் அனுபவத்தை பரணீதரனிடம் இப்படிச் சொல்லியிருக்கிறார்: "என் தாயாருக்கு திருமணம் ஆகி ஏழு வருடங்கள் ஆகியும் குழந்தை பாக்கியம் இல்லை. பாடகச்சேரி சுவாமிகளை அணுகி தனக்கு குழந்தை வேண்டும் என அவரது ஆசிர்வாதம் கேட்டாள். ஆடி மாதம் ஒரு வெள்ளிக் கிழமை அன்று நான் பிறந்தேன். எனக்கு 'ஸதி' என்று பெயரிடப்பட்டது. என் தகப்பனார் லண்டனில் பிரசித்தி பெற்ற டாக்டராக ஏழு வருட காலம் பணி புரிந்தவர். அற்புத சக்திகளில் நம்பிக்கை இல்லாதவர், சித்தர்கள் அற்புத சக்தி கொண்டவர்கள் என்பதை ஏற்க மறுத்தவர். எனக்கு சிறுவயதிலேயே கடுமையான உடல் நலக் குறைவு ஏற்பட்டது. பலவிதத் தொந்தரவுகளைக் கொடுத்தது. அதனால் நீல இதய பேபியானேன். எந்த சிகிச்சையும் பலன் அளிக்கவில்லை. மருத்துவர்கள் 'குழந்தை பிழைக்காது என்று தெரிவித்தார்கள். அதைக் கேட்ட என் தகப்பனாருக்கு இதயம் வெடிக்கும் போலானது. என் தாயார் புரண்டு புரண்டு அழுதாள்."

"பாடகச்சேரி சுவாமிகளைப் பற்றிக் கேள்விப்படவே, அவரிடம் என்னை அழைத்துச் சென்றார்கள். சுவாமிகள் என்னைத் தம் மடியில் போட்டுக்கொண்டு தேகம் பூராவும் விபூதி தடவி விட்டு, 'உன் குழந்தைக்கு இன்று முதல் உடல்நலக் குறைவே இல்லை என்று நினைத்துக் கொள்!' என்று என் தாயாரிடம் சொன்னார்.' அன்று முதல் இதய நோய் முழுமையாக குணமாகி நலமுடன் இருந்து வருகிறேன். இதற்குப் பிறகும் என் தந்தை பாடகச்சேரி சுவாமிகளின் மகிமையை ஒப்புக் கொள்ளவில்லை. நம்பிக்கை ஏற்படவில்லை. ஒரு சமயம் பட்டாசு வெடித்து



அவர் கையில் தீப்புண் ஏற்பட்டது. வலி தாங்க முடிய வில்லை. மிகவும் கஷ்டப்பட்டார். அப்போது சுவாமிகள் அவரை அழைத்துக் கைகளைப் பார்த்து "தூ...தூ..." என்று சொன்னார். ஒரே நாளில் அது குணமாகி விட்டது."

பம்பாயிலிருந்து டி.எஸ். ஸ்ரீனிவாசன் என்ற அன்பர் 1983—ம் வருடம் எழுதிய கடிதத்தில் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்: "கும்பகோணத்தில் சி. ராமநாதன் என்று ஒரு முனிசிபல் டாக்டர் இருந்தார். அவர் கும்பகோணம் நகரசபை சேர்மனாகவும் இருந்தார் என்று கேள்வி. சுவாமிகள் ஜீவசமாதி ஆவதற்கு ஒரு வாரம் முன்னதாக டாக்டரின் மனைவி கும்பகோணத்தில் இறந்துவிட்டார். உறவினர்களுக்கெல்லாம் தந்தி அடித்து, பிரேதத்தை எடுக்க மாலை ஐந்து மணிவரை ஆனது. அப்போது அவ்விடம் வந்த சுவாமிகளிடம் டாக்டர் துக்க நிகழ்வைச் சொல்ல, பிரேதமாகக் கிடத்தப்பட்டிருந்த டாக்டர் மனைவியின் நெற்றியில் விபூதியைப் பூசி 'எழுந்திரு' என்றாராம். அந்த அம்மா தூக்கத்திலிருந்ததுபோல் எழுந்தார். அப்போது சுவாமிகள் தான் ஒருவாரத்தில் திருவொற்றியூரில் ஜீவசமாதியாகப் போவதாகச் சொல்லி யிருக்கிறார். இதை அந்தக் குடும்பத்தாரிடம் விசாரித்துத் தெரிந்துகொள்ள ராமநாத ஐயர் இல்லை. மகன் சுப்ர மணியனும் இல்லை. ஆனால் இது தனக்கு நன்றாகத் தெரிந்த சமாச்சாரம் என்று ஸ்ரீனிவாசன் பரணீதரனுக்கு 1983ம் வருடம் ஜனவரி மாதம் நான்காம் தேதி கடிதம் எழுதியிருக்கிறார். இப்படியான அதிசயங்கள் நடக்காது என்று சொல்வதற்கில்லை.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் இசைத் துறைத் தலைவராக இருந்துள்ள டாக்டர் துர்கா சொல்லும் ஒரு சம்பவம் சுவாரசியமானது. பிரபல விதூஷி வீணை தனம்மா சில மாதங்கள் துர்காவின் சகோதரர் வெங்கட் ராம ஐயர் வீட்டில் தங்கியிருந்தார். அவருக்கு அப்போது பார்வை மங்கியிருந்தது வெங்கட்ராம ஐயர் வேண்டிக்

கொண்டபடி சுவாமிகள் அவர்கள் வீட்டில் பூஜை செய்தார். அதன் பலனாக தனம்மாவுக்கு ஒரு கண்ணில் பார்வை திரும்பியது. சுவாமிகளின் பூஜையே நிவாரணமானது.

## கஞ்சியால் காச நோய் தீர்த்து...

தனபால் முதலியார் என்ற புகைப்படக் கலைஞர் குறிப்பிட்டுள்ள சம்பவம் இது. வித்வான் சௌந்தரராஜ ஐயங்கார் சென்னையில் வேலாயுத முதலியார் என்ற பாடகச்சேரி சுவாமிகளின் பக்தர் வீட்டுக் குழந்தை களுக்கு வயலின் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தார். சந்திரப்பா முதலித் தெருவில் இருந்த சௌந்தரராஜ ஐயங்கார் பாடகச்சேரி சுவாமிகளிடம் ஈடுபாடு கொண்டு உண்மையான தொண்டு செய்துகொண்டிருந்தார். சுவாமிகள் முதலியார் வீட்டுக்கு வந்து போகிறார் என்பது ஐயங்காருக்குத் தெரியவந்தது. காசநோயினால் தாக்கப்பட்ட அவர் இரண்டாயிரம் ரூபாய் வரை வைத்தியத்துக்குச் செலவு செய்தும் பயன் கிடைக்க வில்லை. கையில் காசு இல்லாத நிலையில் நோய் உயிருக்கு ஆபத்தாக முற்றிய நிலையில் சுவாமிகளைச் சந்திக்கலாம் என்று கும்பகோணம் போனார். வியாதியைச் சொல்லித் தனக்கு இரண்டு ஆண் குழந்தைகள் இருப்பதால் எப்படியாவது தன்னைக் காப்பாற்றி உயிர்ப் பிச்சை தரும்படி வேண்டிக் கொண்டார். சுவாமிகளை விட்டால் வேறு கதியில்லை என்று மன்றாடியிருக்கிறார்.

ஆனால் சுவாமிகள் 'என்னிடத்தில் மருந்து ஒன்றும் இல்லை. ஊர் போய்ச் சேரு' என்று நிர்தாட்சண்யமாகச் சொல்லிவிட்டார். சுவாமிகள் இரக்கமில்லாமல் நடந்து கொள்கிறவர் இல்லை. நிஜமாகவே இவர் தன்னைத் தேடி வந்திருக்கிறாரா என்று சோதிக்க விரும்பினார் போலும். அது புரியாத ஐயங்காருக்குக் கோபம் வந்து விட்டது. "உயிர்ப்பிச்சை தாருங்கள். இல்லாவிட்டால் எதிரே உள்ள மரத்தில் தூக்கு மாட்டிக்கொள்கிறேன்" என்று விரக்தியில் சொன்னார்.



அப்போது கும்பகோணத்தில் இருந்த பழனியாண்டி பிள்ளையின் மனைவியை அழைத்துக் கஞ்சி கடைந்து கொண்டு வரச்சொல்லி அதில் விபூதியைக் குழைத்து ஐயங்காரிடம் கொடுத்து 'மூன்று நாள் சாப்பிடு. குணமாகி விடும்' என்று சொல்லி அனுப்பினார் சுவாமிகள். கஞ்சியைக் குடித்துப் பூரண குணம் பெற்றார். அந்தக் காலம் முதல் கடைசிவரை சுவாமிகளுக்கு உண்மையான தொண்டராக விளங்கினார். ஐயங்காருக்கு கோபால கிருஷ்ணன், சீனிவாசன் என்று இரண்டு பிள்ளைகள். சுவாமிகளின் உத்தரவுப்படி ஒருவருக்குப் பிடில் வாத்தியத்திலும் மற்றவருக்கு வாய்ப்பாட்டிலும் பயிற்சி கொடுத்தார். பிடில் பயிற்சி பெற்றவர் முதலில் வடலூர் ஆண்டவர் சந்நிதியில் வாசித்தார். பின்னாளில் அவர் வயலின் வாத்தியக்காரராகப் புகழ் பெற்றார்.

கும்பகோணம் நாகேசுவரன் கோவில் கோபுரத் திருப் பணி வேலைகளுக்காக சென்னையில் சுவாமிகள், முகாமிட்டிருந்தார். அப்போது பூவிருந்தவல்லி நெடுஞ் சாலையிலிருந்த லக்ஷ்மணன் செட்டியாரின் மருமகன் குடல்வால் இறக்க நோயினால் அவதிப்பட்டுக் கொண்டி ருந்தார். அவருடைய உறவினர், வைர வியாபாரி கும்ப கோணம் ராஜகோபால் செட்டியார் இந்த விஷயத்தை சுவாமிகளுக்குத் தெரிவித்தார். ஆறு வேளை மருந்தில் அவரை குணப்படுத்தியனுப்பினார் சுவாமிகள்.

## விஷத்தை இறக்கிய வில்வ இலை

அனியமங்கலம் அன்பரின் அத்தையை வெறிநாய் கடித்தபோது சுவாமிகள் வில்வ இலைகளைக் கொண்டே விஷத்தை இறக்கியிருக்கிறார். பைரவர்களுக்கு உணவு அளிப்பது விசேஷம் என்று அந்தக் குடும்பத்தினருக்கும் பிறருக்கும் தெரிவித்திருக்கிறார். அவரது அன்பர்கள் அதை இன்றும் பின்பற்றி வருகிறார்கள்.

முக்திக்குள மண்டபத்தில் நடந்த அற்புதமான நிகழ்வைப் பற்றியும் சொன்னார் பொன்னுசாமி வாண்டையார். உடல் அழுகி நாற்றமெடுத்த நிலையில்

ஒரு நோயாளி வந்திருக்கிறார். அவரைப் பதினாறே நாட்களில் குணப்படுத்தி அனுப்பினார் சுவாமிகள்.

"நான் என்ன செய்தாலும் பொறுமையாக இரு. குணப்படுத்துகிறேன்" என்று சொல்லியிருந்தார் சுவாமிகள். தொட்டியில் கழுத்தளவு நீரில் அவரை நிற்கவைத்து, மூலிகைகளை அரைத்துத் தண்ணீரில் கலந்துவிட்டார். நோயாளி தன் உடம்பு அனலாய்ப் பற்றி எரிந்ததைப் பொறுத்துக் கொண்டார். முதல் நாள் மட்டும் சுவாமிகளே தேவையான மூலிகைகளைத் தேடிவந்து கொடுத்து அரைக்கச் சொன்னார். பிறகு, வாண்டையாரும் மற்றவர்களுமே இந்த வேலையைச் செய்தார்கள். நெருப்பாய் எரியும் மூலிகை நீரில் பதினாறு நாட்கள் பொறுமையாக நின்றவர் முழுமையாக குணமடைந்தார்.

வாண்டையாரின் தாயார் தாமரைவல்லி அவர்கள் சுவாமிகளுக்குத் தேவைப்படுகிற விபூதியை மூட்டம் போட்டுத் தயாரித்துத் தருவார். பசுஞ்சாண உருண்டைகளைக் காய வைத்து நவதானியங்களையும் வைத்து மூட்டம் போட்டுச் சாம்பல் ஆக்குவார்கள். சுத்தமான விபூதியில் சுவாமிகளே மூலிகை மருந்தைக் கலப்பார். அவர் அப்படிம் தயாரித்த விபூதிக்கு அபூர்வமான மருத்துவப் பயன் உண்டு.

அன்னதானத்துக்காகச் சமைத்து வைத்த உணவில் மூலிகை விபூதியைத் தூவுவார் சுவாமிகள். அப்போது எல்லாப் பண்டங்களுக்கும் மருத்துவ குணம் வந்துவிடும்.

மஞ்சள்காமாலை, நாய்க்கடி, எலிக்கடி, தேள் விஷம் போன்றவற்றுக்கு சுவாமிகள் வெவ்வேறு மூலிகைகளைத் தயிரில் கலந்து தருவார்கள். மஞ்சள்காமாலைக்கு ஞாயிற்றுக் கிழமை மட்டும் மருந்து தந்துவந்தார்கள்.

## மூலிகை மருந்து

மூலிகை மருந்துகளைத் தயாரித்த சுவாமிகள் நாட்டு வைத்தியராகவும் இருந்திருக்கிறார். அது



அவரது பணி. 'மந்திரமாவது நீறு என்ற தேவாரப்பாடல் போல் பலருக்கு இவரது விபூதியே மருந்தானது. சில காரணங்களினால் சிலருக்குப் பிரசாதம் கொடுக்க மறுத்திருக்கிறார்.

வள்ளலாரைப் போலவே பாடகச்சேரி சுவாமிகளும் மூலிகை மருத்துவம், அன்னதானம் போன்றவற்றில் ஈடுபட்டிருந்ததில் வியப்பில்லை. 'இருவரும் ஒருவரே' என்று நம்பும் அளவுக்குப் பல நிகழ்வுகளை அன்பர்கள் சொல்லியிருக்கிறார்கள். பாடகச்சேரி சுவாமிகள் நோய்கள் தீர்க்க மருந்துகளைக் கொடுத்த சித்தராக இருந்தவர்.

சுவாமிகளின் இந்த மருத்துவ ஆற்றல் தமிழகத்தின் பல இடங்களுக்கும் தெரியவந்தது. புதுக்கோட்டை சமஸ்தானத்தை ஒட்டிய செட்டிநாட்டுப் பகுதியின் நகரத்தார் பெருமக்கள் சுவாமிகளை தரிசித்து நோய்களிலிருந்து குணமடைந்திருக்கிறார்கள். இதற்கு உதாரணமாக செட்டிநாட்டின் பெரும் செல்வந்தராக விளங்கிய ஆதப்ப செட்டியாரைச் சொல்லலாம். தொழுநோய் தாக்கியதால் கை விரல்கள் நலிந்த நிலையில் சுவாமிகளைச் சந்தித்த இவர் குணமடைந்தது சுவாமிகளின் அருளினால்தான்.

இதையடுத்து ஆதப்பச் செட்டியார் சுவாமிகளின் தீவிர பக்தரானார். பாடகச்சேரி கிராமத்தில் ஒரு மடம் கட்டித்தந்தவரும் இவரே. அதன்பிறகு கும்பகோணம் நாகேசுவரன் கோயில், நடராஜர் சந்நிதி அமைந்துள்ள மண்டபத்தை அப்போதைய மதிப்பில் பல லட்சம் ரூபாய் செலவு (இப்போது கோடிகளில்) செய்து புதுப்பித்துத் தந்தார் ஆதப்ப செட்டியார்.

சுவாமிகள் நிறைய மருந்துப் பொருட்களையும், மூலிகைகளையும் கொண்டு பெங்களூர் ராமலிங்க முதலியார் வீட்டுக்கு வரும்போது வருவார். பத்து விதமான மருந்துகளைத் தயாரிப்பார். ஜாடி நிறைய மருந்துகள் இருக்கும். அறுபத்து நான்கு விதமான நோய்களை அந்த மருந்துகள் குணமாக்கும் என்கிறார்கள். 'ஆமை ஓடு பஸ்பம்' வயிறு சம்பந்தமான வியாதிகளைப் போக்கும்

இதுபோல் அயச் செந்தூரம் என்று இன்னொரு மருந்து. பட்டுத் துணியை எடுத்து அதற்குள் சில மூலிகைகளை முடிந்து ஒரு சிறிய குடத்துக்குள் போட்டு அதையும் பட்டுத் துணி போர்த்தி வைத்துப் புடம் போடுவார். அதைப் 'பட்டுக் கறுப்பு' என்று சொல்வார்கள். நோயினால் பாதிக்கப்பட்டவரை உட்காரவைத்து மனதில் மந்திரம் சொல்லிக் கொண்டு விபூதி பூசுவார். உடம்பு சரி—யில்லை என்று யாராவது சொன்னால் தேகத்தில் கொஞ்சம் விபூதியைப் பூசிவிடுவார். 'எல்லாம் போச்சு போ' என்று சொல்வார். இந்தத் தகவல்களைச் சொன்ன கௌசல்யா அம்மையார் சூரணக் குடுவைகளையும் காட்டினார்.

சுவாமிகள் தயாரித்து வைத்த மூலிகை மருந்துகள் இருபது வருடங்கள் ஆகியும் வீரியம் குறையாமல் இருந்தன என்றும், தன் தாயார் அவற்றைப் பயன்படுத்தினார் என்றும் சொல்கிறார் பெங்களூர் ராமலிங்க முதலியாரின் மகள் கௌசல்யா அம்மையார். லிங்கச் செந்தூரம் என்ற மருந்தை அரிசியின் பாதியளவு எடுத்து வெற்றிலையில் வைத்துத் தேனில் குழைத்துத் தருவார் சுவாமிகள். இது 33 வகைக் காய்ச்சல்களை குணப்படுத்தும் என்று அந்தக் குடும்பத்தினர் நினைவு வைத்திருக்கிறார்கள்.

சென்னையில் ராமசாமி பிள்ளையின் பங்களாவில் இருந்தபோது பலருக்கும் உதவும் விதமாக ஏராளமான மூலிகை மருந்துகளைத் தயாரித்து வைத்தார். தயாரிப்பு விவரங்களை பிடில் சௌந்தரராஜ ஐயங்காரும், ராமசாமி பிள்ளையும் புத்தகங்களில் எழுதி வைத்தாகவும் அப்போது அவர்களது நண்பர் 'போட்டோ' தனபால் முதலியார் உடன் இருந்ததாகவும் சொல்கிறார்.

இரவு பகலாய் அநேக பொருட்களைப் புடம்போட்டு 'சுடர் தைலம்' என்ற மருந்தைத் தயாரித்த சுவாமிகள், அதை சுப்ரமண்யர், பட்டிணத்தார் விக்ரகங்களுக்கு அபிஷேகம் செய்தார். 'இதனால் ஸ்நானம் செய்கிறவர்களுக்கு டைபாய்டு முதலான விஷ ஜுரங்கள் நிவர்த்தியாக வேண்டும்' என்று பிரார்த்தனை



செய்தார். இந்தத் தைலத்தையும் மற்ற மருந்துகளையும் செய்யப் பொருள் உதவி செய்தவர் ராமசாமி பிள்ளை.

## சுவாமிகளின் குறிப்பேடுகள்

வைத்திய முறைகள், ஆன்ம ஞானம் பற்றி சுவாமிகள் குறிப்புகள் எழுதியிருக்கிறார். 'தன்னை அறிவதுதான் தெய்வம்,' 'நவகிரகங்கள் நம் உடலுக்கு உள்ளே உள்ளன,' 'கடலுக்குள் இருக்கும் ஆமை மாதிரி பண்ண வேண்டும்.' 'பிறக்கும்போது கொண்டு வந்ததில்லை, இறக்கும்போது கொண்டுபோவதில்லை' என்பது போன்ற பல சிந்தனைகளை எழுதி வைத்திருக்கிறார். பெரும்பாலும் பென்சிலால் தான் எழுதுவார். ரெயில் பயணங்களிலும் ஓய்வு நேரங்களிலும் இப்படிக் குறிப்புகள் எழுதுவது வழக்கம். அந்தக் குறிப்பேடுகளை அன்பர்களிடம் விட்டுவிட்டுப் போய்விடுவார். அவற்றை பூஜையறையில் வைத்து வழிபடுகிறார்கள் சிலர்.

இப்படி சில குறிப்பேடுகளைக் காட்டினார் பெங்களூர் ராமலிங்க முதலியாரின் மகள் கௌசல்யா என்கிற 90 வயது மூதாட்டி. பெங்களூரு லால்பாக் சாலை 32—ம் எண் வீட்டில் வி. ராமலிங்க முதலியார் என்ற செல்வந்தர் இருந்தார். 'விஜயம்' என்ற அவருடைய வீடு இப்போது 'ரங்கா அபார்ட்மெண்ட்ஸ்' ஆக மாறியிருக்கிறது. இந்தக் குடும்பத்தினர் வடலூர் வள்ளலாரிடமும் மறு தலைமுறையில் பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகளிடமும் சிகிச்சை பெற்றது ஒரு அபூர்வ வரலாற்றுச் சம்பவம்.

பெங்களூர் ராமலிங்க முதலியாரின் 'விஜயம்' இல்லத்துக்குப் பாடகச்சேரி சுவாமிகள் பலமுறை விஜயம் செய்திருக்கிறார். சுவாமிகளால் கும்பகோணம் கூழ்சாலையில் உள்ள மடத்தின் பராமரிப்பு நிர்வாகக் குழுவில் ராமலிங்க முதலியாரின் மகன் விஸ்வநாதனை ஒரு உறுப்பினராக நியமித்தார் சுவாமிகள்.

ராமலிங்கத்தின் மகள் திருமதி கௌசல்யா என்கிற மூதாட்டியை அண்மையில் சந்தித்து உரையாடும்

பாக்கியம் கிடைத்தது. நல்ல நினைவாற்றல் கொண்ட இவர் கணீர் என்ற குரலில் ஆங்கிலத்திலும் தமிழிலும் தன் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டது என்னை அந்தக் காலத்திற்கே அழைத்துச் சென்றது. அது ஒரு தனி அனுபவம். இரண்டு மணி நேரத்துக்கு மேல் பேசிக் கொண்டிருந்தபோது அவர் சொன்ன பல விஷயங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.

சிரஸ்தாதாராக இருந்த கௌசல்யாவின் தந்தை வழித் தாத்தா வைத்தியலிங்க முதலியார் ஆங்கிலேய அதிகாரி களுக்கு 'துபாஷ்'ஆகப் பணியாற்றினார். ஆங்கிலேயர்கள் சொல்வதைப் பிற மொழி பேசுபவர்களுக்கு மொழி பெயர்த்துச் சொல்லி, இவர்களது பதிலை ஆங்கிலத்தில் அவர்களுக்குச் சொல்ல வேண்டும். அதுதான் 'துபாஷ்' வேலை. (துவிபாஷி—இருமொழிக்காரார்.) கௌசல்யா அம்மையாரின் தகவல்கள் அவரது சொற்களிலேயே: "என் பாட்டி விஜயலக்ஷ்மிக்குக் காசநோய் வந்தபோது கோலாரிலிருந்து வந்த ஆங்கில டாக்டர்களால் குணப் படுத்த முடியவில்லை. காற்றோட்டமான இடத்தில் வைத்து நல்ல ஆகாரம் கொடுத்துவாருங்கள். குணப் படுத்துவது முடியாது என்று சொல்லி விட்டார்கள்."

பாட்டியின் தாய் மாமா வடலூரரில் வசித்து வந்தார். வள்ளலாரின் சீடரான இவர் 'இங்கே சுவாமிகள் மூலிகை மருந்து தருகிறார். அதையும் முயற்சி செய்து பார்க்கலாம்' என்று யோசனை சொன்னார். அதன்படி பாட்டியும் பிற உறவினர்களும் வடலூருக்குப் போனார்கள். அந்தக் காலத்தில், 1870 வாக்கில், இப்போது போல் பிரயாண வசதிகள் இல்லை. பெங்களூரிலிருந்து வடலூருக்குப் பல நாட்கள் மாட்டு வண்டியில் பயணம் செய்தார்கள். ஆங்காங்கே இளைப்பாறி, இரவு நேரங்களில் சத்திரங் களில் தங்கி பகல் பயணமாக வடலூர் சென்றார்கள். உதவிக்காக ஒரு மராட்டிப்பையன் உடன் வந்தான். மூன்று ஆட்கள் பாதுகாப்புக்காக இருந்தார்கள். இரவில் வெளிச்சத்திற்கு அரிக்கேன் விளக்குகளே துணை.



சுவாமிகளை தரிசனம் செய்து அவர் கொடுத்த மூலிகை மருந்துகளைச் சாப்பிட்டதும் பாட்டிக்கு வந்த காசநோய் சில நாட்களில் முற்றிலுமாக குணமானது. இது ஆங்கில மருத்துவர்களை அதிரவைத்தது. லண்டனில் இருந்த மருத்துவ நிபுணர்களும் ஆச்சரியப்பட்டு 'என்ன மருந்து? எப்படி சாத்தியம் என்று கேட்டார்கள்."

அசைவ உணவுக்குப் பழக்கப்பட்ட ராமலிங்க முதலியாரின் குடும்பம் வடலூர் வைத்தியத்துக்குப் பிறகு உணவில் தீவிர சைவமாகிவிட்டது. வருடாவருடம் வடலூர் சென்று மூன்று நாட்கள் தங்கியிருந்து தைப்பூச அன்னதானத்தில் கலந்து கொள்வார்கள். வடலூர் வள்ளலாரின் கடைசிப் பன்னிரண்டு ஆண்டுகள் ஜீவிய கால நிறைவில் நடந்தது இது. அவர்களுக்கு நோய் நீங்கி மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு கௌசல்யாவின் தந்தை பிறந்தார். அதனால் அவருக்கு ராமலிங்கம் என்று வள்ளலார் பெயரையே வைத்தார்கள்.

கௌசல்யாவின் தந்தை ராமலிங்கத்திற்கு உடல் நலம் கடுமையாக பாதிக்கப்பட்டபோது ஷாமண்ணாவும் மன்னாஜிராவும், பாடகச்சேரி சுவாமிகளை தரிசிக்கச் சொன்னார்கள். சுவாமிகளைக் கண்டதும் 'தங்களை எப்போதோ எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே' என்று சொன்னார் தந்தை. சுவாமிகள் நிறைய விபூதி எடுத்து உடம்பில் பூச, அவர் குணமடைந்தார்.

"ஒரு மோட்டார் காரை ரிப்பேர் பண்ணினா அது பன்னிரண்டு வருஷமாவது ஓடணுமில்லையா?" என்று சுவாமிகள் சொன்னது போலவே ராமலிங்க முதலியார் அதற்குப் பிறகு 12 வருடங்கள் ஜீவித்திருந்தார். பாடகச் சேரி சுவாமிகள் மன்னாஜிராவ் ஷாமண்ணாவுடன் தங்கள் வீட்டுக்கு வந்தபோது தன்னையும் அறியாமல் கௌசல்யாவின் தந்தை கண்ணீர் உகுத்து மெய்சிலிர்த் திருக்கிறார்.

கௌசல்யா அம்மையாரின் பாட்டி ஆறு ஆண்டுகள் வடலூர் தைப்பூச அன்னதானத்தில் முழுமையாக ஈடு

பட்டிருந்தார். அந்தக் காலத்தில் அன்னதானம் வகை வகையான பதார்த்தங்களோடு இருக்காது. சாதமும் குழம்பும்தான். பாட்டி வற்றலும் வடகமும் நிறையத் தயாரித்து அவற்றை அன்னதானத்துக்காக எடுத்துப் போவார்கள்.

பின்னால் பாடகச்சேரி சுவாமிகளை கௌசல்யாவின் தாயார் தரிசித்தபோது சுவாமிகள் சொல்லியிருக்கிறார். "இந்தக் குஷ்டியில் (வயிறு) வற்றல் வடகம் போயிருக் கிறதல்லவா? அதனால்தான் நான் உங்களிடம் மறுபடியும் வருகிற மாதிரி ஆகிவிட்டது?" இதைக் கேட்ட வீட்டுப் பெரியவர்களுக்கு அளவு கடந்த ஆச்சர்யம். பாட்டி தயாரித்த வற்றல் வடகத்தை விரும்பி ஏற்றுக்கொண்ட வடலூர் ராமலிங்க சுவாமிகளே பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகளாக அவதாரம் எடுத்தார் என்று உணர்ந்து கொண்டதாக என் தாயார் சொன்னார்.

கௌசல்யாவின் தாத்தா பாட்டி குடும்பம் பெரியது. அவர்கள் பன்னிரெண்டு பேர். ராமலிங்க முதலியாருக்கு ஒன்பது பெண்கள், மூன்று பையன்கள். சுவாமிகளின் தொடர்பு ஏற்பட்ட பிறகு குடும்பத்தில் நிறைய நல்லது நடந்தது. குடும்ப நிலைமை வெகுவாக மாறிப்போனது. கௌசல்யாவின் தந்தை ராமலிங்கம் 1942–ல் காலமானார். பிறகு அவரது இரண்டு மகள்களுக்குத் திருமணம் ஆனது. நண்பர் ஷாமண்ணாவும் ராமசாமி பிள்ளையும் வந்திருந் தார்கள். சுவாமிகளை எதிர்பார்த்து அவருக்கு இருக்கை ஏற்பாடு செய்திருந்தார்கள். சுவாமிகளே வந்து அமர்ந் திருப்பதாக எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்தார்கள்.

கௌசல்யாவின் தாயார் கஜாம்பாளின் இரண்டு சகோதரிகளில் ஒருவரான ருக்மணி டாக்டர் குருசாமி முதலியாரைத் திருமணம் செய்துகொள்ள, கௌசல்யா வின் சகோதரி பார்வதி போலீஸ் உயர் அதிகாரியாக இருந்த ராஜரத்னத்தைத் திருமணம் செய்து கொண்டார். கௌசல்யாவின் தாயாரும் அவரது இரு சகோதரிகளும்



நமஸ்கரித்தபோது 'கௌசலைக்கு மங்களம் உண்டாகட்டும்' என்று சொல்லி ஆசிர்வாதம் செய்தார். பனிரெண்டு வருஷம் பலன் இருக்கிறது என்று பூடகமாகச் சொன்னார். கௌசல்யாவின் கணவர் திருபுவனம் பதினோரு வருஷம் பத்து மாதங்கள் உயிர் வாழ்ந்தார்.

சுவாமிகளை தரிசிக்கவும் நிவாரணம் பெறவும் காலையில் ஆறு மணிக்கே அன்பர்கள் வருவார்கள் இரவு பன்னிரண்டு மணியானாலும் திரும்புவதில்லை. 'அப்பா அம்மாவுக்கு, மாமியார், மாமனாருக்கு, பெரியவங்க ளுக்கு சேவை பண்ணுங்க. அதுதான் முக்கியம். என் கிட்டே ஏன் வரீங்க?' என்று சுவாமிகள் தம்மைக் காண வரும் அன்பர்களிடம் சொல்வதுண்டு. சுவாமிகளே 'வீட்டுக்குப் போங்க' என்று சொன்னாலும் போக மனம் வராத பக்தர்கள் அங்கேயே இருப்பார்கள்.

## ரூபாய் நோட்டில் உபதேசம்!

ராமலிங்க முதலியாரின் பேத்தி அருணா மகாலக்ஷ்மி சொல்கிறார்: "குழந்தைப் பருவத்தில் தீபாவளி, பொங்கல் என்று பண்டிகைகள் வந்தால் ஒரே கொண்டாட்டம்தான். அம்மாவைச் சுற்றி அமர்ந்து கொள்வோம். பாடகச்சேரி சுவாமிகளைப் பற்றிய நிகழ்ச்சிகளைக் கதை கதையாகச் சொல்வார். அம்மா சொல்லும் கதைகள் தின்பண்டங் களுடன் சேர்ந்த இனிப்பு. கதை சொல்வதோடு மட்டு மின்றி, புத்தம் புதிய ரூபாய் நோட்டு ஒன்றில் கதை சொன்ன தேதியையும் எழுதி அன்பளிப்பாகத் தருவார். பின்னால் என்றைக்காவது தாம் சொன்ன கதையைச் சொல்லுங்கள் என்று கேட்பார். "மறந்து போச்சும்மா" என்று சொன்னால் விடமாட்டார், "அன்னைக்குத் தந்த ரூபாய் நோட்டு மட்டும் நினைவிருக்கா?" என்று கேட்பார். 'அப்போ சுவாமிகள் பத்தின விஷயமும் ஞாபகத்தில் இருக்கணுமே" என்பார்.

"அம்மா சொல்கிற அறிவுரைகள், யாரிடமும் சண்டை போடாமல் அமைதியாக இருக்க வேண்டும். தன்னைப்

போலவே பிறரையும் நினைக்க வேண்டும். எப்போதும் சைவ உணவே சாப்பிட்டால் நல்ல குணங்கள் தன்னால் வரும். ஈ, எறும்பு, கொசு என்று எதையும் அடிக்கக் கூடாது, அது பாட்டுக்குப் போகட்டும் என்று விட்டுவிட வேண்டும். சிறு உயிர்களிடம் வலிமையை காட்டக் கூடாது என்றபடியான உபதேசங்கள். புத்தம் புதிய ரூபாய் நோட்டை எங்கே பார்த்தாலும் அம்மாவே நினைவுக்கு வருகிறார்” என்று தொடர்ந்தார் இவர். இவருடன் பிறந்த ஆறு பேருக்கும் சுவாமிகளே வைத்திய நாதன், முத்துவேல், பிரகதீசுவரன், அருணா மகாலக்ஷ்மி, புவனேசுவரி, ஜோதி என்று பெயர் வைத்தார்.

சுவாமிகள் இருந்தபோதே ராமலிங்க முதலியாரின் ஆறு பெண்களுக்கும் திருமணமாகி விட்டது. குடும்ப உறுப்பினர்கள் அத்தனை பேரின் உறவு முறைகள், பெயர் அடங்கிய‘வம்சவிருக்ஷ’ (Family Tree) வரைபடமும் வைத்திருக் கிறார்கள். மகள் பாகீரதி அம்மாளின் கணவர் பத்மநாப முதலியார் சுவாமிகளின் முக்கிய அன்பர்களில் ஒருவர். அவரிடம் “சுவாமிகளுக்கு ஏதாவது செய்ய வேண்டாமா?” என்று அமராவதியம்மாள் கேட்டுக்கொண்டே இருப்பார். எல்லாப் பெண்களும் கல்யாணம் ஆனதும் சுவாமிகளிடம் ஆசி பெற்று வருவார்கள். அருணா கல்யாணம் 1974—ல் நடைபெற்றது. கணவர் பெயர் விஜயகுமாரன். சுவாமிகள் சித்தியடைந்த பிறகும் முக்திக்குள மண்டபத்தின் காவல்காரர்களிடம் விளக்கேற்றி வைப்பதற்காக அருணா பணம் தந்துவிட்டு வருவது வழக்கம்.

பாட்டி கஜாம்பாளிடம் ‘சக்குபாய் மாதிரி, எத்தனை கஷ்டம் வந்தாலும் நீ சமாளிச்சு ஜெயிப்பே’ என்று சொல்வார் சுவாமி.

“ஐம்பது வருஷத்துக்கு அப்புறம் மடத்துக்கு நல்லது நடக்கும். ஒரு மெய்யன்பர் கை கொடுப்பார். பெரியம்மா எல்லாவற்றையும் இருந்து பார்ப்பார்” என்று சுவாமிகளே சொன்னதாகச் சொல்கிறார் அருணா மகாலக்ஷ்மி. கௌசல்யா அம்மாவே அந்தப் பெரியம்மா.



பெங்களூர் ராமலிங்க முதலியார் ஹோஸ்பேட்டில் ‘இந்தியா ஷுகர் & ரிஃபைனரி’ என்ற பெயரில் ஒரு சர்க்கரை ஆலையை நடத்தி வந்தார். கரும்புச்சாறைச் சர்க்கரையாக மாற்றுகிற இயந்திரத்தில் ஏதோ கோளாறு ஏற்பட்டது. என்ஜினியர்கள் எவ்வளவோ முயன்றும் சரி செய்ய முடியவில்லை. கரும்புப் பாகு, சர்க்கரைத் துகள்களாக இல்லாமல் ஈர மாவுபோல வெளிவந்திருக் கிறது. சுவாமிகளிடம் இதற்குப் பரிகாரம் கேட்டார் முதலியார். விபூதியை எடுத்து இயந்திரத்தின் மீது பூசினார் சுவாமிகள். மனிதனுக்கு நோய் குணமாகிற மாதிரி, சர்க்கரை ஆலையின் இயந்திரமும் சரியாகி விட்டது. இப்போது ஆலை கைமாறி விட்டாலும் சுவாமிகளின் கால்பட்ட இடம் என்பதால் இந்த சர்க்கரை ஆலைக்குப் போக நினைத்து ஒரு நீண்ட பயணம் மேற் கொண்டேன். பெங்களூரிலிருந்து அனந்தபூர் வழியாக செள்ளக்குருக்கி சென்று, எரிதாதா சுவாமிகள் அதிஷ் டானத்தில் வழிபட்டு பெல்லாரியிலிருந்து மிக மோசமான சாலையில் பயணம் செய்து அந்தி மயங்கும் நேரம் ஹோஸ்பெட்டில் உள்ள சர்க்கரை ஆலைக்குச் சென்றேன். அப்போது பகல் ஷிஃப்ட் முடிந்து விட்டது. அலுவலக ஊழியர்களும் சென்று விட்டார்கள், உள்ளே போக முடியவில்லை. அலுவலக முகப்பறையில் ராமலிங்க முதலியாரின் பெரிய படம் மாட்டப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை.

## முக்காலமும் உணர்ந்த ஞானி

பெங்களூர் ராமலிங்க முதலியாரின் மகள் கௌசல்யா அம்மையாரிடம் நான் கேட்டுத் தெரிந்துகொண்ட ஒரு சம்பவம் மிகவும் விசித்திரமானது. கடல்கடந்து செல்லக் கூடாது என்ற நியதியை மீறி. மைசூர் ராஜகுடும்பத் திலிருந்து ஆறு பிரமுகர்கள் நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பு வெளிநாடு சென்றார்கள். ஐந்து பேர் நாடு திரும்பு வார்கள் என்றார் சுவாமிகள். தகவல் கலக்கம் தந்தாலும்

ஆறு பேரும் வெளிநாடு சென்று பத்திரமாகத் திரும்பி விட்டார்கள். பம்பாய் வந்து சேர்ந்ததும் சுவாமிகளின் வார்த்தை பொய்த்துப்போனது என்று மகிழ்ந்தார்கள். ஆனால் அன்று இரவு ஓட்டல் நடன நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது திரை மறைவில் இருந்த நபர் இந்த ஆறு பேரில் ஒருவரைக் குத்திக் கொன்று விட்டார். ஆக ஐந்து பேர்களே ஊர் திரும்பினார்கள்.

பின்னர் அந்த சமஸ்தானத்து ராணி சுவாமிகளை நமஸ்கரித்தபோது "உன்னோடு ராணி பட்டம் சரி. அப்புறம் தம்பட்டம்தான்" என்றார். அடுத்த நான்கு, ஐந்து வருடங்களில் நாடு சுதந்திரம் பெற்றபோது ராஜா, ராணிகள் தம் ராஜ அந்தஸ்த்தை இழந்தார்கள்.

சுவாமிகளுக்கு ஆப்தமான குடும்பத்தைச் சேர்ந்த பெங்களூரின் மிகப் பெரிய செல்வந்தர்களில் ஒருவர் 1942—ல் தன் சொத்துக்களுக்கு ஒரு ட்ரஸ்ட் அமைத்தார். சொத்தின் மதிப்பு ரூ. 400 கோடி. அப்போது தி. நகரில் ஒரு கிரவுண்ட் ரூ. 2000. இப்போது சுமார் 10 கோடி. அப்படியானால் சொத்தின் இன்றைய மதிப்பைக் கணக்கிடுங்கள். ஒருநாள் அந்த செல்வந்தரின் மூத்த மகன் விஸ்வநாதன் நமஸ்கரித்தபோது "ஓடு எடுக்க வேண்டிய காலம் வந்துடுச்சே, பாபு" என்று சுவாமிகள் சொன்னார். மகனுக்குப் புரியவில்லை. பக்கத்திலிருந்தவர்களுக்கு அப்படி ஆகுமா, இவ்வளவு பெரிய பணக்காரர்கள் எப்படி ஏழையாவார்கள், சுவாமிகள் ஏதோ சொல்கிறார் போகட்டும் என்று அந்த வார்த்தைகளை ஒதுக்கி விட்டார்கள். சுவாமியின் வாக்கு பொய்யாகுமா?

சொத்து சரியாக நிர்வகிக்கப்படவில்லை. வாரிசுகள் வயதுக்கு வந்ததும் டிரஸ்டிகள் சொத்துக்களை அவர்களிடம் ஒப்படைக்கவில்லை. இது சம்பந்தமான தாவா பிரிட்டிஷ் ஆட்சியில் ப்ரிவி கவுன்சில் வரை சென்றது. நாடு சுதந்திரம் பெற்றதும் இங்கே மாற்றப்பட்ட வழக்கு. எழுபது வருஷங்களாக இன்றும் நடந்து வருகிறது.



## விதிவச நாடகம் நடந்த கதை!

சுவாமிகள் முக்காலமும் உணர்ந்தவர் என்பதைப் பல சம்பவங்கள் நிரூபித்தாலும் பிரபல நடிகர்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியை அன்பர்கள் ஞாபகம் வைத்துக் கொண்டு சொன்னார்கள். சென்னை பிரம்புக்கடைச் சாலையில் (ரட்டன் பஜார்) இருந்த 'லால் சந்த் செல்லாராம்' என்ற பிரபலமான கடையை 'கிரீன் பாலஸ்' என்பார்கள். அதன் தொடக்க விழாவுக்குப் பாடகச்சேரி சுவாமிகளையும் திரைப்படப் பிரபலங்களான தியாகராஜ பாகவதரையும் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனையும் அழைத்திருந்தார்கள். சுவாமிகளிடம் நடிகர்களை "இவர் தியாகராஜ பாகவதர், இவர் என். எஸ். கிருஷ்ணன்..." என்று அறிமுகம் செய்து வைத்தார் செல்லாராம்.

சுவாமிகள் தியாகராஜ பாகவதரைக் கேட்கிறார். "எத்தினி படம் நடிச்சிருக்கிறீங்க?" அடக்கமாக "ஏழு" என்றார் பாகவதர். 'விதிவசம்'னு ஒரு நாடகம் வரப்போகுது. அதுல ரெண்டுபேரும் எப்படி நடிக்கப் போறீங்கன்னு பார்க்கலாம்" என்று சொல்லி—யிருக்கிறார் சுவாமிகள். அவர்களுக்கு என்னவென்று புரியவில்லை. ஆனால் ஏதோ குறு குறுப்பாக இருந்தது. "சாமி என்ன சொல்றீங்கன்னு புரியவில்லையே" விதிவசம்னு நாடகமா? நாங்க என்ன பண்ணனும்?" என்று கேட்டார் பாகவதர்.

"திருவொற்றியூர்லே கருங்கல்லாலே மடத்துக்குக் கட்டடம் கட்டிக்கிட்டிருக்கோம். ரெண்டு பாறைத்துண்டு வாங்கிக் குடுத்துடு" என்கிறார் சுவாமிகள். பாகவதருக்கு தயக்கம். "ரெண்டு முடியாது சாமி, ஒரு கல் அனுப்ப ஏற்பாடு செய்யறேன்" என்றார் பாகவதர். "உட்டுடு, கல் ஒண்ணும் தர வேண்டாம்" என்று சொல்லிவிட்டார்.

அதன்பிறகு சுவாமிகள் சொன்ன 'விதிவசம்' நாடகம் அரங்கேறியது! பிரபலமானவர்களை பரபரப்புச் செய்திகள் மூலம் வம்புக்கிழுத்துக் கொண்டிருந்த

பத்திரிகையாளர் லக்ஷ்மிகாந்தன் கொலை செய்யப் பட்டார். அந்த வழக்கில் முக்கிய குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்ட தியாகராஜ பாகவதர், என்.எஸ்.கிருஷ்ணன் இருவரும் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித் தார்கள். சுவாமிகள் சொன்ன 'விதிவச நாடகம்' என்பது அப்போது நினைவுக்கு வந்தது. பாகவதர் ஜாமீன் பெற்று வெளியில் வந்ததும் முதல் காரியமாகக் கும்ப கோணத்துக்கு வந்தார். சுவாமிகளை சந்திக்க வேண்டும் என்கிற அவசரம் முதலில் செல்லாராமிடம் விசாரித்து, திருவொற்றியூரில் தேடி, அங்கே இல்லை என்றதும் கும்பகோணம் முக்திக்குள மண்டபத்துக்கு வந்தார். சுவாமிகளிடம் தன் நிலையைக் கண்ணீர் மல்கச் சொன்னார். சுவாமிகள் சொன்னார்: "என்னாலே இப்போ ஒண்ணும் பண்ண முடியாது. கோடீசுவரர் கிட்டேப் போய் பிரார்த்தனை பண்ணிக்கோ."

கும்பகோணத்தில் காவிரிக் கரையில் உள்ள கொட்டையூர் என்ற கிராமத்தில் இருக்கிறது கோடீஸ் வரர் கோயில். அங்கே அம்மனுக்கு மிளகாய் திருஷ்டி சுற்றிக் காவிரியில் போடுகிற வழக்கம் உண்டாம். அந்த சந்நிதியில் அமர்ந்து மனமுருகப் பாடினார் பாகவதர், வழக்கு நடந்தது, தண்டனை கிடைத்தது; அப்புறம் பிரபல வக்கீல் எத்திராஜ் முதலியாரை வைத்து வாதாடி னார்கள். ப்ரிவி கவுன்சில் வரை போய் வாதாடி என்.எஸ். கிருஷ்ணனும் பாகவதரும் ஒரு வழியாக விடுதலை ஆனது தனிக்கதை. விதியின் பயனை அனுபவித்தே தீர வேண்டும் என்பதைத்தான் 'விதிவச நாடகம்' என்று முன்கூட்டியே சொன்னார் சுவாமிகள்.

இந்தக் கொட்டையூரைச் சேர்ந்த தாயுமானவன் என்ற கொன்னக்கோல் கலைஞர் பாடகச்சேரி ராமலிங்க சுவாமி களின் அருளாசியே தன்னை இசைக் கலைஞராக்கியது என்கிறார். அண்மையில் அமெரிக்காவின் க்ளீவ்லாந்து நகரில் நடைபெற்ற இந்திய இசை விழாவில் கௌரவிக்கப் பட்டபோதும் இதையே சொல்லி மகிழ்ந்திருக்கிறார். பாடகச்சேரி சுவாமிகள் சில சமயம் மேலக்காவேரி புதுப் பாலம் அருகே ஒரு அன்பர் நடத்திவந்த பெப்பர்மின்ட் தயாரிப்புக் கூடத்தில் தங்குவார். வெளியே வரும்போது அந்த மிட்டாய் கம்பெனி உரிமையாளர் கை நிறைய மிட்டாய்களை எடுத்துக்கொண்டு வருவார். அவற்றை அப்போது குழந்தைகளுக்கு சுவாமிகள் தருவது வழக்கம். தாயுமானவனின் பூர்வீகமான கொட்டையூர் அங்கிருந்து ஒன்றரை கிலோமீட்டர். பால்ய காலத்தில் அப்படி சுவாமி களிடமிருந்து மிட்டாய் வாங்கித் தின்ற சிறுவர்களில் தானும் ஒருவன் என்று பெருமைப்படுகிறார் தாயுமானவன். எத்தனை சிறுவர்களை இவர் இப்படி ஆசிர்வதித்தாரோ?



## 'ஒரு கொலைக்கு இரு கொலை'

சுவாமிகளுக்கு முக்காலமும் தெரியும் என்பதற்கு உதாரணமாக இன்னொரு நிகழ்ச்சியையும் சொல்லலாம். வெங்காயக் கடை வரதராஜுலு நாயுடு சொன்னதாக தனபால் முதலியார் எழுதியிருக்கும் ஒரு சம்பவம் சுவாமிகளின் ஞானதிருஷ்டியை நன்றாக உணர்த்துகிறது.

வரதராஜுலு நாயுடு என்ற அன்பர் கொத்தவால் சாவடியில் சுவாமிகள் தரிசனம் கொடுத்தபோது தன் உடல் உபாதைக்கு நிவாரணம் கேட்டிருக்கிறார். அவரைப் பார்த்ததும் 'ஒரு கொலைக்கு ரெண்டு கொலை செய்த சண்டாளன்' என்று சுவாமிகள் சொன்னதும் நாயுடு திடுக்கிட்டுப் போனார்.

ஒரு கொலை இரு கொலை சம்பவம் என்ன? வரதராஜுலு நாயுடு கொலைகாரரா? நாயுடுவுக்கு ஒன்றும் புரியவில்லை. யோசித்துப் பார்த்ததும் நினைவுக்கு வந்தது. எப்போதோ தன் கடையில் நடந்த அந்த சம்பவம் சுவாமிகளுக்கு எப்படித் தெரிந்தது என்று திகைத்துப்

போனார். அந்த சம்பவம்: ஒரு முறை வரதராஜுலு நாயுடு தன் கடையில் நுழைந்தபோது ஒரு பெண்மணி காலை நீட்டியபடி வெங்காயங்களை சுத்தம் செய்து கொண்டிருந்தாள். 'என்ன மரியாதை இல்லாமல்?' என்று கேட்டு அந்தப் பெண்மணியை ஓங்கி உதைத்தார் நாயுடு. அந்த கர்ப்பிணிப் பெண் சுருண்டு புரண்டாள். அத்துடன் அவளது கரு சிதைந்தது. அவளும் அதிர்ச்சியில் இறந்து போனாள். அவளைச் சேர்ந்தவர்களை சமாளிக்கப் படாத பாடுபட்டார் நாயுடு. பிறகு எல்லாம் சரியாகிவிட்டது. இந்த சம்பவத்தைத்தான் சுவாமிகள் இரு கொலைகள் என்று குறிப்பிடுகிறார் என்பதைப் புரிந்து கொண்டார். வெட்கத்துடன் தலைகுனிந்து நின்ற நாயுடுவைப் பார்த்து சுவாமிகள் "வரும் அமாவாசையில் சமுத்திர ஸ்நானம் செய்து பசுவை மூன்று முறை பிரதக்ஷணம் செய்து, அதற்கு அகத்திக் கீரை கொடுத்துவிட்டு நான் சொல்லும் மூலிகையைச் சாப்பிட்டால் ஆண்டவர் உன் உபாதையை நிவர்த்தி செய்வார்," என்றார்.

இந்தச் சம்பவம் பற்றி யோசித்துப் பாருங்கள், சில உண்மைகள் புலப்படும். நாயுடு கர்ப்பிணிப் பெண்ணை உதைத்த சம்பவம் பற்றி வெகு சிலருக்கே தெரியும். அவர்கள் சுவாமிகளிடம் சொல்லியிருக்கும் பிரமேயம் இல்லை. ஆனால் நாயுடுவைப் பார்த்த மாத்திரத்தில் சுவாமிகள் 'ஒரு கொலைக்கு இரு கொலை' என்று குறிப்பிட்டிருக்கிறார். அதுதான் ஞான திருஷ்டி.

யாரைக் கொலைகாரனே என்று அழைத்தாரோ அவருக்கு சுவாமிகள் மூலிகை நிவாரணமும் சொல்லி யிருக்கிறார். தான் வைத்தியர் என்று அவர் சொல்லிக் கொள்ளவில்லை. 'ஆண்டவர் நிவர்த்தி செய்வார்' என்றுதான் சொன்னார். இதில் ஒரு முக்கிய சங்கதி இருக்கிறது. வரதராஜுலு நாயுடு அடுத்து செய்தது என்ன என்பதைத் தெரிந்து கொண்டால் அதையும்



புரிந்து கொள்ளலாம். அதாவது சுவாமிகள் சொன்னபடி 'கோ' பிரதக்ஷணம் செய்து, மூலிகையைச் சாப்பிட்டு குணம் அடைந்தார் நாயுடு. தன் நோய் குணமானது என்ற திருப்தி இருந்திருக்கக் கூடாதோ? சில வருஷங் களுக்குப் பிறகு இவரது நண்பர் ஒருவருக்கு இதே போன்ற நோய் வந்தது. அவர் இவரை அணுக, இவர் சுவாமிகள் தனக்குச் சொன்ன மூலிகையை மூலிகைக் காரியிடம் கேட்டு வாங்கி நண்பரிடம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார். அவரோ அதைச் சாப்பிட்டால் கழிச்சல் உண்டாகுமே என்று கவலைப்பட இவரோ பிடிவாதமாக அவரைச் சாப்பிடச் சொன்னார். நண்பருக்கு வியாதி குணமாயிற்று. ஆனால் நாயுடுக்கு அதே வியாதி மறுபடியும் வந்தது. வேறு வழியில்லை. சுவாமிகளிடமே போனார்.

கொத்தவால்சாவடியில் தங்கியிருந்த சுவாமிகளைச் சந்தித்துத் தன் குறையை நாயுடு சொல்ல, "நீ ஊருக் கெல்லாம் வைத்தியம் செய்யும்போது என் வைத்தியம் உனக்குச் செல்லுமா?" என்று கேட்டார் சுவாமிகள். அவர் வெகு யதார்த்தமாகத்தான் இந்தக் கேள்வியைக் கேட்டாரென்றாலும் நாயுடுவுக்கு பொட்டில் அறைந்தது போலிருந்தது. நாயுடு தன் பிழையைப் பொறுத்தருள வேண்டினார். சுவாமிகளோ அடுத்த முறை பார்க்கலாம் என்று சொல்லிவிட்டார். சில மாதங்களுக்குப் பிறகு நாயுடு சுவாமிகளைச் சந்தித்து நிவாரணம் கேட்டார். அப்போது சுவாமிகள் வேறு ஒரு மூலிகையைக் கொடுத்து சாப்பிடச் சொன்னார். வியாதி சொஸ்தமாயிற்று.

இந்த நிகழ்ச்சியின் மூலம் மூன்று முக்கிய விஷயங்கள் தெரிய வருகின்றன. ஒன்று வியாதி ஒரே மாதிரி என்றாலும் ஒருவருக்குத் தரப்படும் மருந்து மற்றவருக்கு ஒத்துப் போக வேண்டுமென்பதில்லை. இன்னொன்று தனக்குத்தானே வைத்தியம் செய்து கொள்ளக் கூடாது. மூன்று, ஒரு நோயாளி இன்னொரு நோயாளிக்கு

வைத்தியனாக மாட்டான். இதை வரதராஜுலு நாயுடு புரிந்து கொள்வதற்காகத்தான் சுவாமிகள் கால அவகாசம் கொடுத்தார். சில பாடங்களை கால அவகாசம் எடுத்துக் கொண்டு வலியுடன்தான் கற்க வேண்டியிருக்கிறது.

ஒருவருக்கு வாங்கி வைத்த பேதி மாத்திரை மிச்சம் இருக்கிறது என்பதால் அதை வேறு ஒருவருக்குக் தருவது சரியில்லை. பெரும்பாலும் வியாதி குணமாகலாம். ஆனால் ஒவ்வொருவர் உடற்கூறும் வியாதிகளுக்கான காரணங் களும் வெவ்வேறு. எனவே ஒரே மருந்து அதே வியாதி உள்ள மற்றவருக்கு விபரீதமாகி விடலாம். இதைத்தான் நவீன மருத்துவர்களும் சொல்கிறார்கள்.

## நாட்டியக்காரி

சுவாமிகளைப் புகைப்படம் எடுத்துள்ள தனபால் முதலியார் அவர்கள் எழுதியுள்ள டைரிக்குறிப்பு பாடகச் சேரி சுவாமிகளைப் பற்றித் தெரிந்து கொள்ள உதவும் ஆவணமாகிறது. அதில் ஒரு சம்பவம் இடம் பெற்றுள்ளது. பாடம் கற்பிப்பதற்காக சுவாமிகள் வியாதியை வர வழைத்த ஒரு சம்பவம் அதில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

நீடாமங்கலம் அருகே உள்ள ஆலங்குடி கோயில் கும்பாபிஷேகம் சம்பந்தமான ஏற்பாடுகளைச் செய்து வந்த தம்பு முதலியாரும் வேலாயுத முதலியாரும் மேளக் காரனையும் நாட்டியக்காரியையும் ஏற்பாடு செய்வதற்கு சுவாமிகளின் உத்தரவைக் கேட்டார்கள். சுவாமிகளோ ஆண்டவன் அனுமதியில்லை என்று சொல்லிவிட்டார். நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தவர்கள் சுவாமிகள் அப்படித் தான் சொல்வார். அதைப் பொருட்படுத்த வேண்டாம் என்று நினைத்து மேளக்காரனையும் நடனக்காரியையும் ஏற்பாடு செய்து விட்டார்கள். கும்பாபிஷேகம் புனிதமான நிகழ்வு. அதற்கு இப்படி ஆட்டபாட்டங்கள் தேவையில்லை என்பது சுவாமிகளின் திருவுள்ளம். ஆனால் அதை பக்தர்கள் மீறினார்கள். ஆட்டபாட்ட நிகழ்ச்சிகளின் போது மேளம் கிழிந்தது. நாட்டியக்காரிக்கு வயிற்றுப் போக்கு வந்தது. எந்த மருந்தாலும் நிற்கவில்லை. சுவாமிகள் வார்த்தையை மீறுவது தெய்வக்குற்றம் என்று உணர்ந்த அன்பர்கள் சுவாமிகளை அணுக, அவர் அன்பர்களை மன்னித்து விபூதி பிரசாதம் தந்து நாட்டியக்காரியை குணப்படுத்தினார்.



ஒரு சமயம் திருப்பனந்தாள் ஞானசுந்தரம் அம்மையார் காசி க்ஷேத்திரத்துக்குப் போவது மீண்டும் ஊர் திரும்புவதில்லை என்று முடிவு செய்தார். காரணம் பாட்டி என்று மழலையுடன் அழைக்க பேரன் இல்லை. மகன் கல்யாணசுந்தரத்துக்குப் பிறந்த ஐந்து குழந்தை களும் இறந்து விட்டன. அந்தச் சமயத்தில் சேந்தமங்கலம் ஸ்ரீ துரியானந்த சுவாமிகள் அவரைப் பார்க்க வந்தார். அம்மையார் சுவாமிகளிடம் தன் வேதனையைச் சொல்லி அழுதார். “கவலைப்படாதே, பாடகச்சேரி ராமலிங்கம் வந்து யோசனை சொல்வான். அதன்படி செய்!” என்று அருளிச் சென்றார் சுவாமிகள். அப்போது பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள் கும்பகோணம் நாகேஸ்வர ஸ்வாமி கோயிலுக்குக் கும்பாபிஷேகம் செய்ததையும் வேறு பல சித்திகளைப் பற்றியும் சொன்னார்.

அடுத்த சில நாட்களில் எதேச்சையாக திருப்பனந்தாள் சென்ற பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள் ஞானசுந்தரம் அம்மையார் வீட்டுக்கு வந்தார். சுவாமிகளைக் கண்ட அம்மையார் ஸ்ரீ துரியானந்த சுவாமிகள் சொல்லி யிருந்தபடித் தனது குறையை விளக்கினார். ராமலிங்க சுவாமிகள் சிறிது நேரம் தியானம் செய்தார். பிறகு, “சின்னப் பாப்பா இங்கே வா!” என்று அம்மையாரின் மருமகளை அழைத்தார். அவள் சுவாமிகளை வணங்கி நின்றாள். அவளுக்குத் திருநீறு கொடுத்து வாயில் போட்டுக் கொள்ளச் சொன்ன சுவாமிகள், “பாப்பா, ஒவ்வொரு விசாக நட்சத்திரத்தன்றும்,

சூரிய உதயத்துக்கு முன் நீராடி, சென்று சுடுகாட்டுக்கு அருகிலுள்ள சுமைதாங்கிக் கல் மீது நவதானியங்களை வைத்து விட்டு வா. அம்பாள் அருள்வாள்” என்று கூறினார்.

சின்ன பாப்பா மறுநாளே இப்படிச் செய்தாள். அந்த மாதமே கருத்தரித்தாள். பத்தாவது மாதத்திலும் விசாகத்தன்று சின்னப் பாப்பா வழக்கம் போல் நவ தானிய மூட்டையை சுமைதாங்கி மீது வைத்தாள். அன்றிரவு அவளுக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன. மறுநாளே ஞானசுந்தரம் அம்மையாரும், கல்யாணசுந்தரமும் பூ, பழம், கல்கண்டு ஆகியற்றுடன் கும்பகோணம் சென்று ஸ்ரீ பாடகச்சேரி சுவாமிகளை தரிசித்தனர். காணிக்கைப் பொருட்களை அவர் திருமுன் வைத்து வணங்கினர்.

“என்ன ரெட்டையா?” — சுவாமி கேட்டார்.

“ஆமாம் சுவாமி! எல்லாம் தங்கள் கிருபை!”

“ஞானம்… அம்பிகை ஒரு குழந்தைக்குத்தான் உத்தரவு கொடுத்தாள். அதனால மனசை தைரியப்படுத்திக்கோ!”

இதைக் கேட்டு அம்மையாரும், கல்யாணசுந்தரமும் வருத்தத்துடன் வீடு திரும்பினர். எட்டு வயது இரட்டையர்களில் ஒருவரான கிரிதர கோபாலன் இறந்து போனான்.

உயிரோடிருந்தவனுக்குத் தன் குருவான துரியானந்த சுவாமிகளின் பெயரையே சூட்டிய ஞானசுந்தரம் அம்மையார் தன் பேரனை ‘ராஜா’ அல்லது ‘சேப்பு’ என்றே அழைப்பது அவரது வழக்கம்.

பின்னர் ஒருமுறை நான் அந்த ராஜா என்ற பேரனை ஒரு முதியவராகச் சந்தித்தபோது அவர் சொன்னார்: “அந்தப் பேரன் அடியேன்தான்! நல்வினைப் பயனால் ‘வாகீச கலாநிதி’ கி.வா.ஜ.வின் மாணவன் ஆனேன். அவருக்கும் ஸ்ரீ துரியானந்த சுவாமிகள்தான் குரு. தெய்வத்தின் திருவருட் செயல் என்பது இதுதான்!”



## சொன்னது சொன்னபடியே

புகழ்பெற்ற மிருதங்கம் மற்றும் கஞ்சிரா வித்வான் புதுக்கோட்டை தக்ஷிணாமூர்த்தி பிள்ளை பாடகச்சேரி சுவாமிகளின் அருளைப் பரிபூரணமாகப் பெற்றவர். ஞானிகள் சங்கமத்தில் நாட்டம் கொண்ட தக்ஷிணா மூர்த்தி பிள்ளை ஒரு சமயம் திருச்சியில் சுவாமிகளை தரிசித்திருக்கிறார். அப்போது ‘தாது வருடம் நினைவி ருக்கட்டும்’ என்று சொன்னார் சுவாமிகள். தாமும் ஒரு சித்தராகவே பக்குவம் பெற்றுவிட்ட புதுக்கோட்டை தக்ஷிணாமூர்த்தி பிள்ளைக்கு சுவாமிகளின் குறிப்பு புரிந்திருக்கிறது. புன்னகையோடு கைகூப்பி சுவாமிகளை வணங்கி விடைபெற்றுக் கொண்டிருக்கிறார். தாது வருஷம் (1936) பற்றி சுவாமிகள் குறிப்பிட்டது அவர் முக்திக்குள மண்டபத்தில் வசித்த காலகட்டமாக இருக்கலாம். பிறகு சந்தித்தபோதெல்லாம் சுவாமிகள் ‘தாது’ வருஷத்தை நினைவூட்டிக் கொண்டிருந்திருக்கிறார்.

தக்ஷிணாமூர்த்தி பிள்ளை தன் சொந்த ஊரான புதுக் கோட்டையில் ஒரு முருகன் ஆலயத்தைக் கட்டியபிறகு கச்சேரிகளை நிறுத்திவிட்டு ஆலயத்திலேயே தியானம் செய்து வந்தார். அப்போது மௌன விரதம் இருப்பார். ஒரு நாள் பாடகச்சேரி சுவாமிகள் கரிவலம்வந்தநல்லூர் பொன்னையா சுவாமிகளுடன் புதுக்கோட்டைக்கு வந்து ‘ஐயா’வைச் சந்தித்தார். தக்ஷிணாமூர்த்தி பிள்ளையை ‘ஐயா’ என்றே சுவாமிகள் குறிப்பிடுவது வழக்கம். சுவாமிகளைப் பார்த்ததும் ‘ஐயா’ புன்னகையுடன் வரவேற்றார். தாது வருஷம் வைகாசி மாதம் 13–ம் தேதி நினைவிருக்கிறதா? என்று சுவாமிகள் கேட்டார்.

அந்த தினத்தில் குடும்பத்தாரை அருகே வரச்சொல்லி “வைகாசி மாசம் பதின்மூன்றாம் தேதி சாயந்திரம் ஆறரை மணி. என்னோட நேரம் குறிச்சுக்கோங்க” என்று சொல்லி யிருக்கிறார். முருகப்பெருமானை வணங்கிவிட்டு, தன் கச்சேரிகள் பதிவான கிராமபோன் தட்டுக்களைச்

சுழல விட்டுக் கொஞ்ச நேரம் கேட்டிருக்கிறார். சாயங்காலம் ஐந்தரை மணிவாக்கில் நீராடிவிட்டு அனுஷ்டானங்களையும் செய்து முடித்துவிட்டுத் தரையில் அமர்ந்து "இன்னும் அஞ்சு நிமிஷம்தான்" என்று ஐயா சொன்னபோது மாலை ஆறு மணி இருபத்தைந்து நிமிடம். "முருகா! ஆண்டவனே!" என்று நேரம்பிசகாமல் இறைவன் அழைத்தபடி அமைதியடைந்து விட்டார்.

ஏறக்குறைய இதே சமயத்தில் புதுக்கோட்டைக்கு யதேச்சையாக வந்த பாடகச்சேரி சுவாமிகள் ஐயாவின் சமாதிக்கான இடத்தைக் குறிப்பிட்டு அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளையும் கவனித்திருக்கிறார். அப்போது மழை பெய்ததாகவும் அதில் பன்னீர் மணம் கமழ்ந்ததாகவும் சொல்கிறார்கள்.

தக்ஷிணாமூர்த்தி பிள்ளையின் துணைவியார் பழனி அம்மாள் முறைப்படி ஈமக் கிரியைகள் செய்வது பற்றிக் கேட்டதற்கு சுவாமிகள் சொன்னார். "ஐயா இன்னும் மரணம் அடையவில்லை. ஜீவனை அடக்கி வைத்திருக் கிறார். உயிர் பிரியவில்லை. அது இன்னும் ஒரு வருட காலம் இங்கேதான் சுற்றி வந்து கொண்டிருக்கும். கிரியைகள் எதுவும் செய்ய வேண்டாம். நீங்களும் திருமாங்கல்யத்தைக் களைய வேண்டாம்," என்று சொன்னார். சுவாமிகள் சொன்னபடியே எல்லாம் நடந்தன. அடுத்த எட்டாம் மாதமே அம்மையாரும் காலமானார்கள்.

## மாய வித்தை

ஒரே நேரத்தில் பல இடங்களுக்கும் போய் வரக் கூடிய சித்தர் பாடகச்சேரி சுவாமிகள். பயணங்களைத் திட்டமிட்டதில்லை. கும்பகோணம் சாரங்கபாணி மடத்துத் தெருவில் நடேச ஸ்தபதியார் வீட்டில் இருந்த போது சுவாமிகள் ஒரு நாள் உள் அறைக்குள் சென்று, தான் சொல்லும் வரை கதவைத் திறக்கக் கூடாது என்று



சொல்லிவிட்டு அறையை வெளிப்புறமாகத் தாளிடச் செய்தார். சில மணி நேரம் கழித்து சுவாமிகள் அழைத்ததும் ஸ்தபதியார் கதவைத் திறக்க கையில் சில நீதிமன்ற ஆவணங்களுடன் வெளியே வந்தார். தாளிடப்பட்ட அறைக்குள் நுழைந்த அவர் அதே நேரத்தில் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஆஜராகியிருந்தார் என்பது மறுநாள் தான் புரிந்தது. இதைச் சொன்னவர் நடேச ஸ்தபதியின் பேரன் செல்வ ஸ்தபதி.

அதிக மருத்துவ வசதிகள் இல்லாத காலத்தில் புகைப் படக் கலைஞர் தனபால் முதலியாரின் மனைவி வட சென்னை ரெய்னீ மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். அப்போது அந்த கர்ப்பிணிப் பெண்ணின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. பிரசவ வார்டின் ஆயா பயந்து வெளியே போய்விட்டார். பக்கத்தில் யாருமில்லை. அந்த அம்மையார் சுவாமிகளை ஒரு முறைதான் பார்த் திருக்கிறார். பிரசவ வேதனையில் துடித்துக் கொண்டிருந்த போது படுக்கை எதிரில் பச்சை நிற சால்வையைப் போர்த்திய ஒருவர் வருவது தெரிந்திருக்கிறது. அவரைப் பார்த்து விட்டு 'ராமலிங்கம்' என்று உரத்த குரலில் கத்தி யிருக்கிறார். வந்தது சுவாமிகள்தான் என்பது அவரது ஐதீகம். எந்தவிதமான சிக்கலும் இல்லாமல் சுகப்பிரசவ மாகக் குழந்தை பிறந்து விட்டது. அதனால் தனபால் முதலியார் தன் இரண்டாவது பிள்ளைக்கு ராமலிங்கம் என்றே பெயர் வைத்தார்.

## தண்டித்த ரயில்

சுவாமிகளின் பெருமைகளைப் பற்றிக் கேள்விப்பட்ட சென்னையைச் சேர்ந்த வேலாயுத முதலியார் சுவாமி களைத் தன் இல்லத்துக்கு அழைத்து மரியாதை செய்ய எண்ணினார். இதற்காகத் தன் நண்பர்கள் சிலரைக் கும்பகோணத்துக்கு அனுப்பி வைத்தார். சென்னை வரும் நாளில் எழும்பூர் ரெயில் நிலைய வாசலில் அவரை வரவேற்பதற்காக முதலியார் கோச் வண்டி, வாத்யங்கள் சகிதம் காத்துக் கொண்டிருந்தார்.

சுவாமிகளுக்கும் துணையாக வந்தவர்களுக்கும் டிக்கெட் கிடைக்கவில்லை. எப்படியாவது ரெயிலில் ஏறிவிட்டுப் பரிசோதகரிடம் கூடுதல் கட்டணம் செலுத்த முடிவுசெய்து கும்பகோணத்தில் ரயில் ஏறிவிட்டார்கள். இரவு நேர வண்டி என்பதால் வழியில் பரிசோதகர்கள் வரவில்லை. அப்போது சுவாமிகள் ‘நாளைய தினம் காராக்கிரகம் (சிறை) உண்டு’ என்று யாரிடமோ சொல்லி யிருக்கிறார். சுவாமிகள் இப்படிச் சொன்னதன் பொருள் அப்போது எவருக்கும் விளங்கவில்லை. அவரிடம் அது பற்றிக் கேட்க தயங்கினார்கள்.

காலையில் எழும்பூர் வந்ததும் சுவாமிகளையும் குழு வினரையும் அழைத்துவந்த பிரமுகர்கள் ரயில் நிலைய அதிகாரியைச் சந்தித்து அவசரப் பயண நிலைமை பற்றிச் சொல்லி கூடுதல் கட்டணத்தை வாங்கிக்கொண்டு சுவாமிகளையும் அன்பர்களையும் வெளியேசெல்ல அனுமதிக்குமாறு கேட்டார். அதிகாரி, சுவாமிகளையும் மற்ற பயணிகளையும் பக்கத்திலிருந்த ஒரு அறையில் உட்காரச் சொல்லிவிட்டு வேறு அலுவலைப் பார்க்கப் போனார். அங்கே அடைபட்ட சுவாமிகள் கொஞ் சமும் கவலைப்படாமல் “நேற்றே சொன்னேனே, காராக்கிரகம் என்று; இதுதான் அது” என்றார். இதற்குள் சுவாமியை வரவேற்க வந்த வேலாயுத முதலியார், தம்பு முதலியார் ஆகியோர் சுவாமிகளைக் காணோமே என்று ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து விட்டார்கள். சுவாமிகளைப் பார்த்து காலில் விழுந்து வணங்கியிருக்கிறார்கள். அதைக்கண்டு திகைத்த ரயில்வே அதிகாரிகள் சுவாமிகளை வணங்கி பிரசாதம் தர வேண்டினார்கள்.

“கூடுதல் கட்டணம் வாங்கிக்கொண்டு எல்லோரையும் விட்டுவிடுங்கள்’ என்று பிரமுகர்கள் கேட்டுக்கொண்ட படிப் பணம் பெற்றுக்கொண்டு அனைவரும் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். பின்தொடர்ந்து வந்த அதிகாரிகள் தங்களுக்கு விபூதி தரும்படிக் கேட்டுக் கொண்டும் சுவாமிகள் அவர்களைத் தான் தங்கியிருக்கும் இடத்துக்கு வருமாறு சொல்லிவிட்டார். ‘காராக்கிரகத்’தில் விபூதி தரக்கூடாது என்று நினைத்தாரோ என்னவோ.



சுவாமிகள் ரயில் நிலையத்தை விட்டு வந்ததும் பக்தர்கள் மேளதாளங்களுடன் வரவேற்றார்கள். அவர்கள் கொண்டு வந்திருந்த கோச் வண்டியில் ஏறாமல் எழும்பூர் ரயில் நிலையத்திலிருந்து யானைக் கவுனியிலுள்ள வேதாசல முதலியார் இல்லம்வரை சுவாமிகள் நடந்தே சென்றார். அங்கே ரெயில்வே அதிகாரிகளுக்கு விபூதிப் பிரசாதம் தந்து ஆசிர்வதித்து அனுப்பினார்.

## புறப்படாத ரயில்!

நாகூர் திருவிழா சமயத்தில் நீடாமங்கலம் புகை வண்டி நிலையத்தில் உள்ள ராஜகோபால ஐயர் காபிக் கடையில் சுவாமிகள் அமர்ந்திருந்தார்கள். ரயில் நின்றது. துறவிகள் ஏறினார்கள். டிக்கெட் பரிசோதகர் டிக்கெட் இல்லாதவர்களை இறக்கி விட்டார் டிரைவரிடம் வண்டியை எடுக்கச் சொன்னார் கார்டு. என்ன முயன்றும் ரயில் வண்டி நகரவில்லை. ஊழியர்கள் சுவாமிகளை வணங்கினார்கள். சுவாமிகள், ‘இறக்கி விட்ட எல்லாத் துறவிகளையும் ஏற்றிவிட்டு வண்டியை எடு!’ என்றார்கள். சுவாமிகளிடம் விபூதி வாங்கிக் கொண்டு சுவாமிகளையும் அமரச்செய்து வண்டியை எடுத்தார்கள். வண்டி ஓடத் தயாரானதும் நாகூருக்கு அழைத்துச் சென்றார்கள். இப்படியாக சுவாமிகள் சில சமயங்களில் சித்துக்கள் செய்திருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார் ஒரு அன்பர்.

வேறு ஒரு ஆன்மிக மகான் விஷயத்திலும் ரயில் இப்படிப் புறப்படாமல் இருந்தது. அதை W.S. ராமநாதன் என்ற நண்பர் சொன்னார். தன்னை இன்னார் என்று சொல்லிக்கொள்ளாத ஒரு ஆன்மிகப் பெரியவரின் அருளாசி நண்பர் ராமநாதனுக்குக் கிடைத்தது. அந்தப் பெரியவர் திடீரென்று இமயமலைப் பக்கம்

போக நினைத்து டில்லிக்கு ரயில் ஏறினார். பணமில்லை; எனவே டிக்கெட் எடுக்கவில்லை. அதனால் அவரை டிக்கெட் பரிசோதகர் விஜயவாடாவில் இறக்கி விட்டார். பிறகு அந்த ரயில் இன்ஜினில் கோளாறு ஏற்பட்டது. நிபுணர்கள் பார்த்தும் சரியாகவில்லை. பெரியவரை இறக்கிவிட்டதால் அப்படி ஆயிற்று என்று டிக்கெட் பரிசோதகரைப் பயணிகள் குறை சொன்னார்கள். டிக்கெட்டுக்குத் தாங்கள் பணம் தருவதாகவும் அவர் ரயிலில் ஏறட்டும் என்று வேண்டிக் கொள்ள பெரியவர் ஏறினார். ரயிலும் புறப்பட்டது.

இதே போன்று இன்னொரு ரயில் பயண நிகழ்ச்சி முக்கியமானது. பாடகச்சேரி மகானைப் பற்றிய தகவல்கள் சேகரிக்க, என் நண்பர்கள் இருவர் கும்பகோணத்துக்குப் பக்கத்திலுள்ள கிராமங்களுக்குச் சென்றார்கள். டிக்கெட் எடுத்தும் டிக்கெட் இல்லாத பயணிகள் போல நடத்தப் பட்ட இவர்கள் இருவரும் ரயில் பயணத்துக்குத் 'தத்கால்' பயணச்சீட்டு வாங்கியிருந்தார்கள். விதிகளின்படி, டிக்கெட் பதிவின்போது காட்டப்பட்ட அடையாளச் சீட்டின் ஒரிஜினல் இருக்கவேண்டும். நண்பரிடம் அதன் நகல் மட்டுமே இருந்தது. மற்றபடி பான்கார்டு, பாஸ் போர்ட் பிரதி எல்லாமே இருந்தன. ஆனால் பயணச் சீட்டில் காட்டப்பட்ட அடையாள விவர அட்டைதான் வேண்டுமென்ற பரிசோதகர் இவர்களது பயணச்சீட்டு செல்லாது என்ற நிலையில் அபராதம் கட்ட வேண்டும் என்பதே சட்டம்.

ஒரு நண்பர் எப்போதும் படபடப்பானவர். வேறு வழியின்றி அப்போது அவர் அமைதியாக இருந்தார். மற்றவரிடமிருந்தும் பணம் வாங்கி, அபராதம் கட்டத் தயாரானார். கெடுபிடியானவராக இருந்த அந்தப் பரிசோதகரிடம் சட்டப்படிச் செய்ய வேண்டியதைச் செய்யுங்கள் என்று சொல்லிவிட்டார். இன்னொருவர் எதற்கும் எப்போதும் கவலைப்படுபவர். 'என்ன ஐயா! சுவாமிகள் விஷயமாக வந்து இப்படி வம்பில் மாட்டிக் கொண்டோமே' என்று அங்கலாய்த்தார். முதல் நண்பர் சிரித்துக்கொண்டே 'இருக்கட்டும் விடுங்க. பணம் கட்டத் தீர்மானிச்சாச்சு அப்புறம் பேசிப் பிரயோசனமில்லை,' என்றார்.



ஐந்து நிமிஷத்தில் பரிசோதகர் திரும்பி வந்தார். 'என்ன பண்ணப் போறீங்க?' என்று கேட்டபோது 'இந்தாருங்கள் அபராதம்' என்று ஆயிரம் ரூபாய் நோட்டை நண்பர் நீட்ட பரிசோதகருக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. "லிஸ்ட்லே டிக் பண்ணிடறேன் யாராவது கேட்டா அடையாள அட்டையைப் பார்த்தேன்னு சொல்றேன். வழியிலே வேறு யாராவது சோதனை செஞ் சா நான் பொறுப்பில்லே" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே போய்விட்டார்.

அபராதம் கட்டியாக வேண்டும் என்பதில் விடாப் பிடியாக இருந்த அதிகாரியின் கெடுபிடியை மாற்றியது பாடகச்சேரியாரின் அருள் என்று நம்புகிறார் நண்பர். இல்லையென்று சொல்லமுடியுமா?

## பெங்களூர் அன்பர் ஷாமண்ணா

பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள் மற்றும் அவரது குருநாதர் எரிதாதா சுவாமிகளுடன் சேர்த்துக் குறிப் பிடப்பட வேண்டியவர் பெங்களூரைச் சேர்ந்த பெரிய ஜவுளி வியாபாரி ஏ. ஜி. ஷாமண்ணா. 1903—ம் வருடம், டிசம்பர் மாதம் மூன்றாம் தேதி பிறந்தார். நடு வயதில் பெங்களூரில் நோய்வாய்ப்பட்டுத் தவித்துக் கொண்டி ருந்தபோது டாக்டர்களும் கைவிட்டனர். அப்போது பாடகச்சேரி சுவாமிகள் பெங்களூருக்கு வந்திருந்தார். யாரும் அழைக்காது ஷாமண்ணா வீட்டில் நுழைந்தார். இரவு தங்கினார், அவரது படுக்கையருகே அமர்ந்தார். மருந்து கொடுக்கவில்லை. மந்திரம் ஜபிக்கவில்லை. நாவினால் வருடி, வருடி சிகிச்சை செய்தார். அத்துடன் "என் ஆயுளின் 10 வருஷங்களை உனக்குக் கொடுத்து விட்டேன்" என்று அருளினார். நோயுற்றவரைக் காண

மனைவி மக்கள் வந்தபோது ஷாமண்ணா பாடகச்சேரி சுவாமிகளுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார். டாக்டருக்கும் அஞ்சாத நோய் சுவாமிகளால் நீங்கியதைத் தெரிந்துகொண்டு மிகவும் மகிழ்ந்தார்கள்.

அன்று முதல் ஷாமண்ணா படிப்படியே குணமடைந்து பிழைத்துக் கொண்டு மகிழ்ச்சியடைந்தார். பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள் சில நாட்கள் தங்கியிருந்து பின்னர் கும்பகோணம் சென்றுவிட்டார். அதுமுதல் ஷாமண்ணா வுக்கு சுவாமிகளிடம் பக்தி உண்டாயிற்று மருத்துவரால் நீக்க முடியாத ரோகத்தை நீக்கிய சுவாமிகளை நன்றி யுடன் நினைத்துப் பார்த்தார். பிறகு அடிக்கடி கும்ப கோணம் முக்திக்குள மண்டபத்தில் சுவாமிகளைத் தரிசித்துக் கொண்டிருந்தார். அப்போது குடந்தை ஸ்ரீ ஜகத்குரு சாரங்க தேசிகேந்திர சுவாமிகள் பெரிய மடத்தில் தங்குவார். அங்கிருந்து சுவாமிகளுக்கு உணவு படைத்துத் தாமும் உண்பார்.

பெங்களூரில் ஜும்மா மசூதி சாலை அருகே ‘மங்கள பஸவங்குடி ஈஸ்வரன் கோயில்’ என்று ஒரு பழங்காலக் கோயில் இருக்கிறது. பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள் தான் இதற்குத் திருப்பணி செய்து கும்பாபிஷேகமும் செய்தார். ஷாமண்ணா இதற்குப் பெருமளவு உதவினார். முன்பு ஈஸ்வரன், பார்வதி விக்ரஹங்கள் மட்டுமே இருந்தன. சுப்ரமண்யர் விக்ரஹத்தையும் எரிதாதா சுவாமிகளின் திருஉருவத்தையும் பிரதி—ஷ்டை பண்ணி, ராஜகோபுரமும் எழுப்பினார் ஷாமண்ணா.

ஷாமண்ணாவின் சகோதரி மகளான அனுசூயாவுக்கு இருபது வயதானபோது, 1948—ல், ஷாமண்ணா குடும்பத்தினர் திருவொற்றியூரில் சுவாமிகளை தரிசித்து ஆசி பெறப் போனபோது ராமசாமி பிள்ளையும் அவரது சகோதரர்களும் இருந்திருக்கிறார்கள். அனுசூயாவின் தகப்பனார் அங்கே போகவில்லை. கடையை கவனித்துக் கொள்வதற்காக பெங்களூரிலேயே தங்கிவிட்டார்.



அப்போது சுவாமிகள் ஷாமண்ணாவிடம் உங்கள் மூத்த மகன் சந்திரசேகருக்குத் திருமணம் செய்து வையுங்கள். அனுசூயாதான் உங்கள் மருமகள். சத்திரம் பார்க்க நாளாகுமென்றால் கவலை வேண்டாம். கோயிலில் கல்யாணம் வைத்துக்கொள்ளலாம். பிறகு கஷ்டம் வரப் போகிறது. இன்று இங்கேயே நிச்சயதார்த்தம் செய்து விடலாம் என்றார் சுவாமிகள்.

நிச்சயதார்த்த சம்ப்ரதாயத்திற்கு மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் தயார். ஆனால் பெண் வீட்டுக்காரர் களாகத் தாம்பூலம் மாற்றிக்கொள்ள யாரும் இல்லை. பழம் வெற்றிலை பாக்கு, மங்களப் பொருட்களை வாங்கி வரச் செய்த சுவாமிகள் தன் அன்பர் ராமசாமி பிள்ளை யையும் அவர் மனைவியையும் பெண்வீட்டுக்காரர்களாக இருக்கச் செய்து நிச்சயதார்த்தத்தை நடத்தினார்.

அனுசூயாவுக்கு 1949—ம் வருஷம் டிசம்பர் மாதம் கல்யாணமானது. அப்போது அவருக்கு வயது இருபது. அடுத்த மார்ச் மாதம் மாமியார் மறைவு. அதன் பிறகு 1959—ல் மாமனாரும் காலமானார்.

முக்காலமும் உணர்ந்த ஞானியான சுவாமிகள் பேச்சோடு பேச்சாக, கஷ்டம் வரும். அதனால் உங்கள் பையன் சந்திரசேகரனுடன் கல்யாணத்தை நடத்தி விடுங்கள். கோயிலிலும் கல்யாணம் பண்ணலாம் என்று சொன்னதன் அர்த்தமும் அவசரம் அவசரமாக நிச்சய தார்த்த ஏற்பாட்டினை சுவாமிகளே செய்ததன் சூசகமும் ஷாமண்ணா குடும்பத்தினருக்குப் பிறகுதான் புரிந்தது. முதல் வெள்ளிக்கிழமை கல்யாண நிச்சயதார்த்தம் ஆனது. அடுத்த வெள்ளிக்கிழமை சுவாமிகள் சித்தியடைந்து விட்டார். அனுசூயா திருமணத்தின்போது பாடகச்சேரி சுவாமிகள் ஸ்தூல சரீரமாக இல்லை. தவிர திருமணத்தை அடுத்த சில மாதங்களிலேயே அவரது மாமியார் தீ

விபத்தில் சிக்கினார். அனுசூயாவின் நாத்தனார்கள், ஷாமண்ணாவின் பெண்கள் பருவம் எய்திய வைபவத்தின் போது, சமையல் வேலை பார்த்துக் கொண்டிருந்த அவருடைய சேலையில் தீப்பிடித்தது. மருத்துவமனையில் இரண்டு மாதகாலம் சிகிச்சை பெற்றும் பயனில்லாமல் இறந்து போனார். அதுவும், ஒரு மங்கள நிகழ்வின்போது ஏற்பட்ட சோகமே. சுவாமிகள் சொன்ன 'கஷ்டம் வரும்' என்ற வாக்கு இப்படிப் பேரிடியாகத் தாக்கியது.

ஒரு சமயம், பெங்களூருக்கு சுவாமிகள் வருகிறார் என்று ஷாமண்ணா அவரை அழைத்து வருவதற்காக ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று பெட்டி பெட்டியாகத் தேடியும் சுவாமிகளைக் காணவில்லை. வீடு திரும்பி குளியல் முடித்து அடுத்த ரயிலைப் பார்க்க ரயில் நிலையத்திற்குப் புறப்பட்டபோது சுவாமிகள் ஒரு ஜட்காவில் வந்து இறங்கினார். கதவைத் திறந்த அனுசூயாவின் தாயாருக்கு சுவாமிகள் விஸ்வரூப தரிசனம் அருளினார்.

அந்தச் சமயம் அனுசூயாவின் தாயார், மாமனார், கூர்க்கைச் சேர்ந்த சாந்தம்மா, சஜ்ஜன் ராவ் எல்லோரும் இருந்திருக்கிறார்கள். சுவாமிகள் தங்கியிருந்த மூன்று தினங்களிலும் அன்பர்கள் வந்து ஆசி பெற வசதி செய்யப் பட்டது. அந்த வீட்டின் இரண்டாவது மாடியிலேயே தங்கி—யிருக்கப் போவதாக சுவாமிகள் முன்பே சொல்லியிருக்கிறார். ஷாமண்ணா இல்லாதபோது ஒருமுறை திடீரென்று அந்த வீட்டுக்கு வந்திருக்கிறார். அவரை அங்கே இருந்தவர்களுக்கு அடையாளம் தெரியவில்லை. 'மோர் கொடு' என்று கேட்டு வாங்கிப் பருகினார். 'ஒரு மாதம் கழித்து வருவேன். அப்போது மாடி அறையில் தங்கப் போகிறேன்' என்று சொல்லிவிட்டுப் போனார்.

வெளியே போயிருந்த ஷாமண்ணா இது பற்றிய தகவல் தெரிந்ததும் வந்தவர் எப்படியிருந்தார் என்று கேட்டார். கையில் தடியுடன் கறுப்பாக உயரமாக இருந்தார் என்றும் வேறு அடையாளங்களையும் சொன்னவுடன், அது சுவாமிகள் என்பது தெரிந்துவிட்டது. அப்போது ஷாமண்ணாவின் தாயாரும் இருந்தார்கள். ஒரு ஸ்ரீராம நவமி தினத்தில் அவர்கள் காலமானார்கள். அதற்கு முன்பு சுவாமிகள் திருவொற்றியூர் மடத்தில் எட்டு நாட்கள் அவரைத் தங்க வைத்து கவனித்துக் கொண்டார். அப்போது அனுசூயாவுக்கு ஒன்பது வயது. ரயிலில் முதல் வகுப்பு ரிசர்வ் செய்து பாட்டியைப் பார்க்க எல்லோரையும் சென்னைக்கு அழைத்துப் போனார்கள் என்று நினைவுகூர்கிறார் அவர்.



சுவாமிகள் 'ஜோதியை ஏற்றி வையுங்கள். அவர் ஜோதியில் கலந்து விடுவார்' என்று சொல்லியிருந்தார். அப்படியேதான் நடந்தது. அவரை பெங்களூருக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். சுவாமிகள் சொன்னது போலவே. அதிகாலை 2.15க்கு பாட்டி காலமானார்கள்.

சுவாமிகளின் அற்புதங்களுள் ஒன்றாக தஞ்சாவூரில் நடந்ததைக் குறிப்பிடுகிறார். ஒருமுறை, சுவாமிகளை தரிசிக்க கும்பகோணம் போனார் ஷாமண்ணா. அப்போது சுவாமிகள் தஞ்சாவூரில் வீணை பூஷணம்மா வீட்டில் இருந்திருக்கிறார். அங்கே தரிசிக்கலாம் என்று ஷாமண்ணா கும்பகோணத்திலிருந்து புறப்பட்டபோது பாதி வழியில் எதிர்ப்பட்டார் சுவாமிகள். அவர் தஞ்சாவூரிலிருந்து நடந்தே வந்திருக்கிறார். அவருக்குத் தெரியாதது எதுவும் உண்டா என்று வியந்தார் ஷாமண்ணா.

ஷாமண்ணாவுக்கு முதலில் பிறந்த இரண்டு பையன்களும் ஒரு பெண்ணும் சீக்கிரமே இறந்து விட்டார்கள். 'பாலாரிஷ்ட'க் கோளாறு என்று சொல்லப்பட்டது. அப்போது திருவொற்றியூர் ராமசாமி பிள்ளை வீட்டில் சுவாமிகளைப் பார்த்திருக்கிறார்கள். 'அப்படி ஒன்றுமில்லை' என்று சுவாமிகள் ஆசிர்வதித்ததையடுத்து அனுசூயாவின் கணவராகப்போகும் சந்திரசேகர் பிறந்தார். ஷாமண்ணா உயிரோடு இருந்த காலத்திலேயே

இரண்டு பெண்களுக்குக் கல்யாணம் ஆயிற்று. பிறகு மற்ற பெண்களுக்கும் கல்யாணம் ஆயிற்று.

ஷாமண்ணாவின் மகளுக்கு 'ஜிக்கம்மா' என்று பெயர் சூட்டியவர் பாடகச்சேரி சுவாமிகள்தான். 'ஜிக்கம்மா, வா? உட்காரு, சாப்பிடு' என்று சுவாமிகள் பிரியமாகப் பேசுவார். ஷாமண்ணாவின் பெண்ணான குட்டியம்மா வீட்டிலும் சில காலம் சுவாமிகள் தங்கியிருக்கிறார்.

'எரிதாதா சுவாமி ஜாத்ரா' என்ற வைபவம் மூன்று நாட்கள் நடைபெறும். ஜும்மா மசூதி வீதி வீட்டிலிருந்து சௌடேஸ்வரி கோயில் வரை பந்தல் போட்டு, சுமார் ஆயிரம் பேருக்கு அன்னதானம் நடைபெறும். தாமே உணவு பறிமாறும் சுவாமிகள் 'அக்கா, தங்கச்சி, மாமி' என்று இன்முகத்தோடு அழைத்து உபசரிப்பார். ஜேஷ்ட மாதம் (ஜுன்—ஜுலை) சஷ்டியில் அன்னதானம் நடைபெறும். அனுசூயா அம்மாள் இல்லத்தில்தான் சுவாமிகள் பூஜை செய்வார். ஒரு சமயம் சின்னக் குழந்தை மாதிரியும் பிற சமயங்களில் பெரியவர்கள் மாதிரியும் மாறிமாறிக் கலகலப்பூட்டுவார் என்கிறார் ஸ்ரீமதி அனுசூயா.

### செள்ளக்குருக்கியும் ஷாமண்ணாவும்

சுவாமிகள் தன் குருநாதர் எரிதாதா சுவாமிகளின் அதிஷ்டானத்தை தரிசனம் செய்ய ஷாமண்ணாவை செள்ளக்குருக்கிக்கு அழைத்துச் சென்றார். அன்று தொடங்கிய ஆத்மார்த்தமான ஈடுபாடு ஆயுள் நெடுகத் தொடர்ந்தது. எரிதாதா அதிஷ்டானத்தை அருமையாகச் சீரமைத்த ஷாமண்ணா குருநாதருக்கு அருகிலேயே தன் சமாதியைக் கட்டிக்கொண்டார்.

ஷாமண்ணாவுக்கு எரிதாதா சுவாமிகள் அதிஷ்டானத்தில் எப்படி ஈடுபாடு வந்தது? செள்ளக்குருக்கியில் எரிதாதா சுவாமிகள் அதிஷ்டான ட்ரஸ்டின் மூத்த ட்ரஸ்டியாக இருக்கும். உள்ள கரி பசவன கௌட



என்ற எண்பது வயது முதியவரைச் சந்தித்தேன். இவருக்குத் தொழில் விவசாயம். செள்ளக்குருக்கி அதிஷ்டான அலுவலகமே மிகவும் எளிமையாக இருக்கிறது. உள்ளே நுழைந்ததும் அலுவலகம் இருக்கிறது. மேஜை நாற்காலி எதுவுமில்லை. முகப்பு ஹால் மிகவும் சிறியது. சிமின்ட் தரை. அடுத்த அறையின் வாசல்காலும் சிறியது.

விவசாயம் மற்றும் குடும்ப வேலை போகப் பெரும் பாலான நேரத்தை அதிஷ்டானத்திலேயே கழிக்கிறார். ஷாமண்ணாவை இவர் நன்றாக நினைவுகூர்ந்து சில சம்பவங்களைச் சொல்கிறார். கரி பசவன கௌடாவின் உடை, பேச்சு எல்லாமே எளிமை. கர்நாடகத்துக்காரர் என்றாலும் தெலுங்கில் பேசுகிறார். இவர் சொன்ன பல விஷயங்கள் தமிழ்நாட்டில், பெங்களூரில் உள்ள பாடகச்சேரி அன்பர்களுக்குத் தெரியாத விவரங்கள். அவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

சுமார் 70 வருஷங்களுக்கு முன்பு, பத்து வயதுச் சிறுவனாக உத்சவங்களின் போது வாலன்டியர்களில் ஒருவராகப் பணி செய்திருக்கிறார் இவர். அப்போது எரிதாதா அதிஷ்டானம் இந்த அளவுக்கு விருத்தியாக வில்லை. இந்த அதிஷ்டானத்துடன் பல வருஷங்களாகத் தொடர்பில் இருப்பவர் அநேகமாக இவர் ஒருவராகத் தான் இருப்பார். பால பருவத்தில் பாடகச்சேரி சுவாமி களை செள்ளக்குருக்கியில் பார்த்ததாகச் சொல்கிறார். அதாவது பல சமயங்களில் ஷாமண்ணாவும் பாடகச் சேரி சுவாமிகளும் சேர்ந்தே வருவார்கள் என்கிறார்.

பெங்களூரிலிருந்து பெல்லாரிக்கு ஷாமண்ணா தொழில் நிமித்தமாக ரயிலில் சென்றபோது வீராப்பூர் என்ற ரயில் நிலையத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாக இறங்குவதைப் பார்த்து உடன் பயணம் செய்தவரிடம் அங்கே என்ன விசேஷம் என்று கேட்டிருக்கிறார். அந்தப் பயணி எரிதாதா சுவாமிகளின் மகிமை பற்றிச்

சொல்லியிருக்கிறார். அதைக் கேட்ட ஷாமண்ணா பின்பு பெல்லாரியிலிருந்து பெங்களூர் திரும்பும்போது அதிஷ்டானத்திற்குச் சென்று வழிபட்டிருக்கிறார்.

செள்ளக்குருக்கி அதிஷ்டானத்தில் தரிசனம் செய்த பிறகு ஷாமண்ணாவின் வியாபாரம் விருத்தியானது. அதனால் மாதா மாதம் காணிக்கை செலுத்துவதற்காக ஒரு தொகையை எடுத்து வைத்திருக்கிறார். எரிதாதா சுவாமிகள் சித்தியடைந்து 12 வருஷங்களுக்கு அங்கே எந்த முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை என்பதால் ஷாமண்ணா ஒரு முறை பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகளுடன் செள்ளக்குருக்கிக்கு வந்தபோது அந்தப் பணத்தை அதிஷ்டானத்தை மேம்படுத்தச் செலவிடலாம் என்று சுவாமிகள் சொன்னார். அன்றிலிருந்து திருப்பணிக்கு ஷாமண்ணா பிரதானம் கொடுத்து தனதானமும் சிரமதானமும் செய்திருக்கிறார்.

ஊருக்குள் ஒரு மடத்தைக் கட்டிய திக்கைய்யரும் சுவாமிகளின் கட்டளைப்படி வெளியேறிவிட்டார். எங்கு சென்றார் என்பது தெரியவில்லை. அதனால் செள்ளக்குருக்கியில் ஷாமண்ணாவின் திருப்பணி அப்போது அவசரமாகத் தேவைப்பட்டது.

கரி பசவன கௌட சொன்ன இன்னொரு விஷயமும் சுவாரஸ்யமானது. சிவராமன் என்ற அன்பர் நாள் முழுதும் கோயில் வேலை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு ஓய்வு நேரத்தில் சுவாமிகளுக்குப் பணிவிடையும் செய்து வந்தார். சீடர் என்றால் அப்படி ஒரு அத்யந்த சீடர். ஒருமுறை எரிதாதா சுவாமிகள் சிவராமனை அழைத்து, தும்கூர் போய் முறுக்கு வாங்கி வா என்று அனுப்பினார்.

தமிழ்நாட்டில் மணப்பாறை முறுக்கு என்பதுபோல மைசூர் சமஸ்தானத்தில் தும்கூர் முறுக்கு பிரசித்தம். செள்ளக்குருக்கியிலிருந்து தும்கூர் தொலைவு கொஞ்ச நஞ்சமில்லை. சுமார் 280 கிலோ மீட்டர். கையில் காசு இல்லாத சிவராமன் தும்கூருக்கு நடந்தே



சென்றார். முறுக்கு வாங்கக் கையில் பணம் இல்லை. எனவே தும்கூர் ரயில்வே ஸ்டேஷனில் போர்ட்டர் வேலை செய்து அதில் கிடைத்த பணத்தில் முறுக்கு வாங்கிக்கொண்டு நடந்தே செள்ளக்குருக்கி திரும்பினார். குருநாதரிடம் முறுக்கைக் கொடுத்தார். குருநாதரோ கங்கா தீர்த்தம் வரட்டும் என்று சொல்லிவிட்டார்.

சிவராமன் இதுபற்றி எதுவும் நினைக்கவில்லை. ஆனால் பக்கத்தில் இருந்தவர்கள் 'என்ன இது, சாமி முறுக்கு கேட்டார். சிஷ்யர் படாத பாடுபட்டு வாங்கி வந்திருக்கிறார். இப்போது கங்கா தீர்த்தம் கேட்கிறாரே, அதற்கு எங்கே போவது? என்ன இது புதுக் கஷ்டம்' என்று நினைத்தார்கள். மகான்கள் நினைத்தால் நடக்காத காரியமும் உண்டோ?

சுவாமிகள் இது பற்றிப் பேசிக் கொண்டிருக்கிற நேரத்தில் வீராப்பூர் ரயில் நிலையத்தில் ஒரு ரயில் நின்றது. அதிலிருந்து இறங்கிய அன்பர்களில் ஒருவர் காசி யாத்திரை செய்து திரும்பிக் கொண்டிருந்தார். அவர் பிற அன்பர்களுடன் சேர்ந்து எரிதாதாவைப் பார்க்க வந்தார். அவர் வைத்திருந்த கூஜாவைப் பார்த்ததும் "கங்கா தீர்த்தம்தானே, கொண்டா?" என்றார் சுவாமிகள். அந்த பக்தருக்கு ஒரே ஆச்சரியம். தன்னிடம் கங்கை தீர்த்தம் இருந்தது சுவாமிகளுக்கு எப்படித் தெரியவந்தது என்று.

பெரும் ஈடுபாட்டுடன் பணி செய்து கொண்டிருந்த சிவராமனை எரிதாதா சுவாமிகள் அழைத்து இனி நீ வெளியே போகலாம் என்று சொல்ல. அவர் ஹுப்ளி அருகே ஒரு மடத்தை ஸ்தாபித்து சிவராம் அவதூத் என்ற திருநாமத்தில் ஒரு மகானாகிவிட்டார்.

கரி பசவன கௌட இன்னொரு சுவாரஸ்யமான தகவலையும் சொல்கிறார். இது 1937 வாக்கில் நடந்தது. இது இவரது நேரடி அனுபவம்.

ஷாமண்ணா அதிஷ்டான அபிவிருத்தி வேலைகளைத் தன் செலவில் நடத்தி மேற்பார்வை செய்து கொண்டி

ருந்தபோது மைசூர் மகாராஜா ஜெயசாமராஜ வாடியார் பெல்லாரிக்கு வரப்போவதாகக் கேள்விப்பட்டார். அவரை எப்படியாவது அதிஷ்டானத்திற்கு அழைக்க வேண்டும் என்று நினைத்த ஷாமண்ணா உருவுகொண்டாவில் இருந்தவரும் ஜகத்குரு என்று அழைக்கப்பட்டவருமான கரி பசவ சுவாமிகளை வணங்கி, “தாங்கள் மகாராஜா ஜெயசாமராஜ வாடியார் அவர்களைச் சந்திக்கப்போவதாக அறிந்தேன். அப்போது எரிதாதா சுவாமிகளின் படத்தை எடுத்துச்சென்று மகாராஜாவிடம் காட்டி, அவரை அதிஷ்டானத்தில் தரிசனத்திற்கு வர அழையுங்கள்” என்று கேட்டுக்கொண்டார். எரிதாதாவின் படத்தை வாங்கி வைத்துக் கொண்ட சுவாமிகள் அப்படியே ஆகட்டும் என்று சொல்லி விட்டார். அவர் மைசூர் மகாராஜாவிடம் படத்தைக் கொடுக்கவில்லை. என்ன காரணமோ தெரியாது. “நாமே ஒரு மகான்; இன்னொரு மகானின் படத்தை எடுத்துக்கொண்டு போக வேண்டுமா என்று நினைத்திருக்கலாம் என்று அனுமானிக்கிறார் கரி பசவன கௌட.

அன்று இரவு ஷாமண்ணாவின் கனவில் வந்த சுவாமிகள் படத்தை மகாராஜாவிடம் பக்கத்து ஊர் சுவாமிகள் கொடுக்கவில்லை. அது அவரது காரிலேயே இருக்கிறது. நீயே கலெக்டரைச் சந்தித்து அவர் மூலமாக மகாராஜாவை அழைக்கலாம், வருவார் என்று சொல்லி யிருக்கிறார். ஷாமண்ணா அந்த சுவாமிகளைச் சந்தித்து, “படத்தைக் காரிலேயே வைத்திருக்கிறீர்கள். மகாராஜா விடம் கொடுக்கவில்லை. பரவாயில்லை; என்னிடம் கொடுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்” என்று கறாராகச் சொல்லிப் படத்தை வாங்கி வந்து விட்டார்.

பெல்லாரியில் நடக்கவிருந்த அகில பாரத கன்னட சாகித்ய சம்மேளனம் என்ற மாநாட்டில் சிறப்பு விருந்தின ராகக் கலந்து கொள்ளவிருந்த மகாராஜா பெங்களூர் திரும்பும் வழியில் செள்ளக்குருக்கிக்கு வரலாமே, என்று நினைத்த ஷாமண்ணா அதற்கு ஏற்பாடு செய்து தரும்படி பெல்லாரி கலெக்டரிடம் வேண்டிக் கொண்டார்.



அதையடுத்து செள்ளக்குருக்கி வந்த கலெக்டர் வேலைகள் எதுவும் முற்றுப் பெறவில்லை. பிறகு ஒரு முறை பார்த்துக் கொண்டால் போதும் என்று சொல்லி விட்டார். என்ன செய்வது என்று ஷாமண்ணா திகைத்த போது கலெக்டர் கனவில் வந்த எரிதாதா சுவாமிகள் ‘பக்தர்களிடமிருந்து இப்படி கோரிக்கை வந்திருப்பதை மகாராஜாவுக்குத் தெரிவிப்பது உன் கடமை. வருவதும் வராததும் மகாராஜாவின் இஷ்டம். நீ குறிப்பு எழுது, அவர் வருவார் என்று சொல்லியிருக்கிறார். அதையடுத்து ஷாமண்ணாவின் கோரிக்கையை சிபாரிசு செய்து கலெக்டர் மகாராஜாவுக்கு அனுப்ப, பெல்லாரியிலிருந்து திரும்பும் வழியில் ஜெயசாமராஜ வாடியார் எரிதாதா சுவாமிகளின் அதிஷ்டானத்திற்கு வந்து நிதானமாக தரிசனம் செய்திருக்கிறார். குறுகலான படிக்கட்டுகளில் இறங்கி சமாதியில் அஞ்சலி செலுத்தியிருக்கிறார்.

அவரது வருகை செள்ளக்குருக்கி மக்களையும் சுவாமிகளின் அன்பர்களையும் பரவசப்படுத்தியது. நாடு சுதந்திரம் பெற்று ஜனநாயக ஆட்சி வந்தபிறகும் மைசூர் மகாராஜாவாக இருந்த ஜெயசாமராஜ வாடியாருக்கு மக்கள் மத்தியில் தனி மரியாதை இருந்தது. சுதந்திர இந்தியாவிலும் அவர் ‘ராஜ ப்ரமுக்’ என்றே அழைக்கப் பட்டார். பின்னர் தமிழ்நாட்டு கவர்னராக நியமிக்கப் பட்டார். பிறகு ஒரு முறை முன்னறிவிப்பின்றி பூஜை, நெய்வேத்ய பதார்த்தங்களுடன் அதிஷ்டானத்திற்கு வந்து வழிபட்டுச் சென்றார் ஜெயசாமராஜ வாடியார். எரிதாதா அதிஷ்டானத்திற்கு வந்து சென்ற முக்கிய பிரமுகர்களில் முதன்மை ஸ்தானத்தை பெற்றவர் ஜெயசாமராஜ வாடியார் அவர்கள். ராஜா அல்லவா ?

இப்படி எல்லோருக்கும் நல்லவராக முழுமையான வாழ்க்கை நடத்திய ஷாமண்ணா 1960—ம் வருடம் நவம்பர் மாதம் 24—ம் தேதி காலமானார். செள்ளக்குருக்கியில் தான் கட்டிய சமாதியிலேயே அடக்கம் செய்யப்பட்டார்.

## வள்ளலாரும் பாடகச்சேரி சுவாமிகளும்

இப்போது சென்னையில் வசித்துவரும் அன்பர் கே. தணிகாசலம் ஆன்மிக, பாரம்பரிய, விஷயங்களில் மிகுந்த ஈடுபாடுடையவர். இவர் பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள் அன்னதானம் மற்றும் கல்வி அறக்கட்டளையின் தலைவராக இருக்கிறார்.

தென்காசி 'மிஸ்டிக் செல்வம்' என்பவர் மூலமாகத் தமக்குப் பாடகச்சேரி மகானைப் பற்றித் தெரிய வந்தது என்கிறார் தணிகாசலம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அவர் சுவாமிகளைப் பற்றிச் சொல்லியிருந்தாலும் இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்தே அங்கு செல்ல நேர்ந்தது என்றும், அங்கே போனதும் தன்னுள் 'ஆன்மிக ஆனந்த அதிர்வலைகள்' எழுந்தன என்று சொல்லி உணர்ச்சிவசப்படுகிறார்.

இவருக்குப் பாடகச்சேரி சுவாமிகள் பற்றிச் சொன்ன மிஸ்ட்டிக் செல்வம் காலமாகி விட்டார். ஆன்மிக விஷயங்களை ஆராய்ச்சி செய்து நிறைய நூல்களை எழுதிய செல்வம் சென்னையில் இந்திய ஆன்மிகக் கழகம் என்ற அமைப்பை உருவாக்கினார்.

வள்ளலாரின் மறு அவதாரம் பாடகச்சேரி சுவாமிகள் என்பதைத் தாம் உறுதியாக நம்புவதோடு, அதற்கான ஆதார அனுமானங்களையும் தருகிறார். பாடகச்சேரியில் தனக்கு நேர்ந்த ஆனந்த அதிர்வு அனுபவத்திற்குப் பிறகு வள்ளலாரின் நூல்கள் அனைத்தையும் ஆழ்ந்து படித்து ஆராய்ந்திருக்கிறார்.

பாடகச்சேரி சுவாமிகளின் உயில்கள், குறிப்புகள் இவற்றைப் படித்த பிறகு, சுவாமிகள் தாம் அமைத்துக் கொண்ட முக்திக்குள மண்டபத்திலேயே சமாதி யாகாமல், திருவொற்றியூர் சென்று ஒடுங்குவானேன் என்று யோசித்திருக்கிறார். வள்ளலாரின் நூல்களில் இதற்கு விளக்கம் கிடைத்திருக்கிறது. வடலூர் ராமலிங்க சுவாமிகள் சென்னை ஏழுகிணறுப் பகுதியில் தங்கியிருந்த போது, ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் திருவொற்றியூரில் தியாகராஜர் வடிவுடையம்மனை தரிசனம் செய்து பட்டிணத்தார் சமாதியிலும் வழிபடுவார். எல்லாம் நடைதான்; ஏழு கிணறு பகுதியிலிருந்து, திருவொற்றியூர் வந்து திரும்புகிறவரை! அப்படி ஒரு சந்தர்ப்பத்தில், இப்போது திருவொற்றியூரில் பாடகச்சேரி சுவாமிகள் சமாதியடைந்திருக்கும் இடத்துக்கு வந்து நின்று கொண்டார். 'இந்த இடத்தில் நான் ஒடுங்க வேண்டும்.' இப்படிச் சொன்னது வடலூர் இராமலிங்க அடிகள். ஆனால் இங்கே வந்து ஒடுங்கியதோ பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள். இந்த இடம் வடலூர் வள்ளலார் ஒடுங்க ஆசைப்பட்ட இடம் என்பது பாடகச்சேரி சுவாமி களுக்கு மட்டுமே தெரியும். அது திருவொற்றியூரில் பட்டிணத்தார் சமாதிக்குப் போகும் வழியில் பழனி யாண்டி பிள்ளை வாங்கி வைத்திருந்த விஸ்தாரமான மனை. அதனால்தான் அந்த இடத்தைக் கேட்டு வாங்கி அங்கே சமாதி ஆனாரோ என்னவோ.

## எரியாத கை

தேவகோட்டை ஜமீன்தார் குடும்பத்தின் AL. AR. S. நாராயணன் செட்டியார், "பட்டினத்தார் சமாதிக்கு நான் சென்றபோது பாடகச்சேரி சுவாமிகள் சித்தியான பத்தாம் நாள் என்பதால் அந்த ஸ்தலத்தையும் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. அப்போது பட்டினத்தார் சமாதியிலிருந்து கடற்கரை வரை வெட்டவெளிதான்," என்கிறார். இத்துடன் ஸ்ரீ நாராயணன் செட்டியார் குறிப்பிடும் ஒரு சம்பவம் மெய்சிலிர்க்க வைக்கிறது. அதை அவரது வார்த்தைகளிலேயே கேட்போம்:

"தனுஷ்கோடியில் சத்திரம் கட்டி, தான, தர்மங்கள் செய்து வந்த ஸ்ரீ வீர. ராமநாதன் செட்டியார் அவர்கள் காலமானதும் சம்ப்ரதாயப்படி அவரது பூத உடல் எரி யூட்டப்பட்டது. மறுநாள் சடங்குகள் செய்யச் சென்ற அன்பர்கள் வலது கரம் எரியாமல் இருந்ததைப் பார்த்து அதிசயித்தார்கள். அந்த வலது கரத்தை எடுத்து வந்து தேவகோட்டை சிலம்பணி ஊரணியின் தென்கரையில் சமாதி கட்டி வழிபட்டார்கள். இன்றும் அந்த சமாதி இருக்கிறது. தொடக்கக்கால ஆர்வம் ஏனோ தொடர வில்லை. சில வருடங்கள் கழித்து பூஜை நின்றுபோனது. இதையறிந்த ஸ்ரீ பாடகச்சேரி சுவாமிகள் ஒவ்வொரு சித்திரை மாதம் சதய நக்ஷத்திர நாளில் குருபூஜை செய்யப் பணித்தார்கள். அதன்படி வருஷாந்திர குரு பூஜை இப்போது அங்கே நடந்து வருகிறது."

தானம் கொடுத்த வலது கையை அக்னி பகவான் தீண்டாமல் விட்டார் என்ற கலிகால அதிசயம் இங்கே நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## பைரவ அம்சம்

பாடகச்சேரி சுவாமிகளுக்கு பைரவ சித்தர் என்று ஒரு காரணப்பெயர் உண்டு. மனிதர்களாகிய நமக்கு எண்ணற்ற பிறப்புக்கள் இருந்திருக்கின்றன. புல், புழு, பூச்சி என்ற வரிசையில் கடைசியாக மனிதப் பிறவி வாய்க்கிறது. சில புண்யாத்மாக்கள் தெருநாய்களாகப் பிறந்து, அறியாமல் செய்த சிறு தவறுகளுக்காக சில ஆண்டுகள் அவதிப்பட்டு நற்கதி அடைகிறார்களாம். இதுவே பைரவ வழிபாட்டின் ஐதீகம்.

பாடகச்சேரி மடத்தின் மேற்குப்பக்கம் ஒரு குளம் உள்ளது. அந்த நாட்களில் வெட்டாற்றில் தண்ணீர் பெருக் கெடுத்தோடியபோது குளம் நிரம்பி வழியும். இதற்கு பைரவ தீர்த்தம் என்று பெயர். இப்போது மழை பெய்தால் மட்டுமே இதில் தண்ணீரைக் காணமுடியும் அப்படி வறண்டு போய்விட்டது.



சுவாமிகளின் பைரவ வழிபாடு விசேஷமானது. ஆற்றங் கரையோரத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் சாப்பிடும் அளவுக்கு உணவு தயாரித்து வைத்து இலைகளில் பறி மாறச் சொல்வார். 'சுந்தரம்களா' என்று குரல் கொடுத்த வுடன் எங்கெங்கிருந்தோ நூற்றுக்கணக்கில் நாய்கள் வந்துவிடும். உடனே குளத்தைக் காட்டி நீராடி வரச் சொல்வார். நாய்கள் முரண்டுபிடிக்காமல் குளத்தில் நீராடிவிட்டு பறிமாறப்பட்ட இலைகளின் முன்னால் அமர்ந்து கொள்ளும். சுவாமிகள் சொன்னதும் சண்டை போடாமல் இலைகளில் உள்ள உணவைச் சாப்பிட்டு விட்டு அமைதியாகத் திரும்பிவிடும். சுவாமிகள் அழைத்த நாய்களின் எண்ணிக்கையும் பரிமாறப்பட்ட இலைகளின் எண்ணிக்கையும் சமமாக இருக்கும் என்கிறார்கள் அன்பர்கள். இது அதிசயம்தானே.

நாய்களுக்கும் சுவாமிகளுக்கும் அபூர்வமான ஓர் அமானுஷ்யத் தொடர்பு இருந்திருக்கிறது. இதைப்பற்றி சென்னைப் புகைப்படக் கலைஞர் தனபால் முதலியாரும் தன் டைரிக்குறிப்பில் விவரமாக எழுதி வைத்திருக்கிறார். அதிலிருந்து...

"கும்பாபிஷேகம் நடக்கும் இடங்களில் மகேஸ்வர பூஜை சமையல் பொறுப்பேற்பவர் நீடாமங்கலத்தில் காபி கிளப் நடத்திவந்த ராஜகோபால ஐயர். இந்த வைபவத்தின்போது, மூன்று நாட்கள் எல்லோருக்கும் வடை பாயசத்தோடு சாப்பாடு தயாரித்தார். நான்காம் நாள் ஐநூறு பேருக்கு சாப்பாடு செய்யும்படி உத்தர விட்டார் சுவாமிகள்."

"நமக்குத் தெரியாமல் இன்றைக்கு இவ்வளவு பேர் எப்படிச் சாப்பிடப் போகிறார்கள் என்று தயங்கினாலும் ஐயர் அப்படியே சமையல் செய்தார். பகல் 12 மணிக்கு ஐநூறு இலைகள் போட்டு அன்னம் வடிக்கும்படிச் சொன்ன சுவாமிகள். படங்களுக்குக் கர்ப்பூர ஹாரத்தி காட்டிவிட்டு வரச் சொன்னார். பிறகு 'சுந்தரம்களா' என்று குரல் கொடுத்தார்.

உடனே ஐநூறு இலைகளுக்கு முன்னாலும் எங்கிருந்து வந்தன என்றே தெரியாமல் பைரவர்கள் (நாய்கள்) வந்து அமர்ந்து ஒழுங்காகச் சாப்பிட்டு விட்டுப் போனார்கள்.”

நாய்களை சுவாமிகள் ‘சுந்தரம்களா’ என்று கூப்பிட்ட தற்கு ஒரு பின்னணி உண்டு. கும்பகோணம் கிருஷ்ணப்ப நாயக்கன் கீழைத்தெருவில் மூலைவீடு என்று சொல்லப் பட்ட 14—ம் எண் இல்லத்தில் வசித்த கோதண்டபாணி என்பவர் முப்பதாண்டுகளுக்கு முன்பு எழுதியுள்ள குறிப்பில் இந்த விவரம் காணப்படுகிறது. அவர்கள் வீட்டுக்கு ஒரு நாயை அளித்து வளர்க்கச் சொல்லி யிருந்தார். அதற்கு சுந்தரம் என்று பெயர் இட்டார்.

அந்த வீட்டில் சுமார் பத்து ஆண்டுகள் வசித்துவந்த சுவாமிகள் சில நாட்கள் வீட்டுக்கு வராமலிருப்பதுண்டு. அப்போது யாருக்காவது உடல் நலம் குன்றியிருந்தால் அல்லது வேறு ஏதாவது காரணமாக உடனே அவரைப் பார்க்க வேண்டியிருந்தால், கோதண்டபாணியின் பாட்டி சுந்தரம் என்ற அந்த நாயிடம் ‘சுவாமிகளை உடனே அழைத்து வா’ என்று சொல்லி அனுப்புவார். சற்றைக் கெல்லாம் நாய் முன்னால் ஓடிவர, பாடகச்சேரி சுவாமி களும் கூடவே வந்து ‘கூப்பிட்டீர்களா?’ என்று கேட்பார்.

இப்போதும் பாடகச்சேரி மடத்துக்கு வரும் அன்பர் களின் வாகனங்களுக்கு முன்பு வழிகாட்டி வரவேற்கிற மாதிரி சில நாய்கள் ஓடுகின்றன. அதே போல் அவர்கள் திரும்பிச் செல்லும்போதும் கொஞ்ச தூரம் காரின் பின்னால் ஓடி வழியனுப்புகின்றன என்று சொல்கிறார், பாடகச்சேரி மடத்தின் பூஜை ஆராதனைகளைக் கவனித்துக் கொண்டிருக்கும் மு. சேகர். நான் பார்த்த போதும் நண்பர்கள் சென்ற போதும் நாய்கள் மடத்தின் உள்ளே எல்லா இடங்களிலும் உலவிக்கொண்டிருந்தன.



“பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள் ஏற்பாட்டின் பேரில் நச்சாந்துப்பட்டி செட்டியார் செலவில் கொள்ளம் புதூரில் கும்பாபிஷேகம் நடந்தது. லட்சம் பேருக்கு அன்னதானம் நடந்தது. எனக்கு அப்போது ஏழு வயதிருக்கும். கும்பாபிஷேகம் நடந்த மறுநாள் பைரவ பூஜை. ஒரே சமயத்தில் நாற்பது நாய்கள் சண்டையிடாமல் சாப்பிடுவதைப் பார்த்திருக்கிறேன்,” என்கிறார் கோவை அன்பர் வி. நாராயணசாமி.

தீப வழிபாடு, நலிந்தவர்களின் நோய் தீர்த்தல், எளிய, விளம்பரமில்லாத வாழ்க்கை, பசிப்பிணி தீர்த்தல், அன்னதானம் செய்தல், செய்யத் தூண்டுதல் என்று பலவிதங்களில் வடலூர் வள்ளலாருக்கும் பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகளுக்கும் ஒற்றுமை உண்டு என்றாலும், ஜீவகாருண்யம் இருவருக்கும் பொதுவான ஈடுபாடு. பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகளை வள்ளலாரின் மறு அவதாரம் என்றாலும் பாடகச்சேரி சுவாமிகளுக்கு பைரவ அம்சம் தனியாகக் கைகூடியது இறையருளால்.

சுவாமிகள் நீண்ட காலம் தங்கியிருந்த பாடகச்சேரி அருகே வீரமங்கலம் என்ற கிராமத்தில் வெங்கடாசல முதலியார் என்பவர் வாழ்ந்து வந்தார். இரண்டு கை விரல் நுனியிலும் மத்தியிலும் அடிப்பாகத்திலும் வெண் குஷ்டம் மாதிரி வெள்ளையாக இருந்தது. சுவாமிகளின் மகிமையைக் கேட்டறிந்த அவர், ஒரு நாள் பாடகச் சேரி சென்று சுவாமிகளுக்கு முன் உட்கார்ந்திருந்தார்.

சுவாமிகள் அவரைப் பார்த்து, “வெங்கடாசலம்! உன் குறையை நிவர்த்திக்க வேண்டுமென்று வந்துள்ளாய். கிட்டே வா… நான் சொல்கிறபடி செய்!” என்று காதோடு காதாக சொல்ல வெங்கடாசலம் சுவாமிகள் சொன்னதை விடாமல் செய்து வந்த பிறகு வெண்குஷ்டம் அகன்றது.

சுவாமிகள் சொன்னது இதுதான்: "நாற்பத்தைந்து நாட்கள் ஏதாவது ஒரு நாயைக் கூப்பிட்டு ஒரு பிடி சாதம் போட்டு வா... கையிலுள்ள வெள்ளை போய்விடும்!" பைரவ வழி பாட்டுக்கு அவ்வளவு மகிமை இருக்கிறது. பைரவரைக் காலால் உதைக்கக் கூடாது தோஷம் ஏற்படும் என்பார். காக்கைக்கு வைக்கிற மாதிரி நாய்க்கும் சாதம் போட வேண்டும். தொட்டுக் கும்பிட வேண்டும் என்பார்.

## கும்பகோணமும் திருவொற்றியூரும்

இப்போது முக்திக்குள மண்டபம், முத்தையா மண்டபம் என்று வழங்கப்படுகிற முக்திக்குள மண்டபம் கும்பகோணம்—காரைக்கால் சாலையில் ரெயில்வே மேம்பாலத்திலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. 1948ஆம் ஆண்டில் பாடகச்சேரி சுவாமிகள் பயன்படுத்திய லெட்டர்ஹெட்டில் இதன் பெயர் 'முக்திக் குள மண்டபம்... சாக்கோட்டை போஸ்ட்' என்று காணப் படுகிறது. விசாலமான இந்த இடத்தின் கணிசமான ஒரு பகுதியை கிறிஸ்தவ மிஷனரி நடத்தும் தொழுநோய் மருத்துவமனைக்குத் தந்திருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த மண்டபம் அமைந்துள்ள இடத்திற்கு ஒரு காலத்தில் 'கழுதைத் தோப்பு' என்றும் பெயர் இருந்திருக்கிறது.

சென்னைப் பல்கலைக் கழக இசைத்துறை கௌரவப் பேராசிரியராக உள்ள டாக்டர் எஸ். ஏ. கே. துர்கா அவர்களின் அத்தை ஸ்ரீமதி விசாலாக்ஷி பாடகச்சேரி சுவாமிகளின் பக்தை. அவரும் சுவாமிகளும் உள்ள புகைப் படத்தை பத்திரமாகப் பாதுகாத்துவரும் இந்த அம்மையார் தம் குடும்பத்திற்கும் பாடகச்சேரி சுவாமிகளுக்கும் உள்ள தொடர்பினை எனக்கு அளித்த பேட்டியில் இரண்டு சம்பவங்கள் மூலம் குறிப்பிட்டார்.

சுவாமிகளின் முக்திகுள மண்டபம் அமைந்துள்ள விஸ்தாரமான மனையை அவருக்கு தானமாக வழங்கிய ஸ்ரீமதி விசாலாக்ஷி கும்பகோணத்தில் அப்போது மிகவும் பிரபலமாக இருந்த வக்கீலும் மிராசுதாருமான எஸ். ஏ. சுவாமிநாத ஐயரின் ஸ்வீகார மகனான ஸ்ரீ வெங்கட் ராம ஐயரின் சகோதரி. சென்னையில் வக்கீலாக இருந்த புருஷோத்தம ஐயர் ஸ்ரீமதி விசாலாக்ஷியின் கணவர் சென்னை கிருஷ்ணா டைல்ஸ் உரிமையாளர் ஸ்ரீ ஏ.கே. ரெங்கநாதய்யர் அவர்களின் உறவினர். ரெங்கநாத ஐயரின் குடும்பத்தினரும் பாடகச்சேரி சுவாமிகளின் அன்பர்களே. புருஷோத்தம ஐயர் அகால மரணம் அடைய விசாலாக்ஷி கும்பகோணத்தில் தன் சகோதரர் வெங்கட்ராம ஐயர் வீட்டிற்குச் சென்று விட்டார். இவருக்கு இளம் வயதிலேயே ஆன்மிக ஈடுபாடு இருந்தது.



கும்பகோணம் டபீர் நடுத்தெருவில் முதலாம் எண் வீட்டில் மிகவும் வசதியாக வாழ்ந்து வந்தார் வெங்கட் ராம ஐயர். பல சங்கீத வித்வான்கள் அந்த வீட்டில் தங்கிச் செல்வார்கள். பாடகச்சேரி சுவாமிகளும் அங்கே வருவதுண்டு. அது 1924 அல்லது 1925 என்று நினைவு கூர்கிறார் விசாலாக்ஷியின் சகோதரர் மகள் டாக்டர் துர்கா, அப்போது சுவாமிகளின் அபிலாஷையை அறிந்த விசாலாக்ஷி முக்திக்குள மண்டபம் உள்ள விஸ்தாரமான மனையை தானமாக வழங்கினார். பின்னர் அவரது சகோதரர் வெங்கட்ராம ஐயர் அந்த மனையில் பெரிய முகப்பு மண்டபத்தையும் கூழ் சாலைக் கூடத்தையும் கட்டிக் கொடுத்தார்.

வட மாநிலங்களிலிருந்து வரும் சாதுக்கள் அங்கே தங்குவது வழக்கம். கும்பகோணத்தில் மேற்கத்திய பாணிக் கழிப்பறை கொண்ட முதல் கட்டடம் அதுவே என்கிற தகவலையும் ஒரு அன்பர் சொன்னார். அதிதி சாதுக்கள் வசதியாகத் தங்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார் பாடகச்சேரி சுவாமிகள் என்பதை உணர்த்தும் தகவல் இது. தான் தங்கியிருந்த இடங்களில் சுவாமிகள் தனக்கென அப்படிப்பட்ட எந்த வசதியையும் கேட்டுப் பெற்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் திருவொற்றியூரில் பட்டினத்தார் சந்நிதிக்கு போகும் வழியில் சின்னக் கட்டடமாயுள்ள

ராமலிங்க சுவாமிகள் மடத்திற்கு எதிரே இருந்த காலி மனையில் சுவாமிகள் கட்டடம் கட்ட விரும்பினார். கிங் கம்பெனியிடமிருந்து ஏலம் எடுத்த மனை அது. அதாவது தன் தமையனார் நிலத்தைக் கிரயத்திற்கு வாங்கி திரு வொற்றியூரில் குடியிருந்த தங்கவேல் முதலியாருக்குக் கொடுத்தார் என்று சொன்னார் ராயபுரம் பர்மா ஆயில் கம்பெனி கான்ட்ராக்டர் முனுசாமி முதலியார். தங்கவேல் முதலியாரை அவர் ஐந்து வயதிலிருந்து அறிந்திருப்பதால் அவரை அணுகி மனையை விலைக்குக் கேட்கலாம் என்றார். சுவாமிகள் இதற்கு உத்தரவு தர அவரிடம் இது பற்றிப் பேசினார். தங்கவேல் முதலியார் அம்மனையை விற்க முடியாது, கட்டடம் கட்டப் போகிறோம் என்றார். கட்டடம் கட்டக்கூடிய நிலையில் இல்லாவிட்டாலும் அவர் சுவாமிகளுக்கு நிலத்தைக் கொடுக்க முடியாது என்று பிடிவாதமாகச் சொல்லி விட்டார்.

நிலம் விஷயமாகப் பலதடவை முயற்சி செய்தும் பயனில்லை. குடும்பத்தினர் நிலத்தை சுவாமிகளுக்கே கொடுக்கவேண்டும் என்று விரும்பியும் தங்கவேல் முதலியார் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. இது சம்பந்தமாய் சூரா. லக்ஷ்மண செட்டியாரிடமும் ஏ.கே. ரெங்கநாத ஐயரிடமும் தனபால் முதலியார் தெரிவித்தார். எவ்வளவு கிரயமானாலும் வாங்கிக் கொடுப்பதென அவர்கள் விருப்பம் கொண்டிருந்தார்கள் தங்கவேல் முதலியாரோ கொடுக்க முடியாதென்று சொல்லிவிட்டார். இடையில் கொத்தவால்சாவடி மிளகாய்க்கடைக்காரர்கள் தம் சத்திரத்தை தானமாக சுவாமிகளுக்கு கொடுத்துவிட முன்வந்தார்கள். சுவாமிகள் அதற்கு சம்மதிக்கவில்லை, இப்படி ஒன்பது வருஷம் இழுபறியிலேயே கழிந்து விட்டது. ஒருநாள் முனுசாமி முதலியாரின் அண்ணன் பிள்ளைகள் தனபால் முதலியாரைத் தேடிவந்து தங்கவேல் முதலியார் குடும்ப நிர்பந்தம் காரணமாக மனையை விற்றுவிடப் போவதாகத் தகவல் சொன்னார்கள்.



இதை ராமசாமி பிள்ளையிடம் சொல்வதற்காக தனபால் முதலியார் அவர் கடைக்குப் போனார். ஒன்பது வருஷத்திற்கு முன்பு முயற்சி செய்த நிலத்தை உங்களைக் கொண்டு முடித்துத் தரவேண்டும் என்று சுவாமிகளிட மிருந்து கடிதம் வந்திருக்கிறது என்றார் ராமசாமி பிள்ளை. தானும் அது விஷயமாக வந்ததைச் சொல்லி நடந்த விஷயத்தை விளக்கினார் தனபால் முதலியார்.

ஒருநாள் தனபால் முதலியார் சைக்கிளில் வந்தபோது ராபின்சன் பார்க் ரயில்வே கேட் மூடப்பட்டு இருந்தது. கேட் திறக்கக் காத்திருந்தபோது பின்புறமாக யாரோ கை தட்டும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்த தனபால் முதலியாரை முனுசாமி முதலியார் காரிலிருந்தபடியே கூப்பிட்டுச் சொன்னார். “சில வருஷங்களுக்கு முன் யாரோ சாமியாருக்கு நிலம் வேண்டுமென்று கேட்டீரே, தற்போது அதை முடித்துக் கொள்ளலாம்,” என்றார். தனபால் முதலியார் விட்டுக்கொடுக்காமல் அந்தச் சமயம் சுவாமிகளுக்கு மனை வேண்டியிருந்தது. தற்போது தேவையா என்பதை விசாரித்துச் சொல்கிறேன் என்றேன். இது விஷயமாக யாராவது ஆள் அனுப்பினீர்களா என்று கேட்டார் முனுசாமி முதலியார். உங்கள் அபிப்பிராயம் தெரியாமல் நான் எப்படி அனுப்ப முடியும்? ஒருக்கால் பழனியாண்டி பிள்ளை வீட்டிலிருந்து யாராவது வந்தி ருக்கலாமோ என்றார். பரிச்சயம் இல்லாதவர்கள். எப்படி ஆள் அனுப்பியிருக்கக் கூடும் என்று தன் சந்தேகத்தைச் சொன்னார்.

வந்தவர் எப்படி இருந்தார் என்று கேட்டதற்கு. “உயரமாக, கையில் தடி வைத்துக்கொண்டு, மைசூர் தலைப்பாகை கட்டிக் கொண்டிருந்தார். “பெரியவாள் கேட்ட நிலத்தை வைத்துக் கொண்டிருக்காதே. கொடுத்துடு என்று சொல்லிவிட்டுப் போனார். அதில் ஏதோ சூட்சுமம் இருப்பதாகத் தோன்றுகிறது,” என்றார்.

இந்த விஷயங்கள் ராமசாமி பிள்ளை மூலம் சுவாமி களுக்குத் தெரிவிக்கப்பட்டது. கிரயம் கொடுத்து வாங்கி விட வேண்டியது மற்றதை வந்து பார்த்துக் கொள்கிறேன் என்ற சுவாமிகளின் பதில்படி பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப் பட்டது. ராமசாமி பிள்ளை தான் வாங்கி கொடுத்ததாக இருக்கட்டுமே என்று சொல்ல, எல்லாம் ஒன்றுதான் பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சுவாமிகள் ராமசாமி பிள்ளையிடம் பணத்தைக் கொடுத்து விட்டார். முக்திக்குள மண்டப மனையை எளிதில் தானமாகப் பெற்ற சுவாமிகளால் திருவொற்றியூர் மனையை ஒன்பது வருட காலம் காத்திருந்த பிறகே வாங்க முடிந்தது.

## சென்னையில் சுவாமிகள்

திருவொற்றியூரில் 1948 முதல் 1949 வரையிலும் அதற்கு முன் 1922 முதல் 1948 வரை கூழ்சாலை முக்திக்குள மண்டப வளாகத்திலும் சுவாமிகள் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறார் என்று தெரிகிறது. இடைப்பட்ட காலத்தில் பெல்லாரி, பெங்களூரு, செள்ளக்குருக்கி, சென்னை என்று பல இடங்களுக்குச் சென்று வந்திருக்கிறார்.

சுவாமிகளின் வற்புறுத்தலினால் கோயம்பேடுக்கு எதிரில் உள்ள பஞ்சமூர்த்திகள் அடங்கிய திருமங்கலம் என்னும் கிராமத்தை ஏ.கே.ரெங்கநாத ஐயர் கிரயத்திற்கு வாங்கினார். ஒரு கிராமத்தையே விலைக்கு வாங்க சந்தர்ப்பமும் பண வசதியும் அந்தக் காலத்தில் இருந்தது என்பது இப்போதைய நிலைமையைப் பார்ப்பவர்களுக்கு வியப்பாக இருக்கும். அந்த கிராமத்தில் கல் சூளை, மங்களூர் ஓடுகள், நெல், கரும்பு மற்ற தானியங்கள் ஆச்சர்யப்படும்படி இவருக்கு வருமானம் தந்தன. திருமங்கலம் கிராமத்தை வாங்கின பிறகு கிராமப் பிரவேசத்தை சுவாமிகளைக் கொண்டுதான் செய்ய வேண்டுமென்ற ரெங்கநாத ஐயரின் விருப்பத்திற்கு சுவாமிகள் இணங்கினார்.



சுவாமிகள் சென்னை வந்ததும் மயிலாப்பூர் ஏ.கே. ரெங்கநாதய்யர் தன் கிரகத்திற்கு அழைத்துகொண்டு செல்வது வழக்கம். திருப்புகழ் கோஷ்டிகள் சுவாமிகளை மத்தியில் உட்காரவைத்து திருப்புகழ் பாடுவார்கள் சுவாமிகளுக்கு ஆனந்தக் கண்ணீர் வரும் அதை இரண்டு கைகளினால் முகத்திலிருந்து அணைத்துக் கொண்டு போய் சிரசில் தேய்த்து கொள்வார். இச்சமயங்களில் நானும் பிடில் ஐயங்காரும் சுவாமிகளுடன் இருப்பதுண்டு. சூரா பிரதர்ஸூம் சுவாமிகளை காரில் அழைத்துப்போய் பங்களாவில் தங்கவைத்துக் கொள்வார்கள். மருந்துகளை செய்துகொடுக்கச் சொல்லி அவை பிறருக்கு உதவாதபடி பத்திரப்படுத்திக் கொள்வார்கள். வெகு தூரத்திலிருந்து அன்பர்கள் வந்தால் சுவாமிகளை உள்ளே வைத்துக் கொண்டு இல்லை என்பார்கள். அதனால் பிரயாசைப் பட்டு வந்தவர்கள் மனமுடைந்து வீடு திரும்புவது சுவாமி களுக்குத் தெரிந்தது. தேடி வருபவர்களுக்கு இல்லை என்று சொல்லக்கூடாதென எச்சரித்தார். சுவாமிகளின் வாக்கை நிறைவேற்றாமல் அவர்கள் தம் ஸ்வபாவம் போல் இல்லையென்று சொல்ல ஆரம்பித்தார்கள். இவர்கள் லலிதா விலாஸ் என்ற புதுபங்களாவைக் கட்டி சுவாமி களைக் கொண்டு கிரகப்பிரவேசம் செய்து மூன்று நாட்கள் சுவாமிகளை அங்கே வைத்துக் கொண்டார்கள். ரெங்கநாத ஐயர் கிராமப் பிரவேசத்திற்காக மயிலாப்பூரி லிருந்து பிரயாணப்படுவதாக கஞ்சிரா தக்ஷிணாமூர்த்தி பிள்ளை. பி. இராமஸ்வாமி பிள்ளை டாக்டர் டி. சபாபதி பிள்ளை இன்னும் அநேக பெரிய மனிதர்களும் ரெங்க நாத அய்யர் வீட்டில் காத்துக் கொண்டிருந்தார்கள் பகல் ஒரு மணி ஆகியும் சூரா சகோதரர்கள் வீட்டில் சுவாமிகளை போகக்கூடாது என்று பலவந்தபடுத்தியிருக் கிறார்கள். இதை எனக்குத் தெரிவித்த ரெங்கநாதய்யர் தந்திரமாய் அவரிடமிருந்து சுவாமிகளை அழைத்துவர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

சுவாமிகளின் திருவருளால் நான் சூரா வீட்டிற்குச் சென்றேன். போட்டோ எடுப்பதற்காக சுவாமிகளை

அழைத்துக்கொண்டு போகவேண்டியிருக்கிறது. சாயங் காலம் கச்சேரிக்கு கொண்டுவந்து விடுகிறேன் என்று நயமாகச் சொல்லி சுவாமிகளை அங்கிருந்து வரச் செய்தேன். பிறகு சுவாமிகள் கிராமப் பிரவேச கோஷ்டி யுடன் சேர்ந்து கொண்டார். அதிலிருந்து தான் தனி ஒருவன் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவன் அல்ல என்பதை உணர்த்தி விலகிக் கொண்டார்.

அந்த முகூர்த்தநாளில் கிராமத்திற்கு எதிரில் உள்ள பாதையிலிருந்து சுவாமிகளை இறக்கி ஆலவட்டம் பிடித்து வெண்சாமரம் வீசி வடலூர் ஆண்டவர் படம் சுவாமிகளின் படம் பலவகைப் பண்டங்கள் நிறைந்த தட்டுவரிசைகள் உள்பட திருப்புகழ் டி.எம். கிருஷ்ணசாமி ஐயர் அவரைச் சேர்ந்த கோஷ்டிகள் பழநியாண்டி பிள்ளை, இராமசாமி பிள்ளை டாக்டர் சபாபதி பிள்ளை கஞ்சிரா தக்ஷணா மூர்த்தி பிள்ளை, சௌந்தர்ராஜ ஐயங்கார், போட்டோ தனபால் உள்பட கிராமப் பிரவேசம் ஆனது. கொண்டு போன படங்களை ஸ்தாபிதம் செய்து திருப்புகழும் அருட்பாவும் பாட ஆரம்பித்தார்கள். அந்த சமயத்தில் கஞ்சிரா கையில் இல்லாமையால் மேளக்காரனின் தவுலை எடுத்து தக்ஷணாமூர்த்தி பிள்ளை பாடலுக்குத் தகுந்தபடி வாசித்து எல்லோரையும் பிரமிக்கச் செய்தார். பூஜை முடிந்த உடன் நைவேத்ய பிரசாதங்கள் வழங்கப்பட்டன இரண்டு விதமான போட்டோக்கள் எடுக்கப்பட்டன.

பூஜைகள் முடிந்ததும் நிவேதனப் பிரசாதங்களை வழங்கினார்கள். இந்த வைபவத்தின்போது சுவாமிகளின் இரண்டு விதமான தோற்றங்களை தனபால் முதலியார் காமிராவில் பதிவு செய்தார்.

சுவாமிகளின் திருவாக்கினால் திருமங்கலம் குடி ஜமீனுக்கு ஏ.கே. ரெங்கநாத ஐயரின் பெயர் சூட்டப் பட்டது. பஞ்சமூர்த்திகள் அடங்கிய சிலாரூபங்கள், லிங்கங்கள் புதையுண்டு இருக்கும் புனிதமான ஸ்தலம்



இது. உனக்கும் புதையல் கிடைக்கும். ஆதலால் ஆலயம் கட்டி பூர்த்தி செய்விக்க வேண்டுமென்று சுவாமிகள் ரெங்கநாத ஐயருக்குக் கட்டளையிட்டார். அதற்காக ஐயர் கும்பகோணத்திலிருந்து ஸ்தபதிகளை வரவழைத்து விக்கிரகங்கள் செய்ய உத்தரவு கொடுத்து விட்டார் விக்கிரகங்களும் பூர்த்தியாகிவிட்டன. அதாவது 1966 வாக்கில் ரெங்கநாதய்யருக்குச் சொந்தமான நிலத்தின் கணிசமான பகுதியை புதிய குடியிருப்பான அண்ணாநகரை உருவாக்க அரசாங்கம் மார்க்கெட் விலைக்கே எடுத்துக்கொண்டது. அது ரெங்கநாதய்யர் குடும்பத்துக்கு பெரிய லாபமானது. சுவாமிகள் புதையல் என்று சொன்னது அதுதானோ!

பிறகு சுவாமிகள் வேலாயுத முதலியார் வீட்டிற்கு வந்து ராமசாமி பிள்ளை அவர்கள் பங்களாவில் ஏழை களுக்கு உதவும்படி ஏராளமான மருந்துகளை முடித்து வைத்தார் ஒவ்வொரு மருந்து தயாரிப்பு முறையையும் சுவாமிகள் மனப்பாடமாகச் சொல்ல ஃபிடில் சௌந்தர் ராஜ ஐயங்காரும் பிள்ளைகளும் பெரிய புஸ்தகமாக எழுதி முடித்தார்கள். நானும் (தனபால் முதலியார்) கூடவே இருப்பதுண்டு இரவு பகலாய் அநேக மருந்துகள் புடம் போடுவதுண்டு கொம்பரக்குத் தைலமென ஒரு தைலத்தை காய்ச்சிப் பட்டிணத்தார் சுப்ரமண்யர் விக்ரஹங்களுக்கு அந்தத் தைலத்தினால் ஸ்நானம் செய்வித்தார் சுவாமிகள். இதனால் ஸ்நானம் செய்பவர் களுக்கு டைபாயிட் ஜுரம் முதலானது நிவர்த்தியாக வேண்டியதெனப் பிராத்தித்து விக்ரஹங்களுக்கு அபிஷேகம் செய்வித்து பட்டாடைகள் அணிவித்து சமாராதனை செய்வித்தார். இதற்கு ராமசாமி பிள்ளை உதவி செய்தார்.

ஒரு நாள் மயிலாப்பூரிலிருந்து ரெங்கநாத ஐயர் திருப்புகழ் கோஷ்டிகளுடன் சுவாமிகளை கபாலீஸ்வரர்

கோவிலுக்கு அழைத்துவந்து அர்ச்சனை செய்வித்து கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடந்து 60 வருஷத்திற்கு மேலாகிறது. பணம் வசூலித்துத் தருகிறோம். சுவாமிகள் வந்து முடித்து வைக்க வேண்டுமென விண்ணப்பித்துக் கொண்டார்கள். அதன்படியே கும்பாபிஷேகம் நடந்தது.

## ஹைகோர்ட் சுவாமிகள்

ஹைகோர்ட் சுவாமிகள் என்று அழைக்கப்பட்ட அப்புடு சுவாமிகள் சென்னை ஹைகோர்ட்டில் 'பங்கா' இழுத்துக் கொண்டிருந்தார். 'பங்கா' என்பது மின்சார விசிறி வருவதற்கு முன்பு இருந்த துணி விசிறி. பெரிய கூடங்களில் முக்கியஸ்தர்கள் அமரும் இடத்திற்கு மேலாக விதானத்தில் ஒரு கழியில் படுதா போன்று பல மடிப்புகள் கொண்ட துணி மாட்டப்பட்டிருக்கும். அந்த விதானத்தில் உள்ள உருளையில் முன்னும் பின்னு மாகச் செல்ல ஒரு கயிறு கட்டப்பட்டிருக்கும். தரையில் ஒருவர் கயிற்றைப் பிடித்து மேலும் கீழும் இழுத்தால் பங்கா என்ற அந்தத் துணி விசிறி அசைய, கீழே கூடத்தில் உள்ளவர்களுக்கு இதமாகக் காற்று வீசும். இழுப்ப வரின் வேகத்தையும் சாமர்த்தியத்தையும் பொருத்து காற்றின் வேகமும் திசையும் அமையும். பங்கா இழுப்ப தற்கென்றே அரசாங்க அலுவலகங்களில் சில ஊழியர்கள் இருந்தார்கள். அப்படிப்பட்ட வேலைகளைச் செய்து கொண்டிருந்தவரே அப்புடு சுவாமிகள்.

இவர் பெயர் யாருக்கும் தெரியாது. 'அப்புடு, அப்புடு' என்று சொல்லிக்கொண்டிருப்பார். அதனால் அப்புடு சுவாமிகள் ஆனார். ஒரு முறை உயர் அதிகாரி கூடத்தில் நுழைந்தபோது இவர் பங்கா இழுக்காமல் உட்கார்ந்த படியே தூங்கிக் கொண்டிருந்தார். இவரைக் கடிந்து கொள்ள அதிகாரி நினைத்தபோது பங்கா கயிறு தானாக இயங்கி, பங்கா விசிறிக் கொண்டிருந்தது. அப்போதுதான் இவரிடம் ஏதோ அமானுஷ்ய சக்தி இருக்கிறது என்பதை எல்லோரும் புரிந்து கொண்டார்கள். இவரோ எதைப் பற்றியும் கவலைப்படாமல் வாழ்ந்து வந்தார். யாரிடமும் எதுவும் பேசமாட்டார்.



இவரைப் பற்றித் தெரியவந்ததும் இவரைத் தன் மடத்துக்கு அழைத்து வர சுவாமிகள் ஒரு அன்பரை அனுப்பினார். அப்புடு வரவில்லை. பிறகு இன்னொரு அன்பரை அழைத்து "ராஜாதி ராஜ, வடிவாம்பிகை சமேத தியாகராஜ தியாகராஜ என்று சொல். வந்துவிடுவார்" என்று சொல்லியனுப்ப, இந்த வார்த்தைகளைக் கேட்டதும் மந்திரத்தால் கட்டுப்பட்டவராக அழைத்தவர் பின்னால் சென்று பாடகச்சேரி சுவாமிகளைச் சந்தித்து அவருடனேயே தங்கியிருந்து திருவொற்றியூர் மடத்தில் சித்தியடைந்தார் அப்புடு சுவாமிகள்.

வெகுசிலரால் மட்டுமே புரிந்து கொள்ளப்பட்டிருந்த அப்புடு சுவாமிகள் என்னும் ஹைகோர்ட் சுவாமிகளுக்கு தாம் ஒடுங்க விரும்பிய இடத்திலிருந்து பத்து அடி தொலைவில் ஒரு அதிஷ்டானம் அமைத்தார் பாடகச் சேரி சுவாமிகள். ஒரு ஞானியை இன்னொரு ஞானிதான் சரிவரப் புரிந்து கொள்ள முடியும். அந்த இடத்தைப் பெரிய நந்தவனம் ஆக்கவேண்டும் என்று எண்ணி யிருந்தார். அப்புடு சுவாமிகளின் சமாதிக்கான ஒவ்வொரு கல்லும், பாடகச்சேரி சுவாமியின் கைபட்டே தேர்வானது. இப்போது பாடகச்சேரியிலும் கும்பகோணம் முக்திக்குள மண்டபத்திலும் உள்ள வழிபாட்டு இடங்கள் எதிலும் சுவாமியின் திருமேனி வடிவம் இடம் பெற்றிருக்கவில்லை. உருவப் படங்களை வைத்தே வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

வள்ளலாருக்குப் பளிங்கில் உருவச்சிலை வைக்க வேண்டும் என்று பாடகச்சேரி சுவாமிகளின் உயிலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதன் அடிப்படையில் பாடகச் சேரி சுவாமிகளுக்கு அமர்ந்த கோலத்தில் பளிங்குக் கல் திருமேனியை வடித்து ஆராதனை செய்யவிருக்கிறார்கள்.

"இதற்காக, மூன்று இடங்களில் உத்தரவு கேட்டேன். கிண்டி சிவாலயம், திருவொற்றியூர் ஜீவ சமாதி, பாடகச் சேரி தியான மண்டபம். மூன்று இடங்களிலும் 'உருவ

வழிபாடு செய்யலாம்' என்ற உத்தரவு கிடைத்தது" என்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசுகிறார் தணிகாசலம்.

## திருவொற்றியூர் மடம்

தாம் ஒடுங்குவதற்காகவென்று முக்திக்குள மண்டபத்தில் அமர்ந்த நிலை சமாதிக்கான ஏற்பாட்டைச் செய்தார் பாடகச்சேரி சுவாமிகள். காற்று வருவதற்கு மட்டுமே வழி வைத்திருந்தார்கள். பாடகச்சேரி—யிலிருந்து கூழ் சாலை முக்திக்குள மண்டபத்துக்கு வந்த பிறகு நான்கு ஆண்டுகளில் தமக்கு ஒடுக்கம் வரும், உணர்வுகள் அடங்கும் என்று முன்கூட்டியே அறிந்திருந்தார் சுவாமிகள்.

சுவாமிகள் தம் அவதாரத்தின் நிறைவுப் பகுதியில் ஜீவசமாதியாக அமர்ந்து கொள்வதற்காக முக்திக்குள மண்டபத்தில் கட்டப்பட்ட சமாதிக் கூடத்தின் மேலே ஒரு கல் பலகையை அமைத்திருக்கிறார். கல் உருளைகளின் மீது அது இயங்கும், உள்ளே இறங்கியதும் சுவாமிகளே நகர்த்தி மூடிக் கொள்ளும்படி அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் சுவாமிகள் இங்கே சித்தியடையவில்லை. தருமமிகு சென்னையில் திருவொற்றியூரில் சித்தியடைந்தார்.

சுவாமிகள் நீண்ட காலம் அருள் சுரந்த கும்பகோணம், பாடகச்சேரி வட்டாரத்தை விட்டுவிட்டுத் திருவொற்றியூரில் சமாதியானாரே என்று பக்தர்கள் ஏக்கத்துடன் நினைத்துப் பார்த்தபோது ஒருவர் கனவில் சுவாமி சொன்னார்: "கூடு மட்டுமே அங்கே கிடக்கிறது; ஜீவன் இங்கேதான் இருக்கிறது!"

'கூடு மட்டும்' என்று சுவாமிகளே சொல்லிவிட்டதனாலோ என்னவோ திருவொற்றியூர் மடத்தினுள்ளே சில குடக்கூலிக்காரர்கள் இருப்பது அந்த இடத்திற்கான தெய்வீகத்திற்குக் குந்தகமாக இருக்கிறது.

கும்பகோணம் முக்திகுள மண்டபத்தைச் செலவு செய்து சீரமைத்துவிட முடியும். திருவொற்றியூர் மடத்தையும் அப்படிச் செய்ய முடியும். அதற்கு ஆங்காங்கே ஒருவரோடொருவர் தொடர்பில்லாத பாடகச்சேரி சுவாமிகளின் பக்தர்கள் ஒன்று திரண்டு வாடகைதாரர்களை சட்டப் பூர்வமாக காலி செய்துதரச் சொல்லி அதிர்ஷ்டான வேலையைப் பூர்த்தி செய்வித்து, ஒரு நந்தவனமாக ஆக்கி, அதையும் ஒரு வழிபாட்டுத் தலமாக்க வேண்டும் என்பது என் அவா.



"கல் கட்டடங்களில் எந்த சாந்நித்தியமும் இல்லை. அங்குள்ள மகான்களின் ஆன்ம சக்தியே நமக்கு அமைதி தருகிறது. ஒரு மகான் தம்முடைய காலம் முடிந்த பிறகு அவர் இன்னொரு மகானாக அவதரிப்பார். மகான்களுக்குக் கர்மபலன் என்பது கிடையாது. ஆன்மா உடல் கூட்டைவிட்டு வெளியேறி எங்காவது சுற்றிக் கொண்டிருக்கும். அந்த சாந்நித்தியம் உள்ள இடத்தில் தெய்வீகமான அதிர்வுகள் நிலைகொண்டிருக்கும். பாடகச்சேரிக்குப் போனபோது அந்த அதிர்வுகளை உணர்ந்தேன். நினைத்ததெல்லாம் நிறைவேறி மனஅமைதி கிடைத்தது" என்கிறார் அன்பர் தணிகாசலம்.

எட்டு வாரங்கள் தொடர்ந்து வழிபட வேண்டும் என்று திட்டமிட்டார் தணிகாசலம். திருவொற்றியூர் பாடகச்சேரி சுவாமிகள் சமாதியில். பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை, சிவராத்திரி, மாதப்பிறப்பு, தவிர வியாழக்கிழமைகளில் வழிபாடு நடைபெற்றது. எட்டாவது வாரம் திட்டமிடாமல் சென்றது குருபூஜை நாளாக அமைந்தது. அன்று வியாழக்கிழமை, பூர நக்ஷத்திரம்.

முதல் வாரம் பத்து அன்பர்களோடு தொடங்கிய வழிபாடு எட்டாம் வாரத்தில் நானூறு பேர் அளவுக்கு ஆனது. கடைசி வாரத்தில் சோகம் கப்பிய முகத்தோடு ஒரு பெண்மணி அங்கு வந்திருக்கிறார். ஏன் அப்படி இருக்கிறார் என்று கேட்டபோது திருமணம் ஆகிப் பதினோரு வருஷங்களாகியும் குழந்தைப்பேறு இல்லை என்று சொல்லி வருந்தியிருக்கிறார் அவர்.

"அடுத்த வியாழக்கிழமை வா அம்மா" என்று அந்தப் பெண்மணியிடம் சொன்னார் தணிகாசலம். அதன்படி வந்த பெண்மணியிடம் பூவும் வெண்ணெய்ப் பிரசாதமும் தந்திருக்கிறார். மூன்று மாதம் கழித்து தான் கருவுற்று இருப்பதாக அந்தப் பெண்மணி தொலைபேசியில் மகிழ்ச்சியோடு சொன்னாராம், அந்த வெண்ணெய்ப் பிரசாதம் முதல் வாரம், மானாமதுரையில் நடைபெற்ற ஒரு சதசண்டி ஹோமத்தில் கலந்து கொண்டபோது தணிகாசலத்திற்குக் கிடைத்தது.

"சந்தோஷம் அம்மா. ஆண் குழந்தை பிறந்தால் அதற்கு ராமலிங்கம் என்று பெயர் வைக்கிறாயா?" என்று கேட்டிருக்கிறார் தணிகாசலம். மகிழ்ச்சியுடன் இசைந்தார் அந்தப் பெண்மணி. "நம்பிக்கையோடு வருகிறவர்கள் சமாதியை அமைதியாக வலம் வந்து அருள் பெறுகிறார் கள்" என்கிறார் இவர். "சுற்றுலாப் பயணிகள் போல் பாடகச்சேரிக்கும், சுவாமிகள் தொடர்புடைய மற்ற இடங்களுக்கும் சென்று வருவதில் பயனில்லை. 'சுவாமிகள் குறையைத் தீர்ப்பார். நமக்கு அருள் செய்வார்' என்னும் நம்பிக்கையோடு வருகிறவர்களுக்கு அவரது ஆசிர்வாதம் எப்போதும் கிடைக்கும்" என்று குறிப்பிடு கிறார் தணிகாசலம்.

## திருவொற்றியூரில் ஒரு கலைக்கூடம்!

சிவாலய வடிவில் உள்ள அப்புடு சுவாமி சமாதி, பாடகச்சேரி சுவாமிகளின் சமாதி இரண்டுக்கும் கோபுரங்கள் உள்ளன. கலசம் இடம் பெறவில்லை. இரண்டு சமாதிக் கோயில்களிலும் கருவறைகளில் சிவலிங்கம் மட்டும் இடம் பெற்றிருக்கின்றன. நுழை வாயிலின் இடப்புறம் விநாயகருக்கும், வலப்புறம் தண்ட பாணியாக முருகனும், எதிரே நந்தி மேடையும் உண்டு.இரண்டும் ஏறக்குறைய ஒரே மாதிரி கிழக்கு நோக்கிய சந்நிதிகள். கருவறைக்கு வெளிப்புறம் உள்ள புழைகளில், கோஷ்ட தேவதைகளாக விநாயகர், தக்ஷிணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரும்மா, துர்க்கை இடம் பெற்றிருக்கிறார்கள்.



தினம் ஒருமுறை அர்ச்சகர் பூஜை செய்த பிறகு கதவைப் பூட்டிவிடுகிறார்கள். பக்தர்கள் வந்தால் திறந்து வழிபட வசதிசெய்து தருகிறார்கள். பாடகச்சேரி சுவாமிகள் இங்கே தங்கியிருந்தபோது நடராஜ பிள்ளை உடன் இருந்து கவனித்துக் கொண்டிருந்திருக்கிறார். சுவாமிகள் திருவொற்றியூரில் உள்ள இந்த மடத்துக்கு வந்த பிறகு தைப்பூச நாளில் மூன்று நாட்கள் அன்னதான வைபவம் நடத்த ஆரம்பித்தார். இன்றளவும் மூன்று நாள் விழாவாகத் தைப்பூச ஜோதி தரிசனம், அன்ன தானம் இரண்டும் நடைபெறுகின்றன. முதல் நாள் கொடியேற்றம். மூன்றாம்நாள் கொடியிறக்குதல். மூன்று தினங்களிலும் அன்னதானம் நடைபெற்றாலும் ஜோதி தரிசனத்தன்று மட்டும் ஆயிரம் பேருக்குமேல் அன்ன தானப் பிரசாதம் பெற்று மகிழ்கிறார்கள்.

அப்புடு சுவாமிகள் எனப்படும் ஹைகோர்ட் சுவாமிகள் சித்தியடைந்த பங்குனி உத்தர நாளும், பாடகச்சேரி சுவாமிகள் சித்தியடைந்த ஆடிப் பூரமும் விசேஷமானவை.

வளாகத்தின் நுழைவாயிலில் வடக்குப் பார்த்து அமைந்துள்ளது பாடகச்சேரி மடம். விசாலமான பிரார்த்தனைக் கூடம். நுழைவாயிலுக்கு நேரே வடலூர் வள்ளலாரின் திரு உருவப்படம் அழகான வேலைப் பாடமைந்த பிரபைக்கு மத்தியில் இடம் பெற்றிருக்கிறது. வள்ளலாருக்கு வலப்புறத்தில் அப்புடு சுவாமிகளும், இடப்புறத்தில் பாடகச்சேரி சுவாமிகளும் சிறிய உருவப் படங்களில் காட்சி தருகிறார்கள்.

ஆனால் வள்ளலாருக்கு இடப்புறச் சுவற்றின் மேல் பகுதியில் பாடகச்சேரி சுவாமிகளின் வலப்புறச் சுவரின் மேல் பக்கத்தில் எரிதாதா சுவாமிகளின் மிகப்பெரிய ஆயில் பெயின்டிங் ஓவியங்கள் உள்ளன. வள்ளலார் சன்னதிக்கு இடப்புறம் உள்ள அறை வெகு பவித்திர

மானது. இங்கேதான் பாடகச்சேரி சுவாமிகள் பயன் படுத்திய பொருட்களான குடுவை, கமண்டலம், பைரவர் முகம் உள்ள கைத்தடி எல்லாவற்றையும் பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். தவிர சுவாமிகள் ஆராதனை செய்த சிவலிங்கம், பழனியாண்டவர் விநாயகர் உருவச்சிலை களும் வள்ளி தெய்வானை சமேதரான முருகன் திரு மேனியும் அழகாக ஒரு மேடையில் இடம் பெற்றுள்ளன. இவற்றுக்கு முன்புறம் உள்ள ஓர் இருக்கையில் சுவாமிகள் பயன்படுத்திய வடலூர் வள்ளலார் அருளிய புராதன மான நான்கு திருவருட்பா தொகுதிகளை பூஜைப் பொருட்களாக வைத்திருக்கிறார்கள்.

நடராஜ பிள்ளையின் தகப்பனார் பழனியாண்டி பிள்ளைக்கு நாகூர் ஆண்டவர் மீதும் ஈடுபாடு இருந்ததால் சந்தனப் பேழை ஒன்றையும் அந்த இருக்கையின் ஒரு புறம் வைத்திருக்கிறார்கள். 'நாகூரில் நடக்கும் சந்தனக்கூடு உற்சவத்தின்போது தாத்தாவுக்கு விசேஷ மரியாதை செய்வார்கள்' என்று நினைவு கூர்கிறார் மீரா அம்மை யாரின் மகன் ராஜவேலு.

மடத்தின் நுழைவாயிலின் இடப்புறம் உள்ள அறையில்தான் பாடகச்சேரி சுவாமிகள் தங்கியிருந்தார். உள்ளே தெய்வீக மணம் கமழ்கிறது. சுவாமிகள் அமர்ந் திருந்த ஈஸிசேர், பழுதடைந்துள்ளது. ஆளுயர நிலைக் கண்ணாடியும் இருக்கிறது. நிலைக்கண்ணாடி முன் அமர்ந்து சுவாமிகள் தியானம் செய்வார் என்று பலர் பதிவு செய்துள்ளனர். ஒரு புறம் சுவாமிகள் அமர்ந்து கொள்ளும் பெரிய ஆசனப்பலகையும், எழுதப் பயன் படுத்திய சாய்வு மேஜையும் உள்ளன. நுழைவாயிலின் முன்னால் சுவாமிகளின் அமர்ந்த திருக்கோலப் புகைப் படம் இந்த அறையில் மேற்கு பார்த்த அலங்காரமான பிரபையில் இருக்கிறது.

தைப்பூச ஜோதி தரிசனம் அழகானது. சுவாமிகள் பயன்படுத்திய தண்டபாணி முருகன் திருமேனியும் வடலூர் வள்ளலார் திருமேனியும் வெளியே எடுத்து



வரப்பட்டு சத்திய ஞானசபைக் கட்டடத்தில் வடக்கு நோக்கி எழுந்தருள வைக்கப்படும். ஒரு பெரிய இரும்புக் கடாயில் நெய் நிரப்பித் திரிகளோடு கொண்டு வந்து எதிரேயுள்ள துளசிமாடம் போன்ற பெரிய உயரமான மேடையில் கடாய் தீபத்தை ஏற்றுவார்கள். உடனே பழனியாண்டவர் திருமேனியும் வள்ளலார் திருமேனியும் இந்த ஜோதி தீபத்தை மும்முறை வலம் வருவார்கள். அப்படியே பழனியாண்டவரை மடத்துக்கு உள்ளே கொண்டுபோய் விடுவார்கள். அதன் பிறகு வள்ளலார் திருமேனியை மட்டும் மடத்தைச் சுற்றி மும்முறை வலமாக எடுத்து வருவார்கள்.

தைப்பூசத்தன்று இரவு ஏழரை மணிக்கு ஏற்றி வைக்கப் படும் தீபஜோதி மறுநாள் காலை நாலரை அல்லது ஐந்து மணிவரை எரிந்து கொண்டிருக்கும்.

தீப ஜோதி மேடைக்குப் பக்கத்தில் உள்ள சத்திய ஞானசபை மண்டபம் வெகு அழகாக இருக்கிறது. மையப் பகுதியில், கும்பகோணம் முக்திக்குள மண்டபத்தில் உள்ளது போல் கருங்கல் ஜீவ சமாதிக் கட்டடம். சுற்றிலும் பன்னிரண்டு தூண்கள். அடிப்பகுதியில் உயரமான தாமரை மலர் போன்ற பீட வடிவமைப்பு. மேல்புறம் கொடுங்கைகள். தாமரை மலர் வேலைப்பாடுகள். வெளிப்புறத்தில் இருபது பெரிய உயரமான சதுரத் தூண்கள் உள்ளன. இவற்றின் அடிப்பகுதியில் மூன்றடி உயரத்துக்கு அறுபத்து மூன்று நாயன்மார்களின் திருமேனிகளை அழகான சிற்பங்களாக வடித்து, ஒவ்வொன்றின் கீழேயும் அவர்களின் திருநாமங்களைப் பொறித்திருக்கிறார்கள். இவர்களைத் தவிர, விநாயகர், முருகன் திருமேனிகளும் உண்டு. இந்த அழகான சிற்பங்களில் சில பின்னமடைந்திருக்கின்றன. இவை விரைவில் சீரமைக்கப்படுவது நல்லது. இப்போது சுவாமிகளின் சித்தப்படி ட்ரஸ்டிகள் அதிஷ்டானங் களைச் சீரமைத்து வருகிறார்கள். கும்பகோணத்தில் இந்தப் பணி தொடங்கியிருக்கிறது. திருவொற்றியூரிலும் விரைவில் தொடங்கும் என்று எதிர்பார்க்கலாம்.

சுவாமிகள் சித்தியடைவதற்குச் சில காலத்துக்கு முன், தன் அன்பர்கள் ஒவ்வொருவர் வீட்டுக்கும் போய், "நாட்டின் எதிர்காலம் நன்றாக இல்லை. ஏமாற்றுதல், பித்தலாட்டம், பொய், மோசடி, கொலைகள் முதலிய வேண்டாத காரியங்களாக நடக்கப் போகிறது. அதை நான் இருந்து பார்க்க வேண்டாம். ஆதலால் நான் மறையப் போகிறேன். ஆனால், என்னை நம்பி இருப்பவர்களிடம் என்றும் நான் இருப்பேன். என்னை அவர்கள் நம்பும் அளவுக்கு நானும் அவர்களுக்கு வேண்டியதைச் செய்வேன்! என்று சொன்னதோடு "உங்களுக்கு இப்போது என்ன வேண்டும்?" என்றும் கேட்டு வந்தார்."

அப்போது சில அன்பர்கள் சுவாமிகளிடம் 'என்ன வேண்டும் என்று எங்களுக்குத் தெரியாது. எங்களுக்கு என்ன வேண்டும் என்பது தங்களுக்குத்தான் தெரியும்' என்று சொல்ல, 'சரி... வேண்டும்போது வேண்டியதைச் செய்கிறேன்!' என்று ஆசிர்வதித்தார் சுவாமிகள். அதே போல நன்மைகள் செய்துகொண்டு வருகிறார்கள்.

சுவாமிகளின் நினைவைப் போற்றும் ஒரு வழியாக என்போன்ற பக்தர்கள் மனக் கண்களில் விரியும் காட்சி: அதிஷ்டானங்களில் பசுமை தவழும் நந்தவனம், மூலிகைத் தோட்டம், ஒரு தியானக்கூடம் சமய ஆன்மிக நூல்கள் கொண்ட நூலகம், சமயச் சொற்பொழிவுகள் நிகழ அரங்கம், தேவார, திருவாசக வகுப்புகள் நடைபெற அறைகள். ட்ரஸ்டிகளும் பக்தர்களும் விரைவில் இவற்றை உருவாக்குவார்கள் என்று நம்புகிறேன். அது நம் பழமையை, பாரம்பர்யத்தை மறு தலைமுறைக்குக் கொண்டு போகும் கடமை. அதுவே பாடகச்சேரி சுவாமி களுக்கு நாம் செலுத்தும் காணிக்கையுமாகும். அதற்கும் 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்றபடி பாடகச்சேரி சுவாமிகளே திருவருள் கூட்டவேண்டும்.

திருச்சிற்றம்பலம்.



# கும்பகோணம் வீர சைவமடம்

கும்பகோணம் வீர சைவமடம் அருணகிரிநாதர் காலத்துக்கும் முற்பட்டது. வீரபத்திர சுவாமிகள் என்பவர் மடத்தின் முதல் ஆதீனமாக இருந்திருக்கிறார். மடத்தின் நான்காம் ஆதீனத்தின் அதிஷ்டானம் இங்கே இருக்கிறது. வீரசைவ மடத்தைச் சேர்ந்தவர்கள் 'லிங்காயத்' என்ற சைவசமயப் பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்களின் தாய்மொழி கன்னடம். இன்றைக்கும் இந்த சைவ மடத்தின் பீடாதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் கர்நாடக மாநில லிங்காயத்கள் சங்கத்திடமே இருக்கிறது.

முதன் முதலாக லிங்கத்தைத் தரித்துக் கொள்ள விரும்புகிறவர்கள் சுவாமியின் முன்னால் பங்குனி மாதம் ரோகிணி நக்ஷத்திரத்தன்று ஒரு குழுவாக அமர்ந்து லிங்கத்தை அணிந்து கொள்வார்கள். இந்தத் திருமடத்தில் சுவாமிகள் எழுந்தருளுகிற பீடம் பல நூற்றாண்டுகள் பழைமையானது. திருவாரூர் தியாகேசர் அமரும் பீடமும் இந்தப் பீடமும் ஒரே அளவிலானது என்கிறார் மடத்தின் நிர்வாகியான பன்னீர்செல்வம்.

அந்த நாட்களில் தமிழ் நாட்டின் வீரசைவ மடங் களில் மிகவும் பெரியது இந்த மடம். அதனாலேயே இது 'பெரிய மடம்' என்று சொல்லப்படுகிறது. இது புகழ் பெற்ற கும்பகோணம் மகாமகக் குளத்தின் கரையில், திருக்குளத்தை நோக்கி அமைந்துள்ளது.

எளிமையும் புனிதமும் நிறைந்த இந்த மடத்தின் ஏஜெண்டாக இருந்த பண்டிட் வீர. குமாரய்யா 'செள்ளக்குரிக்கி ஸ்ரீ எரிதாதா சுவாமிகள் என்கிற மகா சிவயோகியின் வாழ்க்கைச் சுருக்கம்' என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டார். கன்னடத்திலிருந்து அதை மொழிபெயர்த்த பண்டிட் வீரகுமாரய்யாவுக்கு நன்றி தெரிவித்து அந்தச் சிறு புத்தகத்தின் முக்கிய தகவல்களை இங்கே தருகிறேன்.

## பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகளின் குருநாதரான

# எரிதாதா சுவாமிகளின் வரலாறு

ஸ்ரீ சச்சிதாநந்த சொரூபனாயும் சர்வ வியாபகப் பொருளாயும் பேரொளி வடிவாகவும் விளங்குகின்ற பரமேசுவரனுடைய அருளாணையினால் ஆஸ்திக தருமங்களைப் புலப்படுத்த பாரத நாட்டில் ஆங்காங்கு மகான்கள் பல சமயங்களில் அவதரித்திருக்கிறார்கள். அவர்கள் பல அற்புத மகிமைகளைக் காட்டி மக்களை பக்தி மார்க்கத்தில் ஒழுகச் செய்திருக்கிறார்கள், அவர்களுள் ஒருவர் கர்நாடகத்தைச் சேர்ந்த ஸ்ரீ எரிதாதா சுவாமிகள்.

இவ்வகைப் பெரியார்களின் நாடு, நகர், பெயர், குலம், கோத்திரம் முதலியவை ஜீவிய காலத்தில் விசாரிக்கப் படுவதில்லை. அவர்களது அற்புத சக்தியையும் ஞான நிலையையும் சமகால மக்கள் பாராட்டுவார்கள். அவர்கள் பற்றிப் பிற்காலத்தில் புராணிகர்கள் எழுதத் தொடங்கி நாடு, நகர், குலம், கோத்திரம், தாய், தந்தை பேர் முதலிய வற்றைக் கற்பித்து எழுதுவார்கள். புறச் செய்திகளைப் பொருட்படுத்தாமல் பெரியோர்களின் பக்தி ஞான யோக நிலைகளையும் அவர்களிடம் நிரம்பியிருந்த சாந்தி முதலிய நற்குணங்களையும் நாம் பின்பற்ற வேண்டும்.

## ஏது குலம்? ஏது பெயர்? யாது ஊர்?

ஸ்ரீ எரிதாதா சுவாமிகளுடைய தாய் தந்தையர், பிறந்த நாடு, படைத்த பெயர், குலம் முதலியவற்றை இதுவரை யாரும் அறிந்து கொள்ள முடியவில்லை. அவர்களை நேரில் தரிசித்து பழகிய சிலர் இப்போதும் இருக்கிறார்கள். அவர்களும் அவர் யார் என்று இது வரையும் அறிந்து கொண்டதில்லை. பரம்பொருளில் நாட்டம் செலுத்தி உலகியலை மறந்து நிற்கிற நிலையில் உள்ள ஸ்ரீ எரிதாதா சுவாமிகளின் உயர்ந்த நிலையை, பாசபந்தத்தில் சிக்கிச் சுழன்றுழல்பவர் அறிய முடியாது.



ஸ்ரீ எரிதாதா அவர்கள் செள்ளக்குரிக்கி கிராமத் திற்கு 1897 (ஹேவிளம்பி வருடம்) எழுந்தருளினார்கள். செள்ளக்குரிக்கியில் 25 வருடம் வாழ்ந்திருந்து 1922 ஜேஷ்ட மாதம் பூர்வபக்ஷம் 4—ல் ஜீவசமாதி அடைந்தார்கள். இவர் சில அற்புதங்கள் செய்தார்கள். நற்பணி செய்வித் தார்கள். ஸ்ரீ மகாபலேஸ்வரப்பா பல்லாரி அவர்கள் ஸ்ரீ சுவாமிகளின் மடாலய ஆவரணத்திற்குள் இறை நீர்க்கேணியொன்றை அமைத்துள்ளார்கள். முன்பு நீர் வசதிக்காகப் பலர் பலமுறை நீர்நிலையை உண்டாக்க முயற்சித்தும் அது பயனளிக்காமற் போயிற்று. ஆனால் இவரது புண்ணியத்தாலும் ஸ்ரீ எரிதாதாவின் அருளாலும் இந்தக் கிணறு இப்போது எல்லோருக்கும் பயன்படுகிறது.

ஸ்ரீ கே. எம். பல்லாரி கரிபசவ சாஸ்திரிகள் ஸ்ரீ எரிதாதா சுவாமிகளுடைய சரித்திரத்தை வசனரூபமாகவும், லாவணி ரூபமாகவும் 1949ல் எழுதியுள்ளார்கள். ஸ்ரீ எரிதாதா சுவாமிகள் செள்ளக்குரிக்கிக்கு வந்த சில ஆண்டுகளில் எந்த நாட்டவர் எவ்வூரவர் எக்குலத்தவர் என்று பிறரால் அறியப்படாத எங்கும் சஞ்சரிப்பாரான 'திக்கையர்' என்பவர் வந்து சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது 30 அல்லது 35 இருக்கலாம். தெலுங்கு மொழியிலும், கன்னட மொழியிலும் சுலபமாகப் பொருள் விளங்க ஞானபரமான பாடல்களைப் பாடும் கவித்துவ சக்தி உள்ளவராக விளங்கினார் அவர். பக்தர்களுடைய சகாயத்தினால் ஒரு மடாலயத்தைக் கட்டி அதன்கண் ஸ்ரீ எரிதாதா சுவாமிகளை எழுந்தருளச் செய்து, நித்ய பூஜை தசோகம் முதலியவற்றை ஏற்பாடு செய்தார்.

ஸ்ரீ எரிதாதா சுவாமிகளின் உணவு, உடை, சொல், செயல் அவருடைய நித்ய வாழ்க்கை காண்போருக்கு வியப்பை உண்டாக்கின. குழந்தையாகவும் பேதையாக வும் காணப்பட்டார். மகான்கள் பாலன், உன்மத்தன், பைசாசம் போன்றும் காணப்படுவார்கள் என்ற அனுபவ மொழி எரிதாதா சுவாமிகளிடத்தும் புலப்பட்டது. பசி, தாகம், தூக்கம் என்பவையின்றி, மானம், அவமானம்,

பயம், வெட்கம் முதலிய வெளிப்பாடுகளில்லாமல், பகல், இரவு, நகரம், காடு போன்ற வேறுபாடுகள் சிறிதும் இல்லாமல் பித்தனாக, பித்தர்களுக்கே உரிய செயலில், சொல்லில் நாட்டம் கொண்டிருந்தார்.

இத்தகைய பெரியோர்களின் உண்மை நிலை யறியாது பைத்தியக்காரனென்றே பரிகசிக்கும் பெரும் பைத்தியக்காரர்களும் பலர் இருக்கிறார்கள் அல்லவா! எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ என்று அவர்கள் ஐயுறுவார்கள். யாரிடத்தில் என்ன ஞானம் மகிமை யிருக்கும் என்று தெரிந்துகொள்ள வல்லவர்கள் எத்தனை பேர்? ஞானப் பித்தர்களின் செயல்களால் வெறுப் படையாமல் இவர்களுக்குச் சேவை செய்து இவர்களது அன்புக்குப் பாத்திரமாகின்றவர்களும் இருக்கின்றார் களல்லவா? அஃது அவரவர் புண்ணிய விசேஷம்.

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரைப் பார்த்து, இவன் மாறுபட்டவன், பைத்தியன், வீணன் என்று தன் இளமைப் பருவத்தின் செறுக்கால் இகழ்ந்துரைத்த நரேந்திரர் பின்னர் பரமஹம்சரின் பேரருளால் விவேகாநந்தராகி பாரதத்தின் தத்துவ சாஸ்திர வித்தகராக அயல் நாடுகள் சென்று சமயப் பிரசாரம் செய்து புகழ் அடைந் தாரல்லவா? கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னும் பின்னும் சைவ சமயஸ்தாபகனாக, ஆச்சாரியாராக விளங்கிய மாணிக்கவாசகர் முதலிய பரமஞானிகளுக்கும் ஆறாம், ஏழாம் நூற்றாண்டுகளில் ஸ்ரீ திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் முதலிய சைவ ஸ்தாபகர்களுக்கும், 11, 12—வது நூற்றாண்டுகளில் அவதரித்த ஸ்ரீ பழைய மல்லைய்யா தேசிகேந்திர சுவாமிகள் முதலிய பரமாச்சாரியார்களுக்கும் சேர சோழ பாண்டிய நாடும் தலைநகராகிய மதுரை திருப்பெருந் துறை, சிதம்பரம், குடந்தை முதலிய இடங்களும், ஸ்ரீ பசவண்ணர் முதலிய சிவசரணர்களுக்குக் கல்யாணபுரியும் 15வது நூற்றாண்டில் விஜயநகரமும் அற்புத சக்தியைத் தோற்றுவித்ததற்கு இடமாக விளங்கியதுபோல 19வது



20வது நூற்றாண்டின் நடுவில் பல்லாரி மாவட்டமும் சரணர்களின் லீலா வினோதங்களுக்கு இருப்பிடமாக விளங்கியது. பல்லாரி ஸ்ரீ மரிசுவாமிகள் சக்கரெகரெடப்பா, கொடூர் பசவேஸ்வரர், எம்மிகனூர் ஜடியப்பா, நாயகன ஹட்டி திப்பேருத்தர சுவாமிகள், கவி சித்தேஸ்வரர், கூள்யம் காதிலிங்கப்பா, ஆதவானி லக்ஷ்மியம்மா, ஹுப்ளி சித்தாரூரட் சுவாமிகள் முதலிய மகாமஹிமர்கள் தங்கள் லீலாவிநோதங்களால் நாட்டின் மக்களின், முன்னேற்றத் திற்கு அனுக்கிரக சக்திகளாகி விளங்கினார்கள்.

இத்தகைய சமயத்திலேயே பல்லாரி மாவட்டத்தின் சிறு கிராமமாகிய செள்ளக்குரிக்கிக்கு ஸ்ரீ எரிதாதா சுவாமிகளின் வரவு நேர்ந்தது. இவர் எந்தப் பக்கத்தவர் என்பது தெரியாது. ஆனால், இந்தப் பகுதியைச் சேர்ந்தவர் மாத்திரம் அல்லவென்று சொல்லலாம். ஏனெனில் நம் பகுதியைச் சேர்ந்தவராயிருந்தால், இவரைப் பற்றிய வரலாற்றைச் சிலராவது அறிந்திருத்தல் கூடும். இந்த மகான் சில சமயங்களில் தமக்குத்தாமே பேசிக் கொண்டி ருந்த கன்னட மொழியின் நடையைக் கொண்டு மைசூர் மாநிலத்தவர் என்று ஊகித்து அறியலாம்.

இப்பெரியவர் ‘ரங்கா, ரங்கா!’ என்று சொல்லிக் கொண்டிருந்ததிலிருந்து, அந்த ரங்கன் அவருடைய குரு அல்லது குலதெய்வம் என்று சிலர் கருதுகின்றனர். இதனால் சிலர் இவர் பிராமணர் என்றும், சிலர் லிங்க வந்தர் என்றும் யூகத்தால் கற்பித்தார்கள். இவர் ‘ரங்கா’ என்று அழைக்கும்போது இஷ்ட லிங்கத்தை அர்ச்சிக்கின்ற பாவனையில் இடது கை கொண்டு அழைக்கும் தோரணை யிலிருந்து லிங்கவந்தராக இருக்கலாமே என்றும் நம்பு கின்றனர். யாருடைய ஆராய்ச்சி, குறி, தடை, விடை களுக்கும் நில்லாது எதிலும் பற்றில்லாத ஆத்மாவாகி, ஜாதி, மதம், நடை முதலிய அடையாளங்களின்றி எல்லாம் தாமாகவே எல்லா மதத்தவர்களும், எல்லா சாதியவர்களும், பக்தியினால் படைத்த பதார்த்தங்களை

உண்டு வந்தார் சுவாமிகள். செள்ளக்குரிக்கிக்கு வரும் முன்னரே சில இடங்களில் சில அற்புதங்களைச் செய்தார் என்று சொல்லப்படுவதிலிருந்து, கல்யாண துர்க்கம், பௌகுப்பே, முஷ்டூர், உரவகொண்டா, வெலுகொண்டா, சீகலகுரிகிகளில் இருந்தார் என்பதும், அங்கேயும் சில அற்புதங்களைச் செய்து காட்டினார் என்பதும் தெரிய வருகிறது.

## இறந்த பருந்து பறந்தது

ஒரு கிணற்றில் மூழ்கி மற்றொரு கிணற்றில் எழுவது, ஒரே சமயத்தில் பல இடங்களில் பலருடன் கூடியிருப்பது, மழைக் காலத்தில் ஆற்றில் தெப்பம் போல் மிதந்து பரவசமாக இருப்பது, யாராவது எதையாவது கேட்டால் அவரிஷ்டப் பிரகாரம் சொன்ன சொற்கள் அப்படியே பலித்தன. இவை போன்ற பல அற்புதங்களை அந்தந்த கிராம மக்கள் இன்றும் நினைவுகூர்ந்து வியக்கின்றார்கள்.

எரிதாதா சுவாமிகள் எங்கோ போய்க் கொண்டிருந்தபோது பாதையில் இறந்து விழுந்துகிடந்த பருந்தைப் பார்த்து ‘எழுந்து போ ஐயா’ என்று சொல்ல இறந்து போன பருந்து உயிர்பெற்றுப் பறந்து போயிற்றாம்.

## பொன்னாகிய பாம்பு

மற்றொரு நாள் ஒரு பக்தன் காட்டில் பாம்புப் புற்றின் அருகே பாம்பு இருந்ததைக் கண்டு நமஸ்காரம் செய்தான். “கம்பளியைப் போட்டுவிட்டுக் கண்களை மூடிக்கொள் ஐயா’ என்று பெரியவர் சொல்ல, பக்தன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து கண்களை மூடிக் கொண்டான். பெரியவர், புற்றிலிருந்த பாம்பை எடுத்துக் கம்பளியில் போட்டுக் கட்டி, “எடுத்துக்கொள் ஐயா, வீட்டிற்குக் கொண்டுபோய் பூஜை மேடையில் வைத்து, பூஜை செய்துவிட்டுப் பிரித்துப் பார்” என்று கட்டளையிட்டார். அதன் பிரகாரம் பக்தன் வீட்டுக்குப் போய் பூஜை செய்து மூட்டையை அவிழ்த்துப் பார்க்க, பாம்பு பசும் பொன்னாக மாறியிருந்ததாம்.



மற்றொரு ஊர் சிவாலயத்தில் கல் பசவண்ணரைப் பார்த்து, “வாரும் ஐயா, பசவண்ணா” என்று கூப்பிட்டவுடனே அத்தக் கல் ரிஷபம் எழுந்து நடந்து வந்ததாம்.

இவ்விதமாகப் பல அற்புதச் செயல்களைச் செய்து சுற்றித் திரிந்து, ஓரிடத்தும் நில்லாது செள்ளக்குரிக்கிக்கு வந்து கொண்டிருந்தனர். ஊருக்கு இரண்டு பர்லாங்கு தூரத்தில் தென் திசையில் ‘மல்லப்பன் திப்பே’ என்ற குன்றில் வந்து உட்கார்ந்தார். ஊராருக்கு இவ்விஷயம் தெரியவந்தது. அவர்கள் இப்பெரியவரைத் தம் ஊருக்கு அழைத்துச் சென்றனர். செள்ளக்குரிக்கி கிராமத்தாரின் பக்தியும், பாக்கியமும் பாராட்டத்தக்கன. எங்கும் நில்லாது சஞ்சரித்து யாருடைய அழைப்புக்கும் இணங்காது வந்த மகான் செள்ளக்குரிக்கி என்ற தலத்தில் தங்கிவிட்டார் என்றால் அது அந்த ஊர் மக்கள் செய்த பாக்கியம் அல்லாமல் வேறென்ன?

ஹேவிளம்பி வருடம் (1897) ஸ்ரீ எரிதாதா சுவாமிகள் செள்ளக்குரிக்கி கிராமத்திற்கு வந்தார்கள் என்று அப்போதைய பெரியவர்கள் சொன்னார்கள். 1949ல் பிரசுரிக்கப்பட்ட எரிதாதா சுவாமிகளின் சரித்திரப் புத்தகத்தின் வெளியீட்டாளரான ஸ்ரீ கே. எம். கரிபசவ சாஸ்திரிகளும் இதை உறுதி செய்துள்ளார்கள்.

எரிதாதா சுவாமிகள் சில ஆண்டுகள் சிவாலயத்திலும் அழைத்தவர்களின் வீடுகளிலும் தங்கியிருந்தார்கள். எங்கிருந்தாலும் தம் இஷ்டப்படியே நடந்தார்களேயன்றிப் பிறரிஷ்டத்திற்கு நடக்கவில்லை. யாராவது ஆடையொன்றைப் போர்த்திவிட்டால், கட்டி விட்டால், அது அப்படியே இருக்கும். இல்லையென்றால் அவர் திகம்பரராக இருப்பார். உடையை ஒழுங்காக உடுத்திக் கொள்வதில்லையென்றாலும் கண்ணைக் கவரத்தக்க சுந்தரமான பேரழகு அவருடைய சரீரத்தில் நிறைந்து கொண்டே வந்தது. தேஜோமயமான அவருடைய பரஞ்சோதி சொரூபம் சிறிதளவும் குறைந்ததேயில்லை.

உயரமான கம்பீரமுள்ள தோற்றம். பொன்னிற உடல் வண்ணம் அந்த வண்ணத்தினால் பெருகும் பிரகாசம் பெரிய ஜடை, நீண்ட தாடி, பரந்த நெற்றி, தூய்மையான வெண்மையான பற்கள், கருணை ததும்பும் கண்கள், நீண்ட கூர்மையான மூக்கு, காண்போர் இதயத்தைக் கவரும் பார்வை, குறைவில்லாத கண்டம் ஆஜானு பாஹுவான உடல்வாகு, நீண்ட, சுருண்ட நகங்கள், நின்றாலும் நடந்தாலும், உறங்கினாலும் எந்த திசையில் பார்த்தாலும் குன்றாத பேரழகு வாய்ந்த தோற்றம். இத்தகைய மூர்த்திகள் எப்போதும் தமக்குத்தாமே ஏதோவொன்றைச் சிந்தித்துப் பேசுவதுமாக இருப்பார்கள்.

யாராவது சிலர் வலுக்கட்டாயமாக தாதா தங்கள் ஊர் யாது, பெயரென்ன என்று கேட்டால், காகிதமும் பென்சிலும் கொடய்யா என்று வாங்கி, கன்னடத்தில் மகாஸ்ரீ ஹிரியூர் தாலுக்கா தாசில்தாருக்கு... என்று எழுதி மேலே எழுதாதே போதும் போதும் என்று ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுவாராம். அதனால் யாராவது ஹிரியூர் தாசில்தார் கதை என்னவென்று விசாரிக்கத் தொடங்கினால் மௌனமாக இருந்து விடுவாராம். இவர் ஒருவேளை ஹிரியூரைச் சேர்ந்தவராக இருக்கலாம்.

ஓர் சமயம் செள்ளக்குரிக்கியில் கொடிய காலரா நோய் பரவியது. அப்பொழுது ஸ்ரீ எரிதாதா அவர்கள், கல்லையெடுத்து ஒரு வீட்டின் மேல் எறிய அவ்வீட்டி லிருந்த ஒருவர் மரணம் அடைந்தாராம். இன்னொரு வீட்டின்மேல் கல்லை எடுத்து வீசாமலேயே வேண்டாம் வேண்டாம் என்று சொல்ல, அவ்வீட்டில் காலரா கண்ட ஒருவர் மரணமடையாமல் தப்பித்துக் கொண்டாராம். இரண்டுவிதமான காட்சிகளையும் கண்ட ஊரார் பயந்து எரிதாதா சுவாமிகளைக் கண்டு வணங்கி என்னாகுமோ என்று கேட்டார்களாம். "இன்னும் கணக்குத் தயாராக வில்லையா" என்று, கை விரல்களை எண்ணி ஒரு கையை நீட்டிக் காட்டினாராம் தாதா. அதைப்போலவே, 5 தினங்களில் காலரா அவ்வூரைவிட்டு அகன்றதாம்.



## இறந்த கன்றை உயிர்ப்பித்து

மற்றொரு அற்புத சக்தி அவரிடம் இருந்தது. அது வியக்கத்தக்கது. ஒரு பக்தரின் மனையில் எரிதாதா தங்கியிருந்தார். ஓர்நாள் அவ்வீட்டின் எருமைக் கன்று இறந்து போயிற்று. அவ்வீட்டுக்குடைய அம்மையார், கறவைக் கன்று இறந்தது குறித்து அழுது கொண்டி ருந்தார். பக்கத்து வீட்டு அம்மையார் தாதாவிற்கு பக்தியுடன் சமையல் செய்து கொண்டுவந்தார். தாதா வீட்டின் எஜமானியைக் கூப்பிட்டுத் "தயிர் கொண்டு வா" என்றனர். அதைக் கேட்ட அவ்வீட்டு அம்மையார் கன்று இறந்தது முதல் துக்கத்தில் மூழ்கியிருந்தமையால் சினங்கொண்டு "உன் வாயில் மண் போட, தின்று ருசி கண்டாயல்லவா! அங்கே பார் செத்துக் கிடக்கிறது என் கன்று. தூக்கிக்கொண்டு போக மாதிகர் (சக்கிலியர்) வந்திருக்கிறார்கள்" என்று துக்கத்தில், ஆத்திரத்தில் கதறினார். உடனே எரிதாதா சுவாமிகள் எழுந்துவந்து, இறந்து கடந்த கன்றைக் காலால் உதைத்து "எழுந்திரு ஐயா, எழுந்திரு" என்றவுடன், கன்று எழுந்து தாயின் மடியை ஊட்டிற்றாம். என்னே பெரியோர் சக்தி! யாரறிவார் இதை? இவ்விதமான சில அற்புதச் செயல்கள் இவர் பைத்தியக்காரன் என்ற எண்ணத்தைப் போக்கின. தாதா பைத்தியக்காரனல்ல: ஒரு மகாத்மா என்ற உயர்வான எண்ணம் எங்கும் பரவியது. பல ஊர்களி லிருந்தும் பக்தர்கள் வந்து தரிசித்து போயினர்.

## நாவிதரையும் மதித்து

அவ்வூரிலிருந்த ஒரு நாவிதன் தன் தோட்டத்திற்கு எழுந்தருள வேண்டும் சுவாமிகளை அழைத்தான். தாதா "ஐயபேரிகை அடி ஐயா, அடி ஐயா" என்று சொல்லிக் கொண்டே எழுந்து போய் தோட்டத்தில் அமைத்திருந்த சிறிய மண்டபத்தில் சில நாட்கள் தங்கியிருந்தனர். பின்னர், அவ்வூர் தலைவரெல்லாங் கூடிவந்து அழைத்துப் போய் ஊரில் சாதாரண மனையொன்றில் தங்க வைத்தனர்.

அவ்வாறு தாதா அம்மனையில் இருக்கையில், எங்கிருந்தோ திக்கையர் என்பவர் வந்து சேர்ந்தார். அவர் எரிதாதா சுவாமிகளைப் போன்றவரே. எந்நாட்டினர், எக்காலத்தவர், என்ன பெயரோ, யாரும் அறிந்திலர். அப்படியிருக்க, ஊரவரான மடத்து கங்காதரப்பா என்பவரிடம் "கங்காதரப்பா! யான் மடத்தையன், யாதோ காரணத்தால் லிங்கத்தையிழந்தேன்" என்று அவர் சொன்னதி லிருந்து திக்கையர் லிங்காயத் என்று அறியப்பட்டார். ஆனால் ஊர் பெயர் நாடு முதலியன அறியப்பட்டில.

ஸ்ரீ எரிதாதா சுவாமிகளை அழைத்தது போலவே, இவரையும் திக்கையர் என்று அழைத்தனர். ஊர் மக்கள் இட்ட பெயர் இது, 'எர்ரி,' 'திக்க' என்ற கன்னடச் சொற்களுக்குப் பைத்தியக்காரன் என்று பொருள். எப்படியோ, அப்படி எவர் எப்படி அழைத்தாலும், அதைப் பொருட்படுத்தாது, தாம் எண்ணிய தொண்டினையே குறிப்பாகக் கொண்டு செய்து வந்தார்கள் எரிதாதா சுவாமிகளும் திக்கையரும்.

## பக்தர்கள் கட்டிய மடம்

ஸ்ரீ எரிதாதா சுவாமிகளுக்கு பக்தர்களின் பொருள் உதவியாலும், பக்கத்து கிராமத்தார் சகாயத்தாலும், கருங்கல்லால் அழகாகவும் ஸ்திரமாகவும் மடத்தைக் கட்டி முடித்தார் திக்கையர். இப்பணியில் மிகுதியாக சகாயம் செய்தவர் கொக்கரசேடு ஈசுரப்பா, ராயச்சூர் ஜாவணி பக்கீரப்பா என்ற இருவர். மடம் கட்டி முடித்து தாதா அவர்களை அங்கே அழைத்துப் போக வேண்டிய சமயம் வந்தது. அப்போது மக்களிடம் கருத்து வேறுபாடு வந்தது. புதிய மடத்திற்கு அழைத்துப் போக வேண்டும் என்றார்கள் சிலர், பழைய மனையிலேயே இருக்க வேண்டும் என்றார்கள் சிலர். இந்தப் போராட்டம் அரசாங்கம் வரை எட்டியது.

மடத்திற்கு அழைத்துப் போகவேண்டுமென்ற கட்சிக் காரர்கள் தாதா அவர்களிடம் "இது உங்கள் விளையாட்டா ஐயா? யாங்கள் உங்கள் சக்தியை அறியவல்லோமா? என்று கேட்டார்கள். தாதா "ரிஸர்வ் போலீஸ் வரட்டும் போகலாம் ஐயா" என்றார். அப்படியே சிறிது நேரத்தில் வந்த ரிஸர்வ் போலீஸ் இரு கட்சிக்காரர்களையும் சமாதானப்படுத்தியது. போலீஸ் அதிகாரி சுவாமிகளை தரிசித்து, தங்கள் கருத்தென்னவென்று கேட்டார். தாதா அவர்கள், "நடங்களய்யா போவோம்" என்று எழுந்தார்கள். உடனே எல்லோரும் ஒன்றுபட்ட கருத்துடையராய் விரோதமின்றி சகல சம்பிரதாயங்களுடனும் கோஷங் களுடனும் சுவாமிகளை அழைத்துச் சென்று மடத்தில் அமைந்திருந்த ஆசனத்தில் எழுந்தருளச் செய்து, பாத பூஜை முதலியனவற்றைச் சிறப்பாகச் செய்து எரி தாதாவின் ஆசிக்குப் பாத்திரமானார்கள்.



அதுமுதல், தாதா அவர்கள் ஜீவ சமாதியடையும் வரை மடத்திலிருந்துகொண்டு பக்தர்கள் செய்யும் பூஜையைக் கைக்கொண்டு அவரவர் இஷ்டார்த்தங் களைப் பூர்த்தி செய்து அருளியதால், நாடு நாளுக்கு நாள் பக்திமார்க்கத்தில் முன்னேற்றம் அடைந்துவந்தது. அவரது அருளைப் பெறுவதற்கு நாள் தோறும் பலர் வந்து கொண்டிருந்தனர். வந்தவர்களுக்கெல்லாம் உணவு முதலிய உபசாரங்கள் செய்வதற்கு ஏற்பாடா—யின. ஸ்ரீ எரிதாதாவின் சேவைக்கு சித்தலிங்கப்பா அவர்கள் கங்கணங்கட்டிக் கொண்டார்கள். இடை—யிடையே நேர்ந்த பல கஷ்டங்களையெல்லாம் சகித்துக் கொண்டிருந்த, எல்லோருடைய பக்தி விளக்கத்திற்கும் வழி ஏற்படுத்தி நல்ல முறையில் மடாலயத்தைக் கட்டி எல்லோரும் நற்கதி அடையும் பொருட்டு தாதா அவர்களை மடத்தில் எழுந்தருளச் செய்த திக்கையர் என்ற உத்தமர் இங்கு பலகாலம் சேவை செய்ய விதி இடம் தரவில்லை.

## திக்கு தெரியாத திக்கையர்

வருங்கால நிகழ்ச்சியை உணர்ந்தோ என்னவோ, ஸ்ரீ எரிதாதா அவர்கள் திடீரென்று திக்கையரைப்

பார்த்து, “நீ புறப்பட்டுப் போய்விடய்யா” என்று கட்டளை யிட்டனர். கட்டளையைக் கேட்ட உடன் திக்கையர் சிறிதும் தயங்காது மடத்தைவிட்டுப் போய்விட்டார். எதற்காக, எங்கே, ஏன் என்று அவர் கேட்கவில்லை. ஆனால் போகும்போது “குருவை எப்படி மறந்திருப்பேன்? குருசேவையை எப்படிக் கைவிடுவேன்?” என்ற பாடலைப் பாடிக்கொண்டே போனார் என்பார்கள். அன்று புறப் பட்ட திக்கையர், எங்கே போனார் என்பது யாருக்கும் தெரியாது. தொடர்ந்து தங்கியிருந்தால் என்ன நேர்ந் திருக்குமோ? பெரியவர் அருளை அறியவல்லார் யார்?

திக்கையரை, போ என்று எரி தாதா கட்டளை யிட்டதன் மர்மம் என்னவோ? திக்கையரும் போ என்று சொன்னவுடனே மறுமொழி கூறாமல் போய்விட்ட காரணம் என்னவோ? யாரும் அறிந்திலர். எரிதாதா ‘போ’ என்றார் திக்கையர் போய்விட்டார். எரிதாதா என்ற பித்தருக்கும், திக்கையர் என்ற அதிபித்தருக்குமே உண்மை தெரியும்.

எரிதாதா அவர்கள் ‘போ’ என்று கட்டளையிட்ட வுடன் புறப்பட்டுப்போன திக்கையர் செள்ளக்குரிக்கி கிராமத்திற்கு சமீபத்திலுள்ள சோளதரசி கிராமத்திற்கு வந்து ஜூடுர் பீமய்யா என்ற கோமுட்டி செட்டியார் வீட்டில் தங்கினார். யாரோ ஒருவர் விளையாட்டாகக் கொக்கரசேடு கிராமத்தார் வந்துவிட்டார் என்று சொன்னவுடன், திக்கையர் காரப்பொடி இடிக்கும் இரும்புக் கடப்பாறையினால், பீமய்யாவைத் தலையில் அடித்துவிட்டுப் புறப்பட்டுப் போனார் என்று முதியோர் இப்போதும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கொக்கரசேடு கிராமத்தின் நிகழ்ச்சி என்னவோ? இதைக் கேட்டவுடன் திக்கையர் எதற்காக பயந்து வெளியேறினார் என்ற விவரம் இதுவரை தெரிந்திலது.



திக்கையர் என்ற பிரதம மாணாக்கரால் கட்டப் பட்ட மடத்தில், ஸ்ரீ எரிதாதா சுவாமிகள் சுமார் 25 ஆண்டுகள் தங்கியிருந்து, 1922 துந்துபி வருடம் ஜேஷ்ட மாதம் நிறைமதி நான்காம் நாள் ஜீவசமாதி அடைந் தார்கள். நாலாபக்கங்களிலிருந்தும் பக்தர்கள் வந்து தரிசிப்பதற்காக, அவருடைய திவ்ய ஜோதிமயமான சரீரத்தை மூன்று நாட்கள் வைத்திருந்து சமாதி செய்தார்கள் பக்தர்கள்.

எரி தாதா சமாதியடையும்போது அவருக்கு சுமார் நூறு வயது இருக்கும் என்று, ஸ்ரீ கே. எம். கரிபசவ சாஸ்திரிகள் தன் லாவணியில் கூறியுள்ளார். அவர் செள்ளக்குரிக்கிக்கு வரும்போது 70 ஆண்டுகளாவது ஆகியிருக்கக்கூடும் என்று ஊகிக்கப்படுகின்றது. அதனால் சமாதியாகும்போது அவருடைய சரீரம் பழுத்த உயர்ஜாதி மாம்பழம் போன்ற நிறத்துடன் மணத்துடன் காணப்பட்டது.

தாதாவின் ஜீவசமாதி 12 வருட காலம் கவனிக்கப் படாது சாதாரண நிலைமையிலேயே இருந்தது. பின்னர் பல பக்கங்களிலுமுள்ள பக்தர்களின் பெருமுயற்சியால், இப்போது காண்போர் வியக்கத்தகு நிலையில் அழகாக, பெரிதாக, தங்க இடவசதி செய்து கொடுத்துள்ள செள்ளக் குரிக்கி அதிஷ்டானம் இப்போது ஒரு புண்ணியத் தலமாகக் காட்சியளிக்கின்றது.

சித்தலிங்கய்யா காலத்திற்குப் பிறகு மேற்பார்வை யாளரான பவசய்யா மிகுந்த கவனத்துடன் மடத்தின் பிரகாசத்திற்கு வேண்டிய காரியங்களையெல்லாம் செய்துவைத்தார். ஸ்ரீ எரிதாதா சுவாமிகளிடம் இருந்த பூர்ண சக்தி எல்லோர் மனத்திலும் வளர்ந்து வெளிப் படவே மடத்தின் செயல்பாடுகளும் பெருகின.

செள்ளக்குரிக்கியில் ஸ்ரீ எரிதாதாவின் சிஷ்யர்களுள் ஒருவராக இருந்து, திக்கையரைப் போலவே, தென்னாடு சென்று கும்பகோணத்தையடுத்த பாடகச்சேரியில் தங்கி

யிருந்து பல செயற்கருஞ் செயல்களைச் செய்துவந்த பாடகச்சேரி சுவாமிகள் என்ற ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் இங்கு வந்திருந்தபோது, செள்ளக்குரிக்கி கிராமம் வருங் காலத்தில் யாத்ரிகர்களுக்கு புண்ணிய க்ஷேத்திரமாகும் என்று சொன்னார். அப்படியே இது மகாபுண்ணிய க்ஷேத்திரமாக விளங்குகிறது.

இங்கு பலர் பலமுறை கிணறு வெட்டினார்கள் நீர் ஊற்றமில்லை. அதனால் அயர்ந்து போனார்கள். பின்னர் பல்லாரி ஸ்ரீமான் வை. மகாபலேஸ்வரப்பா யாருடைய தடையையும் பொருட்படுத்தாமல் எரிதாதாவின் கிருபையே கதி என்று நம்பிக்கையுடன் மனஉறுதியுடன் வெட்டிய கிணறு இப்பொழுது எல்லோருக்கும் சுரந்து தந்து கொண்டிருக்கிறது. இது அந்த பக்தரின் புண்ணியமும் தாதாவின் கிருபையுமேயாம்.

பெங்களூர் ஸ்ரீமான் ஏ. ஜி. ஷாமண்ணா அவர்கள், சிறந்த பக்தியுடையவர்கள், ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளின் அனுக்கிரகம் பெற்றவர்கள். ஆடம்பரத்தையும், தற்புகழ்ச்சி யையும் வேண்டாதவர், இலைமறை காய் போல. தம்மைக் காட்டிக் கொள்ளாமல் மறைந்து நின்று, இந்த மடம் முன்னேற்றம் அடைய சக்திக்கு மீறிய பணிகளைச் செய்துள்ளார்கள். நண்பர்கள் பலரைக் கொண்டும் செய்வித்துள்ளார்கள்.

யாரும் பிரசாரம் செய்யாமலேயே, கேட்பவர்களில்லா மலும், பக்தர்கள் தாமாகவே வந்து, தாதாவின் திரு வுருவத்தைத் தரிசித்து, பிரார்த்தனை செய்துகொள் கிறார்கள். வேண்டிக்கொண்டபடியே எண்ணம் நிறை வேறுவதால் காணிக்கைகளை உண்டியலில் போட்டு விட்டுப் போகிறார்கள். இப்போது அமாவாசை தோறும் மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வருகிறார்கள். ஸ்ரீ எரிதாதா சுவாமிகளே ஸ்ரீ ஷாமண்ணா அவர்கள் கனவில் வந்து நான் சாகவில்லை. இதற்கு ஜீவசமாதி என்று பெயர் வைக்கும்படி சொல்லி அருளியபடி இதற்கு எரிதாதா சுவாமி ஜீவ சமாதி என்று பெயர் வைக்கப்



பட்டுள்ளது. இரவில் தங்கி தங்கள் விரதத்தை முடித்துக் கொள்கின்றார்கள். பலர் பலவாறு பிரார்த்தனை செய்து கொள்கிறார்கள். வந்தவர்களுக்கு மடத்தின் டிரஸ்டிகள் தக்க ஏற்பாடுகள் செய்து தந்து உபசரிக்கின்றார்கள்.

வருடந்தோறும் ஜேஷ்டசுத்தம் 6—ல் (வைகாசி மாதம் 6ம் நாள்) மிகச் சிறந்த வைபவத்துடன் தாதாவின் திரு விழா நடக்கிறது. மாதா மாதம் அமாவாசை வைபவம் வளர்ந்துகொண்டே வருகிறது. புதன்கிழமை தோறும் இங்கு தார்வாடா ஸ்ரீமந் நிரஞ்சன பிரணவஸ்வரூபி, மிருத்தியஞ்சய மகா சுவாமிகளுடைய ஆசிர்வாதத்தால் சிவானுபவ கோஷ்டி பஜனை நடந்து வருகின்றது.

பக்தர்கள் தங்குவதற்காக ஐந்தாறு விடுதிகள் கட்டப் பட்டுள்ளன. அவற்றிற்குக் கட்டணம் எதுவும் இல்லை. மடத்தின் ஆவரணத்துள் நான்கு அறைகளில் உயர்தர ஆரம்ப பாடசாலையின் வகுப்புகள் நடக்கின்றன. நீராட நல்ல நீர் நிலைகள் உண்டு, வேண்டிய அளவு மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன.

போக்குவரத்து வசதி: அனந்தப்பூரிலிருந்து வரும் பஸ்களும், பல்லாரியினின்று வரும் பஸ்களும் மடத்தின் முன்னால் நிற்கின்றன. இது பக்தர்கள் தரிசிக்க வசதியாக இருக்கிறது. ரயில் வழியாக வருபவர்கள், குண்டக்கல் ஹுப்ளி வழியில் குண்டக்கல்லிலிருந்து 3வது மைலில் வீராபுரம் ஸ்டேஷனில் இறங்கி இரண்டு மைல் நடந்து செள்ளக்குரிக்கிக்கு வரவேண்டும். காரில் என்றால் அனந்தபூர்—பெல்லாரி சாலையில் 80 கிலோமீட்டர் செல்ல வேண்டும், உருவகொண்டா வழியில் 27 கிலோ மீட்டர். அங்கிருந்து 27 கிலோமீட்டர் பெல்லாரி.

நாளுக்குநாள் புதிதாகக் காணப்படுவதாக விளக்க மடைந்து வரும் மடமானது எங்கெங்கோ இருப்பவர் களையெல்லாம் கவர்ந்து இழுக்கத்தகுந்த ஆகர்ஷண சக்தியுள்ளதாக விளங்குகின்றது.

சிவஐக்கியமான மைசூர் அரண்மனைக் கவிமடத் தலைவராக இருந்த பல மொழிகளில் M.A., பட்டம்

பெற்ற, காசி சமஸ்கிருத காலேஜில் விரிவுரையாளராகவும் தலைவராகவுமிருந்து மைசூர் ஸ்ரீமந் மகாராஜாவால் பாராட்டப் பெற்றிருந்த மகாபண்டிதராகிய ஸ்ரீ கௌரி சங்கர சுவாமிகள் ஸ்ரீ எரிதாதா சுவாமிகளின் தரிசனத் திற்கு வந்து தாதா அவர்களே சமாதியில் தியான யோகத்தில் அமர்ந்தபோது எரிதாதா சுவாமிகள் பிரத்தியட்ச தரிசனம் தந்தார்களாம்.

ஸ்ரீ ஷாமண்ணாவின் கனவில் தோன்றி தான் எல்லோரைப் போல சமாதியாகவில்லை என்றாராம். இப்படி பக்தர்கள் வேண்டியவாறு வேண்டியவற்றை அருள்செய்து வருவதால், தாதா ஜீவசமாதியில் இல்லை யென்றும் சமாதியடைந்தார் என்றும் எப்படிச் சொல்ல முடியும்? பலர் உயிருடனிருக்கிறார் என்றே நம்புகிறார்கள். ஆதலால் ஜீவசமாதியே இது; ஐயமில்லை.

பல நாடுகளிலிருந்து பல சமயத்தவர்களும் இங்கு தரிசனம் செய்ய வருகின்றார்கள். இங்கு ஐக்கியமான, சித்ரதுர்க்கம் பிரகந் மடம் ஜகத்குரு ஸ்ரீமன் நிரஞ்சன ஜயதேவ முருகராஜேந்திர சுவாமிகள், சுக்தூர் ஸ்ரீ ஜகத்குரு தார்வாடா ஸ்ரீமன் நிரஞ்சன பிரணவஸ்வரூபா மிருத் யுஞ்சய சுவாமிகள், கும்பகோணம் பெரியமடம் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சாந்ததேவ சாரங்க தேசிகேந்திர சுவாமிகள், ஸ்ரீ சித்தகங்கா மடம் சிவகுமார சுவாமிகள், பெங்களூர் முத்தினகந்தே மடம் ஸ்ரீ சோமசேகர சிவாச்சாரிய சுவாமிகள், கதக் ஸ்ரீ தோண்டதாரிய மடத்து சுவாமிகள், பெங்களூர் ஸ்ரீ கைலாச ஆஸ்ரமத்தின் திருச்சி சுவாமிகள், ஸ்ரீ பத்மானந்த குருஜீ, கூனூர் ஸ்ரீ ஜாசானி சுவாமிகள், தஞ்சாவூர் கரூர் சித்து சுவாமிகள், மைசூர் மகாராஜா ஜயசாமராஜேந்திரர் அவர்கள், மந்திரிகள், பல அதிகாரிகள், முதலியவர்களைக் கவர்ந்து அழைக்கும் சக்தியுள்ளதாக மடாலயம் விளங்குகின்றது. தஞ்சாவூர் ஸ்ரீ சித்தர் சுவாமிகளும் வந்து கொண்டிருக்கிறார்கள்.



பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள், இங்கு வந்தி ருந்தபோது, இந்தத் தலம் உத்தர கதிர்காமமாக விளங்கும் என்றும், பழநி மலையில் ஜீவசமாதியிலிருக்கும் யோக மகரிஷி பழநியினின்றும் புறப்பட்டு இங்கு வருவார் என்றும் சொன்னபடி, 1961ம் ஆண்டில் ஜேஷ்ட சுத்த பஞ்சமியில், ஸ்ரீ எரிதாதா சுவாமிகள் அவர்கள் செள்ளக் குரிக்கிக்கு வருவதற்குமுன் இருந்த ‘மல்லன திப்பே’ என்ற குன்றில் ஸ்ரீ தண்டபாணி விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பெற்று, நித்திய பூஜைகள் நடந்து வருகின்றன. ஞானிகளின் அருள்வாக்கு பொய்யாகாதல்லவா?

இப்பொழுது பெங்களூர் ஸ்ரீ ஏ. ஜி. ஷாமண்ணா அவர்கள் மடத்தின் கோபுரம், பிரகாரம் மற்ற பகுதி களையும் அழகுபெறச் செய்து, பக்தர்கள் தங்க வசதியான கட்டடங்களையும் கட்டியுள்ளார்கள். மேலும் இரண்டு விடுதிகள் கட்டச் செய்துள்ளார்கள்.

சென்னை ஆர். ஏகாம்பரம் பிள்ளை தந்தை தன் ஸ்ரீ இராமசாமி பிள்ளை அவர்கள் பெயரால் ஒரு விடுதி கட்டியுள்ளார். பெங்களூர் டி. அரசப்பா விரூபாக்ஷப்பா, சி. ஏ. ஜமகண்டிமட், பெல்லாரியில் பெயர் பெற்ற சிவகவி பு. நாகேச சாஸ்திரி, செள்ளக்குரிக்கி கிராம பக்தர்கள் லால் சந்த் கேவல் ராம் மற்றும் அவர் நண்பர் தர்மதாஸ் அவர்கள், பெல்லாரி, ஹோஷபேட்டை, கங்காவதி, தார்வார் இடங்களில் உள்ள பக்தர்கள் சேர்ந்து பல விடுதிகள் கட்டியுள்ளார்கள்.

ஜேஷ்டசுத்த சமஷ்டி மாதம் நடக்கும் ரதோத்சவ காலத்தில் ஆரம்பத்தில் ஏழு நாட்கள் பஞ்சாக்ஷர சப்த பஜனையும், மூன்று நாட்கள் சிவானுபவ கோஷ்டி, சங்கீத பிரவசனமும் உபந்யாசமும் நடைபெற்று வருகின்றன. முதல்நாள் பஞ்சமியன்று ஸ்ரீ எரிதாதா சுவாமிகள் தவத் திலிருந்த மல்லப்பட குட்டத்தில் எழுந்தருளியுள்ள தண்டாயுதபாணி சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகள்

அன்று மாலை எரிதாதா சுவாமிகளுடைய பசவ வாகன உற்சவம், ஜேஷ்ட சுத்த சஷ்டியில் ஸ்ரீ எரிதாதா சுவாமிகளுடைய மகா ரதோற்சவம் நடைபெறும். ரதோற்சவம் முடிந்து ஜீவ சமாதிக்கு ரதம் திரும்பியவுடன் பக்தர்கள் கோரிக்கை நிறைவேற கற்பூர ஆரத்தி, மூன்றாம் நாள் சப்தமி திதியில் ஏ. ஜி. ஷாமண்ணா அவர்கள் சமாதிக்கு அபிஷேக ஆராதனை, அன்று மாலை சங்கீதக் கச்சேரி தவிர எரிதாதா சுவாமிகள் புஷ்ப விமான உற்சவம் நடைபெறும். இதற்கு ஒரு பக்தர் தவணகரேயிலிருந்து பாண்ட் வாத்யக் குழுவினருடன் வந்து சேவை நடத்துகிறார். வாண வேடிக்கைகள் விமரிசையாய் நடைபெறும். பஞ்சமியிலிருந்து அஷ்டமி வரையில் தினமும் எரிதாதா சுவாமிகளுக்கு கும்பாபிஷேகம், ருத்ராபிஷேகம் மற்றும் விதவித அலங்காரங்கள் நடந்து வருகின்றன.

## நித்ய பூஜைகள்

அமாவாசை தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து கூடுகின்றார்கள். வந்த பக்தர்களுக்கு உணவும் பானங்களும் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது சோமவாரந்தோறும் தரிசனத்திற்காகப் பல பக்தர்கள் வருகின்றார்கள். அமாவாசைக்கு வந்தவர்கள் இரவிலும் தங்குவார்கள். ஆண்டுதோறும் இங்கே பத்து நாட்கள் ரதோற்சவமும் பிரவசனமும் சிவ பஜனையும் சிறப்பாக நடக்கின்றன. பல பக்கங்களிலிருந்தும் பலர் பக்தியுடன் வருகின்றனர் விதிப்படி நித்திய நைமித்தியங்களும் நடந்து வருகின்றன.

சிவநேயச் செல்வர்களே! ஸ்ரீ எரிதாதா சுவாமிகளின் ஜீவசமாதியைத் தரிசித்துப் பேறு பெறுதற்குரியவர்கள், எரிதாதா, திக்கையா, ராமலிங்க சுவாமிகள், ஷாமண்ணா இவர்களிடம் அமைந்திருந்த ஞானநிலை, குருபக்தி குரு ஆணைக்குக் கீழ்ப்படிதல் ஆகிய நற்குணங்களைப் பெற்று இக, பர, சுக வாழ்க்கையை அடைவீர்களாக! சுபம்!



# இணைப்பு: 1

## சுவாமிகள் அன்பர்களுக்கு எழுதிய கடிதங்கள்

சுவாமிகள் எழுத்திலும் பேச்சிலும் 'ஆண்டவர்' என்ற சொல்லை அடிக்கடி பயன்படுத்தியிருக்கிறார். அந்த ஆண்டவர் வடலூரார் ராமலிங்க சுவாமிகள். தன் கடிதங்களில் 'ஆண்டவர் ஊழியம் பா. ராமலிங்கசாமி' என்று கையொப்பமிட்டிருக்கிறார். சென்னை ப. ராமசாமி பிள்ளைக்கு சுவாமிகள் நிறையக் கடிதங்கள் எழுதியிருக்கிறார். சில பரணீதரன் எழுதிய 'ஸ்ரீ பாடகச்சேரி சுவாமிகள்' என்ற நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

'சிரஞ்சீவி ஆண்டவர் சந்ததிகளுக்கு' என்றும், 'ஆண்டவர் ஊலியம்,' 'ஆண்டவர் ஊழியன்' என்றும் அவற்றில் குறிப்பிட்டு 'பா. ராமலிங்கசாமி மெய் போலும்மே' என்றும் கையொப்பமிட்டுள்ளார்.

பாடகச்சேரி சுவாமிகள் நாகூர் தர்காவுக்கும் சென்றிருக்கிறார் என்பது 29. 3. 1949 தேதியில் அவர் எழுதிய ஒரு கடிதத்தின் மூலம் தெரிகிறது. 'சிரஞ்சீவி ஐயாவை, ஆண்டவரை தரிசித்து, நாகூரில் பார்த்தேன்' என்றும், 'ஞாயிற்றுக் கிழமை நாம் தர்க்காவில் பார்க்கவேணும் என்று சொல்லவும்' என்றும் அக்கடிதத்தில் எழுதியிருக்கிறார். திருவொற்றியூர் மடத்தில் சுவாமிகள் புழங்கிய பொருட்கள் உள்ள அறையில் நாகூர் ஆண்டவர் பேழையும் இருக்கிறது.

**சில கடிதங்கள்:**

***கும்பகோணம், 20. 05. 1948***

சிரஞ்சீவி ஆண்டவர் சந்ததிகளுக்கு, ஆண்டவரை பூசித்து, ஆசீர்வதித்து எழுதியது. உங்கள் கடிதம் வந்து

சேர்ந்தது. நமக்கு சரீரம் ரொம்பவும் உபத்திரவமாகியிருக்கிறது. சிரஞ்சீவி ஷாமண்ணா கார் கொண்டு வந்திருக்கிறார். இங்கு வக்கீல் ஐயா வந்து 13 நாளா— யிற்று. அவர் உடம்பு சௌகரியமில்லாமல் குடலில் ரணம் உண்டாகி மருந்து சாப்பிட்டு, தற்சமயம் குணமே. இன்றைய தினம் நான் பிராயணப்பட்டு, தஞ்சாவூர் போய் பெங்களூர் போகிறேன்.

சரீரத்தில் இருமல் ஜாஸ்தி. ஆகாரமில்லை. பெங்களூர் போய் மதராஸுக்கு வந்துவிடுகிறேன். திருச்சியில் எல்லோரும் க்ஷேமம். மருந்து செய்து சௌபாக்கியவதி சாரதம்பாளுக்கு கொடுத்து வந்தேன். அதில் சமாசாரம் தெரியவில்லை. சிரஞ்சீவி துரை வருகிறதாகச் சொன்னார். இன்னும் வரவில்லை. சிரஞ்சீவி கோடியப்பன், சிரஞ்சீவி காத்தமுத்து, சிரஞ் சீவி சௌபாக்கியவதி அம்மாள் எல்லோருக்கும் ஆசிர்வாதத்தைத் தெரிவிக்கவும். சிரஞ்சீவி சின்னண்ணா, சிரஞ்சீவி சௌபாக்கியவதி அம்மாள் எல்லோருக்கும் ஆசிர்வாதத்தைத் தெரிவிக்கவும். நமக்கு உடம்பு உபத்திரவம் சொல்லி முடியவில்லை. ஆண்டவர் சந்ததிகளுக்கு ஆண்டவரை பூஜித்து ஆதி நாகேஸ்வரர் திருப்பிரசாதம் அனுப்பியிருக்கிறது.

ஆண்டவர் ஊலியம் *
பா. ராமலிங்கசாமி, 29. 03. 1949

* இந்த 'ல'கரம்தான் மூலத்தில் இருக்கிறது.

* * *

அருட்பெரும் ஜோதி தனிப் பெருங்கருணை. ஆண்டவனுடைய கிருபையினால் ஆண்டவருடைய சந்ததிகளுக்கு சம்பத்தும் இஷ்டகாம சித்தியும் உண்டாவதாக. ஆண்டவரை பூஜித்து ஆசீர்வதித்து எழுதிக்கொண்டது. சுபம்.



சிரஞ்சீவி சௌபாக்கியவதி அம்மாள் சி. அம்மா, பாபா, குழந்தைகள் இவர்களுடைய சேமங்களுக்கு ஆண்டவர் அனுக்கிரகம். பதில் எழுதவும். சிரஞ்சீவி ஐயாவை, ஆண்டவரை தரிசித்து, நாகூரில் பார்த்தேன். சத்திர வேலை ஆரம்பம். சுண்ணாம்பு வருகிறது. சி. மாம்பலத்து அண்ணா அங்கு வந்திருந்தார். திங்கட் கிழமை மதராஸ் வருகிறேன் என்று ஐயாவிடமும் என்னிடமும் சொல்லி வந்தார்கள். அவர் வந்திருக் கலாம். மாம்பலத்து அண்ணாவுக்கு என் கடிதத்தைத் தெரிவித்து ஞாயிற்றுக்கிழமை நாம் தர்க்காவில் பார்க்க வேணும் என்று சொல்லவும். குரு 3, 6, 4—ல் சஞ்சரித்தால் சித்திரை மாதம் 13 வரையிலும் அந்த அவஸ்தையும், மேல்பட்டு 12 மாசம் — முகூர்த்தம் நடக்கும் என்று பெரியவாள் வாக்கியம்.

ஆச்சாரியார் ஆகிய நாகூர் ஆண்டவர் சந்ததி களுக்கு எப்பவும் தாழ்வு செய்யமாட்டார். மங்களமே உண்டாகும்படியாக ஆண்டவருடைய செயலை, அந்த ஆண்டவர்தான் எல்லா நன்மைக்கும் அவரே இருப்பதால் நமக்கு சஞ்சலம் வேண்டுவதில்லை என்று பெருமானைத் துதித்து ஆசிர்வதித்தேன்.

சிரஞ்சீவி தனபாலன் குழந்தைகள் எல்லாம் அவர் க்ஷேமங்களுக்கு பதில். அம்மாளுக்கு ஐயாவை இன்னும் 4, 5 தினத்தில் மாம்பலம் அண்ணா வந்ததும், ஆண்டவர் விண்ணப்பம் கைவிட மாட்டார் என்று அம்மா அவர்களுக்கு சிதாதாவுக்கு சுவாமி எழுதியதாய்த் தெரிவிக்கவும். இப்படிக்கு என் அன்பார்ந்த ஆண்டவர் சந்ததிகளுக்கு.

ஆண்டவர் ஊழியன்
பா. ராமலிங்கம்

* * *

**கும்பகோணம், 08. 05. 1948**

சிரஞ்சீவி ஆண்டவன் சந்ததிகளுக்கு ஆண்டவர் துணை சிரஞ்சீவி சௌபாக்கியவதி அம்மாளுக்கு, சிரஞ்சீவி கோடியப்பன், காத்தமுத்து, சிரஞ்சீவி வக்கீல் ஐயா, சிரஞ்சீவி பாலு, ஆண்டவர் பொன்னடியை பூஜித்து, ஆசீர்வதித்து எழுதினது மெய் போலும்மே. இங்கு சாலையில் (கூழ் சாலை) எல்லாம் சௌக்கியமே. வக்கீல் பத்மநாப முதலியார் வந்திருக்கிறார். ரிஜிஸ் தரான பத்திரங்கள் எல்லாம் வந்துவிட்டது.

நம் வக்கீலைக் கொண்டு பார்த்து, குத்தகைக் காரர்களிடமிருந்து குத்தகை சீட்டுகளை வாங்கிக் கொடுத்துவிட்டு வர வேண்டிய வேலை ஒன்றுதான் பாக்கி. அவ்வேலையை முடித்துக் கொண்டு, பயிர் செலவு செய்யச் சொல்லிவிட்டு வருகிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம். நமக்கு உடம்பு சௌகரிய மில்லை. ஆகாராதிகள் இல்லாமல் ரொம்பவும் கஷ்டம். தஞ்சாவூரிலிருந்து தாதா இரண்டொருவர் வந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

சமையல்காரர் மேனோன் நாளைக்குப் போகிறார். தஞ்சாவூர் ஜில்லாவில் கலவரம் ஏற்பட்டுவிட்டது. ஆலங்குடியில் குடியானவர்களை வெட்டுவதும் குத்துவதுமாக இருந்து வருகிறது. எல்லாம் பகவான் செயலே. இனிமேல் இந்த ராஜ்ஜியத்துக்கு வரும் துன்பம் என்னவென்று சொல்ல முடியவில்லை.

இந்த வருஷம் இந்த ராஜ்ஜியத்தில் பயிர் செலவு செய்கிறதும் சந்தேகமாயிருக்கிறது. இங்குள்ள விசேஷங்கள் இவ்விதமாயிருக்கிறது. சரீரத்தைப் பாதுகாக்க வேண்டியது, அதுவும் என் செயல் அல்ல. இந்தத் தொல்லைகளை நீக்கிக் கொண்டு நான் செவ்வாய், புதன் ஒருவழியாக வந்துவிடுகிறேன். வக்கீல் ஐயா சொன்னார் சாலையில் திருடு போய்விட்டது என்று. அதுவும் பகவான் செயல். இந்த அக்னி நட்சத்திரத்தில், ரொம்பவும் சிரமம். டாக்டர் தினப்படி



வந்து பார்த்துவிட்டுப் போகிறார். குருசாமி சொல்லிக் கொடுத்த மருந்து சாப்பிட்டுக் கொண்டு வருகிறேன். உலகத்துக்கு இந்த கெதி வந்ததே. ஆண்டவர் திருப் பிரசாதம் அனுப்பியிருக்கிறேன்.

ஆண்டவர் ஊழியம். பா. ராமலிங்கசாமி மெய்பொலும்மே


* * *

சிரஞ்சீவி ஆண்டவர் சந்ததி பெரியண்ணா சௌபாக்கியவதி அம்மாள், சிரஞ்சீவி வக்கீல் ஐயா, சிரஞ்சீவி பாலு, சிரஞ்சீவி குழந்தைகள், ஆண் மக்கள், பெண் மக்கள், பேர மக்கள் எல்லாருக்குமே, ஆண்டவர் ராஜாதி ராஜாய, வடுகாம்பிகை பெருங்கருணை யினால் ஆண்டவர் சந்ததிகளுக்கு தீர்க்காயுளும் திடசித்தமும் சிவபெருமானை மறவாத அன்பும் உண்டாகும்படி அணுவில் அணுவாகும் பெருமாளை பூஜித்து ஆசிர்வதித்து, எழுதினது மெய் போலும்மே.

அண்ணா அவர்கள் சௌகரியமில்லாமையால் ஊரிலிருந்து சௌபாக்கியவதி சரஸ்வதியம்மாள், சௌபாக்கியவதி லோகாம்பாள், சௌபாக்கியவதி ஜெகதாம்பாள் எல்லாரும் வந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். எல்லா ஆடவர் சந்ததிகளுக்கும் ஆசிர் வாதத்தை தெரிவிக்கவும். நமக்கு டாக்டர்கள் ஆர்டு (ஹார்ட்) சரியாக இருக்கிறதென்று சொல்கிறார்கள். ஆனால், இன்றும் இரண்டு ஊசி போட வேணும் என்கிறார்கள். சிரஞ்சீவி சாமண்ணாவும் மதராஸுக்கு வந்திருப்பதாக சிரஞ்சீவி அன்னையா சொன்னாள். டாக்டர் வீட்டில் சிரஞ்சீவி டாக்டர், சௌபாக்கியவதி குட்டியம்மாள் எல்லாரும் க்ஷேமம். ஆனால், இங்கும் மழையில்லை. நமக்கு ஆசன வாயிலில் புறப்பட்ட சிரங்கு முக்கால் பங்கு சௌகரியம். இன்னும் கால் பங்கு உபத்திரவம் இருக்கிறது.


ஆண்டவர் ஊழியம். பா. ராமலிங்க சுவாமி

* * *









No. 410 உ 192

சிவமயம்

பாடகச்சேரி ஸ்ரீராமலிங்கஸ்வாமிகளால் நடைபெறும்

கும்பகோணம் ஸ்ரீபெரியநாயகி ஸமேத ஸ்ரீநாகேஸ்வரர் ஆலய

ராஜகோபுரம் திருக்குளம் கைங்கர்ய வசூல்.

ஞ மீ உ

மகா-ள-ள-ஸ்ரீ


கொடுத்தது


ரூ இந்த ரூபாய்

மாத்திரம்

கைங்கர்யத்திற்காக பெற்றுக்கொண்டோம்.

இப்படிக்கு,
[illegible] ஐயர்,
ஸ்ரீ. ராமலிங்கஸ்வாமி.






TELEPHONE [illegible]

K. R. PURUSHOTHAMDAS.
DIAMOND MERCHANTS,
JEWELLERS AND GOLDSMITHS,

Telegrams: "[illegible]"

72, Mint Street,
Park Town.

Madras, 192


P. RAMALINGA SWAMIGAL,
Koolanial, Muthikula Mandapam, KUMBAKONAM.



# இணைப்பு: 2

## ஸ்ரீ பாடகச்சேரி சுவாமிகளின் உயில்

சென்னை இராஜதானி செங்கற்பட்டு ஜில்லா, சைதாப் பேட்டை தாலுகா செம்பியம் சப்—ரிஜிஸ்திரரைச் சேர்ந்த திருவொற்றியூர் 27—ம் நம்பர் கிராமம் பட்டினத்தார் கோயில் வீதியில் புதிதாக அமைக்கப் பெற்றிருக்கும் சிதம்பரம் ஸ்ரீ ராமலிங்க சுவாமி சத்திய தருமச்சாலையில் இருக்கும் மேற்படி ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்த, பாடகச்சேரி ராமலிங்க சுவாமியாகிய நான், நல்ல ஞாபகத்துடனும் மனோராஜ்ஜியத்துடனும் எழுதி வைத்த பிரைவேட் டிரஸ்டு சாசனம் என்னவென்றால்:—

இன்றைக்கு சுமார் 74 ஆண்டுகளுக்கு முன் சோழ நாட்டில் தோன்றி ஆண்டவர் ஆக்கினைப்படி, ஆலயம் புதுப்பித்தல் அன்னதானம் செய்தல் முதலிய ஜீவ காருண்யச் செயலாற்றி வந்தேன். கும்பகோணத்தில் குருநாதன் பிள்ளைப் பெருமான் பெயரால், ஓர் ஸ்தாபனம் ஏற்படுத்தி அதற்கான ஏற்பாடு களையும் செய்துள்ளேன்.

பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன் கிரகண புண்ணிய காலத்தில் விருத்த காசியில், ஆண்டவர் எனக்கிட்ட ஆக்கினை யின் பேரில், மேற்படி வடலூர் பிள்ளைப் பெருமானுக்கு (சிதம்பரம் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள்) பன்னிரண்டாவது ஆண்டில் ஞானோபதேசமான சென்னை திருவொற்றியூரில் கீழ்க்கண்ட ஷெடியூல் ஓராவது அயிட்டத்தில் கண்டுள்ள நிலத்தை வாங்கி அந்நிலத்தில் என் அன்பர்கள் பாத்திரமான சிஷ்யர்கள் எனக்குக் காணிக்கையாகவும், நன்கொடையாகவும் கொடுத்து வந்த பொருள்களைக் கொண்டு சிதம்பரம் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் சத்திய தருமச்சாலையும் கட்ட ஆரம்பித்த மேற்படி சத்திய தருமச்சாலை கட்டடம் பூர்த்தி செய்யப் பெற்றும், மேற்படி சத்திய ஞான சபை கட்டடம் சிறிது பூர்த்தி யாகாமலும் இருக்கிறது. தற்சமயம், நான் சிலகாலம்

விவகாரங்களின்றி தனித்திருக்க உத்தேசித்திருக்கிறபடியால், மேற்படி சத்திய தருமச்சாலை, சத்திய ஞான சபை விஷயங் களைப் பார்த்துப் பரிபாலித்து வரவும் அவைகளில் நடக்க வேண்டிய பூஜை முதலியவைகளை நடத்தி வரவும், என் அன்பிற்குப் பாத்திரமான சிஷ்யர்களில் சிலரை டிரஸ்டிகளாக நியமித்து இந்த பிரைவேட் டிரஸ்டு சாஸனம் செய்யலானேன்:—

## டிரஸ்டிகளின் விவரம்

1. சென்னை திருவொற்றியூர், தெற்கு மாடவீதி 25—ம் நெம்பர் வீட்டில் இருக்கும் இந்து, சிவமதம், ரா. பழனியாண்டி பிள்ளை குமாரர் ப. நடராஜ பிள்ளை.
2. சென்னை தண்டையார் பேட்டை, திருவொற்றியூர் 'ஐ' ரோடு 218ம் நெம்பர் பழநிவிலாஸ் பங்களாவில் இருக்கும். இந்து சிவமதம் நா. பழனியாண்டி பிள்ளை குமாரர் ப. இராமசாமி பிள்ளை.
3. பங்களூர் சிடி, ஜும்மா மஸ்ஜீத் ரோடு 51—ம் நெம்பர் வீட்டில் இருக்கும் இந்து, வீரசைவ மதம் ஏ. கோரப்பா அவர்கள் குமாரர் ஏ.ஜி. ஷாமண்ணா.
4. பங்களூர் சிடி லால்பாக் ரோடு 32—ம் நெம்பர் வீட்டில் இருக்கும் இந்து சிவமதம் வி.வி.ராமலிங்க முதலியார் குமாரர், ஆர். விஸ்வநாத முதலியார்.
5. தஞ்சாவூர் கீழவாசல் கமலாம்பாள் ஆயில்மில் வைத்திருக்கும் எல்.எஸ். மாணிக்கம் பிள்ளை குமாரர் இந்து, சிவமதம், எல்.எஸ்.எம். கந்தசாமி பிள்ளை.
6. சென்னை கிடங்குத்தெரு 7—ம் நெம்பர் ஜவுளி வியாபாரம் செய்யும் இந்து லோக்கு மதம் கேவல்ராம் குமாரர் லால் சந்து கேவல்ராம்.
7. சென்னை புரசவாக்கம் வெங்கடாஜல முதலித் தெரு 15ம் நம்பர் வீட்டிலிருக்கும் இந்து வைஷ்ணவ மதம் காஞ் சிபுரம், எத்திராஜ முதலியார் குமாரர் ஸி.இ. பத்மநாப முதலியார்.



1. மேற்கண்ட 7 பேர்களையும், கீழ்க்கண்டுள்ள சொத்துக் களுக்கு டிரஸ்டிகளாக நியமிக்கிறேன். இவர்கள் ஜீவிய கால பரியந்தம் டிரஸ்டிகளாக இருந்து மேற்படி சொத்துக் களைப் பரிபாலித்துக் கொண்டு, இதனடியில் விவரித்துள்ள பிரகாரம் தருமங்களை நடத்தி வரவேண்டியது. இவர்களில் முதலாவதாகிய ப. நடராஜ பிள்ளை அவர்களை ஆயுள் பரியந்தம் மேனேஜிங் டிரஸ்டியாக நியமிக்கிறேன்.
2. இதில் கண்ட டிரஸ்டிகள் அவரவர் ஆயுள் காலத்திற்குப் பிறகு அவரவர் வம்ச பரம்பரையிலிருந்து அவரவர்கள் யாரையாவது தங்கள் ஸ்தானத்திற்கு முன்னிலைக்கப் பட்டவர்கள் டிரஸ்டி ஸ்தாபனத்தை வகிக்கப் பெறுவர்.
3. மேற்கண்ட நியமனம் செய்யப்படாமல் இருந்தால் அவரவர்கள் மூத்த குமாரர்களை டிரஸ்டியாக சேர்த்துக் கொள்ள வேண்டியது.
4. மேற்கண்டபடிக்கு மூத்த குமாரர்களுக்கு அவகாச இல்லாமல் போனாலும், அல்லது அசக்தர்களாக இருந்தாலும், அவரவர் ஸ்தானத்திற்கு அவர்கள் இதர குமாரர் ஒருவரை மற்ற டிரஸ்டிகள் கூடி தேர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டியது.
5. எக்காலத்திலாவது ஒருவர் வம்ச பரம்பரையில் டிரஸ்டி பதவியை ராஜினாமா செய்துவிட்டாலும் லாயக்கற்றவர் களாகி விட்டாலும் அவர் தன் ஸ்தாபனத்திற்கு, தன் குடும்பத்திலிருந்து ஒருவரை டிரஸ்டியாக நியமித்துக் கொள்ளலாம்.
6. வருஷா வருஷம் ஒரு முறையாவது மானேஜிங் டிரஸ்டிகள் மீட்டிங் கூட்டி, மெஜாரிட்டி தீர்மானத்தின்படி மானேஜிங் டிரஸ்டி இந்த தரும காரியம் முதலியவைகளை நடத்திவர வேண்டியது.
7. மானேஜிங் டிரஸ்டி ஸ்தானம் காலியாகும்போது இதர டிரஸ்டிகள் கூடி அவர்களில் ஒருவரை மானேஜிங் டிரஸ்டியாகத் தேர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டியது. அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மூன்று வருஷ காலம்

மானேஜிங் டிரஸ்டியாக மேற்படி மானேஜிங் டிரஸ்டி பதவியை வகிக்க வேண்டியது.

8. மானேஜிங் டிரஸ்டிகள் வரவு செலவு கணக்கு வைக்க வேண்டியது வருஷாந்தரம் கணக்குகளை எல்லா டிரஸ்டிகளும் பார்வையிட்டு சரி பார்த்துக் கொள்ள வேண்டியது.

மேற்கண்ட டிரஸ்டு சொத்துக்களின் மூல தஸ்தாவேஜூ ஜாபிதா செம்பு, பித்தளை, மரச் சாமான் முதலியவைகளையும் மானேஜிங் டிரஸ்டி வசம் ஒப்படைத்து விட்டேன்.

## சொத்துக்கள் விவரம்

1. மதராஸ் செங்கற்பட்டு ரிஜிஸ்ட்ரேஷன் டிஸ்ட்ரிக்ட் செம்பியம் சப்ரிஜிஸ்ட்ரேஷன் டிஸ்ட்ரிக்ட்டைச் சேர்ந்த சைதாப்பேட்டை தாலுகா, 27ம் நெம்பர் திருவொற்றியூர் கிராமத்தில் பட்டினத்தார் கோயில் தெருவில் மேற்படி பட்டினத்தார் கோயில் தெருவுக்குத் தெற்கு அம்பாள் மான் தோட்டத்திற்கு மேற்கு, வள்ளுவர் நிலத்திற்கு என்னுடைய நிலத்திற்கும் வடக்கு நமசிவாய முதலி நடேச முதலி வீடு காலிமனைக்கு கிழக்கு, இந்த நாற்பாங்கெல்லைக்குள் பட்டதுமான பட்டா நெம்பர் 279 சர்வே நம்பர் 93/3ல் அடங்கிய 1—73 ஏக்கரா விஸ்தீரணம் உள்ள நிலம்.

அதில் கட்டியுள்ள சத்திய தருமச்சாலை கட்டடம், பூர்த்தியாகாமல் இருக்கும் கருங்கல் சத்திய ஞான சபைக் கட்டடம், மதில் சுவர் கிணறு மரம் செடிகள் உள்பட மதிப்பு கிரயம் ரூ.50,000/— ரூபாய் ஐம்பதாயிரம்.

2. மதராஸ் செங்கற்பட்டு ரிஜிஸ்ட்ரேஷன் டிஸ்ட்ரிகட்டு செம்பியம் சப்ரிஜிஸ்தாரைச் சேர்ந்த சைதாப்பேட்டை தாலுகா 27ம் நெம்பர் திருவொற்றியூர் கிராமத்தில் ஈஸ்வர மூர்த்தி கோவில் தெருவில் என்னுடைய மேற்கண்ட நிலத்திற்கு தெற்கு ஆறுமுக முதலியார் நிலத்திற்கு மேற்கு, மேற்படி ஈஸ்வர மூர்த்தி கோயில் தெருவுக்கு வடக்கு நமச்சிவாய முதலியார் வீடு மனைக்குக் கிழக்கு வடக்கு நமச்சிவாய முதலியார் வீடு மனைக்குக் கிழக்கு இந்நாற்பாங்கெல்லைக் குட்பட்ட சர்வே நெம்பர் 98ல் 0—17 ஏக்கரா விஸ்தீரணமுள்ள நிலமும் சர்வே நீர் 92—ல் 0—33 ஏக்கரா விஸ்தீரணமுள்ள நிலமும் 39—வது நம்பர் பட்டாவில் அடங்கியதும் ஆன நிலம் மதில் சுவர், கிணறு மரம் செடிகள் உள்பட மதிப்பு ரூ200 ரூபாய் இரண்டு நூறு.



3. சென்னை செங்கற்பட்டு ரிஸிஸ்ட்ரேஷன் டிஸ்ட்ரிக்ட்டு செம்பியம் சப்ரிஜிஸ்ட்ராரைச் சேர்ந்த சைதாப்பேட்டை தாலுகா 27ம் நிர் திருவொற்றியூர் கிராமத்தில் பட்டிணத்தார் கோயில் தெருவில் மேற்படி தெருவுக்கு வடக்கு நாகூரார் மடம் என்ற நிலத்திற்கு மேற்கு ப. நடராஜ பிள்ளை நிலத்திற்குத் தெற்கிலும், கிழக்கிலும் இந்நாற்பாங்கெல்லைக் குறிப்பிட்ட கிழக்கு மேற்கு 70 அடி நீலமும் வடக்கு தெற்கில் 33 அடி அகலமும் சர்வே நீர் 88/1ல் சேர்ந்த காலி நிலம் மதிப்பு கிரயம் ரூ 200/— (ரூபாய் இரண்டு நூறு).

4. மேற்கண்ட ஷெடியூல் முதல் அயிட்டம் நிலத்தில் கட்டப்பட்டு இருக்கும் கட்டத்தில் உள்ள செம்பு, பித்தளை மரச்சாமான் முதலியவைகளின் மதிப்பு கிரயம் ரூ1500/— (ஆயிரத்து ஐநூறு)

சர்வதாரி வருடம் ஐப்பசி மாதம் 5ம் தேதிக்குச் சரியான இங்கிலீஷ் 1948ம் வருடம் அக்டோபர் மாதம் 20ம் தேதி இதனடியில் கண்ட சாக்ஷிகள் முன்னிலையில் இந்த பிரைவேட் டிரஸ்டு பத்திரத்துக்கு நான் கையெழுத்துச் செய்துள்ளேன்.

பா. இராமலிங்கம்

***சாக்ஷிகள்***

Witness:-

1. B.D. Pani S/o. Dr. R.K. Pani Petal gurgion 4B Infantry Road, Bangalore-201048

2. P.N. Rao Nayadu Advocate and Official Receiver coil station Bangalore-201048

## Memorandum of corrections, Additions and Alterations

2—வது பேஜ் 12வது வரியில் திருவொற்றியூரில் என்ற வார்த்தை பின்னும் 14வது வரியில் என் அன்பர்கள் என்ற சொல்லுக்கு முன்னாலும் உள்ள வார்த்தைகளை நீக்கி "கீழ்கண்டுள்ள ஷெடியூலில் ஒருவரது ***** என்றுள்ள நிலத்தை வாங்கி அந்நிலத்தில்" என்று திருத்திப் படிக்கவும்.

11வது பத்தியில் 10வது பேராவில் 9ம் வரிக்கும் 10ம் வரிக்கும் மத்தியில் 11 இச்சமாதிக்கு தினப்படி செய்ய வேண்டிய பூஜைகளும் மாதா மாதம் அந்த நக்ஷத்திரத்தின் போது செய்ய பூஜைகளும் வருடம் தோறும் பங்குனி மாதம் அஸ்த நக்ஷத்திரத்தில் நடத்துகிற குருபூஜை இவை அனைத்தும் நடந்து வந்தது. மேற்படி வருவாய்க்கு தகுந்தாற்போல் மேற்கொண்ட டிரஸ்டிகள் நடத்தி வந்தார்கள். இதைச் சேர்த்தும் பார்த்துக் கொள்ள வேண்டியது.

2வது பேஜ் 4வது வரியில் உழலா நின்றேன் என்ற வார்த்தையை நீக்கி, வந்தேன் என்று படிக்கவும்.

### தர்மங்களின் விவரம்

1. சத்திய ஞான சபை கட்டிடம் தற்சமயம் பூர்த்தியாகாமல் இருப்பதை இந்த டிரஸ்டிகள் தங்கள் முயற்சியாலாவது என் அன்பர்கள் கொடுக்கும் நன்கொடையைக் கொண்டாவது அல்லது என் அன்பர்களில் யாராவது இந்த டிரஸ்டு நிபந்தனைக்கும், டிரஸ்டிகள் நிபந்தனைக்கும் உட்பட்டு பூர்த்தி செய்ய முன்வரும் பட்சத்தில் மேற்கண்ட கட்டடத்தை பூர்த்தி செய்வித்துக் கொள்ள வேண்டியது.
2. தைப்பூச விழா, வருடா வருடம், தை மாதம் பூச நக்ஷத்திர விழாவை இப்போது நான் நடத்தி வந்ததைப்போல் சிறப்பாக நடத்தி வரவேண்டியது.
3. வருடா வருடம் ஸ்ரீ சிதம்பரம் ராமலிங்க சுவாமிகள் திரு நக்ஷத்திரம் (புரட்டாசி மாதம் (சித்திரை நக்ஷத்திரம்) அன்று பூஜா நைவேத்தியங்கள், இதுகாறும் நடத்தி வந்தது போல் நடத்தி வரவும்.



4. மேற்படி சத்திய தருமச்சாலையில் சுவாமிகள் திருவுருவப் படத்திற்குத் தற்சமயம் நடத்தி வருவதுபோல் தினசரி பூஜா நைவேத்தியங்கள் நடத்தி வரவும்.
5. மேற்படி சத்திய ஞான சபை கட்டடம் பூர்த்தியானதும் அதில் வெள்ளைச் சலவைக் கல்லில் சிதம்பரம் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளுடைய திருவுருவம் சிலையமைத்து அதற்குப் பாலாபிஷேகம் புனுகு சாத்துதல் தீப ஆராதனை செய்ய வேண்டியது.
6. மேற்படி சத்திய ஞான சபையில் மேற்படி சுவாமிகளுடைய திருவுருவச் சிலை ஸ்தாபிதமான பிறகு சுவாமிகளுடைய உற்சவ மூர்த்திக்கு வருடா வருடம் தைப்பூச விழாவும் போதும், திருநக்ஷத்திரத் தன்றும் திருவீதி உற்சவம் நடத்த வேண்டியது.
7. இந்த டிரஸ்ட் நிலங்களில் பூந்தோட்டம் அமைத்து புஷ்பங்களை பூஜைக்காக உபயோகித்துக் கொள்ளவும்.
8. மேற்கண்ட தருமங்களை பரிபாலித்து வரவேண்டிய அன்பர்களால் எனக்காகக் கொடுக்கப்படும் நன்கொடைப் பொருட்களைக் கொண்டு வருவாய்க்குத் தகுந்தது போல் இந்தத் தருமங்களைப் பெருக்கியும் சுருக்கியும் நடத்திக் கொண்டு வரவேண்டியது. அதில் மிகுதி தொகை இருக்கு மானால் அதை பண்டாக (Fund) சேர்த்து வைத்து, ஒரு ஸ்திரமான வரும்படி வரும் மார்க்கத்தில் செய்து கொள்ள வேண்டியது. மேற்கண்ட கட்டடங்கள் ஏதாவது விருத்தி செய்ய அவசியம் ஏற்பட்டாலும், இது சம்பந்தமாக இதர கட்டடங்கள் ஏற்றவேண்டி இருந்தாலும், அல்லது கட்டடங் களுக்கு மராமத்து செய்ய வேண்டி இருந்தாலும், டிரஸ்டிகள் இந்த பண்டிலிருந்து செய்து கொள்ளலாம்.
9. இந்த சாஸனத்தில் கண்ட கட்டடங்களிலும் இனி ஏற்படக் கூடிய கட்டடங்களிலும் நிலங்களிலும் வேறு எவ்வித ஸ்தாபனமும், விக்கிரகங்கள் முதலியவைகளும் வைக்கவும் ஏற்படுத்தவும் கூடாது.

10. இதனடியில் கண்ட சொத்தும் இரண்டாவது அயிட்டம் சர்.நெ. 98—92ல் உள்ள நிலத்தில் ஐகோர்ட்டு சுவாமி என விளங்கும் ‘அப்புடு’ சுவாமிகள் சமாதி வைக்கப் பெற்றிருக்கிறது. இங்கு குறிப்பிடுகிறேன்.

11. நான் சமாதி அடையுங் காலத்தில் கீழ்கண்ட ஷெட்யூலில் இரண்டாவது அயிட்டம் சர்வே நெ.98—92 நிலத்தில், என் சமாதி வைத்து அதற்கான ஏற்பாட்டை டிரஸ்டிகள் கிரமப்படி செய்து வரவேண்டியது.

12. இந்த டிரஸ்டு விஷயமாக பொதுமக்களுக்கு (Public) இதில் பிரவேசிக்கவும், கேட்கவும் யாதொரு பாத்தியங்களையும் உரிமையும் கிடையாது. இந்த ஸ்தாபனம் தேதுரி என்று எண்ணலாகாது. இது சிதம்பரம் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் திருவருளாட்சி புரியும் ஞானசபை என்று உணரவும்.

### பதிப்பாளர் குறிப்பு

**சுவாமிகள் அவர்களுடைய உயில் பிரதியை ஒரு அன்பரிடமிருந்து பெற்று அச்சுக் கோர்த்து இங்கே வெளியிட்டிருக்கிறோம். இதில் பதிப்பாளர் கையெழுத்துப் புரியாமல் பதிப்பாளர் செய்த பிழைகள் ஏதேனும் இருக்கலாம். அதனால் இதுவே உயிலின் முழு வடிவமாக எடுத்துக்கொள்ளத் தக்கதல்ல.**

**சுவாமிகள் தன் மனதில் என்ன நினைத்திருந்தார் என்பதையும், மடத்தில் நித்யப்படி பூஜைகள் நடை பெறுவதற்கும் முக்கியமாக வள்ளலாருக்குப் பளிங்கு சிலை எழுப்புவதற்கும் என்னென்ன உத்தரவுகள் கொடுத்திருக்கிறார் என்பதை அன்பர்களுக்குத் தெரியப்படுத்துவதற்குமே இந்த உயிலின் பிரதியை வெளியிடுகிறோம். பிழைகள் ஏதேனும் இருப்பின் நூலாசிரியரோ பதிப்பாளரோ பொறுப்பல்ல.**



## இந்த நூலை எடிட் செய்த போது...

**ஆர். நடராஜன்**

பாடகச்சேரி ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளைப் பற்றிப் புத்தகம் எழுதுவதற்காக வெளியூர்களுக்குச் சென்று பலரை பேட்டி கண்டார் நல்லி குப்புசாமி செட்டியார். எழுத்தாளர் சுப்ரபாலனும் நானும் குறிப்புகள் எடுத்துக் கொண்டோம். கேட்டதையெல்லாம் நினைவில் வைத்துக்கொள்ளும் செட்டியார் சில அத்யாயங்களைத் தன் கைப்பட எழுதித் தந்தார். நாங்கள் தவறவிட்ட சில தகவல்களை நினைவுபடுத்தி அவற்றைச் சேர்க்கச் சொன்னார். ‘எடிட்’ செய்யும் பொறுப்பை நான் ஏற்றேன். தகவல்களை ஒழுங்குபடுத்தி பேட்டிகளில் சொல்லப் பட்ட செய்திகளை நிரல்படுத்தி ‘எடிட்டிங்’ வேலையைச் செய்து முதல் பிரதியைச் செட்டியாரிடம் கொடுத்தேன்.

‘பாடகச்சேரியில் தொடக்க காலத்தில் சுவாமிகள் நிர்வாணமாகத் திரிந்தது பிடிக்காத யாரோ’ என்று எழுதப்பட்டிருந்த வாசகத்தில் ‘நிர்வாண’மாக என்ற சொல்லை ‘அவதூதராக’ என்று மாற்றினார் செட்டியார். இதுதான் எடிட்டிங். ‘அவதூதராக’ என்ற சொல்லில் மகான்களின் சாந்நித்யம் வெளியாகிறது. இடத்துக்குப் பொருத்தமான சொல்லைக் கையாள்வதில் வல்லவர் செட்டியார். இது நம் பண்பாட்டை மனதில்கொண்ட ‘எடிட்டிங்.’ இந்த வார்த்தையை அல்லவா பயன் படுத்தியிருக்க வேண்டும் என்று நானும் சுப்ரபாலனும் நினைத்துப் பார்த்தோம்.

பாடகச்சேரியில் குறிப்பிட்ட சமுதாயத்தினர் வசிக் கிறார்கள் என்று அந்தச் சமுதாயத்தின் பெயரைச் சொல்லி உள்ஜாதிப் பெயர்களையும் குறிப்பிட்டோம். “சிலரது பெயர்களை முழுமையாகக் குறிப்பிட உள் ஜாதிப் பெயர்கள் அவசியம். சமுதாயப் பெயர்கள் வேண்டாம்” என்று ஒரு பத்திரிகை ஆசிரியருக்கே உரிய கவனத்துடன் அந்தச் சொல்லை நீக்கினார் செட்டியார்.

‘மனம் கசந்த சுவாமிகள்’ என்று சுப்ரபாலன் ஒரு இடத்தில் எழுதியிருந்தார். ‘சுவாமிகளுக்கு மனக்கசப்பு என்பது கிடையாது. எனவே வாசகத்தை மாற்றுங்கள்’ என்றார். மகான்கள் பற்றி எழுதும்போது என்ன சொற்கள் இருக்கலாம், என்ன இருக்கக் கூடாது என்பதற்குச் சரியான அறிவுரை வழங்கும் கூர்த்த மதி படைத்தவர் செட்டியார். வேறு இடத்தில் ‘தூக்குமாட்டிக் கொண்டார்’ என்ற வரியை ‘அங்கே நிகழ்ந்த துர்மரணத்திற்குப் பின்’ என்று மாற்றினார். சொல் வசப்படுகிறது அவருக்கு.

அன்னதானத்திற்காக வடிக்கப்பட்ட சாதம் குவியல் குவியலாக இருந்தது. அதை மண்வெட்டியால் அள்ளிப் பாத்திரத்தில் போட்டார்கள் என்று ஒருவர் சொன்னதை எழுதிவிட்டோம். “ஆமாம், அப்படித்தான் சொன்னார். நானும் கேட்டுக் கொண்டேன். ஆனால் செட்டியாரும் பேட்டியின்போது உடன் இருந்ததை நினைவுபடுத்தி ‘அவர் அப்படித்தானே சொன்னார்’ என்றோம். “இருக்கலாம். பேசுவதையெல்லாம் அப்படியே எழுத வேண்டிய அவசியமில்லை. மண்வெட்டியால் சாதம் அள்ளுவது என்பது சுத்தக் குறைவாகப் படுகிறது. எனவே ‘மண் வெட்டியால்’ என்ற வார்த்தையை நீக்கி விட்டுக் கூடையில் சாதத்தை அள்ளினார்கள் என்று மாற்றுங்கள் அது சரியாக இருக்கும்,” என்றார்.

“உறுதிப்படுத்த முடியாததை எழுத வேண்டாம். சொல்வதைக் கேட்டுக்கொள்வது மரியாதை. கேட்டதை சற்றே மாற்றி எழுதுவது நாகரிகம்,” என்று சொன்னார் செட்டியார். ஒரு 90 வயது மூதாட்டியை பேட்டி கண்டபோது தன் தாயார் பெங்களூரிலிருந்து வண்டி கட்டிக் கொண்டு மூன்று நாள் பயணமாக வடலூர் சென்றார்கள் என்று சொன்னார். பேட்டி கண்டவர் செட்டியார். சுப்ரபாலன் உரையாடலைக் குறித்துக் கொண்டபடியே எழுதிக்கொடுக்க, அது அப்படியே அச்சுக் கோர்க்கப்பட்டது. அந்தப் பகுதியைப் படித்துப் பார்த்த செட்டியார், “மாட்டு வண்டி மூலம் மூன்று நாட்களில் பெங்களூரிலிருந்து வடலூர் போயிருக்க முடியாது. பெரியம்மா சொல்லும்போது மரியாதை காரணமாகக் குறுக்கிடவில்லை. எப்பேர்ப்பட்ட மாட்டு வண்டியானாலும் அது சாத்யமில்லை. வைத்தியத்திற்காக பெங்களூரிலிருந்து அவர்கள் மாட்டு வண்டியில் வடலூருக்குப் போனார்கள். இரவில் தங்கி, பகலில் பயணத்தைத் தொடர்ந்தார்கள் என்பது மட்டுமே செய்தி. நாட்கள் முக்கியமல்ல. எனவே ‘சில நாட்கள்’ என்று எழுதுவோம், அல்லது நாட்கள் பற்றிய குறிப்பு வேண்டாம்,” என்றார் செட்டியார். எவ்வளவு எச்சரிக்கை உணர்வு அவருக்கு என்று வியந்தேன்.



பேட்டி காண்பதில் நாகரிகம், எழுதுவதில் ‘லாஜிக்’ இருக்க வேண்டும் என்பதை உணர்த்திய செட்டியார் உணர்ச்சியின் மிகையில் சொல்லப்படுவதை அப்படியே எழுதவேண்டிய அவசியமில்லை என்று சொல்லி மிகைச் சொற்களை நீக்கிவிட்டார்.

‘சாவு வீடு மாதிரி எல்லோரும் அழுதுகிட்டிருந்தாங்க’ என்று ஒருவர் சொன்னதை அப்படியே எழுதினோம். செட்டியார் ‘சாவு வீடு மாதிரி’ என்ற சொற்களை நீக்கச் சொல்லிவிட்டார். அமங்கல வார்த்தைகள் கூடாது என்பது அவரது எண்ணம்.

சுவாமிகள் பணபலம் இல்லாமல் கும்பாபிஷேகம் செய்தது பற்றி எழுதியபோது ‘பணம் இல்லாத ஆண்டி திருப்பணி செய்தது அதிசயம்’ என்று குறிப்பிட்டோம். ‘ஆண்டி’ என்பது கொச்சைச் சொல் என்பதால் ‘துறவி’ என்று மாற்றச் சொன்னார் செட்டியார். அப்படியே மாற்றினோம்.

சொல்லின் பொருள் என்பது பேசுபவர் எழுதுபவர் நினைப்பது அல்ல. அது கேட்பவர், படிப்பவர் எப்படி எடுத்துக்கொள்கிறார் என்பதைப் பொருத்தது என்று

கருதும் நல்லி செட்டியார் சொல்லோடு பொருளும் உணர்வும் முக்கியம் என்பதை உணர்த்தினார்.

ஒரு நபர் சுவாமிகளுக்கு நெருக்கமாக இருந்தார் என்று எழுதியிருந்தோம். ‘நெருக்கமாக’ என்ற சொல்லை நீக்கி விட்டார் செட்டியார். ‘சுவாமிகளுக்கு எல்லோரும் ஒரே மாதிரி அன்பர்களே. யாருக்கும் நெருக்கமில்லை என்று சொன்னார். “பெரியவர்களைப் பேட்டி காணும் போது அவர்களது பேச்சில் குறுக்கிடாமல் கேட்டுக் கொள்வது நடத்தை இங்கிதம். சரியான வார்த்தைகளில் வார்ப்பது அதை எழுத்து நடை இங்கிதம்,” என்றார்.

ஒரு பிரமுகருடன் உரையாடிய சம்பவத்தை எழுதிய போது ‘அந்த பதிலை சுவாமிகள் எதிர்பார்க்கவில்லை’ என்று குறிப்பிட்டிருந்தோம். ‘இப்படிப்பட்ட சுவாமி களுக்கு எதிர்பார்ப்புகள் ஏதும் இல்லை, இருக்க முடியாது’ என்று விளக்கிய செட்டியார் அந்த வாக்கியத்தை நீக்கச் சொன்னார். ‘சாதுக்களுக்கு மட்டுமே இது சாத்தியம்’ என்ற வாக்கியமும் வேண்டாம் என்று சொல்லி விட்டார். வாசகர்கள் தாமாகப் புரிந்துகொள்ளக் கூடியதை நாம் தனியாக எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்றார்.

ஒரு அன்பரின் டயரிக் குறிப்பில் ‘சுவாமிகள் இவை யாவற்றையும் அறிந்திருந்தும் தெரியாதவர்போல் நடந்து கொண்டார்’ என்றிருந்தது. அதை அப்படியே சேர்த்திருந்தோம். “டயரி வேறு, புத்தகம் வேறு. எல்லாம் தெரிந்திருந்தும் சில காரணங்களால் துறவிகள் அதைக் காட்டிக் கொள்ளாமல் இருப்பார்கள். இருக்க வேண்டும். அதுதான் அவர்கள் அனுஷ்டானம். டயரிக் குறிப்பு சுவாமிகளின் நிறையை குறையாகச் சொல்கிறது. டயரிக்காரர் எழுதியது அவரது சொந்த அபிப்பிராயம், அதில் தவறில்லை. ஆனால் அதை வாசகர்கள் மீது ஏற்ற வேண்டாம்” என்று சொல்லி அந்த வாக்கியத்தையும் நீக்கிவிட்டார்.



இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். நண்பர் சுப்ரபாலன் மிகவும் எச்சரிக்கையான, அதே நேரம் கொஞ்சம் சந்தேகமும் கொண்ட நபர். எனவே பேட்டி கண்டு எழுதிய கட்டுரைகளில் வந்தாராம், சொன்னாராம், இருந்தாராம், இருக்கலாம், வந்ததாம் என்று எழுதி லாம், ராம், தாம் என்ற சொற்கள் மூலம் பிறர் சொல்லிக்கேட்டதில் தனக்கு நம்பிக்கை இல்லை என்பதை உணர்த்திவிடுவார்.

அந்தப் பகுதியைப் படித்துப்பார்த்த செட்டியார், “இந்த லாம், தாம், ராம் எதுவும் வேண்டாம். மேற்கோள், குறிகளுக்குள் போட்டுவிட்டால் சொல்லப்பட்ட மொத்த விஷயத்திற்கும் அவரே பொறுப்பாகிறார். ஒருவர் சொன்னதை முற்றிலும் நம்ப முடியவில்லையா, அது பற்றி எழுதுவதைத் தவிர்த்து விடுங்கள். ஒவ்வொரு வாக்கியத்திலும் வந்தாராம், சொன்னாராம், இருக்கலாம் என்று சந்தேகம் எழுப்பினால் அது வாசகர்களைக் குழப்பும். சொல்லப்படும் செய்தி மனதில் ஏறாது. சந்தேகத்திற்கு இடம் கொடாத விஷயங்களையே எழுதுங்கள். சந்தேகத்திற்குரியனவற்றை சூழ்நிலை கருதிச் சொல்ல வேண்டும் என்றால், ‘இவர் இப்படிச் சொல்கிறார். இதை உறுதிப்படுத்தவோ மறுக்கவோ ஆதாரங்கள் இல்லை’ என்பதை உள்ளது உள்ளபடித் தெரிவியுங்கள்,” என்றார் செட்டியார்.

ஒரு நிகழ்ச்சியை விவரிக்கும்போது “அது சரியான நிகழ்வு என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளப் போதிய ஆவணங்கள் இல்லை. எல்லாம் செவிவழிச் செய்தியே” என்ற வாக்கியத்தைச் சேர்த்தார் செட்டியார். அவ்வளவு ஜாக்கிரதை உணர்வு கொண்ட எழுத்தாளர் அவர்.

‘When in doubt, cut out’ என்ற எடிட்டிங் பால பாடத்தை வாசகராகக் கற்றுக் கொண்டவர் நல்லி செட்டியார்.

ஒரு வியாபாரியாக நல்லி செட்டியாருக்கு அவரது வாடிக்கையாளர்கள் முக்கியம். எழுத்தாளராக அவருக்கு

வாசகர்கள் முக்கியம். தன் பட்டுச் சேலைகள் பழுதின்றித் தரமாக இருக்க வேண்டும் என்று நினைப்பது போலவே தன் புத்தகங்களில் பிழைகள் எதுவும் இருக்கக்கூடாது என்பதிலும் வெகு கவனமாக இருக்கிறார்.

மொழிக்கு மட்டுமல்லாமல் நாகரிகத்திற்கும் பண்பாட்டுக்கும், சந்நியாசத்திற்கும் இலக்கணம் சொல்கிறார் செட்டியார். அதுதான் அவரது ஞானநாட்டம். தொழில் ஒழுக்க எதிர்பார்ப்பு. ஒரு எடிட்டருக்கு மொழி அறிவு தாண்டிய பொது அறிவு இருக்க வேண்டும் என்பதைச் சொல்லாமல் சொல்லி தன் எடிட்டிங் முறையில் அதை எங்களுக்கு உணர்த்திய செட்டியாருடன் புத்தகத்தின் நகலை வைத்துக்கொண்டு படித்தபோது அவர் சொன்ன பல விஷயங்களில் சிலவற்றை மட்டுமே சொல்லியிருக்கிறேன். மேலும் சொல்ல வேண்டியது இருக்கிறது.

அவருடன் சேர்ந்து இந்தப் புத்தகத்தை இரண்டாம் முறையாக எடிட் செய்தது தனி அனுபவம். தொழில் முறை எடிட்டரான நான் ஒரு குருநாதரிடம் பாடம் கேட்டுக் கொண்ட சம்பவம் அது. பத்திரிகைத் துறையில் பணிபுரியாத அந்த குருநாதரின் எழுத்துத் திறமையும் எடிட்டிங் அக்கறையும் பத்திரிகையாளனான என்னை வியக்க வைக்கிறது. ‘எடிட்டர் என்றால் இவரல்லவா எடிட்டர்?’ என்று வியக்கிறேன்.

ஒரு பணியாளர், உதவியாளர், ஆலோசகர், அதிகாரி என்று எந்த நிலையில் இருந்தாலும் தன்னைவிட கெட்டிக்காரரிடம் வேலை பார்ப்பது சுகமான அனுபவம். அதுவே முன்னேற உதவும் வாய்ப்பு. அந்த வாய்ப்பை எனக்குக் கொடுத்துள்ளவர் நல்லி செட்டியார்.

---

பி.கு.: ஸ்ரீ செட்டியாரின் ‘எடிட்டிங்’ திறமை பற்றிய இந்தக் கட்டுரை நூலாசிரியர் என்ற முறையில் அவரது பார்வைக்குச் சென்றது. இதிலும் அவர் சொற்பிழை, பொருட்பிழை ஏதும் கண்டுபிடித்துவிடக் கூடாதே என்ற பதைபதைப்பு எனக்கு இருந்தது.